மாதமணி

தீபாவளி மலர் - 1947





விவரங்களுக்கு:

T. K. S. சகோதரர்கள் கோவை.

திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, ...
மதுரை, மலபார், ராமநாதபுரம் ...
பகக்கோட்டை, பர்மா & சிலோன் ...

சேலம் ஷண்முகா பிலிம்ஸ், கோவை.

கோவை, சேலம், வடஆர்காடு,
தென் ஆர்காடு, செங்கல்பட், மதராஸ் சிட்டி
ஆந்திரா, மைசூர் ஏரியா, & F. M. S.

போன் நெ. 268.



அழகிய ஆபரணங்களுக்கு

P.A. ராஜ செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி..... "RAJA"

போன்..... 218-A

தபால் பெட்டி நெ.139

A.B.T.LTD.

RAILWAY & ROYAL MAIL CONTRACTORS

POLLACHI

MANAGING AGENTS FOR U.B.S. & P.T.LTD.

ESTD.1931



Telegram Address: "AFIAINDIA"

PANKAJAM & CO.,

COIMBATORE.

பங்கஜம் & கம்பெனி

அவினாசி ரோடு, கோயமுத்தூர்.

எங்களிடம் சிமிட்டி, கலர் சிமிட்டி, சேனிடரி (Sanitary) சாமான்கள், சிமிட்டி & ஸ்டோன்வேர் (Stoneware) குழாய்கள், Mosaic Tiles, Firestone டயர்கள், பெயின்டுகள் இன்னும் மற்ற கட்டிட சாமான்கள் எங்களிடம் கிடைக்கும்.

A. ராஜமாணிக்கம்

BRANCH:-

Sembudoss St, MADRAS.

அவனாசி ரோட்

கோயமுத்தூர்.

என்னிடம் ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டி பலகைகளும் (Asbestos Cement Sheets), வீட்டு தகடுகளும், மழைத்தண்ணீர் பைப்ஸ்களுக்கு, (RainWater Pipes) பென்டுகளும் (Bends) இன்னும் இதர ஆஸ்பெஸ்டாஸ் சாமான்களும், Killick Nixon & Co., கலர் சிமிட்டிகளும், ஸ்நோசம் (Snowcem) என்னும் சுவடுகளுக்கு அழகுபடுத்தும் பெயிண்டுகளும், மற்றும் பல கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

Undertaking Sanitary Installation Works and Mosaic Tiles Laying at MODERATE RATES.

A. RAJAMANICKAM

Agents:-

Messrs. ASBESTOS CEMENT LTD.
M/s. KILLICK NIXON & CO., BOMBAY.
Ms. THE CEMENT MARKETING CO., OF INDIA LTD.
M/s. GREAT AMERICAN INSURANCE CO. LTD. OF NEW YORK.

Branch Office: *8/11 Avanashi Road, Coimbatore.*

For Fire & Marine Insurance Business.

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

உடுமலைப்பேட்டை

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

G. V. கோவிந்தசாமி நாயுடு & Co.,

40s 60s 80s

சிங்கிள், டபிள் நூல்கள் சிட்டமாகவும், கோன்களாகவும்

சப்ளை செய்யப்படும்.

எண்ணெய் எல்லோருக்கும் அவசியமானது

அதில் நல்ல சரக்கு எங்கு கிடைக்கும் என ஏங்கி நிற்போருக்கு

இதோ இந்த விலாசம் ஆறுதலளிக்கிறது.

கோயம்புத்தூர் ஆயில் மில்ஸ் லிமிடெட்,

பொள்ளாச்சி.

எக்ஸ்பெல்லரில் தயாராகும்,

பரிசுத்தமான எண்ணெய்களுக்கு

பொள்ளாச்சி

தி பாரத் மில்ஸ் லிமிடெட்

பெயர்பெற்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?

இன்றேல், எழுங்கள் இன்றே மாதிரிக்கும் மற்றவைக்கும்.

ஔவையார்

டி. கே. எஸ். சகோதரர்களின்

நாடகம்

புதிதாகக் கட்டப்பட்டுள்ள மகத்தான கலைக் கோவில்!

கோவை

ஷண்முகா தியேட்டரில்

11—11—47 தீபாவளி முதல்

நாடகப் பயன்

கல்கி: 3-6-45

ஔவையார் நாடகம் பார்த்து அனுபவிக்க வேண்டிய கலைக்காட்சி மட்டுமல்ல; தமிழர்களின் வாழ்வையே உயர்த்தக் கூடிய நிர்மாணத் திட்டத்தைச் சேர்ந்தது.

ஜன சக்தி: 18-7-45

மக்கள் நல் வாழ்க்கை நடத்துவதற்கான அறிவூட்டும் காட்சிகள் பல இந்நாடகத்தில் காட்டப்படுகின்றன.

ஹிந்துஸ்தான்: 27-5-45

பல உயர்ந்த கருத்துக்கள் இதில் பொதிந்து கிடக்கின்றன.

சிவாஜி: 27-5-45

நாடகம் முடிந்து எழுந்திருக்கும் போதுதான் 'ஓ! இது நாடகமல்லவா!' என்ற நினைவு வந்தது.

கலைவாணி: 1-7-45

நூற்றுக் கணக்கான பிரசங்கங்களினாலும் செய்ய முடியாத தொண்டை நான்கு மணி நேரத்திலே சாதித்து விடுகிறார்கள்.

நவயுவன்: 15-6-45

தமிழர்கள் பெருமையுடன் பார்க்க வேண்டிய நாடகம் இது.

பிரசண்ட விகடன்: 15-7-45

காண்போர் உள்ளங்களில் மொழிப் பற்று, தேச பக்தி, வீரம் முதலிய உயர்ந்த எண்ணங்கள் ஏற்படும் படியாக இருக்கிறது.

நாரதர்: 6-6-45

பிரசாரப் படங்கள் என்று பிடிக்கிறார்களே, அவர்கள் இந்த நாடகத்தை அவசியம் பார்க்கவேண்டும்.

பாரத தேவி: 1-6-45

இந்நாடகத்தை ஒவ்வொரு தமிழனும் பார்த்தே தீரவேண்டும்.

கிராம ஊழியன்: 15-6-45

பிரசாரக் கருத்துக்கள் பல கலையுடன் ஒலிக்கின்றன இந்நாடகத்திலே.

மாலதி: 8-6-45

காதல் சுவையற்ற ஔவை நாடகத்தை ரஸிக்கும் முறையில் நடித்து வருவது மகத்தான வெற்றி.

தியாகி: 1-6-45

தமிழர்கள் பார்க்க வேண்டிய ஒப்பற்ற நாடகம்.

ஞாயிறு, புதன் மாலை **6-30**; மற்ற நாட்கள் இரவு **9-30** திங்கள் விடுமுறை நாள்.

வரியுட்பட கட்டணம்

4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6

மூன்று நாட்களுக்கு முன் 'மணியார்டர்' அனுப்பி 1, 2, 3-வது வகுப்புகள் 'ரிசர்வ்' செய்துகொள்ளலாம்.

டி. கே. எஸ். சகோதரர்கள்,
உரிமையாளர்கள்.

உங்கள் அச்சு வேலைகளை

உயர்ந்த முறையில், குறைந்த காலத்தில் அமைப்பு முறையோடு
அழகாகச் செய்துகொள்ள

பொள்ளாச்சி

பாரத் பிரிண்டிங் வர்க்ஸ் லிமிடெட்

தகுதி வாய்ந்தது; ஏனெனில், அது

சிறந்த நூதன இயந்திர சாதனங்களையும், உயர்ந்த உபகரணங்களையும்,
நிபுணத்தனமான ஆட்களையுங் கொண்டு,
சகல சௌகரியத்துடனும் நடத்தப் பெறுகிறது.

குறைந்த விலையில் எல்லாவிதமான எலெக்டிரிக் சாமான்கள், எலெக்டிரிக் வையரிங் கான்ட்ரேக்ட்கள், மோட்டார் கார் 'ஓல்டாம்' பேட்டரிகள், 'சாடியா' எலெக்ட்ரிக் தண்ணீர் கொதிக்க வைக்கும் கருவிகள், கட்டிட கதவு ஜன்னல் சாமான்கள், ரேடியோக்கள், எலெக்டிரிக் விசிறிகள் முதலிய பல சாமான்கள் கிடைக்குமிடம்.

Mc'MENNON & Co., LTD.,

HEAD OFFICE:
Avanashi Road,
COIMBATORE.
Telephone: 78 A
Telegram: Mc'MENNON

BRANCH:
Gandhi Bazaar,
PALGHAT
Tel: Mc'MENNON

புதிய வெளியீடு!



தூத்-ஸாகர்

(ரிஜிஸ்டர்டு)

ஸ்பிரிங்கினல் அமைக்கப்பட்ட பஞ்சணை

'திருப்பாற்கடல்' திருமாலுக்குப் படுக்கையாகி மேன்மையடைந்தது போல-அதே பெயரைக்கொண்ட
'தூத்-சாகர்' என்னும் பஞ்சணை சுகமான ஒய்வையும் ஆழ்ந்த நித்திரையையும் அளிக்கிறது

- ஆறு அங்குல உயரத்தில் ஓங்களில் அமைக்கப்பட்ட நேர்த்தியான பார்டர்கள் மிகவும் உறுதியானவை
- சுகத்துக்கெனவே நடுவில் அமைக்கப்பட்டுள்ள கெட்டியான ஸ்பிரிங்குகள் நகங்காது.
- தகிக்கும் கோடை இரவுகளில்கூட "ஜிலு ஜிலு" என்று வரும் காற்றோட்ட வசதிகள் உள்ளது.
- ஐந்து வருடங்களுக்கு உத்திரவாதத்துடன் குற்றமற்ற உழைப்புக்காகவே அமைக்கப்பட்டது.





எந்நிலையிலும் முதுகெலும்பை நேரான நிலையில் வைக்கும் 'தூத் சாகர்' மிகவும் மிருதுவானது.
எவ்விதமாகப் படுத்த நோக்கத்துடனேயே தயார் செய்யப்பட்டது. போதிலும்
நல்ல விச்ராந்தியை அளிக்கக்கூடியது.

36" சைஸ் ரூ. 180/- : : 54" சைஸ் ரூ. 250/-

கர்ஸன் கம்பெனி

மதராஸ் ..... மதுரை

மவுண்ட் ரோடு ..... மேல மாசி வீதி.

Telegrams: SPINWEAVE Telephone No. 70

THE COIMBATORE SPINNING & WEAVING CO. LTD.

COTTON SPINNERS, DOUBLERS AND MANUFACTURERS OF PIECE-GOODS

Registered Office: COIMBATORE.

Authorised Capital	**Rs.**	**14,00,000**
Issued, Subscribed & Paid up	**Rs.**	**6,92,300**
Reserve Fund	**Rs.**	**14,00,000**

AGENTS & SECRETARIES

MESSRS. R. G. S. NAIDU & CO.. COIMBATORE.
(Partners V. Gopal Naidu & A. V. Srinivasalu Naidu)

The Biggest Mill in Coimbatore with 47,592 Spindles.
384 Looms Employing over 3,400 Persons Daily.
A Most Progressive Mill, With Unfailing Popularity.

SPINNING ALL COUNTS OF YARN FROM 16s to 80s

Makers of All varieties of Piece-goods Fine and Coares

MULLS & SHIRTINGS
LONG CLOTHS & CHADDARS
DHOTIES & TOWELS
& BANDAGE CLOTHS

And a number of other varieties to suit different tastes and of various places.

ENCOURAGE HOME AND LOCAL INDUSTRIES

For Further Particulars Apply :-
THE AGENTS AND SECRETARIES.
Krishnaswamy Mudaliar Road, COIMBATORE.



புது ஸ்டாக் வந்திருக்கிறது

FEDI V/R 5

VICTORIA IV B

ITALIAN CINE PROJECTORS

இத்தாலிய ஸினிமா ப்ரொஜக்டர்கள்

இப்பொழுது தென்னாட்டில் பல இடங்களில் பூரண திருப்தியுடனும், பாராட்டுக்களுடனும் வேலை செய்து கொண்டிருக்கிறது

இயக்குவது மிக சுலபம். நன்றாக உழைக்கக்கூடியது. நவீன அபிவிருத்திகளுடனும், விசைகளுடனும் கூடியது.

நிரந்தர ஸினிமா கொட்டகைகளுக்கும். டூரிங் டாக்கீஸ்களுக்கும் ஏற்றவை.

வாடகை - விற்பனை முறையிலும் வாங்கலாம்.

இறக்குமதி செய்பவர்கள் :

தேவி பிலிம்ஸ் லிமிடெட்

498, தங்கசாலைத் தெரு - சென்னை 3.

சுதேசி டைப் பவுண்டரி

சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

ஸ்தாபனம் : 1906

ஸ்தாபகர் : டி. ஆறுமுக முதலியார்

தமிழ்ப் பெருமக்களின் பரிபூரண அன்பைப் பெற்றிருக்கிறோம்.

வேறு எந்த தயாரிப்புகட்கும் தலை சிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும், கவர்ச்சியும் பொருந்தியனவாகும். எங்கள் எழுத்துக்களை தமிழகம் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறது. அதுவே எங்களுக்குப் பரம திருப்தி. மேலும் அச்சக நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

முழு விவரங்களுக்கு எழுதவும்

ALI MEDICAL STORES

DRUGGISTS & DISPENSING CHEMISTS,

BIG BAZAAR STREET,

COIMBATORE.

Dealers in :-

DRUGS & CHEMICALS

PATENT MEDICINES

BIOLOGICALS SERA & VACCINES

SURGICAL INSTRUMENTS

HOSPITAL REQUISITES

INFANTS' & INVALIDS' FOODS

TOILETS Etc Etc

Both Wholesale & Retail

அலிமெடிகல் ஸ்டோர்ஸ்

இங்கிலீஷ் மருந்து ஷாப்

பெரிய கடைவீதி

கோயமுத்தூர்

Branch :

Star Medical Supplies

Chemists & Druggists

Arcot Srinivasachar Street

Bangalore City

எமது !

பார்ப்பவர் கண்களுக்கு குளிர்ச்சியும்
கேட்பவர் காதுகளுக்கு இனிமையும்
அளிக்கும்
புராணப் படங்கள்

1. சிந்தாமணி
2. சாந்த சக்குபாய்
3. சகுந்தலை
4. சாவித்திரி
5. ஹரிதாஸ்

புனித தீபாவளி பண்டிகையின் போது
முக்கிய நகரங்களில் காணுங்கள்

தயாராகிறது ! !

ராயல்
" சுதர்சன் "
தமிழ்
கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில்

ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ்
மதுரை பெஜவாடா

Tele { Grams :- "KALEESWARAR"
Phone :- 59

காளீஸ்வரர் மில்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்.

ஹிம்ஸ ஆப் அள. அரு. அருணசலம் செட்டியார்
திவான்பகதூர் பி. சோமசுந்தரம் செட்டியார்
செக்ரடெரீஸ் & பாங்கர்ஸ், தேவக்கோட்டை

AL. AR. காளை ராஜா செட்டியார்,
லோக்கல் ஏஜண்டு, கோயமுத்தூர்.



கதிர்கள்
43,260

தறிகள்
295

10s நெ. முதல் 60s நெ. வரை நூல் (ஒற்றை, இரட்டை)
உற்பத்தி உயர்தர காடா, மல், துண்டு, வேஷ்டி,
ஷர்ட்டு முதலிய பலரக துணிகளும் தயாராகின்றன.

இந்தியர் மூலதனம்! இந்தியர் உழைப்பு!! இந்தியர் தொழில்!!!

எல்லோரும் ஆதரியுங்கள்.

சுகத்திற்கு சிறந்த இடம்
கொடைக்கானல்

சுகவாசிகள் கோடைகாலங்களில் தங்கள்
சுகத்தை விரும்பினால் தகுதியான இடம்
கொடைக்கானல்

நல்ல காற்று - நல்ல மழை - நல்ல சுகவாசம் பொருந்திய ஸ்தலம். தங்குவதிற்கு இடமும் உலாத்து வதிற்கு சோலைகளும் - விளையாடுவதிற்கு போட்டு உள்ள 'லேக்கு' களும் இருக்கிறது.

அது 7000 அடி உயரம் உள்ள மலைச் சிகரம்

பிரயாணிகள் வசதிக்கு ஆக - டாக்ஸ் பஸ்கள்
எக்ஸ்பிரஸ் பஸ்கள், சாதாரண பஸ்கள் டாக்ஸ
கார்கள் லாரிகள் சர்வீஸ் விடப்படுகிறது.

விபரம் அடியில் கண்ட விலாசத்துக்கு
எழுதி தெரிந்து கொள்ளவும்.

M/s. கொடைக்கானல் மோட்டார் யூனியன் லிமிட்.

அம்மையநாயக்கனூர் போஸ்டு
மதுரை ஜில்லா.

மாதமணி

பொருளடக்கம்

காணிக்கை	.....	...	17
அழகு பூஜை	ரா. நா.	...	18
நகைச்சுவை	என். எஸ். கிருஷ்ணன்	...	19
இருளில் மலர்ந்த பங்கஜம்	யோகி சுத்தானந்தர்	...	20
இசைப் பயிற்சி	எம். கே. தியாகராஜ பாகவதர்	...	23
விடுதலை	பாரதியார்	...	24
தமிழ் மக்களுக்கு	கே. காமராஜ்	...	24 (அ)
நானும் காமராஜும்	ஆர். நாகராஜன்	...	24 (ஆ)
காதல் கனவு	கவியரசி தி. மஞ்சுளா	...	24 (உ)
ஏக்கம்	"அம்பலவாணன்"	...	24 (எ)
முருகன் அருள்	ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்	...	25
புதிய கோணங்கி	பாரதி	...	29
கதைகளும் நீதிகளும்	எஸ். வையாபுரி பிள்ளை	...	30
அம்புஜம்	ஏ. ஷண்முகம்	...	33
ஒரே நெருக்கடி சார்!	கே. விஜயராகவன்		41
நித்திரை தான் வருமோ?	கே. வெங்கடரத்தினம்		45
வாழ்க்கைப்படம்	எஸ். வி. பத்மநாபன்		46
படிப்பின் பயன்	கோமதி சுப்ரமணியம்		49
பட்டுப் பாவாடை	ஸ்ரீமதி கு. ஸ்ரீமதி		54
என்னையாண்டாள்	ப. தனுஷ்கோடி		58
வெடித்த பட்டாசு	எம். எஸ். கமலா	...	65
பலி	'கமலதாசன்'	...	71
தங்கக்கொடி	கே. வி. துரைசாமி ராஜா	...	73
கக்கூ.....ஊ.....ஊ	'சுகி'	...	81
காட்டு ரோஜா	'ஜீவா'	...	89
குழலிசை	'விசாகன்'	...	99
காமக்கலை	அ. கிருஷ்ணசாமி நாயுடு	...	101
பெரிய மனிதன்	கே. சி. எஸ். அருணாசலம்	...	105

"மாத மணி"யில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனை.

கௌரவ ஆலோசனையாளர்கள்;

டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி. ஏ., பி. எல்.

டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். ஏ. பி. எல்.

THE HOLLO-BLOCK MANUFACTURING COMPANY LIMITED.

(INCORPORATED UNDER THE INDIAN COMPANIES ACT 1913.)

9/10 SYRIAN CHURCH ROAD, COIMBATORE.

AUTHORISED CAPITAL	Rs. 5,00,000
PRESENT ISSUE	Rs. 3,00,000
30,000 Ordinary shares of Rs. 10/-each.	
SUBSCRIBED CAPITAL	
17,529 Ordinary shares of Rs. 10/- each	Rs. 1,75,290

MANAGING AGENTS: M|S AGENCIES AMALGAMATION LIMITED.
9-10, SYRIAN CHURCH ROAD, COIMBATORE.

MANUFACTURERS OF CEMENT CONCRETE HOLLOW BLOCKS for building Cheap, Strong, Neat, Comfortable, modern types of buildings and to facilitable to suit the means of the middle and lower classes in view of the shortage of building materials now-a-days.
THIS CONCERN is first of its kind in this province.

THE MACHINERY HAS ARRIVED AND THE FACTORY CONSTRUCTION is in progres and we hope to have our products in the Market by the beginning of the New Year 1948, and to effectively tackle the shortage of Building Materials. Offers from Public for subscription of Shares are invited. Application forms and prospectus can be obtained from the Company.

FOR BETTER COMFORTS
STAY AT THE

VISIT **IDEAL LODGE** VISIT

CAFE IDEAL R. S. PURAM IDEAL RESTAURANT

R. S. PURAM 20682 NEAR Y. M. C. A.

COIMBATORE.

MODERN AGENCIES

RADIO SALES & SERVICE

Avanashi Road, COIMBATORE

Distributors For :

MURPHY RADIOS

WOOD STOCK TYPE-WRITERS

The Kumaran Mills Limited,

(Managing Agents: N. Appuswamy Naidu & Co.

PUDUPALAYAM (P. B. No. 107)

COIMBATORE.



Choose Kumaran's Best Quality Yarn

& Encourage Indian Industry.



We Spin Counts 20s, 40s, 60s, 80s Warp Yarns



QUALITY FIRST IS OUR MOTTO.

G. V. MUTHUSWAMY B. Sc.,

Managing Agents.

Telegrams: "JANARDANA" Telephone No. 61.

Janardana Mills, Limited.

SINGANALLUR COIMBATORE District.

Managing Agents & Secretaries

Messrs. G. Venkataswamy Naidu & Co.,

Registered Office:-

UPPILIPALAYAM, SINGANALLUR.

Manufactures of Single Yarn

19s. 20s. 24s. 28s. & 40s.

THE YARN IS BEST FOR HAND AND POWER LOOMS

For further particulars please apply to :-

THE JANARDANA MILLS LTD.,

SINGANALLUR.



சைத்திரிகரின் முக்கியமான உபகரணங்கள் பென்சில்களும், வர்ணங்களும், பிரஷ்களும் தான். மற்றவை இரண்டாம் பக்ஷமே. எல்லா விதசித்திர வேலைப்பாடுகளுக்கும் பென்சில் தான் முக்கியமான சாதனமாகும். அதனால் தான் சைத்ரிகர்களும் பென்சில்களையே நம்பியிருக்கிறார்கள். சைத்திரிகர்களில் ஏற்றத் தாழ்வு இருப்பதுபோல பென்சில்களின் தன்மையிலும் வித்தியாசம் இருக்கத் தான் செய்கிறது. அதனால் தான் 'ஸ்டார் ஆவ் இந்தியா' பென்சில்களே மிகச் சிறந்தவைகளாகப் போற்றப் படுகின்றன.

WHILE AT COIMBATORE

TRY AND BE CONVINCED OF
OUR PROMPT, ATTENTIVE AND EFFICIENT SERVICES
OF
CATERING FOR MARRIAGE, DINNER, BIRTH-DAY ETC, PARTIES.

We undertake to do the service without the least anxiety to you with the help of our well and long experienced staff, who are in the line for more than 20 years.

We are also contractors for running stalls at Cinema theatres. Offers of such services from prospective picture houses will be accepted by us under suitable terms.

We are also glad to announce that we have recently opened a wholesale and retail business at Bombay for civilians, dealing in imported foreign merchandise of Biscuits, tinned fruits, tinned provisions, confectionery vinegar etc. Though we experience slight dearth of stocks at present owing to the prevailing import restrictions, we expect to be in a position to meet demands wholly in a short time. We solicit orders from prospective businessmen and Individuals all over India.

We manufacture all varieties of aerated waters, viz, lemonade soda, colours, Gingerbeer etc. ORDERS from consumers and dealers on a larger scale are solicited on suitable terms and conditions.

We are Transport contractors possessing a fleet of lorries of our own. Offers of sole agencies for transport are invited on suitable terms and conditions.

FOR

Further particulars, please write to or call at:

D. C. JOHAR & SONS

(Sole Proprietor: RAI SAHIB KRISHANLALL JOHAR)

APPROVED ARMY, NAVY, & AIRFORCE CONTRACTORS.

Telephone: 85 Post Box No. 11
Telegrams: 'JOHARS' HEAD OFFICE: **COIMBATORE.**

Branches: D. C. JOHAR & SONS
Army & CBID Contractors,
Wellinton, NILGIRIES
} Telegram: JOHARS
Telephone: 2319

D. C. JOHAR & SONS
BOMBAY MUTUAL ANNEXE
Hornby road, Post Box No. 1433
BOMBAY.
23352.
Telegram- 'SONS JOHAR'

ஆரிய வைத்தியன்

P. V. இராம வாரியாரின்

ஆயுர்வேத மருந்துகள்



ச்யவன பிராசம்- காச இருமல் வியாதிகளுக்குப் புத்துயிரும் ஆரோக்கியமும் கொடுக்கும் சிறந்த ஔஷதம்.

தச மூலாரிஷ்டம்- நீண்ட நாள் வியாதியஸ்தர்களுக்கு புத்துயிரும் ஆரோக்கியமும் கொடுக்கும் உன்னத டானிக்.

நீலி பிருங்காதி தைலம்- உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயார் செய்யப் பட்டது. சிரசு சம்பந்தமான சகல வியாதிகளையும் போக்கி, நல்ல நித்திரை, ஞாபக்சக்தி, மூளைக்கு குளிர்ச்சியும் கொடுக் கும். அருமையான கேசத்திற்கு அபரிமிதமான வளர்ச்சியும், மிருதுவும் கொடுக்கும் உன்னதமான தைலம்.

க்ஷீரபலா- 101 தடவை சுத்தம் செய்யப்பட்டது முடக்கு வாத நோய் களை உடனே நிறுத்தக்கூடியது.



இதர மருந்துகளின் விபரமான காட்லாக் இலவசமாக அனுப்பப்படும்.

வியாதி விபரங்களை விவரமாய் எழுதவும்.



- ஏஜெண்டுகள் தேவை -

ஆர்ய வைத்திய பார்மஸி

திருச்சி ரோடு, :: கோயமுத்தூர்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் மூலம்

எதிர்காலத்திற்கும், குடும்பத்திற்கும்

பாதுகாப்பு பெற்று

தேச விடுதலையைக்

கொண்டாடுங்கள்

தமிழ் நாட்டில் தமிழர்களால் நிறுவப்பட்டு

ஓங்கி வளர்ந்துவரும்

இந்தியா லைப் பெனிபிட்

அஷ்யூரன்ஸ் சொசைடி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

கோயமுத்தூர்.

1942-45 வருஷங்களில்

ரூ. 1000 பாலிஸிக்கு போனஸ

ஜீவிய இன்ஷ்யூரன்ஸ

ரூ. 40

எண்டோமெண்டு

ரூ. 30

ஓங்கி வளர்ந்து வரும் இத் தமிழர் நிலையத்தில்

மாலிஸிதாரராக - பிரதிநிதியாக

சேரவாரீர்.

டெலி போன்: நெ. 160

தந்தி: "பயனீர்" கோயமுத்தூர்



ரிஜிஸ்டர் ஆபீஸ்: பீளமேடு, கோயமுத்தூர்.

உயர்ந்த ரகம் நூல் 40 நெ. முதல் 100 நெ. வரை தயாராகிறது

மற்ற விபரங்களுக்கு

மானேஜிங் ஏஜண்டுகளுக்கு எழுதவும்.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

T. R. நாராயணசாமி நாயுடு & கம்பெனி.

டெலிபோன் நெ. 224.

தந்தி விலாசம்: "கஸ்தூரி"

தி கஸ்தூரி மில்ஸ் லிமிடெட்.

சிங்காநல்லூர் போஸ்டு, கோயமுத்தூர் ஜில்லா.

மொத்தம் கதிர்கள் 11,220.

40s, 42s, 2/42s, நம்பர்

நூல் உற்பத்திக்கு

பிரக்யாதியடைந்தவர்கள்.

பரீக்ஷையிலும், அனுபவத்திலும் மற்ற எல்லா நூல்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்.

619ம் நம்பர் டெக்ஸ் மார்க்கை பார்த்து வாங்கவும்.

Ms. C. N. வெங்கிடபதி நாயுடு & Co, Ltd.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரட்டரீஸ்.



காணிக்கை

நம்முடைய கனவு கைகூடி விட்டது. நம்முடைய லட்சியம் சித்தித்து விட்டது. தமிழ் நாடு தழைத் தெழுந்தது. சுதந்திர இந்தியா இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

நம்முடைய தலைமுறையிலே இழந்த நம் சுதந்திரத்தை மீண்டும் பெற்று மனிதரானோம். இந்தத் தீபாவளி நம் சுதந்திரத் தீபாவளி.

அந்த மகோன்னதமான பண்டைப் பெருமைக்கும் உயர்வுக்கும் எடுத்துக் காட்டாக விளங்க நம் வாழ்க்கையிலே சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தக்கபடி பயன் படுத்தி, காவியச் செல்வத்தையும், ஓவியச் செல்வத்தையும் மிகப் புனிதமாகக் காப்போம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

உலகம் போற்றும் இந்தியக் கலை, நாகரிகம், பண்பாடு இவை யாவும் திகழ்கட்டும் பரவ தமிழ் நாட்டின் தனிக் கொடியான வீதியிலே கம்பீரமாகப் பறந்து இன்பந்தர நம் சுதந்திரத்தையும் கவனத்தையும் செலுத்தும் அற்புத காலம் இதோ நம் கண் எதிரே விரிந்து கிடக்கிறது.

வாழ்க்கைக்கு ஒளி யூட்ட வேண்டியும், இந்த மண்ணிலே விண்ணின்பத்தைப் பொழியும் அற்புத வாழ்வுக்காகவும் நாம் பாடுபடச் சித்தமாக இருக்கிறோம். இன் கலைகள் ஒவ்வொன்றிலும் கலை அழகு ததும்பப் பணி புரிதல் ஒன்றே நம் லட்சியம்.

"மாதமணி" தீபாவளி மலர் புதிதாக மலர்ந்த புதுப் பூக்களிலே மணம் மிகுந்த ஒரு நறுமலர். தமிழகத்தின் இலக்கியத் தடாகத்திலே அழகலைகளை அள்ளி வீசும் அருந் தாமரை. காவியச் சோலையிலே பூத்துக் குலுங்கும் ஒரு மென் கொடி. ரசிகர்களின் உள்ளக் கடலிலே தவழும் ஓயில் அலை இது. இந்த இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது இத் தீபாவளி மலர்.

மகான் சுத்தானந்த பாரதியார் அவர்கள் அருமையான ஓர் சமூகச் சித்திரத்தை இம்மலருக்கு அளித்துள்ளார்கள்.

தமிழ் அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் சிந்தைக்கினிய நீதிக் கதைகளைத் தெள்ளத் தெளிந்த சிறு கதையாக நிர்மாணித்துள்ளார்கள்.

இசைச் செல்வர் எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள் சிறந்த கட்டுரை ஒன்றை அளித்திருக்கிறார்.

நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நகைச் சுவையைப் பற்றியே சுவைபடத் தீட்டியுள்ளார்.

திருமதி சங்கீத வாணி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் மலருக்கெனத் தம் இதயக் கனவுகளையே—தம் பக்தி பரவசத்தையே உள்ளம் உருக்கும் சித்திரமாக வரைந்துள்ளார்கள்.

இணைபிரியா இரு நண்பர்கள் தலைவர் காமராஜ்-நாகராஜ் இருவர் விஷயதானமும் மலருக்கு எழில் தருகின்றன.

கவிதா மண்டபத்தில் நுழைந்து கொண்டிருக்கும் இளங் கவிகள், "விசாரன்", "அம்பலவாணன்" முதலானோர் கவிதை களுக்குப் படங்களும் அழகு தருகின்றன.

மலரில் மலர்ந்துள்ள மூவர்ணச் சித்திரங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். "ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" என்று பாரதி தமிழை மறந்து சக்தி பூசனையில் ஈடுபட்டாரே, அந்த சக்தி, அந்தக் காளி, அந்த அன்னை எந்த ரூபத்தில் காட்சி தருவாள் என்பதை நம் கற்பனையின் மூலம் கண்டு அனுபவித்து உருவாக்கிருக்கிறார் ஓவிய மணி வி. எம். பிள்ளை அவர்கள்.

ஓவிய மணி வி. எம். பிள்ளை [illegible] முகப்புக்குத் தீட்டிய மூவர்ணச் சித்திரம் [illegible]க்' ளின் இனிய காவியத்தை நம் கண் [illegible] செய்கின்றது. புகார் நகரத்திலுள்ள [illegible] மூழ்வில் கடலுக்குச் சென்று கோ[illegible] கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்[illegible] தம். கடற்கரை யருகே அழகானதோர் [illegible]ப்பூச் [illegible]. புன்னை மரத்து நிழல் பூமணம் சிந்துகிறது! [illegible] புதுமணல் பரப்பிலே, அழகான திரை கட்டி மாதவி [illegible] கோவலனும் உல்லாசமாக வீற்றிருக்கிறார்கள். [illegible] வசந்தமாலையின் கையிலுள்ள யாழை வாங்கி [illegible]வி இசையை எழுப்புகின்றாள். இந்த அற்புதக் காட்சி மேலட்டைக்கு வனப்புத் தருகிறது

இசைச் செல்வர்களையும், இசைச் செல்விகளையும் ஜகஜ்ஜோதியாகப் படம் பிடித்துள்ள வர்ணப் படங்களை இன்றைக் கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

மறு மலர்ச்சி எழுத்தாளர் பிரதிநிதிகளும், நவயுகத்துச் சிந்தனையாளர்களும், புதுக் கற்பனையாளர்களுமான, எம். எஸ். கமலா, ஸ்ரீமதி. கு. ஸ்ரீமதி, கே. விஜயராகவன், கே. வெங்கட ரத்தினம், எஸ். வி. பத்மநாபன், கோமதி சுப்ரமணியம், ப. தனுஷ்கோடி, கே. வி. துரைசாமி ராஜா, சுகி, ஜீவா, அ. கிருஷ்ணசாமி நாயுடு, கே. சி. எஸ். அருணாலசம், ரா. நா. முதலானவர்கள் மலருக்கு மணம் தந்துள்ளார்கள். சைத்ரிக மணி "ஜோதி" கவிதைகளையும், பாடல்களையும் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்துள்ளார்.

'வாழ்க்கைச் சுழல்', 'குங்கும அலங்காரி', 'சந்திர லேகா' முதலான அருமையான நாவல்களின் ஆசிரியரும், பண்புள்ள எழுத்துத் திறன்மிக்க ஏ. ஷண்முகம் அவர்கள் புதிய ஓர் சமூக அமைப்புக்கு அற்புதமான சிறு கதை ஒன்றின் மூலமாக வழி கோலி இருக்கிறார்.

கவி அரசி மஞ்சுளாவின் சித்திரக் கவிதை ஒரு அருமைச் சித்திரம்!

காகிதக் கட்டுப்பாடு இல்லாமலிருந்திருந்தால் இன்னும் அருமையான வண்ணமாக மலரைத் தயாரித்திருப்போம். ஆனால், நம்முடைய கனவுகள் நனவாக இன்னும் எத்தனை எத்தனையோ திருவிழாக்கள் தான் காத்திருக்கின்றனவே! அப்போது பாரதியார் சொல்லியபடி, "எண்ணுவது நண்ணும் காண்!" என நாமும் கூறி மலரின் வனப்பிலே ரசிகர்களின் நெஞ்சைச் செல்ல விடுகிறோம்!

வாழ்க தமிழ் மொழி!

அழகு பூஜை

[ரா. நா]

"அழகுள்ள வஸ்து என்றென்றும் ஆனந்தமளிக்க வல்லது" என்று ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் கூறுகிறார். அழகுள்ளது, யாதாயிருந்தாலும் மக்கள் மனதை அது கவருகிறது.

தீபாவளி பண்டிகை சமயத்தில்தான் அழகு எங்கணும் ஆனந்தத் தாண்டவமாடுகிறது. ஆணும் பெண்ணும் அனைவரும் அழகாய் அலங்கரித்துக் கொண்டு ஒருவரையொருவர் அன்புடன் அழைத்துப் பேசுகின்றனர். மனமாத்ஸர்யங்கள் மறைந்து, வாழ்க்கையின் சுகங்களையே பெரிதாக மதித்த எல்லோரும் இப்பண்டிகையின்போது சரள பாவத்துடன் கடமாடுகிறார்கள்.

* * *

அழகுக்கு வணக்கம் செலுத்துவது விசேஷ தினங்களில் மட்டுமல்ல. சாதாரண காலங்களில்கூட மனிதன் தன் உள்ளத்தை வனப்பு வசம் ஒப்பித்து விடுகிறான். இயற்கையின் வனப்பைக் கண்டு உள்ளத்தைப் பறி கொடுக்கும் மனப்பாங்கு கவிஞர்களின் ஏகபோக உரிமையல்ல. மகளின் கம்பீரத்தையும், சூரியோதயம், அஸ்தமன வனப்பையும் கடலின் கொந்தளிப்பையும் கண்டு தன்னை மறந்த நிலையிலுள்ள மக்கள் எண்ணற்றவர்கள்.

அழகான ஓவியங்களைக் கண்டு அதற்கு ஏராளமாகப் பொருள் கொடுத்து வாங்கி எச்சமயமும் இந்த ஓவியச் சிறப்பை நினைத்து அகமகிழ்ந்திருப்பவர்கள் எத்தனையோ பேர்.

* * *

பெண்ணினத்தை பலவகையில் சித்தரித்துக் காட்டும் ரவிவர்மா போன்ற கலைஞர்களின் ஓவியங்களை மட்டும் கண்டுமகிழ்ந்து ஆனந்திக்கின்றனர் என மதித்துவிடலாகாது. எலும்பும் தோலுமாக கூன் விழுந்து, கையில் ஊன்றுகோலுடன் தடவித்தடவி நடக்கும் கிழவனுடைய படத்தை ஒரு சித்ரசாலையில் கண்டு மயங்கி நிற்கும் பலரைப் பார்த்திருக்கிறேன். அங்கே பார்ப்போர் மனதை ஈர்ப்பது விருத்தாப்பிய தசையல்ல, இதை அவ்வளவு வன்மையாக சித்தரித்துக் காட்டிய ஓவிய நிபுணரின் கலைத்திறன். பீம ஸேனன் மாதிரி பலிஷ்டனையும், பிச்சையெடுக்கும் பெண்மணியின் வறுமைக் கொடுமையையும் பார்ப்போர் பிரமிக்கும்படி வர்ணம் தீட்டிக் காட்டுவதில் ஒரு தனி வனப்பிருக்கிறது.

* * *

ரோமாபுரியில் நிடகாத்திரமான ஆடவர் உருவில் சிலைகள் பல தெருக்களெல்லாம் நிறுவப்பட்டிருந்தனவாம். அந்த சிலைகள் காட்சியளிக்கத் தொடங்கிய அடுத்த தலைமுறையில் ரோமாபுரியெங்கும் ஸௌந்தரிய புருஷர்கள் பிறந்தனராம். அழகு வழிபாட்டின் அற்புத விளைவுக்கு இது ஒரு அத்தாட்சி.

இயற்கை அன்னை எவ்வளவோ அழகாயிருக்கிறாள். அவள் இன்னும் அழகாக தரிசனம் தரும் வகை கண்டு ஓவியன் தன் கற்பனைத் திறனை உபயோகித்து ஒரு புது நந்தவனத்திற்கு ஓவியக் கலைமூலம் உருவமளிக்கிறான். இந்தப் படத்தைக் கண்டு பல புது நந்தவனங்கள் உருவாகின்றன. இயற்கையை அப்படியே ஓவியக்காரன் படம் தீட்டுவதற்கு பதிலாக சைத்ரிகனின் கற்பனைத் திறன் இயற்கைக்குப் புது ரூபமளிக்கிறது. இயற்கையைவிட மனிதன் பெரியவன் என மமதை கொள்ள இம்மாதிரி சம்பவங்கள் இடமளிக்கின்றன.

* * *

இலக்கியத்தில் கலை அழகு என்கிறோம். கவர்ச்சியுள்ள பல நவீனங்கள் தோன்றுகின்றன. ஆசிரியர் புது வாழ்வைச் சித்தரித்தால் அவருடைய சிருஷ்டிகளை ஜனங்கள் படிப்பதால் புதுவாழ்வு தோன்றலாம். விகல்பமான விஷயங்களைப் பற்றி எழுதினால் அவைகளைப்படிப்பவர் வாழ்க்கையும் விகல்பத்தில் ஈடுபடத் தொடங்குகிறது. துப்பறியும் நவீனங்கள் சமீபமில் அதிகமான பிறகு குற்றங்களும் புது மாதிரி குற்றங்கள் புரிபவர் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டதென்று காலஞ்சென்ற லார்டு பர்க்கன்ஹெட் கூறியிருக்கிறார். இலக்கிய கலை அழகின் விபரீத விளைவுகளில் இது ஒன்று.

* * *

அழகு வழிபாடு தற்காலத்தின் விபரீத வழியில் செல்ல ஆரம்பித்துவிட்டது. சினிமா நட்சத்திரங்களின் படங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு அவைகளையே திரும்பத்திரும்பக் கண்டு களித்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கும் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பார்ப்பதுடன் நிற்பதில்லை. அந்நடிகளுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள ஆவல் கொள்கின்றனர். உபாசனைக்குகந்த ஆத்மாக்களல்ல இந்நடிகள் என்பது உலகப்பிரசித்தம்.

மற்றொரு வியாதி நம் இளைஞர்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. கிரிக்கட் ஆட்டக்காரர்கள் படங்களைச் சேகரிக்கின்றனர் பல உபாலகர்கள். ஒரு ஆட்டக்காரனின் ஒரு படம் மோதாது பார்த்துக் களிக்க. ஆட்டக்காரன் கையை உயர்த்துவது, காலை அகற்றுவது, அவன் புகை பிடிப்பது போன்ற பல உருவப் படங்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்கின்றனர். என்ன இருக்குமோ ஆட்டக்காரர்கள் படங்களில்.

* * *

அழகு பூஜையைப்பற்றி கீட்ஸ் மகாகவி கூறியது மன எழுச்சியும், தூய்மை எண்ணமும் உண்டாக்கவல்ல வனப்பைப் பற்றித்தான் குறிப்பிட்டார் என எண்ணுகிறேன். வாழ்க்கையானுபவத்தைச் செய்யும், அழகை வணங்குவதுதான் மனிதவர்க்கத்திற்கு மதிப்பளிக்கும். இந்த உண்மையை அழகு பூஜை நடத்தும் தீபாவளிப் புனிதநாளன்று நாம் அறிந்து கொள்வோமாக!

நகைச் சுவை

என். எஸ். கிருஷ்ணன்

"என்ன, இப்படிம் பாக்கிறீங்க" என்று சுப்பம்மாள் தன் கணவனிடம் ஆச்சரியமாகக் கேட்டாள். "ஒண்ணுமில்லே, இந்த நகையிலே சுவையைக் காணோமென்னு தான் பார்க்கிறேன்" என்றார் முருகேசம் பிள்ளை. பெண்ணுக்குக் கல்யாணத்திற்காகப் புதிதாக ஆசையாக வாங்கின வைர அட்டிகையைப் பார்த்து இப்படி பிள்ளையவாள் பதில் சொன்னது கொஞ்சங்கூட சுப்பம்மாளுக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது அந்த நகையை வாங்காமல் தடுத்துவிட வேண்டுமென்ற கவலை தகப்பனாருக்கு, பெண்ணுக்கு நகைகளைப் பூட்ட வேண்டுமென்ற அளவு கடந்த ஆசை தாயாருக்கு. அதற்காக சந்தோஷமாக நகைக்கிறாள், அன்பாகப் பேசுகிறாள். தகப்பனார் அசட்டுத்தனமாக நகைக்கிறார், நகையைப் பார்த்துப் பார்த்து எரிச்சலை அடக்கிக் கொண்டு மீண்டும் நகைக்கிறார். ஆனால் அந்த நகைப்பில் ஒளிந்து கிடக்கும் வெறுப்பும் பணம் போய் விடுமோ என்ற பயமும் கலந்த உணர்ச்சியானது சுவையில்லாத நகையாகச் செய்து விடுகிறது. வைர நகையும் தகப்பனாரைப் பார்த்து சுவையில்லாத நகையைத் தருகிறது. ஒருவேளை புருஷன் விலையுயர்ந்த நகையை வாங்க மறுத்து விடுவாரோ வென்று மனைவி மேல் பூச்சாக நகைப்பதிலும் சுவை யற்றுக் காணப்படுகிறது.

ஆகவே நகைப்பில் சுவையிருக்க வேண்டுமென்றால்—ஏன்—நகைச் சுவையை அநுபவிக்க வேண்டுமென்றால் காசு பணத்தைப் பற்றிய கவலையோ,—வேறு எண்ணங்களோ தோன்றக்கூடாது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். ஒருவன் வேடிக்கையாகப் பேசி கேட்போரை வயிறு வெடிக்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறான். ஒரே தமாஷ் தான். அந்த சமயத்தில் அவனுக்குக் கடன் கொடுத்த ஆசாமி அங்கே வருகிறான். எப்படியிருக்கும் அந்த மனிதனின் மனோநிலை. அதிலும் கடன் வாங்கின விஷயமாக தமாஷ் பண்ணிக் கொண்டிருந்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள், கடன் கொடுத்தவன் முகத்தைப் பார்த்ததும் வேடிக்கை யெல்லாம் ஓடிப் போய் விடும். முகத்தில் அப்படியே அசடு வழியும்.

போடாத நகைகளெல்லாம் போட்டு பெண்ணை ஒருவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறார்கள் பெற்றோர்கள். பெண்ணுக்குப் பிடித்தமில்லாத புருஷனைப் பெற்றோர்கள் தேர்ந்தெடுக்க கட்டாயத் திருமணம் இது. மண மேடையில் உட்கார்ந்திருக்கும் பெண்ணின் கண்கள் எவ்வளவு நீரைக் கொட்டுவதாயிருக்கும். எவ்வளவு நகைகள் போட்டாலென்ன? வைரத்தால் மேனி முழுவதும் மூடினால் தான் என்ன? அவைகளெல்லாம் உண்மையில் நகையாகத் தோன்றுமா அந்தப் பெண்ணுக்கு? அகவுணர்ச்சியை அறுக்கும் ஆயுதங்களாகவல்லவோ தோன்றும். வாழ்க்கையில் நகைச் சுவை மருந்துக்குக் கூட காணமுடியுமா?

விதவை மகளை வீட்டில் பூட்டி வைத்து விட்டுச் சில விந்தை மனிதர்கள் தங்களுக்கு மணம் செய்து கொள்ளுகிறார்கள். இந்த தாலி கட்டும் தகப்பன்மார்களில் வாழ்க்கையில் நகைச் சுவைக்கே இடமில்லாமற் போய் விடுகிறது. எதிர்காலத்தில் மனித மாணிக்கங்களாக வரக்கூடிய எத்தனையோ குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படும் அநீதிகள் தாண்டவமாடுகின்றன. இன்ப வாழ்க்கையானது வரண்ட பாலைவன வாழ்க்கையாக மாறி விடுகிறது,

* * * *

"உலகத்து நீண்ட காலம் உயிர் வாழ வேண்டுமா?" என்று ஒருவர் கேட்டார். வேண்டாமென்று யார்தான் சொல்லுவார்கள். "அப்படியானால் நன்றாகச் சிரி" என்றார் அந்தப் பெரியவர். நகைத்தால் ஆயுசு வளருமென்கிறார் அந்த நிபுணர். விஞ்ஞான சாஸ்திரமும் இதை சம்மதிக்கிறது. சிரித்தால் போதும் ஆயுசு வளருவதற்கு ரொம்ப எளிய வழி. ஆனால் சிரிப்பு சுலபமாய் வந்துடுமா? அது தானில்லை. அதற்கு வாழ்க்கையில் இன்பம் இருக்க வேண்டும். கவலை, அச்சம், அகங்காரம், குழ்ச்சி, தன்னலம் ... ... இந்த மாதிரியான கெட்ட குணங்களிருக்கவே கூடாது. குணத்தோடு பழகும் மனசு வேண்டும். கூலி கொடுக்கக் கூசக் கூடாது. பெண்களை விளையாட்டுக் கருவிகளாக எண்ணி ஏமாற்றக் கூடாது. பெண்களுக்கு கற்பு, கற்பு என்று பேசி ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறி கண்டபடி நடக்கக் கூடாது. சாதி மதச் சண்டையைக் கிளப்பித் தலைவராக ஆவதற்கு சதி செய்யக்கூடாது. கதரை அணிந்து கொண்டு கள்ளைக் குடிக்கக் கூடாது. சாஸ்திரத்தைக் காட்டி தன்னை மறைத்துக் கொண்டு, சண்டாளத்தனம் செய்யக் கூடாது. இன்னும் பல காரியங்கள் ... ...

வாழ்க்கை வாழ்வதற்கேயாகும். இன்பமாக வாழ வேண்டும். அப்படியானால் வாழ்க்கையில் நகையும், அதில் சுவையும் ஏற்படும். அதுவே அமரர் வாழ்வு; நகைச் சுவை வாழ்க்கை.

இருளில் மலர்ந்த பங்கஜம்

யோகி சுத்தானந்த பாரதியார்

காவேரி பெருகுலை சிந்தாமணிக் கட்டம் துமிசந் தான். கல்லூரி மாணவர் 'தொப்தொப்' என்று குதித்து அலைகளுடன் குஸ்தி போட்டு ஒரு கை பார்த்து விட்டே கரையேறுவர். இன்று விடுமுறை நாள். கேட்க வேண்டுமா .... சிந்தாமணி இரண்டாகிறது.



ஏகரகளே. அப்போது "ஐயோ ஐயையோ" என்ற ஒரு சத்தம் கேட்டது ... ... பெண் குரல் ... ... கண் இமைக்கு முன் சத்தத்தை வெள்ளம் விழுங்கி விட்டது. குதித்தான் கோபாலன், மார் நீச்சில் சென் றான். பெண்ணை அத்தாயமாகத் தூக்கிவந்து கரை யேற்றினன். நீரை வெளியேற்றிக் கொஞ்சம் சூடான காப்பி தந்ததும், பெண் விழித்துக் கோபாலனைப் பார்த் தாள். கோபாலனும் பார்த்தான். அன்று பார்த்த கண் கள் சிரஞ்சீவிக் கண்கள். இருவர் மனத்திற்கும் அவை முடிச்சுப் போட்டு விட்டது. "அம்மா பங்கஜம் என்று தாயார் அலறி வந்தாள். கோபாலனுக்கு நன்றி செலுத்தி மகளை அழைத்துச் சென்றாள். அன்று முதல் மாலை ஐந்தரை மணியடிக்க வேண்டியது தான் தாமதம். சிந்தாமணிப் படிக்கட்டில் பங்கஜம் பூக் கும் ... ... கோபால வண்டு அதைத் தேடி வசந்த ராகம் பாடி வரும் ... ... ஒருவரை ஒருவர் விரும்பினர்; நேசித்த னர், காதலித்தனர் ... ... காதல் பெருகி ஒரு நாள் இரு வரும் ஒருவரானர். இப்படியே இருவரும் எப்போதும் இருப்போம்" என்றாள் பங்கஜம் ... ... "சமூகக் கட்டுப் பாட்டை உடைத்தெறிந்து, அப்படியே இருப்போம்" என்றான் கோபாலன்.

அதை உடைப்பது எப் படி? இவன் விபூதி பூசுகிற வன். சைவன், ஸ்மார்த்தன். அவள் நாமம் போடும் தென் கலை ஐயங்கார்ப் பெண். இவன் செல்வன். அவள் ஏழை. தாயார் அவள் விற் றுப் பிழைக்கிறாள். கணவனில்லாத் தன்பம் ஒரு புறம். கொம்புபோல வய தான பெண்ணுக்கு வரன் கிடைக்காத துக்கம் ஒரு புறம். "அம்மா நான் அவரையே ... ..." என்று பங்கஜம் ஒரு நாள் கட்டிக் காட்டினாள். "ஐயோ குடிகேடி! தென் கலைக்கும் ஸ்மார்த் தனுக்கும் எட்டுமாடி ... ... அந்தப் பித்தத்தை விட்டொழி!" என்று தாய்

கண்டித்தாள். எப்படியோ தேடிப் பிடித்து அமீனு சிங் கமையங்காருக்கு இரண்டாந் தாரமாகக் கொடுத்தாள் பங்கஜத்தை.....கணவன் நாற்பத்தைந்து வயதுள்ளவன். மூக்கால்வாசி உயிரை முதல் மனைவி உறிஞ்சி விட்டாள். ஆள் பேரீச்சங் கொட்டையாக வற்றிப் போனான். கோர்ட் அலீச்சல் ஒரு புறம். பங்கஜம் இரண்டே ஆண்டுகள் வேண்டா வெறுப்பாக அவனுடன் குடித்தனம் செய்தாள். மூன்றும் ஆண்டு ஒரு விஷ ஜ்வரம் அவனை அள்ளிச் சென்றது.

இளம்பெண் விதவையானாள். துக்கம் தாங்காமல் தாயாரும் இறந்தாள். பங்கஜம் புகுந்த வீட்டிலேயே எப்படியோ இடிபட்டுக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் மட்டும் கோபாலனையே கூவிக் கொண்டிருந்தது. விசனத்தை யெல்லாம் கோபால உபாசனையில் மாற்றினாள் பங்கஜம் ... ... ஆருண்டுகள் கனவு போலச் சென்றன.

ஐரோப்பியப் போர் மூண்டது. அது உலகப் போராக வளர்ந்தது. அசுர பலங்கள் நாடுகளை அழித்தன. அரியணைகள் மண்ணில் உருண்டன. ஆனால், ரஷ்யக் கரடியிடம் ஜர்மன் கழுகு சரியானபடி அகப்பட்டுக் கொண்டு தவித்தது. இங்கே ஜப்பான் மலேயாவைப் படையெடுத்து விழுங்கி, பர்மாவைப் பற்றி, அந்தமானைப் பிடித்து, இந்தியாவிற்கும் தனது கபந்தக் கைகளை நீட்டியது. பட்டணமெங்கும் படையொழிச்சி. எங்கும் இருட்டடைப்பு, ஊர் தோறும் விமானப் பாதுகாப்புப் படை வேலை செய்தது. சென்னையில் யுத்த பீதி அதிகரித்தது. பாதி நகரம் காலியானது. கச்சேரிகள் பல இடம் மாறின. ஏ. ஆர். பி. (A. R. P.) காரியாலயம் திருச்சிக்கு மாறியது. பலர் அதில் சேர்ந்து பயிற்சி பெற்று, தேச சேவைக்குத் தயாரானார்கள். தெருத் தெருவாக பாதுகாவலர் (வார்டன்கள்) ஊதும், டார்ச்சும் கொண்டு சுற்றினர்; குண்டினின்று காத்துக் கொள்ளும் வகையை எல்லாருக்கும் உபதேசித்தனர்.

அவர்களுள் தெப்பக்குளம் ஹெட் வார்டனுக்கு நல்ல பெயர். அவன் ஏழை எளியவர்களுக்குப் பேருதவி செய்தான். ஊரில் திருட்டு பயம் அதிகம், பஞ்சம். கோபாலன் தனது சம்பளமெல்லாம் ஏழைகளுக்கே உதவினான். தானே ஒரு தொண்டர் படை சேர்த்துக் கஞ்சித் தொட்டி நடத்தினான். அம்மாவாசை யிரவு. நட்சத்திரங்களைக்கூடக் காட்டாமல் மேகம் ஆகாசத்தை மறைத்து விட்டது. மண்ணிலும் விண்ணிலும் ஒரே இருட்டடிப்பு. எங்கும் நிச்சப்தம். தாயுமானவர் மலை தான் கறுப்புக் காகிதத்தில் கறுப்பு மையால் எழுதிய சித்திரம் போல் ஜாடையாகத் தெரிகிறது. ஊர் இருட்டில் புதைந்து விட்டது.

கோட்டைத் தெருவில் ஒரு சிறு வீடு. இரவின் மௌனத்தை அதுவே கலைத்தது. உள்ளே "ஹோ ஐயோ!" என்ற சத்தம். "பேசாதே உன்னைக் கொன்று போடுவேன்" என்ற மிரட்டல். ஒரு பெண் அலறுகிறாள்; ஆண் தடியன் ஒருவன் பலாத்காரம் செய்கிறான் என்பதை யாரும் ஊகிக்கலாம். பெண் "ஆ, அனுதை ரட்சகா ...எனக்குத் துணை செய்ய யாரும் இல்லையா?" என்று முறையிட்டாள்.

"தட் தட்" என்ற சத்தம். முற்றத்தில் ஐந்து பேர் குதிக்கின்றனர். "அம்மா பயப்படாதே.....இதோ" என்னு முன் பளிச்சென்று டார்ச் அடிக்கிறது. பலாத்காரத் தடியன் ஓடுகிறான். "எங்கே ராஸ்கல்" என்று அவனை ஒரு வலுத்த கை கட்டிப் பிடித்து விலங்கு மாட்டுகிறது. 144, கொண்டுபோ இவனை ஸ்டேஷனுக்கு" என்ற அந்த இனிய குரல் இடி முரசடிக்கிறது. தடியன் போய் விட்டான். வெளிச்சமே கண்டிராத அந்தச் சிறு மனை டார்ச் வெளிச்சத்தில் ஆறுதல் அடைந்தது.

வார்டன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவள் புகை மூடிய சித்திரம் போலிருந்தாள்.....அவள் மனத் துயரெல்லாம் முகத்தில் தேங்கின. "அம்மா ஏன் தனியாயிருக்கிறீர்கள்? துணையாள் இல்லையா"... என்று வார்டன் அனுதாபத்துடன் கேட்டான். பெண் தனது கதையெல்லாம் சொன்னாள். நாம் கேட்ட கதை தான். "எனது முதிய கணவன் சென்ற பிறகு அகாலை விதவை



யானேன். மாமனூர் வீட்டில் ஒரு வருடம் இருந்தேன். நாத்தனூர் இம்சை பொறுக்க முடியவில்லே. எனக்குப் போட்டு வரும். நாலு பெண்களுக்குப் பாட்டு சொல்லிக் கொடுத்துப் பிழைக்கிறேன். அத்தத் தடியன் சீனு வெகு காளாக என்னைத் தொந்தரவு செய்து வந்தான். இன்று திருட்டுத்தனமாக வந்து இப்படிச் செய்தான். காப் பாற்றினீர்கள்"... என்றுள்.

ஹா பங்கஜம் இப்படியா போனாய்! உன்னை உல கெல்லாம் தேடினேனே!... நான் பி. ஏ. எல். டி. தேறி சென்னையில் உபாத்தியாயராயிருந்தேன். உனக்குக் கலி யாண மானதைக் கேள்விப் பட்டேன். நான் பிரமசாரி யாகவே இருந்தேன்... "மறு பிறப்பிலாவது பங்கஜத் தையே மணப்பேன்" என்று விரதம் பூண்டேன். அந்த அதுட்டம் இப்போதே வந்தது. சென்னையில் பள்ளிக் கூடங்களெல்லாம் மூடிவிட்டனர். நான் யுத்த காலத் தில் சேவை செய்ய ஏ. ஆர். பியில் சேர்ந்தேன். விமா னம் விடப் பயின்றேன். திருச்சிக்கு என்னை மாற்றினர் கள்." என்றதுமே பங்கஜம் "ஆ, ரகுகா, ப்ராணநாதர்; இதோ இந்த கோபால விக்ரகத்தில் தங்களையே உபா சித்தேன். பலன் கிடைத்தது. இனி விக்ரகம் எதற்கு? உயிருள்ள தெய்வமே வந்து விட்டது." என்று கோபா லனை வணங்கினாள். "பங்கஜம் போர் முடியுமட்டும் நீ என் சகோதரி; நான் போர்த் தொண்டில் ஈடு பட்டிருப் பேன்" என்றான் கோபாலன். "நாதா நானும் அதே தொண்டு செய்யலாகாதா" என்று கெஞ்சினாள் பங்கஜம். "நாளையே நீ செஞ்சிலுவைப் படையில் சேர். நர்ஸ் வேலை பழகு. காயம் பட்டவருக்குச் சிகிச்சை செய். இந்தக் காலம் இதுவே புண்ணியம். முதலில் அதர் மத்தை வீழ்த்துவோம். தருமத்துடன் ஒத்துழைப்போம். வெற்றி முரசு கேட்டவுடன் திருமண பேரிகையும் கேட்போம்." என்றான் கோபாலன்... இருவரும் மனத் திலும் செயலிலும் வாக்கிலும் ஒன்றானார்கள். அணுக் குண்டு போரை நிறுத்தியது; அமைதி வந்தது, கோபால னுக்கு திருச்சி உபாத்திமைக் கல்லூரியிலேயே வேலை கிடைத்தது. பங்கஜத்தின் தனிமை தீர்ந்தது. இருவருக் கும் ராஜாஜியின் ஆசி கிடைத்தது. இருட்டில் மலர்ந்த பங்கஜத்தின் வீரகோபாலண்டு அபரத்தேன் உண்டது



ஆபீஸ் பையன்: இந்தக் கிளாசிலே இருக்கிற தண் ணியைச் சும்மா ஊத்தி ஆத்தினு நம்ம காப்பிப் பிரிய மானேஜருக்கு, ஞாபகம் வந்து, எழுந்து போயே போயிடுவாரு!





இசைப் பயிற்சி

[எம். கே. தியாகராஜ பாகவதர்]

வாழ்வைப் பலவிதமான ரீதியில், பலவிதமான வண்ணக் கலவைகளில் பார்க்கமுடியும். ஆழ்ந்து நோக்கினால், அவன் ஒருவன் நின்று அனேத்துக்கும் அதிகாரியாக இயக்கி வைப்பது தெரியவரும். வேதாந்திகள், விஞ்ஞானிகள், கவிஞர்கள் காணும் இவ்வுண்மையை இசை மூலமாகவும் அறியமுடியும். இறைவனே நாதவடிவான வன் என்று சொல்லுவார்கள். பக்தி மூலமாக தன்னே மறந்து, அவனே அடைவதுபோல், இசைமூலமாக அவன் அருளேப் பெறமுடியும் என்பதற்கு ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் சமீப காலத்திய உதாரணமாகும்.

இசை என்பது உலகின் தலேயாகிய இன்பங்களில் ஒன்று. உலகின் அலகிலா விசித்திரங்களே அறியவகை செய்யும் சாதனம் அது. தன்னே மறந்து, உலகை மறந்து அவனே அறிந்து, அவன் அருள்பெற அதுவே சிறந்த மார்க்கமாகும்.

மனதையும் அறிவையும் ஒருங்கே திறைகொண்டு நம்மை ஒருவழிப்படுத்தும் இசையை கற்பதற்கு சில முறைகளே அனுஷ்டிக்க வேண்டும். அவற்றில் எனது சிற்றறிவிற்கு எட்டிய சில உண்மைகள்.

எந்த வித்தையும் குருமுகமாக அப்யசிக்காவிட்டால் வெறும் ஏட்டுச் சுரைக்கையாகத்தான் பரிமளிக்க முடியும். ஏகலேவ சாதனே யாவருக்கும் எளிதன்று. கற்கத் தொடங்குமுன் நாம் யாரை குருவாக நாடி அடைகிறோமோ அவரிடம் பரிபூர்ண பக்தியும், விசுவாசமும் இருக்கவேண்டும். இசையானது உணர்ச்சியை அடிப்படியாகக் கொண்ட சாஸ்திரமாகையால் கற்பவரும், கற்றுக் கொடுப்பவரும் உவகை பெற்ற நிலேயில்தான் குருவின் சக்திகள் தலேசிறந்து பரிமளிக்கும். அந்நிலேயில் சிஷ்யன் அதன் முழுப்பயனேயும் அடைய முடியும். இருவர் மனதிலும் கபடமோ, ஏமாற்றே குடிபுகுந்தால், சிஷ்யன் மனதில் சங்கீதம் குடிபுகாது; குருவின் மனதில் சந்தோஷம் குடிபுகாது.

அப்யாச காலத்தில் கற்பதைத் தெளிவாக திர்கரண சுத்தியுடன் கற்கவேண்டும் என்பதுபோல, கேள்விச் செல்வத்தின் அவசியத்தையும் உணரவேண்டும். அவர் இப்படி, இவர் அப்படி என்று இசைவாணர்களேக் குறை கூறும் மனப்பான்மையும், அகந்தையும் கல்வியைக் கெடுப்பதுடன் சங்கீத முன்னேற்றத்தையும் தடுத்து விடும். இடைவிடாத உழைப்பு, சாதக காலத்தில் சகல காரியங்களேயும் மறக்கும் ஏகாக்கிர சித்தம், கட்டுப்பாடு, தன்னடக்கம் ஆகியவைகள் வெற்றிக்கு வழி.

உண்மையான சங்கீத உபாசகன் என்றைக்கும் சிஷ்யன்தான். ஸ்தூல ரூபத்தில் உபதேசித்த குருவிடம் நாடி கற்ற காலம், சிறகு முளேத்த பறவை, பறக்க கற்கும் காயமாகும். சிஷ்யன் அரங்கேறியபின் காலட்சேபம் செய்யும் காலத்து தன்னே மறந்து இறைவனுக்குக் அர்ப்பணமாக பாடினால் அது யாவரையும் பரவசப்படுத்தும்; கல்லும் கரையும், கட்செவியும் படமெடுக்கும் எனப் பெரியோர் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? முன்பு நான் வற்புறுத்திய ஒரு காரியத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். கேள்விச் செல்வம், இசை வாணர்களுக்கு என்றென்றும் அத்யாவசியமாகும். கல்வித்வான்களே கேட்பது, அவர்களுடன் கொஞ்சிப் பழகி அவர்கள் அனுஷ்டான முறைகளே அறிந்து கொள்வது சங்கீதம் கற்பவருக்கு அதிக நன்மையை அளிக்கும்.

சங்கீதம் கற்றபின், ஒருவரது ஞானமும், திறமையும் பரிமளிக்க வேண்டுமாகில் லௌகிகம் தெரியவேண்டும். தெய்வ சன்னிதி, பொது ஸ்தாபனங்கள், தர்ம காரியங்கள், நண்பர்கள், செல்வ வந்தர்கள் ஒருவரை விரும்பி யழைக்கும் காலத்தில். லௌகிகத்தில் இடம், பொருள், ஏவல் அறிந்து நடந்து கொள்வது அவசியம். இசையை இறைவன் அர்ச்சனேக்குரிய பாமாலியாக உபாசனே செய்தால் நிச்சயமாக பாடுபவர் பொதுஜனங்கள் அன்புக்கு பாத்திரராக முடியும் என்பது எனது உண்மை.



விடுதலை

இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஒளடத மூலிகை பூண்டு புல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ ?

மானுட ருழா விடினும் வித்து நடா விடினும்
வரப்புகட்டா விடினுமன்றி நீர் பாய்ச்சா விடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றே ?

யானெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என் மதத்தைக் கைக் கொண்மின்; பாடுபடல் வேண்டா
ஊனுடலே வருத்தாதீர், உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்.

—பாரதியார்



அரசியல் சுதந்திரத்தை நாம் அடைந்து விட்டோம். அதைக் காப்பாற்றிக் கொள்ளவும் நாட்டின் நலனை வளர்க்கவும் இனி பாடு படவேண்டும்.

இன்றைய நிலையில் நமது முதல் தேவை சந்தேகமற்ற அமைதி. தமிழராகிய நாம் அது எவ்வளவு அவசரமான தேவை என்பதைத் தெரிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டம். எந்தச் காலத்திலும் எந்தப் படையெடுப்போ அல்லது உள்நாட்டுக் கலகமோ நம்மிடையில் வளர்ந்து நாம் கண்டதில்லை. ஆனால் அமைதியற்ற நாடு என்னாளும் வளராது. வறுமை தாண்டவமாடும். கிடைத்த உரிமைகளையும் இழைப் பொழுதில் இழந்து விடுவோம். இதை எல்லாத் தமிழரும் மனதில் மிக உறுதியோடு கொள்ள வேண்டும்.

பாஞ்சாலத்தையும், பாகிஸ்தானையும் பாருங்கள். ஒரே அமளி. எல்லோரும் எல்லா திக்குகளிலும் ஓட்டம். கொலை, களவு, கொள்ளை. எந்த உற்பத்தி நடக்கும்? எந்த நோயை தடுக்க முடியும்? மக்கள் எவ்வகையிலும் மடிவுதான் காண்பார்கள். அந்நிலை வராமல் காப்பது தான் ஒவ்வொரு தேச பக்தன் வேலையாக இருக்க வேண்டும்.

பதவி, பட்டம், பணம் முதலியவை தேடும் போதும் எல்லோருக்கும் வெற்றி கிடைக்காது. குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்டபடி நடைபெறும். கிடைக்காதவர் கள் நாட்டை அழிக்கும் வழியான அமைதி குலைத்தல், சச்சரவு உண்டாக்கல், கட்டுப் பாட்டை உடைத்தல் முதலிய வழியே செல்லாமல் நாட்டின் நலனைப் பெரிதாகக் கொண்டு தங்களுக்கும் ஒரு காலம் வருமென்று நல்ல தொண்டு செய்ய முன்வர வேண்டும். தமிழர் எப்பொழுதுமே இதைச் செய்யும் ஆற்றல் உடையவர்.

இன்று நாம் அதை கைவிடக் கூடாது என்பதே எனது மனப்பண்பு. எல்லோ ரும் இதை ஏற்பார்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு தமிழனும் தன்னை மறந்து தன் நாட்டை நினைத்து நேர் பாதையில் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காமராஜ்

நானும் காமராஜும்

[ஆர். நாகராஜன்]

என் வாழ்க்கையில் நான் மிகவும் விரும்புவது இரண்டே; நல்ல கர்நாடக சங்கீதமும் காமராஜின் நட்பும். சங்கீதம் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் நாள் இது. ஆனால், காமராஜின் நட்பு கிடைப்பது மிகவும் சிரமம். எனக்கு அந்த அதிர்ஷ்டம் பல வருஷங்களாகக் கிடைத்தது.

நட்பு சொந்த விஷயமாயிற்றே. அதைப் பற்றி ஏன் பகிரங்கமாக எழுத வேண்டும்? என்று கேட்கலாம். காமராஜ் பெரும் ராஜீயத் தலைவர்; தேச பக்தர். அவருடைய நட்பு, விருப்பு வெறுப்பு இவைகளில் நாட்டினர் எல்லோருக்கும் பங்கு உண்டு.

காமராஜ் ஒரு அதிசயப் பிறவி. சுய நலம் என்பதையே நினைத்தறியாதவர். சில உடைகளும், ஒரு படுக்கையும் தான் அவருடைய சொத்து.

இது ஒன்றே அதிசயம் என்று சொல்லி விடலாம். அவர் விஷயத்தில் இன்னும் பல அதிசயங்களைக் காணலாம்.

அஞ்சா நெஞ்சம் படைத்தவர். தனக்கு என்ன கஷ்டம் நேரிட்டாலும் கவலைப்பட மாட்டார். ஆனால் ஒரு தேச பக்தன் கஷ்டப் படுவதைக் கண்டால் மனம் நொந்து போவார். அதிலும் ஒரு விசேஷம். தனது சகாவா, விரோதியா என்றுகூட பாகுபாடு படுத்த மாட்டார். கூட இருக்கும் சகாக்களுக்கு கோபம் வரும் அளவு கூட விரோதியாயிருந்தாலும் தேச பக்தனே என்று நினைத்துத் தொல்லையைத் தீர்க்கப் பாடுபடுவார்.

இன்னொன்று அவருடைய மகத்தான குணங்களில் ஒன்று.

அவரோடு கூட இருக்கலாம். நாம் எதைப் பேசினாலும் சலியாமல் கேட்டுக் கொண்டிருப்பார். ஆனால் அவர் முடிவுகளை மாற்றவோ, அசைக்கவோ நம்மைப் படைத்த பிரம்மாவாலும் முடியாது. அவருக்கும் நமக்கும் ஒரே வித எண்ணங்கள் உண்டானால் நட்பு நடக்கும். இல்லையேல, கட்டாயம் முடியாது.

நல்ல தொன்றைச் செய்ய யார் உதவினாலும் அவ்வுதவியை மறுக்கமாட்டார். தன்னுடைய ஆப்த நண்பனானாலும் தப்பு வழியில் அவரைக் கொண்டு போகவும் இயலாது; அவரின் உதவியையும் கொண்டுவிட முடியாது.

அமராவதி மத்திய மாகாண நகரம். அங்கே வெய்யில் காலத்தில் தாங்க முடியாத உஷ்ணம். பனி காலத்தில் பலத்த குளிர். அவ்வூர் சிறையிலே 1942 முதல் 1945 வரை காமராஜ் வைக்கப் பட்டிருந்தார். அவர் உடல் நோய்வாய்ப் படவில்லை என்றால் அவருடைய நைஷ்டிக பிரம்மசரியத்திற்கு அது தக்க சாட்சியம். காதல, கல்யாணம் முதலிய பதங்களைக்கூட கேட்க அவரால் முடியாது.

பதினேழாவது வயதிலிருந்து இன்று வரை தன்னாட்டின் சேவை ஒன்றையே லக்ஷியமாகக் கொண்ட வாழ்க்கை. அதிலும் கட்டுப்பாடு. தனி மனிதன் எவனும் தானே நாட்டுக்கொரு பெரும் சேவையைச் செய்துவிட முடியாது. ஸ்தாபனங்கள் தான் அத்தகைய சேவை செய்ய முடியும். காந்திஜியின் ஆணைக்குட்பட்ட காங்கிரஸ் போன்ற பெரும் ஸ்தாபனம் தான் அதைச் செய்ய முடியும். ஆகவே அவருடைய இருபத்தைந்து வருஷ தேச சேவை காந்திஜியின் ஆணையைத் தவறாமல் ஏற்பது.

இதுவரை பொதுப் படையாகவே எழுதி வந்திருக்கிறேன். ஒவ்வொன்றிற்கும் என்னால் உதாரணம் தர முடியும். ஆனால் சம்பந்தப்பட்ட அனைவரும் உயிரோடிருந்து பொது வாழ்வு நடத்தி வருவதால் தருவது கஷ்டமாயிற்று.

'இவை எல்லாம் சரி. அவைகளோடு உனக்கு என்ன சம்பந்தம்?' என்று கேட்பீர்கள். நல்ல கேள்வி!

தமிழ் நாட்டில் இன்று பல படுபாவிகள் தேசீயப் போர்வையில் நடமாடுகிறார்கள். பொதுக்கூட்டப் பிரசங்கமும் பதவி வேட்டையுமே அவர்கள் பணி. அவ்வகை பிராணிகள் காமராஜோடு எனக்கு உண்டான நட்பைப் பற்றி பேசத் தலைப் பட்டிருக்கின்றனர்.

காமராஜின் உயரிய குணங்களை அவர் தலைவராயில்லாமல் சாதாரண அரசியல் நிலையில் ஊழியரான காலத்தில் நான் காணும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அது சுமார் பன்னிரண்டு வருஷத்திற்கு முன்னர். அன்றுதான் அவர் நட்பு வேண்டுமென்று விரும்பினேன்.

அன்று முதல் இன்று வரை ராஜிய வாழ்வில் அவர் இட்ட வேலையை அப்படியே செய்வது என்ற ஒரே நியதியோடு அவரை பின்பற்றுகிறேன். ஆனால். அந்த 'ஆனால்' மிகவும் முக்கியமானது. எனது ஒத்துழைப்பையோ, நட்பையோ காட்டி ஒரு வித லாபத்தையும் நான் அவரிடமும் கேட்டதில்லை. பிறரையும் கேட்டதில்லை. தனியே ஒரே ஆளாக வாழ்க்கை நடத்தும் எனக்கு அவ்வகை உதவி தேவையும் இல்லை.

ஒரு உதாரணம் தருகிறேன். 'கல்கி' ராஜகோபாலாச்சாரியாரின் அத்யந்த பக்தன். எந்த நஷ்டம் வந்தாலும் அதைப் பொறுத்து பிறகும் அவரையே பின்பற்றும் பக்தன். தனக்கு பகவான் அளித்திருக்கும் எழுத்து வல்லமை பூராவும் ராஜகோபாலாச்சாரியாரின் பாதத்தில் காணிக்கையிட அவர் என்றும் தயார் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். அதை ஹனுமானுடைய ராம பக்திக்கு ஒப்பிடலாம்.

என்னுடைய நிலையும் அதே தான். காமராஜின் வழிதான் எனக்கு வழி. தமிழ் நாட்டு மக்கள் நன்றாக இவைபற்றி ஆராய வேண்டும்.

தன்னலமற்ற தேச சேவகர்கள் கிடைப்பது குதிரைக் கொம்பென்று சொல்வது உண்மை. அவ்வகை தன்னலமற்ற தியாகிகளின் கஷ்டம் மிகவும் பெரிது. ஏசுவை சிலுவையில் அறைந்தாலும் அவர் மதம் இன்று உலகில் பெரும் பலத்தோடிருக்கிறது.

சுயநலக் கூட்டம் காமராஜை வீழ்த்த முயலலாம். வெற்றி கூடக் காணலாம். அவர் பரப்ப நினைக்கும் உயரிய லக்ஷிய முறையை அழிக்க யாராலும் முடியாது. சிறிய அணில் போன்ற என் ஒத்துழைப்பையும் நிறுத்திவிட முடியாது.

('திரைக்குப் பின்' என்று வெளிவரத் தயாராயிருக்கும் சிறு நூலின் ஒரு அத்தியாயம் இது. அந்நூல் சீக்கிரத்திலே "புதுமலர் நிலைய"த்திலிருந்து வெளிவரும் தமிழ் நாட்டின் சென்ற இரண்டு வருஷ உண்மை அரசியல் நிலையை அது பிரதிபலிக்கிறதாக இருக்கும்.)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்
புதைத்து வைத்துக் கேடுகெட்ட...



சுஞ்சல்

தயாரிப்பு: C.A. அய்யாமுத்து

டைரக்ஷன்: C.A. அய்யாமுத்து, T.R.கோபு

விரைவில் வருகிறது!

ஜுபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்

மதுரை
திருப்பூர்



ஆண் : நின் மதி வதனமும்
நீள் விழியும் கண்டு
என் மதி மயங்கினேன்..... கண்ணே!





பரிசித்தி பெற்ற திருவனந்தபுரம் சகோதரிகள்.



நாட்டிய உலகில் புகழ் பெற்ற குமாரி வனஜா.



காதல் சனவு!

[கவியரசி தி. மஞ்சுளா]

நிலமும் நீலவானும் கை கோக்கும்
நிலாக் காட்டு நிலத்தனிமை!
உள்ளத்து நாயகனின் ஒயில் மடியில்
கலைக் கற்பனையில் மயங்கும் பொன் வேளை!
நெஞ்சம் நீல் கனவில் மயங்கி
இன்ப மலர் கொய்து இசை பாடிக் களித்து
கண்டறியாச் சுகம் காணும் நேரத்திலே...
தோழி.....

இளமான்களும், இளங்குட்டியும்
மெல்லிய பூத்திரை போல்
பனிப் படலம் போல் பார்வையில் புகுந்து
வாழ்வின் ரகசியம், கட்டற்ற கானகத்தில்
இசைப் போக்கில் திரிந்து, மகிழ்ந்து,
இளவேனிலில் திளைத்து
பச்சைப் பசுமையில் பூரித்து
நீரினும் நிலாவினும் மூழ்கி மூழ்கி
மனம் ரமிக்க மயங்குவதே'
என மொழிந்தன தோழி!
மான் பேசுமா?
மருண்டு நோக்காது,
மதியமும், வண்டும், மலரும்
கோலக் கிளிகளும்
காற்றும் கூட கனிவாய் அரற்றுகையில்
தோழி! மான் ஏன் மொழியாது?
மூத்து நகை குலுங்கச் சுந்தரி!
சொல்லு, தோகை மயிலே சொல்லு?
இல்லறத்து இன்பம் எழிற் காதலா?
அல்லது காதல் சனவின்
கனிந்த சுகச் சிந்தனையா?



ஏக்கம்

அழகு குடம் இடையேந்தி அன்னமென நடை நடந்து
பழகின கால் முன் செல்லப் பார்வையினில் வலை வீசி
விழுந்தோர்பால் பரிவகற்றி வேடிக்கைப்பேச் சதிர்க்கும்
எழிலின் திருவுருவை என் நெஞ்சம் மறந்திடுமோ?

(1)

மட்டவிழும் செந்தாழை மலர்ப்புதரின் மருங்குசென்று
பட்டு மணல் கொண்டு பவன்போலக் குடம் தேய்த்து
எட்டிரண்டு நீரில் வைத்து எழிற் குடத்தில் நீர் மொள்ளும்
கட்டழகி பொன்னுருவைக் கண்கள் மறந்திடுமோ?

(2)

சிற்றூற்றில் நீர் மூழ்கி செங்கரத்தால் குழல் கோதி
புற்று மஞ்சள்ப் பொடி பூசி புதுமை எழில் மிகக் கூட்டி
சுற்றிலும் ஒரு பார்வை சுழலவிட்டுச் சேலைதனைப்
பற்றிப் பிழிந்து துடுத்திப் பரபரப்பாய்க் குடம் நிரப்பி

(3)

படியேறி அரசு சுற்றிப் பாட்டிரண்டு முணு முணுத்து
மடியாகக் கும்பிட்டு மனமேங்க மறைந்து விட்ட
வடிவழகி தனை யெண்ணி வாடித் தவிக்குளம்
கொடிமீனையான் ஒரு வார்த்தை கூறியைப் பாராளோ?

"அம்பலவாணன்"

தீபாவளி வெளியீடு...

கன்னிகா



M. S. சரோஜினி, T. E. வரதன் B. Bc., சந்தானலக்ஷ்மி,
ஹேமா மாலினி, ஹரினி, கிருஷ்ணன், மதுரம், காளி
என். ரத்னம், லலிதா பத்மினி முதலியோர் நடித்தது

பக்ஷிராஜா தயாரிப்பு

டைரக்ஷன்.ஸ்ரீராமுலு நாயுடு

NARAYANAN Co *Release..*



நாட்டிய ராணிகள், லலிதாவும் பத்மினியும்



முருகன் அருள்

ஸ்ரீமதி கே.பி.சுந்தராம்பாள்

"மாதமணி" தீபாவளி மலருக்கு ஏதாவது கட்டுரை எழுதித் தருமாறு என்னிடம் கேட்ட போது என்ன எழுதுவது என்ற எண்ணம் என் மனசில் உதித்தது. என் குல தெய்வம் பழனி ஆண்டவன். அந்த ஆண்டவனைப் பற்றிய எண்ணமே உள்ளத்தில் எழுந்தது. இந்த வாழ்க்கையில் முருகன் எத்தனையோ தரம் இந்த அடிமையை ஆட்கொண்டிருக்கிறான். எந்தெந்த சமயத்தில் எப்படி எப்படிக் காப்பாற்றினான் என்ற அனுபவங்களை எண்ணினாலே மனதில் வியப்பும், பூரிப்பும் உண்டாகிறது. அதை அப்படியே எழுத முடியாவிட்டாலும் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் இரண்டொரு சம்பவங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வர முயற்சிக்கிறேன். குற்றமிருந்தால் அன்பர்களும் தாய்மார்களும் மன்னிக்க வேணும்.

சிலருக்கு இது வெறும் கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் என் வாழ்க்கையில் நடந்த சொந்த அனுபவத்தையே இங்கு கூறுகிறேன்.

பழனி ஆண்டவனைத் தரிசிக்க வேண்டுமென்ற பித்து அப்போதுதான் எனக்கு ஆரம்பமாகி இருந்தது. சதா முருகன் நினைவே நெஞ்சில் தோன்றி



நிறைந்திருக்கும். பழனிக்குப் புறப்பட, ஒருதேதியும் குறித்து நிச்சயித்து எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தேன். ஆனால் எதிர்பாராத காரணத்தால் பழனிக்குப் புறப்படுவதில் தடை ஏற்பட்டது. ஆனால் என் மனம் மட்டும் ஆண்டவனிடத்தில் லயித்திருந்தது. அதே சமயத்தில் கடலூரில் ஒரு நாடகத்திற்காக அழைப்பு ஏற்கவேண்டி வந்தது.

1930-ம் வருஷம் – இன்ன மாதம் என்று நினைவில்லை–ஒரு நண்பருடைய பெண்ணின் கலியாணத்திற்காக 'உதவி நாடகம்' ஒன்று கடலூரில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த ஊருக்கு முதல் தடவையாக அப்போதுதான் போகிறேன்.

அன்று கோவலன் நாடகம். அன்றைய நாடகத்தில் மாதவியிடத்தில் விடை பெற்று கண்ணகியின் வீட்டிற்குப் போகும் வரையிலும் ஞானபண்டிதன் எனக்குத் தந்த சாரீரத்தால் அன்பர்கள் எல்லோரும் ஆனந்தித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கண்ணகியின் வீட்டிற்கு வந்து, 'கண்ணகி' என்று அழைக்கும் பொழுது சப்தமே எழவில்லை. என் உள்ளம் என்ன செய்வதென்று தோன்

ருது 'முருகா' என்று என்னை மறந்து அழுதேன். அப் பொழுது அங்கு கூடியிருந்த அன்பர்கள் "நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் பாடலை பூரணமாக அனுபவிக்க எங்களுக்குப் பிராப்தமில்லை. கடவுள் கிருபையால் இன்னொரு சமயம் வந்து எங்களை ஆனந்திக்கச் செய்யுங்கள்" என்று உள்ளமுருக எல்லோர் மனதிலும் 'முருகன்' தோன்றிக் கூறினர். உடனே நாடகத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பினேன்.

பிறகு சென்னையில் எனது மாமா மலைக் கொழுந்து கவுண்டர் அவர்கள் தொண்டை வைத்திய நிபுணர் டாக்டர் சங்கரநாராயண பிள்ளை அவர்களிடம் என்னை அழைத்துச் சென்றார்கள். டாக்டர் பரீட்சித்துவிட்டு, "இந்த அம்மா பாடக்கூடியவர்களா?" என்று கேட்டார். நான் பேசவில்லை, பேசவும் முடியவில்லை. மாமா அவர்கள் சிரித்துக்கொண்டே, "ஆமாம்" என்று சொல்லி எனது பெயரையும் கூறினார்கள். ஆனால் டாக்டருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. டாக்டர் நம்ப மறுத்து, "நாடகத்தில் பார்த்திருக்கிறேனே, எனக்கு அவர்களைத் தெரியும். நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு அந்த அம்மாவைத் தெரியுமே" என்று சொன்னார்.

அருகில் நின்ற உதவி டாக்டர், என்னை உற்றுப் பார்த்துவிட்டு, நிதானமாக, நாங்கள் சொல்வது "உண்மைதான்" என்றார். உதவி டாக்டர் சொல்லியதின் பேரில், நான் 'நானேதான்' என்பதை டாக்டரும் நம்பினார்!

அதன் பிறகு, நன்கு பரீட்சை செய்து பார்த்தில், "ஆபரேஷன் செய்யாமல் பாடமுடியாது. ஆபரேஷன் செய்யத்தான் வேண்டும்" என்று அவர் சொன்னார். என்னையறியாமல் கடிதத்தில் எங்கள் ஞானபண்டிதன் உள்ள வரையில், எனது தொண்டையில் கத்தி வைத்து ஆபரேஷன் செய்ய முடியாது என்று டாக்டருக்கு எழுதிக் காண்பித்துவிட்டு, "சரி, வருகிறோம்" என்று விடை பெற்றுப் புறப்பட்டோம்.

அப்போது நான் சைதாப்பேட்டையில் ஜாகை வைத்திருந்தேன். வீட்டிற்குப் போனதும், ஒரு பலகையில் (சிலேட்டில்) இரண்டொரு வார்த்தைகள்– அதாவது, எனக்கு ஆபரேஷன் செய்வதானால் அது முருகன் ஒருவனால்தான் முடியும்–வேறு யாருக்கும் அந்த அதிகாரம் கிடையாது – ஏனென்றால் இது அவன் கொடுத்தது. அவன் விருப்பப்படியே நடக்கட்டும் என்று எழுதிக் கொடுத்துவிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொண்டேன். ஆனால் அந்த சமயத்தில்தான் எங்கள் குடும்பம் முன்னுக்கு வரவேண்டிய நிலையில் இருந்தது. அப்போர்ப்பட்ட நிலையில்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. மறு நாள் சென்னையில் எனது நாடகம். அந்த நாடகமும் உதவி நாடகம்தான். இந்த நாடகத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவரும் என்னிடம் வந்து, "நாடகத்தை நிறுத்தி விடலாம்" என்று வருத்தத்தோடு சொன்னார். என் உடல் நிலை அப்படி இருந்தும், "முடியாது, நாடகத்தை நிறுத்தாதீர்கள். கட்டாயம் வைத்துக் கொள்ளுங்கள், முருகன் அருள் புரிவான்" என்று திடமாக வாக்கு வந்தது. அன்று இரவு படுக்கைக்குப் போகுமுன் – காலையில் எழுந்திருக்குமுன் என் தொண்டை குணமாகாவிடில் நாடகத்தை நிறுத்தி நேரே பழனிக்குப் புறப்பட்டுப் போய் அவன் சன்னிதானத்தில் நாக்கை அறுத்து இந்த தேகத்தை அவனுக்கே அர்ப்பணம் செய்து விடுவதாக பிரதிக்ஞை செய்தபடி, எழுதிக் காண்பித்து விட்டு படுக்கையில் படுத்துக் கொண்டேன். ஆனால் தூக்கம் வரவில்லை. கண்கள் உறங்கக் காரணம்தான் உண்டா? விழித்தபடியே படுத்திருந்தேன். எனக்கு நன்றாக நினைவிருந்தது. "சுந்தராம்பாள், சுந்தராம்பாள், சுந்தராம்பாள்," என்று யாரோ கூப்பிடுவதுபோல் இருந்தது. இந்த இரவில் யார் நம்மைக் கூப்பிடுவது என்று எழுந்து பார்த்தேன். எனது ஞான பண்டிதன், கையில் வேலும், கழுத்தில் உத்திராட்சமும் அணிந்து குழந்தை வடிவில் சிரித்துக் கொண்டு என் பக்கத்தில் வந்து "நாக்கை அறுத்து விடுவேன்' என்று சொன்னபோது, அது உனக்குச் சேர்ந்தமா?" என்று என்னிடம் மலர்ந்த முகத்தோடு கேட்க, "உன்னைப் பாடாத இந்த நாவு பயனில்லை" என்று நான் சொல்ல, உன் வாயைத் திற" என்று அந்த திருக் குழந்தை சொன்னது.

நான் வாயை மெல்லத் திறந்தவுடன், தனது கையில் இருக்கும், அடியாரைக் காக்கும் வேலால், இரண்டு பக்கமும் அந்தக் கட்டியைக் கறைத்து விட்டு, "இதற்காக இவ்வளவு வைராக்கியம் வேண்டாம். நாளை நாடகத்தை முடித்துக் கொண்டு கோவையில் ஏற்பாடு செய்திருக்கும் நாடகத்தையும் முடித்துக் கொண்டு, நேராகப் பழனிக்கு வந்து, எனக்குத் தேனபிஷேகம் செய்ய வேண்டும்" என்று உத்தரவு கொடுத்து தன் கையாலேயே திருநீறை எனது நெற்றியில் அணிவித்து பார்த்துக் கொண்டிருக்கையிலே சென்று விட்டார். உடனே எனது மாமாவை "அண்ணு" என்று எனது இயற்கையான குரலால் கூப்பிட்டதும், அங்கு படுத்திருந்தவர்கள் மாமா உள்பட எல்லோரும் ஆச்சர்யம் அடைந்து, "படுக்கைக்குப் போகுமுன் ஜாடை காட்டினையே,

இப்போது எப்படி பேச முடிந்தது?" என்று கேட்டார்கள்.

உடனே நான், "என் அப்பன் முருகன் வந்து என்னைக் காப்பாற்றிய விதத்தைச் சொன்னேன். அன்றையலிருந்துதான் எனது மாமா அவர்களுக்கும் முருகனிடத்தில் பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டது. இன்றைக்கும் பழனிக்குச் செல்வது என்றால் எனது மாமாவுக்கு பரம சந்தோஷந்தான்.

அதன் பிறகு கடலூருக்குப் பலதடவை நாடகத்திற்கும் கச்சேரிக்கும் சென்றிருக்கிறேன். நான் தந்த வாக்குப்படியே அன்பர்கள் அகமகிழ்ந்தார்கள். ஆசீர்வாதமும் அன்புடன் செய்தார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரைக்கும் எனது சாரீர சம்பந்தமாக எந்த விதமான வைத்தியமும் செய்து கொள்ள முருகன் கைவிடவில்லை.





for

ATTUR GLASS INDUSTRIES

now on production. (1947)

quality

for

LAMP-WARES & TABLE WARES

FOR AGENCY TERMS

apply

to

MESSRS ATTUR GLASS INDS.

ATTUR (S.I.Ry.)



புதிய கோணங்கி

குடுகுடு குடுகுடு குடுகுடு'குடுகுடு
நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது
சாதிகள் சேருது, சண்டைகள் தொலையுது
தரித்திரம் போகுது, செல்வம் வருகுது
படிப்பு வளருது, பாவம் தொலையுது
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான், ஐயோவென்று போவான்

தொழில் பெருகுது, தொழிலாளி வாழ்வான்
எட்டு லக்ஷுமியும் ஏறி வருகுது
பயந்தொலையுது, பாவந் தொலையுது
நேந்திரம் பிறக்குது, நியாயம் தெளியுது
பழைய பயித்தியம் படலென்று தெளியுது
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது
சொல்லடி, சக்தி, மலையாள பகவதி
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது.

-மாரியப்பன்

கதைகளும் நீதிகளும்

எஸ். வையாபுரிப் பிள்ளை

நீதிகளை உணர்த்தும் முறைகள் பலபடியாக உள்ளன. நேரே நீதிகளைச் சொல்லுவது ஒரு முறை. 'பொய் சொல்லாதே' என்பதை உதாரணமாகச் சொல்லலாம். இவ்வாறு ஆணையாகக் கூறுதபடி 'நல்லவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்' என்று படர்க்கையில் கூறுவது வேறொரு முறை.

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (299)

என்ற குறள் இந்த வகையைச் சார்ந்தது. இனி, எதிர்முறையாக அன்றி, 'உண்மையைப் பேசு' என்று சொல்லுவது மற்றொரு முறை. இதனையும் ஏவலாக்காதபடி,

யாம்மெய்யாக்கண்டவற்றுள் இல்லை; எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற (300)

என்ற திருக்குறளிற்போல உலகியல் பற்றிய பொது நீதியாகக் கூறுதல் பிறிதொரு முறையாகும். ஆனால், இம்முறைகளெல்லாம் பெரிதும் பயன் தருவன என்று கூற முடியாது. மக்கள் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விடவும் மாட்டாது. கதையின் ரூபத்தில் சொல்லுகிற முறையே மிகவும் மக்களுக்குப் பயன் படுவதாகும்.

இவ்வாறு கதையின் ரூபத்தில் நீதிகளைப் போதிப்பதிலும் பலதிறத்தவான முறைகள் உண்டு. நீதியைப் போதிக்க வந்தது என்று கற்பவன் சிறிதும் எண்ண முடியாதபடி அமைந்துள்ள கதையே கலை என்று சொல்லுதற்குரிய தகுதி வாய்ந்து இன்பம் ஊட்டி, மறைமுகமாக நீதிகளை நன்கு உணர்த்தக் கூடிய தாகும். இப்படிப்பட்ட கதையினால் உணர்த்தப்படும் நீதிகளே பசுமரத்தாணி போல் மனத்தில் பதிந்து நிற்கும். இங்கே கூறியவற்றிற்கு உதாரணமாகச் சில கதைகளைத் தருகிறேன்.

பெரும்புகழ் வாய்ந்த தத்துவஞானி, ஒரு நாள் கடற்கரையில் பரம்பொருளைப் பற்றிச் சிந்தனை செய்து, உலாவிக் கொண்டிருந்தார். அவர் சென்ற வழியிலே, ஒரு சிறு பையன் கடற்கரையில், மணல் வீடு கட்டி வைத்திருந்தான். அம்மணல் வீட்டை அலை மோதி அழித்து விடாதபடி, கையில் ஒரு வாளியை வைத்துக் கொண்டு அருகில் வருகிற சமுத்திர நீரை முகந்து தூரத்தே கொட்டிக் கொண்டிருந்தான். கொட்டிக் கொட்டி அவனுக்குக் கைகால்கள் ஓய்ந்து விட்டன. தான் கட்டிய வீடு அழியாமல் இருப்பதற்கு உபாயம் ஒன்றும் காணவில்லையே என்று கீழே ஈரமணலில் உட்கார்ந்து, வாய் விட்டுக் கதறிக் கொண்டிருந்தான். தத்துவஞானி அவன் பக்கத்தில் வந்து, 'என் அழுகிறாய்' என்று கேட்டார். பையன் ஏங்கிக் கொண்டே என் வாளியில் இந்தக் கடல் முழுவதையும் முகந்து எடுக்க முடிய வில்லையே என்று கூறினான்.

இதைக் கேட்டதும் தத்துவஞானிக்குத் திடுக்கென்றுவிட்டது. நாமும் நமது மனத்தில் எல்லையற்ற பரவஸ்துவை முகந்து அளவிட முயலுகிறோமோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆனால், தாம் இருந்த ஆசிரமத்திற்கு விரைந்து போனார். அங்கு வைத்திருந்த கஞ்சாவை எடுத்துப் புகைத்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மீண்டும் பரம்பொருளை ஆராயத் தொடங்கினார்.

வேறொரு தத்துவஞானி. இவர் பூர்வத்தில் வாழ்ந்த ஞானிகளுடைய ஞானத்தை யெல்லாம் குடித்து ஏப்பமிட்டவர். அவருடைய தலை ஞானக் களஞ்சியமாக விளங்கிற்று. அவருடைய மனத்திலே தாம் சாந்த நிலையை அடைந்து விட்டதாகக் கருதினார். தம்மைப் பற்றித் தாமே திருப்தி அடைந்து கொண்டார். இவர் பிற்காலத்திலே மிகமிகப் பெரியவராக விளங்கி சமய ஆசாரியர் என்ற நிலையை அடைந்து விடுவார் என்ற நம்பிக்கை ஜனங்களுக் கெல்லாம் இருந்தது. பலரும் இவருடைய அன்பைப் பெற முயன்றார்கள். இவர் ஒரு சமயம் ஓடத்தில் ஏறி ஒரு பெரிய நதியைக் கடந்து ராஜதானிக்குச் சென்று வசிக்கும்படியாக நேர்ந்தது. அவ்வாறு புறப்பட்டுப் போகும் போது, ஒருவன் பொன்னும் இரத்தினங்களும் இழைத்த கண்டிகை ஒன்றை இவருக்கு வெகுமதியாக அளித்தான். ஞானியும் அதைப் பெற்றுக் கழுத்தில்விட்டுக் கொண்டு ஓடத்தில் ஏறிச் சென்றார். சென்று கொண்டிருக்கும் பொழுதே, குனிந்து ஆற்றின் அழகைக் கவனித்தார். ரத்தினக் கண்டிகை கழுத்தினின்றும் நழுவி விழுந்து விட்டது. உடனே, அந்த ஞானி தமது குருவினுடைய உபதேசங்களை வாயினாலேயே சொல்லிக்

கொண்டு, சாவகாசமாகத் தமது அங்கியிலே இருந்த சிறு கத்தி ஒன்றை எடுத்துக் கண்டிகை விழுந்த இடத்திற்கு நேராக ஓடத்தில் கிறல் அடையாளம் ஒன்றை இட்டுக் கொண்டார். இப்படிக் குறித்துக் கொண்டார். இப் படிக் குறித்துக் கொண்ட இடத்தில் ஆற்றிலே விழுந்து விட்ட கண்டியைத் தேடி எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

ஓர் ஊரில் ஒரு வைத்தியன் தன் சிஷ்யனோடு சுர மடித்துக் கொண்டிருந்த நோயாளி ஒருவனைப் பார்க்கச் சென்றான். போனதும், 'உன் சுரத்திற்குத் தக்க கார ணம் இருக்கிறது. நீ அதிகமாக உன் சாப்பாட்டோடு அவித்த பயிறுகளைச் சாப்பிட்டு விட்டாய். அதனால், அஜீரணமாகி சுரம் கண்டு விட்டது' என்று கடிந்து சொன்னான். நோயாளிக்கும் சிஷ்யனுக்கும் இந்தக் கார ணம் இவருக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியம் உண்டாய் விட்டது. பின்பு, வைத்தியன் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டு நோயாளி குணமானான். வைத்தி யன் வீட்டிற்குத் திரும்பினதும் அவனைப் பார்த்துச், 'சுரம் வந்த காரணத்தை எப்படிக் கண்டு பிடித்துக் கொண்டீர்கள்?' என்று சிஷ்யன் கேட்டான். 'நான் எளிதாகக் கண்டு பிடித்துக் கொண்டேன். ஏனென்றால், பக்கத்தில் பயற்றின் மேல் தொலி நிரம்பக் கிடந்தது. அதனை நோயாளி சாப்பிட்டிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்' என்று பதில் சொன்னான்.

இந்த நோயாளிக்கு வேறொரு முறை சுரம் வந்து விட்டது. அப்பொழுது வைத்தியனுக்கு வரச் சௌகரி யப் படவில்லை. சிஷ்யன் வைத்தியம் செய்வதற்குப் போனான். அங்கே நோயாளிக்கு அருகிலே வைக்கோல் போர் பெரிதாக இருந்தது. உடனே, நோயாளியைப் பார்த்து, 'உனக்குச் சுரம் வந்ததற்குக் காரணம் தெரிந் துவிட்டது: நீ நிறைய வைக்கோலைச் சாப்பிட்டு விட்டாய்; அதனால்தான் நீ சுரத்தால் படுத்திருக்கிறாய்' என்று சிஷ்யன் கடிந்து கொண்டான். சுரத்தால் கஷ்டப்பட் டுக் கொண்டிருந்த நோயாளி திடீரென்று எழுந்து கை யில் கம்பு ஒன்றை எடுத்து சிஷ்யனை அடிக்க ஓடினான். ஆனால், சிஷ்யன் ஓட்டத்தில் வெற்றி கொண்டான். குருவுக்கு ஏற்ற சிஷ்யன் அல்லவா?

மேற்கூறிய கதைகள் மூன்றிலுமுள்ள உண்மையை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். இப்போது, வெறொரு கதை சொல்லுகிறேன்.

ஒரு காலத்தில் நகரம் என்பதே இன்னது என்று அறியாத ஜனங்கள் குடியிருக்கும் ஒரு குக்கிராமத்தில் ஓர் இளைஞன் வசித்து வந்தான். அவன் மனைவி மிகவும் அழகு வாய்ந்தவள். ஆனால், மிகவும் பேதையான உள் ளத்தாள். அவர்களுக்கு ஒரு சிறு பெண் குழந்தை யும் இருந்தது. ஒரு முறை அவ்விளைஞன் தன் ஊர்த் தலைவனோடு வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள ஒரு நகரத் திற்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. திரும்பி வரும் பொழுது தன் அருமை மனைவிக்கு ஒரு கண்ணாடியும் தன் அருமை மகளுக்கு ஒரு சிறு பொம்மையும் வாங்கி வந்தான். மகளுக்குப் பொம்மையை வைத்துச் சீராட்ட வேண்டிய விதமெல்லாம் தெரிந்திருந்தது. அதைத் தொட்டிலில் இட்டு ஆட்டி உறங்க வைப்பாள். அது உறங்குவதற்கு என்று பாட்டுக்களை வாயில் முணு முணுப்பாள். சில சமயங்களில் தனது மார்பின்மேலே கிடத்திக் கொண்டு தன் பொம்மையோடு கொஞ்சி விளை யாடி, அதைத் தூங்க வைத்துத் தானும் தூங்குவாள். ஆனால், அவள் தாய்க்கோ, அவளுக்குக் கிடைத்த கண் ணாடி புதுமையாய் இருந்தது. அவள் மிகமிக எளிய குடும்பத்தில் பிறந்தவள். கண்ணாடி இன்னது என்று அறியாதவள். அதைப் பார்க்கும் போதெல்லாம் அவ ளுக்கு வியப்பாக இருக்கும். ஏதோ ஒரு மந்திர சக்தி வாய்ந்த வஸ்து என்றே அதைக் கருதினாள். அதை எப் படி உபயோகப்படுத்துவது என்றும் அவளுக்குத் தெரி யாது. ஒரு நாள் அவள் தன் கணவனைப் பார்த்து, 'கண்ணாடிக்குள்ளே ஓர் அழகான பெண் இருக்கிறாளே? அவள் என்னைப் பார்த்து எப்போதும் சிரிக்கிறாளே? அவளுடைய பெயரென்ன?' என்று கேட்டாள். கண வனுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. 'நீ எவ்வளவு மூட்டாள். உன் முகந்தான் அது' என்று சொன்னான். அவளுக்குத் தன்னை ஏன் மூட்டாள் என்று சொல்லுகி றான் என்று விளங்கவில்லை. அவள் வெட்கப்பட்டுத் தனக்குகந்த வெகுமதியை உறையிலிட்டு மூடிப் பத்தி ரமாக ஒரு பெட்டிக்குள் வைத்துப் பூட்டி விட்டாள் அக்கண்ணாடியைப் பிறகு அவள் எடுக்கவே இல்லை. சில வருஷம் கழித்து அவளுக்கு நோய் வந்துவிட்டது. சாகிற தருவாயில் தன் மகளைக் கூப்பிட்டுப் பெட்டியைத் திறந்து தன் கணவன் அளித்த வெகுமதியை எடுத்து வரும்படி செய்தாள். எடுத்து வந்ததும் 'நான் இறந்த பிற்பாடு இந்த ஒளியுள்ள அழகான பொருளைக் காலையி லும் மாலையிலும் பார்த்தால் என்னுடைய சரித்த முகத் தைப் பார்க்கலாம்' என்று மகளிடம் சொன்னாள். பின் ஒரு பெருமூச்செறிந்தாள். உயிரும் பிரிந்தது.

தாயின் சொற்படியே மகளும் நாள்தோறும் காலையி லும் மாலையிலும் கண்ணாடியைப் பார்த்து வந்தாள். மகளும் தாயைப் போலவே சாயையுள்ளவள். பேரழகு வாய்ந்தவள்; பருவமடைந்து விட்டாள்; அவள் முகத்திலே எப்பொழுதும் களிப்புக் குடிகொண்டிருக்கும். ஆகவே, இவள் மகிழ்ந்து கண்ணாடியைப் பார்க்கும் பொழுதெல்லாம் இவளுடைய தாய் முகம் மலர்ந்து இவளை மகிழ்ந்து நோக்குவது போலிருந்தது. இவள் கண்ணாடியில் இருப்பது தனது அருமைத் தாய் என்றே கருதி அவளோடு பேசி விளையாடி வந்தாள்.

ஒரு நாள், இவள் இப்படி பேசி மகிழ்வதைத் தந்தை கண்டு விட்டான். 'என்ன செய்கிறாய்?' என்று மகளைக் கேட்க அவள் தன் தாய் மரண காலத்தில் சொல்லியதையும், தான் செய்து வருவதையும் அவள் கூறினாள். அவள் கூறியதெல்லாம் கேட்டான். இப் பொழுது அவன் சிரிக்கவில்லை; அழுதான். மனமெல்லாம் அவனுக்கு வேதனை எடுத்தது. இந்தப் பேதைமையின் அழகை நினைத்து நினைத்து அவன் மனம் கரைந்தது. தாயையும் மகளையும் நினைத்துப் பேரிரக்கம் கொண்டான். அவனுக்குப் பேதைமை என்பதன் பொருள் அன்று வரைத் தெரிந்ததில்லை. ஆனால், அன்றும் அதை ஒரு

ஆறு உணர்ந்து கொண்டானேயல்லாமல் முழுதும் தெளிந்து கொண்டான் என்று சொல்லுவதற்கு இல்லை.

இந்தக் கதை சீதையின் பேதமையை ஒருவாறு உணரச் செய்கிறது. சுமந்திரன், இராமன், லட்சுமணன், சீதை இம்மூவரையும் காட்டிலே விடுத்துத் திரும்புகிற சமயத்தில் ஒவ்வொருவரிடமும், அரண்மனையில் யார் யாருக்கு என்ன சொல்ல வேண்டுமென்று கேட்கிறான். சீதையைக் கேட்டபொழுது,

அன்னவன் கூறுவாள் அரசர் அத்தையர்க்கு
என்னுடை வணக்கம்முன் இயம்பி யானுடைப்
பொன்னிறம் பூவையும் கிளியும் போற்றுகென்று
உன்னும் என் தங்கையர்க்கு உணர்த்துவாய்
என்றாள்.

தேர்வலான் அவ்வுரை கேட்டுத் தீங்குறின்
யார்வலார் உயிர்துறப்பு எளிதென்றே எனப்
போர்வலான் தடுக்கவும் பொருமி விம்மினாள்
சோர்விலாள் அறிவிலாத் துயர்க்குச் சோர்கின்றாள்.

[redacted] (அயோத்தியை. 40, 41)

இவ்வாறு சுமந்திரன் நெஞ்சு நெகிழ்ந்து அழுததின் காரணம் இப்பொழுது நமக்குப் புலப்படுகிறதல்லவா?



ஆபீஸ்பையன்: சும்மா இந்தக் கார்டைச் சத்தம் செஞ்சா போதும்! நம்ம சீட்டாட்டப் பிரிய மானேஜர் மணி நாலு தான் ஆச்சுங்கிறதையும் கவனியாமே 'கார்டு பிளே' பண்ண கிளம்பியே கிளம்பிடுவாரு!

அம்புஜம்

ஏ. ஷண்முகம். பி. ஏ

வான வீதி மப்பும் மந்தாரமுமாய், கணவனை இழந்த கைம்பெண்ணின் உள்ளத்தைப்போல், தன் சோபையை இழந்திருந்தது. அன்று மாலை சினம் கொண்ட சமுத்திர அலைகள் நிலை தவறி ஒன்றின் மேல் ஒன்று மோதிக் கொண்டு வருவது போல் காற்றும் மழையும் ஒன்று சேர்ந்து, வெகு கடுமையாகத் தங்கள் ஆட்சியை வெகு அலங்கோலமாக பொள்ளாச்சியில் நடத்த ஆரம்பித்தன.

சந்திரன் அன்று ஆகாய வீதியில் தன் தலையைக் காட்டவே இல்லை. பொள்ளாச்சி ரயில்வே ஸ்டேசனில் கூட்டமே இல்லை. பிளாட்பாரம் இருளடைந்த பாலைவனமாக இருந்தது. ஓரிரண்டு மின்சார விளக்குகள் மட்டும் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தன. ஒரு பருவ மங்கை பிளாட்பாரத்தில் கையில் ஒரு சிறு மூட்டையுடன் நின்று கொண்டிருந்தாள். கட்டழகு வாய்ந்த இவள் தன் கருத்தை ஓர் நிலையில் நிறுத்தாமல் அடிக்கடி ரயில் தண்டவாளத்தையும், கைகாட்டி மரத்தையும் பார்த்த வண்ணமிருந்தாள்.

அரைக்காசு பெறுமான ஆபரணமும் கூட இவள் அங்கத்தை அழகு செய்யவில்லை. கட்டியிருந்த நூல் சேலையும் கூட மிகவும் பழமையான தாயிருந்தது. ஆடையில்லா விட்டாலும், ஆபரணம் இல்லாவிட்டாலும், தன் அளகபாரத்தையாவது கோதி ஜடை பின்னி விட்டிருக்கலாம். அதுவும் இல்லை. கருமேகத்தைப் பளிக்கும் இவளது நீண்டு வளர்ந்த கூந்தல் ஒரு முடிச்சாக, முதுகின் மேல் சுருண்டு கிடந்தது.

வர்ணனைக்கு மீறிய அழகு இவள். மோகனப் புன்னகை இல்லாமல், பருவகாலப் பொலிவு மில்லாமல் வாடிய முகத்துடன், வேலடிபட்ட மானைப் போல், மருண்டு தன்னந்தனியாக மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

பழனி மார்க்கமாகச் செல்லும் ரயில்வண்டி அன்று குறிப்பிட்ட காலத்திற்கு வராமல், இரண்டு மணி நேரம் முன்னிட்டு இரவு பத்து மணிக்கு பொள்ளாச்சி ரயில்வே பிளாட்பாரத்தை அடைந்தது. அத்தபூத்தப் போல் அன்று மூன்றும் வகுப்பு வண்டிகளில் ஜனத்திரளே இல்லாமல் பெட்டிகள் காலியாகவே இருந்தன.



மூன்றும் வகுப்பு டிக்கட் ஒன்றை அவசர அவசரமாக வாங்கிக் கொண்டு ஓடோடியும் வந்த சுந்தர வாலிபன் ஒருவன், மூன்றும் வகுப்பு பெட்டி ஒன்றின் கதவைத் திறந்து கொண்டு வண்டிக்குள் பிரவேசித்தான். இதே வண்டியில் இயற்கை

அழகியும் புகுந்தாள். வாலிபன் வண்டிப் பலகையில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்துகொண்டு, தன் கடைக் கண்ணால் அப்பெண்ணைப் பார்த்துக்கொண்டே, கைக் குட்டையால் சிரசின் மேல் விழுந்த மழைத் துளி களைத் துடைத்துக் கொண்டிருந்தான். பிரசாரம் செய்து அலுத்துப் போய் ஒருமாத லீவ் எடுத்துக் கொண்டு தன் சொந்த ஊருக்குப் புறப்பட்ட இந்த இளவலுக்கு குஷி கிளப்பிவிட்டது. மெல்லியகுரலில் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக்களஞ் சியமே, சாதிமதப்பேய் கட்டோடு ஒழிய, சங்கீதம் பாடு, கண்ணம்மா" என்று பாடிக் கொண்டிருந் தான். இந்தக் குரலைக் கேட்ட கிழவி ஒருவள், கும்பகர்ணனின் வம்சமானவள், விழித் தெழுந்து தன் பக்கத்தில் பெண் ஒருத்தி பதுமை போல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். எங்கோ எப்பொழுதோ பார்த்த முகம். நினைவிற்கு வர வில்லை. கிழவியின் மனக்குரங்கும், உள்ளமும் துரிதமாக மங்கையைச் சர்ச்சை செய்தன. ஆவே சம் கொண்ட கிழவி, வேலடிபட்ட வேல்விழியாளைத் தழுவிக் கொண்டு,

"ஏண்டி...! அடுத்தாத்து அம்புஜம்தாண்டி... என்னடி கூத்து இது? ஏண்டி, பித்துக்கொள்ளி போல மேலேயும், கீழேயும் பாக்கறே.., என்னே நோக்குத் தெரியலேயாடீ... உன் நினைவுதை கோடி யாத்துக் கோமதியின் அம்மாடி நான்... நோக்கு கல்யாணமாயிட்டதுண்ணு உங்க எதிராத்து எது குலம் இரண்டு வருஷத்துக்கு முன்னே சொன்னுடி... உன் ஆம்படையானுக்கு உத்தியோகம் கிடைக்கலே யாடி... இப்படி வாளா வெட்டி மாதிரி நெத்தியிலே குங்குமம் இல்லாமே, ஒரு செண்டு மல்லிகையும் சூட்டிக்காமே இருக்கறயேடி, எங்கடி... உன் ஆம் படையான்? தன்னந்தனியா எங்கடி போறே?' என்று மூச்சுத் திணறிக் கொண்டே அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டு முடித்தாள்.

அந்தப் பெண் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் கண்ணீர் வடித்தாள். விம்மி விம்மி அழுதாள். குஷியுடன் பாடிக் கொண்டிருந்த வாலி பன், 'உள்ளங்களிரண்டும் சாதிமத பேதமின்றி ஒன்று சேர, உரத்துக் கூவடி, கண்ணம்மா' என்ற அடியை ஒருவாறு பாடி முடித்து விட்டு கிழவிக்கும், பேத்திக்கும் நடந்த நாடகத்தில் கவனத்தைச் செலுத்தினான்.

"ஏண்டி...! பித்துக்கொள்ளி போல் அர்த்த மில்லாமே அழறே...? நோக்கு என்னடி கவலை? வாய் திறந்து சொல்லேண்டி...!" என்று அம்புஜத்தின் மேனியை ஆட்டிய வண்ணம் கிழவி கேட்டாள்.

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய், எதிர்ப் பலகையில் உட்கார்ந்திருந்த ஆடவனைக் கடைக் கண்ணால் பார்த்த வண்ணம் அம்புஜம் அலறிக் கொண்டு "நோக்குத் தெரியாதா பாட்டீ... பாவம் எதிராத்து எதுகுலத்துக்கும் விஷயம் பூராவும் தெரியாது போலிருக்கு... பர்மாவுக்குப் போனவர் திரும்பி வரவே இல்லே. வரவேமாட்டார்னு சொல் லிட்டா. பலமான காயமாம்... இப்படி நிர்க்கதியா என்னே....." என்று சொல்லிக்கொண்டே தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள். பொக்கை வாய்ப்பாட்டி இடைமறித்து,

"போதுண்டி... எல்லாம் புரிஞ்சுட்டேன். மூலியாத்து முகாரிக்கும் நோக்கும் இந்தக் கதியாடி! அவ ஆம்படையானுக்கு செவ்வாய் தோஷண்டி. நோக்கும் செவ்வாய் தோஷம் ஆம்படையான். அதான் அடிச்சுப்பிடிச்சு போயிட்டாண்டீ! எங்கடி உங்களுக்கிண்ணு இந்தப் பிரகிருதிகள் வாய்ச் சுது...? உம்...உம்...எல்லாம் ஈசன் செயல்... வினைப் பயனடீ... இதுக்கேண்டீ அழறே... சிவசிவாண்ணு வெறுமனே வேதாந்தி போலே மூலையிலே இடந்து மூச்சுப் பேச்சில்லாமல் இருக்கத்தாண்டி நம்ம சாஸ்திரம் சொல்லறது..." என்று தானும் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டாள்.

இளம் வயதிலே, சிற்றுடை கட்டத் தெரியாத சிறுமி ஒருத்தி, பொன் தாலி ஒன்றைக் கழுத்தில் அணிந்து பருவ மங்கையானவுடன் விதவையான விபரீதக் கதையைக் கேட்ட இளம் சுந்தர வாலிப னின் இதயம் துடிக்க ஆரம்பித்தது. தன்னே ஒருவாறு அடக்கிக் கொண்டு மேலும் என்ன நடக் கிறதென்பதை கவனிக்க ஆரம்பித்தான். அப்படி அவன் கவனிப்பதை அந்தப் பெண்ணுக்கும், கிழ விக்கும் காட்டிக்கொள்ளக் கூடாதென்று எங்கோ கவனத்தில் ஆழ்ந்திருப்பதுபோல் ஆகாய வீதியில் இயற்கை அன்னையின் இடிகள் தாறுமாறுக் கர் ஜனை செய்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நம்ம சாஸ்திரம் சொல்றப்போல் மூச்சுப் பேச்சில்லாமல்தான் இருக்கிறேன் பாட்டீ— அப்பா அம்மாவும் இல்லே. அவா காலரா வியாதியில் கண்ணே மூடிட்டா மூன்றியே! அண்ணு பத்மநாபன் அன்பாய்த்தான் இருக்கா. என்னுலே அவா ரெண்டு பேருக்கும் சதா சண்டை சச்சரவு. அவா ஆத் துக்காரி என்னைப்படாத பாடு படுத்தரு. அதான் வேதனை பொறுக்காமே, அண்ணுவிடமும் சொல்லிக்காமே, சிவ சிவாண்ணு பழனிக்குக் கிளம் பிட்டேன். அவா ரெண்டு பேரும் அடுத்த வாரத்து தீபாவளிப் பண்டிகையை சலிப்புச் சங்கடமில்லாமே கொண்டாடட்டும். அதான் எனக்கு ஆசை. கண் மறைவா இனிமேல் காலம் போக்கணும்ணு நேக்கு ஆசை. அண்ணனையும், மன்னியையும் இனிமே பார்க்கிறதில்லேண்ணு உறுதி சொல்லிட் டேன் பாட்டீ" என்று சொன்னான்.

"அடடே அசடே...! என்னடா இது... நீ அசல் பித்துக்கொள்ளிடா... ஆத்தை விட்டு இதுக்காடா வெளிக்கிளம்பிட்டே...நோக்கு சிறுவயசு. ஆம்படையான் இல்லேண்ணு ஆசாபாசம் ஏதுக்கடி? அவா சொல்லறதை வேத வாக்கா எண்ணடா... மன்னி சுமங்கலீடா... அவா சொல்லி மனம் கோணுமே கேக்கணும்டா. நான் உடுமலேப்பேட்டைக்கு கோமதி ஆத்துக்குப் போறேன். நீ வெறுமனே என்னோடு வந்துடு. அவ ஆத்துக்காரன் மூலமாக உன்னே உன் அண்ணுவிடம் அழைத்துச் செல்லத் தோது செய்யறேன். கவலே வேண்டாண்டா." என்று சொல்லிக் கொண்டே தன் முந்தாணையை ஒழுங்கு படுத்தி முக்காடிட்டுக் கொண்டு மூக்கின்மேல் விரல் வைத்துக் கொண்டிருந்தாள்.

"நேக்கு ஆசாபாசமே இல்லே பாட்டடா... எப்படி யாவது எங்காவது... வயிறு இருக்குதோனனு, அதை வளர்த்துக் கொள்வேன். பழனி ஆஸ்பத்திரிக்கு ஒரு நர்ஸ் தேவையாம். ஆண்டவன் அருளாலே அதானும் கிடைச்சா, ஆத்ம சுத்தியுடன் காலத்தைக கடத்தலாமுண்ணு நேக்கு ஆசை. நேக்கு அண்ணு ஆத்திலே வேலேயில்லே. கோமதி மன்னியண்டை இதைப் பிரஸ்தாபமே செய்யாதீங்கோ பாட்டடா... அவ நன்னு ஆத்துக்கார ரோடு குழந்தையும் குட்டியுமா வாழட்டும்" என்று தன் முடிவான தீர்மானத்தைச் சொல்லி விட்டாள்.

"நோக்குச் சாந்தி ஆச்சோடி"? என்று கேட்டாள் பாட்டி.

இந்தக் கேள்வி அம்புஜத்தின் நொந்து வெந்து கிடந்த உள்ளத்தில் பழுக்கக் காய்ச்சிய நாராசத்தை ஊற்றுவது போலிருந்தது. விம்மி அழுது பாட்டியைத் தழுவிய வண்ணம், "புஷ்பவதி ஆகி ஆறு மாசந்தான் ஆறது பாட்டடா" என்று சொன்னுள்.

இதைக் கேட்ட பாட்டி கிருதிருவென விழித்து, பாட்டியும் பேத்தியும் சந்தேகத்திற்கு இடம் வைத்துக் கொள்ளாமல் நடந்துகொண்ட, இளுஞனே பார்த்தாள். அம்புஜத்தின் வாழ்க்கை ரகசியம் அனேத்தும் ஒரிரண்டு மணி நேரத்தில், வாலபனின் இதய அறைக்குள் சந்தேகத்துக்கு இடம் வைத்துக் கொள்ளாமலே புகுந்து விட்டது. புகை வண்டியும் உடுமலேபேட்டை ஸ்டேஷனே அடைந்தது. நோகாமல் நோம்பு கொண்டாட வந்த மாமியை அழைத்துச் செல்ல, மருகனும் ரயிலடியில் காத்துக் கிடந்தான். "போயிட்டு வாரேண்டி அம்மா" என்று விடை பெற்றுக்கொண்டு, வாழ்க்கையின் புது மலர்ச்சி மாறுத மங்கையைத் தன்னந் தனியாக விட்டுச் சென்று விட்டாள் பாட்டி.

பருவகாலப் புத்துணர்ச்சியின் மறுமலர்ச்சியை காணுத, அனுபவித்து அறியாத இளம் உள்ளங்கள் இரண்டும் மட்டுமே, புகைக்கூண்டில் அடைபட்டு அன்பென்னும் மலே அடிவாரத்தை நோக்கிச்சென்று கொண்டிருந்தன.



உடுமலேஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல்கள் செல்லவே, கனத்த மழை பொழிய ஆரம்பித்தது. இருளும் சூழ ஆரம்பித்தது. வான வெளியில் மட்டு மல்ல, வண்டிக்குள்ளிருக்கும் இரு இளம் உள்ளங்களிலும் கூட. ஆனல், அந்த இருள் நிரந்தரமானதல்ல.

பெரும் காற்றிலும் மழையிலும் புகை வண்டியில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்குகள் அடியோடு அணேந்து விட்டன. மழைத்திவலேகள் அம்புஜத்தின் அழகிய மேனிக்கு மெருகு கொடுக்க, ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்த அவள் மேல் விரசலாக அடித்தன. ஜன்னலே இழுத்து மூடிவிட முயற்சித்தாள். மென்மையான அவள் கரங்களுக்குச் சக்தியில்லே.

உள்ளங்கள் இரண்டும் ஒன்று சேர கண்ணம் மாவைக் கூவி அழைத்த வாலிபன், விசுக்கென எழுந்து, அம்புஜத்தின் பக்கமாக இருந்த ஜன்னலை இழுத்து விட்டான். வாலிபனின் வீரக்கரங்கள், பருவமங்கையின் மேனியில் குறிதவறிக் குமுறும் இடியிலும், கொட்டும் மழையிலும், காரிருளிலும் பட்டு விட்டன. எல்லாம் ஒரு கண நேரம். ஸ்பரிச உணர்ச்சி இருவருக்கும். உள்ளங்களிரண்டும் அமுதக் கீதங்களை அறியாமல், தெரியாமல், புரியாமல், பறிமாறிக் கொண்டன. வாலிபன் தன் பல கையில் அமர்ந்து தன் பக்கமாக இருந்த ஜன்னலையும் இழுத்து விட்டான். பதுமைபோல் உட்கார்ந்திருந்த பாவையிடம் பேசலாம் போல் தோன்றிற்று அவனுக்கு. ஆனால், சங்கோசம். என்ன பேசுவது எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று தெரியவில்லை. பேசினால் பதில் சொல்லாமல், பேசா மடந்தை போல், வெறுமனே இருந்து விட்டால் கேவலமே.....உம், என்ன செய்வது என்று சிந்தித்த வண்ணமிருந்தான்.

புகைக் கூண்டில் அடைபட்டுக் கிடந்த அனுதைப் பெண் அம்புஜத்திற்கும், தன்னெதிரில் உட்கார்ந்திருந்த ஆடவனுடன் ஒரு வார்த்தையாகிலும் பேசலாம் போல் தோன்றிற்று. அன்னிய ஆடவரிடம் பேசிப் பழகாத இவளும் சங்கோசமே கொண்டாள்.

நள்ளிரவில் ரயில் வண்டி காற்றையும் மழையையும் எதிர்த்துப் போராடி அதிக தூரம் செல்ல முடியவில்லை. ... ... ஒரு சிறு ஸ்டேஷனில் நின்றுவிட்டது. இளைஞன் தன் மூட்டையை அவிழ்த்து வாழைப் பழங்களையும், மாதுளம் பழங்களையும் எடுத்து பலகையின்மேல் வைத்தான். ஒரு சீப்பு வாழைப் பழத்தையும் இரண்டு மாதுளம் பழங்களையும் எடுத்து "இந்தாங்கோ அம்மா! பசியா இருப்பீங்கோ — சாப்பிடுங்கோ" என்று எதிர்ப்பலகையின் பக்கமாக நீட்டினான். இரட்டில் மறுமுறையும் இருவர் கரங்களும் சந்தித்து விட்டன, இமைப்பொழுதில்.

பாலைவனம் போன்று வறண்டிருந்த அம்புஜத்தின் ஹிருதயத்தில் விரசமற்ற வாலிபனின் கொஞ்சும் மொழிகள் இன்பத் திவலைகளை வர்ஷிப்பது போலிருந்தது. வாழ்க்கையில் இதுவரை இன்பம் இன்னதென்று அறியாத அவள் உள்ளம் அனுபவத்துக்கு அடி பணிந்தது. "நேக்குப் பசியில்லை, நீங்கோ சாப்பிடுங்கோ" என்று சொன்னாள், இனிய தன் இன்னமுதக் குரலில்.

"அம்மா, இப்ப மணி இரண்டு இருக்கும். நாளைக் காலையில்தான் பழனியைப் பார்ப்போம். என்னை உன் சகோதரனாக நினைத்துக் கோங்க. கவலைப்படாமல் சாப்பிடுங்கோ. நீங்க பசியா இருக்க நான் எப்படி சாப்பிடறது. எனக்கும் பசியில்லை" என்று அலுப்பும் சலிப்பும் தட்டச் சொன்னான்.

இளைஞனின் அன்பு ததும்பும் இன்னமொழி களைத் தட்ட முடியாமல், "நீங்களும் சாப்பிடுங்கோ, நானும் சாப்பிடறேன்" என்று தன் இதய பூர்வமாக இளம் நங்கை சொல்லிக்கொண்டே, பிரசாதத்தை ஏற்றுக்கொண்டாள்.

காற்றின் வேகமும், மழையின் கனமும் குறைந்து கொண்டிருந்தது. ரயில் வண்டியும் பழனி மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தது. அணைந்திருந்த விளக்குகள் எரியத் தொடங்கின.

விளக்கொளியில் இருவர் விழிகளும் சடக்கென சந்தித்துக் கொண்டன. விதிவசப்பட்டு விழிகள் நான்கும் கௌவிப் பற்றிக்கொண்டு உறவாடவும் தொடங்கி விட்டன. காலை முதல் அன்ன ஆகாரமின்றி பசிப்பிணியில் வாடிய அம்புஜத்திற்கு, அன்னிய ஆடவன் அளித்த ஆசோபசாரத்தில் சிறிது தெளிவும், தொடர்பும் ஏற்பட்டது. நன்றியைத் தெரிவிக்க "அப்பா ... ... போதும், போதும், நிறுத்திக்கோங்கோ. நேக்குப் பசி தீர்ந்துட்டது. இதை எடுத்து வைச்சுக்கோங்கோ" என்று சொல்லிக் கொண்டே மிகுதியிருந்த பழங்களைத் திருப்பிக்கொடுக்க தன் கரங்களை நீட்டினாள்.

நெகிழ்ந்து முன் ஏந்திய கரங்களிரண்டும், வேல்விழியாளின் மையலில் மனதைப் பறிகொடுத்த மைந்தனின் கரங்களோடு ஒன்று சேர்ந்துவிட்டன. வாலிபன் ஈனக் குரலில் இளகிய வண்ணம் "அம்புஜம் ... ... உன்னைக் குறித்த விவரங்கள் அனைத்தும் அறிந்துகொண்டேன். பால்ய விவாகத்தால் நீ விதவையாகிப் பிழைப்புக்கு வழி தேடப் புறப்பட்டுவிட்டாய் அல்லவா?" என்று இனிய தமிழில் சொன்னான்.

இதைக் கேட்ட அம்புஜத்திற்கு தூக்கி வாரிப் போட்டதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. திருதிருவென விழிகளிரண்டையும் உருட்டி "நீங்கோ யாருண்ணு தெரியலையே? ஏன் இதைக் கேக்கறள்? உங்க பேரென்ன?" என்றாள்.

"நான் யாராயிருந்தாலும் கவலை வேண்டாம். நீதி நெறி தவறி நடக்கமாட்டேன். என் பெயர் பித்தன் என்று வைத்துக்கொள்."

அம்புஜம்: "உங்க பேரே விசித்திரமாயிருக்கே?

பித்தன்: "ஆம் ..... சமூக மறுமலர்ச்சிக்கு ஏற்ற புனை பெயர் என்று என் நண்பர் களும்கூட சொல்லி யிருக்கிறார்கள்.

அம்புஜம்: உங்களுக்கு எந்த ஆபீசில் வேலையோ?

பித்தன்: சமூக சீர்திருத்த ஆபீசில் எனக்கு வேலை. சாதிமதக் கட்டுப்பாடுகளின் சங்கிலியை அறுத்து எறிய நான் அமர்த்தப்பட்டிருக் கிறேன்.

அம்புஜம்: நீங்கள் என்ன சொல்றீங்னு நேக்குப் புரியலை. சமூக சீர்திருத்த ஆபீசு என்று ஒன்று இருக்கிறதா? நேக்குத் தெரியலையே!

பித்தன்: நேக்கு அந்த ஆபீசைப் பற்றித் தெரி யக் காரணமில்லை. எங்கள் ஆபீசு ஒரு அலாதி ரகம். கலெக்டர் ஆபீசுக் கிளார்க்குகளைப் போல எங்களுக்கு சம்பளம் கிம்பளம் கிடையாது. பொது ஜன சேவை நாங்கள் இலவசமாகச் செய் கிறோம்.

அம்புஜம்: நீங்கள் சொல்றீங்க. நேக்கு இன்னும் விளங்கலை. உங்களுக்குக் கஷ்டம் வேண் டாம். பழனி ஸ்டேஷனுக்குப் போக இன்னும் எவ்வளவு நாழி செல்லும்?

பித்தன்: பழனியையும் நர்ஸ் வேலையையும் கொஞ்சம் மறந்து நான் சொல்றதைக் கேள். உனக்கு பழனியில் பந்துக்கள் இருக்கிறார் களா?

அம்புஜம்: நேக்கு .... உம் ..... ஒருத்தருமே இல்லையே?

பித்தன்: சிநேகிதர்கள் யாரேனும்...

அம்புஜம்: அதுவும் இல்லை.

பித்தன்: பின் எங்கம்மா தங்கப்போறே?

அம்புஜம்; பழனி நிறையச் சத்திரம் சாவடிகள் இருக்கிறதாகச் சொல்றாளே ... ...

பித்தன்: அம்புஜம்! நீ கள்ளம் கபடு அறியாத சிறுமி. தனியாகச் சத்திரங்களில் தங்க லாகாது. நான் சொல்லறதைத் தப்பு அபிப்பிராயம் செய்துக்காதே. பழனி ஸ்டேஷன் மாஸ்டர் பரமசிவம் அய்யரும் அவர் சம்சாரம் பார்வதியும் ரொம்ப நல்லவர்கள்; எனது நண்பர். அவர்களிடம் உன்னைச் சேர்த்துவிடறேன். அவர் களிடம் கலந்து ஆலோசித்து நீ உன் இஷ்டம்போல் செய்துகொள். உனக் குச் சம்மதமா? என்று அம்புஜத்தின் உள்ளம் உருகச் சொன்னான்.

அம்புஜத்திற்கோ புகலிடமில்லை. அரைவயிற் றுக் கஞ்சிக்கும் கையில் காசு இல்லை. அன்னிய ரிடம் அடைக்கலம் புகவும் மனம் இடந்தரவில்லை. சிறுமி என்று யாரேனும், ஏதேனும் சித்திரவதை செய்துவிட்டால் கற்புக்கோர் பங்கமேற்படும் என்ற பயமும் ஒருபக்கம். காற்றில் அகப்பட்ட வாழை போல், வாடித் தவித்தாள். கண்களில் நீரைக் கசிந்து வடித்தாள். பேச முயற்சித்தாள். நாவறட்சி யடையவே நாவெழவில்லை.

அம்புஜத்தின் உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் மோதுவதை, அவள் முகபாவம் தெற்றென விளக்கியது. இதை சிறிதளவு உலக அனுபவம் பெற்ற சிறுவன், பித்தன் உணர்ந்து கொண்டான். தான் கேட்ட கேள்விக்கு அவளிடம் பதில் எதிர் பார்க்காமல்,

"அம்புஜம் ... ...! அதைரியம் வேண்டாம். எல்லாம் சரியாய் முடிந்துவிடும். நான் இரண்டு நாட்கள் பழனியில் இருந்துவிட்டு அப்புறம் மதுரை செல்கிறேன். பரமசிவ அய்யர் பரம புருஷர். நீ சரியென்று சொல். எங்கே ஒரு சிரிப்பு ... ..." என்று சொல்லி அவள் முகத்தையே பார்த்த வண்ண மிருந்தான்.

கள்ளம், கபடு, சூது, வாது இன்னதென்பதை கனவிலும் கண்டறியாத அம்புஜம் அழுத வண்ணம் கொல்லென்று சிரித்து விட்டாள். ரயிலும் பழனி ஸ்டேஷனை இறுதியில் அடைந்துவிட்டது.

* * * *

பரமசிவம் அய்யர் பழனி ஆண்டவனை தியா னித்த வண்ணம் சூரிய நமஸ்காரம் செய்து கொண் டிருந்தார். ரத்தினம் ஓர் இளம் பெண்ணுடன் நிற்பதைக் கண்டு "ஏண்டா ரத்தனம் எங்கடா, இந்த வேளையிலே? இது யாரடா?" என்று ஆச்சர்ய மாகக் கேட்டார். ரத்தனம் புன்முறுவலுடன், "என் பேர் இப்ப ரத்தனமில்லை தாத்தா...எனது புதுப் பெயர் பித்தன் என்று மாற்றி விட்டேன். அம்புஜம், நீ இங்கே உட்கார்ந்துக்கோ" என்று சொல்லிக் கொண்டு பரமசிவ அய்யரை ஒரு தனி இடத்திற்கு அழைத்துச் சென்று விஷயங்கள் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

பரமசிவமய்யரும் அவரது சகதர்மிணியும், அம்புஜத்தை தங்கள் குழந்தைகளில் ஒருவளாகப் பாவித்து, அவள் மனம் கோணுமல் நடந்து வந்தனர்

தீபாவளிப் பண்டிகை நாள், அம்புஜத்திற்கு ஓர் புதிய நூல் சேலையும் கிடைத்தது. அம்புஜம் தன் கவலையை ஒருவாறு மறந்து, தனக்கு அன்னையும் பிதாவுமாக வாய்த்த பரமசிவ தம்பதிகளின் ஆறு இளம் குழந்தைகளுக்கு பணிவிடை செய்து வந்தாள்.

ஓர் நாள் அந்தி வேளையில் தாம்பூலம் தரித்த வண்ணம் பரமசிவமய்யர் தன் மனைவியை நோக்கி "ஏண்டி...பார்த்தாயோ...அந்தப் பய ரத்னம் எவ்வளவு சமத்து. ஜாதியிலே பிராம்மணனில்லையடி... நம்ம குலப்பிள்ளைகளுக்கெங்கடி இந்த நீட்க்ஷண்யம் படிச்சுக் கெடறதுகளே...குதர்க்க புத்தி தாண்டூ நம்ம குலத்தையே கெடுக்கறது. நம்ம ரத்னம் செட்டி ஜாதியிலேயே பிறக்கத் தகுந்தவனில்லையடி ...அம்புஜத்தை பிராம்மணப் பெண் என்றும் பார்க்காமே எவ்வளவு உபசாரம் செய்திருக்காண்டூ ...தீபாவளிப் பண்டிகைக்கு அம்புஜத்திற்கு சேலை வாங்கிக் கொடுக்க, அவன் தாண்டூ நூறு ரூபாய்கள் கொடுத்திட்டும் போனான். நாளைக் காலை இங்கே வருவான்" என்று தாம்பூல எச்சில் மடிமேல் விழுவதையும் கவனிக்காமல் சொல்லி முடித்தார்.

பரமசிவமய்யரின் பத்தினி பார்வதி தன் பதியை நோக்கி "ஆம்...இப்ப இந்தப் பிள்ளையாண்டான் என்ன செய்கிறான்? அருமையான குழந்தைதான் அவன்! சாதி, மதம், உயர்வு, தாழ்வு, நம்ம நாட்டிலே இனிமே இருக்காமே நான் அதற்காகப் பாடு படப் போறேண்ணு நேக்குப் போன வருஷம் சொன்னான் இப்பத்தான் அவனைப் பார்க்கறேன். என்ன உத்தியோகமோ? நேக்கும் அவனிடம் பேச சந்தர்ப்பமில்லை. வேலையாயிருந்திட்டேன். நீங்களாவது கேட்டூளோ?" என்றாள்.

பரமசிவமய்யர்: "என்னடூ கேக்கறது? அவனுக்கெதுக்கடி உத்தியோகம்? அவங்க அம்மா ஆறு லட்க்ஷம் ரூபாய்களை ஒரேபிள்ளைக்கு சொக்கமாக வைத்திருக்கிறாளே.....நாளை வருவாண்டூ...நீயே கேட்டுக்கோ. நேக்குத் தெரிந்தாப்பலே அவன் பிராம்மணன், சூத்திரன், பள்ளுப் பறையன் என்கிற வேற்றுமைகளையெல்லாம் ஒழிக்க ஊர் ஊராய்ச் சென்று பிரசாரம் செய்கிறானாண்ணு சொல்றுடி. அதாண்டி வேற்றுமை இல்லாமலே அம்புஜத்தையும் இங்கே அழைத்து வந்தான்...நேக்கு இது புரியலையோ?"

பார்வதி: இப்பத்தான் ஜாதிமதமே இல்லாமே எல்லாம் ஏகமாயிட்டதே–பிராமணன் சூத்திரான், பள்ளுப்பறை, என்ற வித்தியாசமே ஒடிட்டதே ... எல்லாம் ஏகமாக கோயில் குளங்களில் கலந்து கொள்றளே.

பரமசிவ அய்யர்: எல்லாம் வெளிப் பூச்சடி...இதிலே நீ ஏமாந்து போகாதே. ஸ்வதந்திரம் கிடைத்தாலும், சுவர்க்கலோகம் கிடைத்தாலும், சாதி வித்தியாசம் எங்கடி மறையப் போறது நம்ம நாட்டிலே? அது இந்த ஜென்மத்தில் இல்லை' என்று மனம் நொந்தபடி சொன்னார்.

பார்வதி; நீங்க அப்படி சொல்லாதீங்கோண்ணு... நம்ம வாழ்க்கையே மாறிவர்றதை நீங்க கவனிக்கலியோ—எல்லாம். இன்னிக்கு இல்லாட்டி நாளைக்கு ஒடிடும். ஆம் இந்தப் பயலுக்கு கல்யாணம் ஆயிட்டதோ?

பரமசிவ அய்யர்: இன்னும் இல்லையடி, நமக்குத் தெரியாமலா கல்யாணம் செய்துக்கப் போறான். நாளைக்கு வருவாண்டி, நேக்கு வேண்டியதைக் கேட்டுத் தெரிஞ்சுக்கோயே.

பார்வதி: ஆமா, ஒரு ரகசியம்ணு...நம்ம அம்புஜம் ரத்னத்தைக் காதலிக்கிறு...

பரமசிவ அய்யர்: காதலா...என்னடி தத்துப்பித்துண்ணு பித்துக்கொள்ளி போல் உளர்றே. அவ விதவையடி, காதலாவது கத்தரிக்காயாவது—எவண்டூ அவளைத் தீண்டுவான்? என்று திறந்த வாய் மூடாமல் சொன்னார்.

பார்வதி: கேளுங்கோண்ணு...! தீபாவளி இரவு நம்ம குழந்தை அமிர்தம், 'கதை ஒன்று சொல்லு' நாத்தின்னு கேட்டது. அம்புஜம் ரயிலில் நடந்த விவகாரங்களை அப்படியே சொல்லித் தீர்த்திட்டா...விதவா விவாகம், காதல், சாதிமத வித்தியாசம் எல்லாம் தவிடு பொடியாய் விட்டதுண்ணு...அதான் அப்படிச் சொன்னேன்.

பரமசிவ அய்யர்: ரத்னம் ஏப்படி இந்த அமங்கலியை தொடுவான். மற்றவன் தொட்டு விட்டுப் போனதை இவன் எப்படி காதலிப்பான். போடூ, இது முடியாத காரியம்.

பார்வதி; ரத்னம்தான் சீர்திருத்தக்காரண்ணு சொல்றளே—அவனைக் கேட்டுத்தான் பாருங்களேன் நாளைக்கு—அவன் சீர்திருத்தக் கதை எப்படீண்ணு பார்க்கலாம்

"நேக்குத் தூக்கம் வர்றது. நாளை பார்ப்போண்டூ" என்று சொல்லிக்கொண்டே சயன அறைக்குச் சென்றுவிட்டார் அய்யர்.

குழந்தைகளிடம் விளையாடிக் கொண்டிருந்த அம்புஜம் பரமசிவத் தம்பதிகளின் ஆலோசனைக் கமிட்டி தீர்மானங்கள் அனைத்தையும் அந்தரங்க மாகக் கேட்டுக் கொண்டாள். அம்புஜத்திற்கு நித்திரை கொள்ளவில்லை. நாளைக் காலை வரும் ரத்தினத்தின் அழகிய உருவம் அவள் முன் நின்று சிந்தனையைச் சீர் குலைத்த வண்ணமிருந்தது.

அதே இரவில் அம்புஜத்தை நாளை கண்டு களிப்புறுவோம், ஒரு கண நேரமாகிலும் என்று மதுரைமாநகரில் ரத்னம் செம்பட்டு பஞ்சணையில், பகல் கனவு கண்டு கொண்டிருந்தான். "உள்ளங் கள் இரண்டும் சாதிமத பேதமின்றி ஒன்று சேர உரத்து கூவடி "கண்ணம்மா" என்று அவன் புகைவண்டியில் பாடிய அடிகள் அவள் மனக் கண் முன் நின்று ஆடின.

அதே சமயத்தில் "சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா...செல்வக் களஞ்சியமே, சாதி மதம் கட்டோடு ஓழியச் சங்கீதம் பாடு கண்ணம்மா" என்று பித்தன் பாடிய அடிகள் அவள் மனக்கண் முன் தோன்றித் தோன்றி மறைந்த வண்ணமிருந் தன. ரத்தினம் செட்டியானாலும், தங்கப் பதுமை யாயிற்றே. அவரை ஏன் நான் காதலித்து கூடி மணம் செய்து சாதி மத வித்தியாசத்தை ஒழிக்கக் கூடாது? என்று அம்புஜம் ஆலோசித்த வண்ணம் நிம்மதியாகத் தூங்கினாள்.

மறுநாள் வாக்குறுதிப்படி பித் தன் பழனியை அடைந்து பரமசிவ அய்யர் இல்லம் ஏகினான்.

* * *

"தீபாவளிப் பண்டிகை எப்படி நடந்தது?" என்று குதூகலத்துடன் பித்தன் கேட்டான்.

"நீல நிறப் புடவையைப் பாருங் களேன்" என்று காதல் பித்து தலைக் கேறிய அம்புஜம் சொன்னாள்.

"சாதி சமய, உயர்வு தாழ்வென்ற பிணக்குகளை ஒழிக்க மூன்று வர்ணம் தீட்டிய சேலை ஒன்றை உனக்குக் கொண்டு வந்திருக்கிறேன், இதோ பார்" என்று சொல்லி சிறிய முடிச்சு ஒன்றை அவிழ்த்துக் காண்பித்தான் பித்தன். சிகப்பு, வெள்ளை, பச்சை என்ற மூவர்ணங்களுடன் கூடிய சேலை. பார்வைக்கு வெகு அழகாயிருந் தது சேலை. அம்புஜம் பித்தனின் பக்கத்தில் நின்று 'நேக்கு அழகா யிருக்கிறது' என்று தன் குழுத இதழ்களைத் திறந்து அமுத மொழிகள் சிந்தினாள்.

அன்று மாலை நடந்த தேநீர் விருந்தொன்றில் "சுதந்தர நாட்டில் சாதிமதம்' என்பதைப் பற்றி பித்தன் அழகான ஒரு சொற்பொழிவாற்றினான். சுதந்திர நாட்டில் விதவா விவாகம் என்பதைப்பற்றி அம்புஜம் தன் சொந்தக் கதையை ஆதியோடு அந்த மாய்ச் சொல்லிமுடித்தாள். சாதி மத வித்தியாசங் களுக்கு 'குட்பை' என்ற கரகோஷத்துடன் கூட்டம் கலைந்தது.

அன்றிரவு காதலர் இருவரும் கருத்து ஒருமித்து பழனியில் பரமசிவ அய்யரால் ஒதுக்கப்பட்ட சயனக் கிரகமொன்றில் ஆனந்தமாக உட்கார்ந்திருந்தனர். பழனி அறையின் ஜன்னல் வழியாக இளம் தென் றல், இன்ப கீதம் ஒன்றை பாடிக்கொண்டு வந்தது. வாழ்க்கையின் நறுகேணியில் மிதக்க இருக்கும் உள்ளங்கள் இரண்டையும் குளிர வைத்தது. அம்புஜத்தின் கரங்களிரண்டையும் தன் கரங்க ளோடு சேர்த்துப் பிடித்துக் கொண்ட ரத்னம், "ஆஸ்பத்திரியில் எப்பொழுது நர்சு வேலையில் சேரப் போகிறாய்?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"இப்பொழுதே சேர்ந்துவிட்டேன். உங்கள் உடல் நிலையைப் பாது காக்கும் நர்சுதானே நான் இனிமேல்" என்று இன்புறச் சொன்னாள் அம்புஜம்.



"அம்புஜம் நீ இனிமேல் என் நர்ஸ்தான். சாதி மத பேதத்தை ஒழிக்கப் பிறந்த உத்தமியும் நீதான்" என்றான்.

அம்புஜம்: அமங்கலியை சுமங்கலியாக்கிய உத்தமர் நீங்கன்தானே என்றாள்.

ரத்னம்: உம் இல்லை இல்லை. அது அந்த ஆண்டி சுப்பனின் செயல் என்று அம்புஜத்தின் கூந்தலை வருடினான்.

அந்த ஒரு வினாடியில் அவர்கள் இருவர் நெஞ்சமும் அடைந்த இன்ப நிலையை வர்ணிக்க வார்த்தை இல்லை. அந்த இரண்டு உள்ளங்களும் எங்கோ வான வெளியை நோக்கி மேலே மேலே—அதற்கும் மேலே—கற்பனைச் சிறகு கொண்டு வெகுவேகமாகப் பறந்து கொண்டிருந்தன.

எத்தனை நேரங்கள்தான் இப்படி மௌனமாக இருப்பது?

மெதுவாக அச்சுந்தரி தன் மென் கரங்களால் காதலனைத் தொட்டு "என்ன பேசாமல் இருக்கிறீர்களே?" என்றாள்.

அவன் மெய்மறந்து "பேச்சுக்கிடமேதடி — நீ பெண் குலத்தின் தெய்வம்" என்றான்.



மாமா:—பட்டாசை யெல்லாம் ஏண்டா கீழே வீசிட்டே?

அம்பி:—நேக்கு இந்தப் பட்டாசு வேண்டாம். ஏரோப் பிளேன்லிருந்து போடறுங்களே அந்த வெடி குண்டு தான் வேணும்.

மாமா:—டேய், அந்தக் குண்டைப் போட்டா ஊரே தூளாப் போயிடுமே!

அம்பி:—நேக்கு அது தான் வேணும்.

ஒரே நெருக்கடி சார்!

[கே. விஜயராகவன்]

என் நண்பர் ஒருவர் அனுபவ பதார்த்த குண சிந்தாமணி. இது அவருக்கு காரணர்த்தமாக ஏற்பட்ட பெயர் தான். அவரோடு உணவு உண்ணும் போதெல் லாம் பதார்த்தங்களைப் பற்றிய தமது மேலான அபிப்பி ராயத்தைச் சொல்லாமல் இருக்க மாட்டார். எதற் கெடுத்தாலும் ஒரே காரம், ஒரே புளிப்பு, ஒரே இனிப்பு, ஒரே கசப்பு என்று இப்படியாக உணவுப் பரீக்ஷையில் அவருக்கு உள்ள விஷேசத் திறமையைக் காட்டிக் கொள் வார். அவரைப் போலவே இன்று பலரும் ஒரு வார்த் தையை உபயோகிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக் கிறது. அதுதான் நெருக்கடி என்பது. பாருங்கள்! ரயிலில் போனால் நெருக்கடி! டிராமில் போனால் நெருக் கடி! பஸ்ஸில் போனால் நெருக்கடி! துணி வாங்கப் போனால் நெருக்கடி! அரிசிக்கும் நெருக்கடி! சக்கரைக்கும் நெருக்கடி! அடேயப்பா! இனியாகிலும் கூட சமாளித்து விடலாம். ஆனால் இந்த நெருக்கடியைச் சமாளிப்பது தான் மகா கஷ்டம். மந்திரிசபை நெருக்கடியைப் பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கிறோம். திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஏற்பட்டிருந்த ஒரு மகத்தான நெருக் கடி சர். சி. பி. யோடு தீர்ந்துபோன விஷயம். மைசூர் சமஸ்தான அரசியல் நெருக்கடி இருந்த இடம் தெரிய வில்லை. ஹைதராபாத் சமஸ்தான நெருக்கடி தீர்ந்தபாடில்லை. இப்படியாகத்தானே, ஏற்படும் நெருக்கடியான விஷயங் களுக்கு தினசரிப் பத்திரிகைகள் முதல் ஸ்தானம் கொடுக் கின்றன. பத்திரிகைகளில் விஷயத்துக்கு நெருக்கடி ஏற் படும் போது கொட்டை எழுத்துக்களில் இந்த நெருக் கடியைப் போட்டு இடத்தை சரிக்கட்டுகிறார்கள். இந்த நெருக்கடியும் இடம், பொருள், ஏவல் இவற்றை அனு சரித்து ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமாக அதா வது தோட்டி முதல் தொண்டமான் வரையில் பரவி இருக்கிறது.

இன்று நாம் கொண்டாடுவது சுதந்திர நாட்டில் தீபாவளி. தீபாவளி வந்து விட்டால் எல்லோருக்குமே ஒரே நெருக்கடி தான். அன்னிய ஆட்சியிலிருந்து விடு தலை பெற்று இன்று சுதந்திரமாக இருக்கிறோம். நம்மை ஆண்டு வந்த தர்மகர்த்தாக்கள் மிகவும் ஒரு நெருக்கடி யான கட்டத்தில் இந்தாபிடி என்று நம்முடைய கைகளில் சுதந்திரத்தை திணித்து விட்டுப் போய் விட்டார்கள். இன்று நாட்டின் பொருளாதார நிலை சீர் குலைந்து வயி ராற உண்ண உணவும், நல்ல உடையும் இன்றித் தவிக் கிறோம். இதனாலேயே நம்முடைய மாபெரும் தலைவர்க் கெல்லாம் அரசியலில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. காட் டில் ஏற்பட்டுள்ள வகுப்புவாத நெருக்கடியைச் சமாளிக்க தலைவர்கள் அரும்பாடு படுகிறார்கள். இந்த நெருக்கடி மட்டும் இல்லாதிருந்தால் இன்று நாம் கொண்டாடப் போவது ஒரு அசல் சுதந்திர தீபாவளியாக இருக்கும். அன்னிய நாடுகள் நம்மைப் பார்த்து திகைக்கும்படியான ஒரு நெருக்கடியை உண்டு பண்ணியிருப்போம்.

இதெல்லாம் பெரிய நெருக்கடிகள். இனி சாதாரண நெருக்கடிகள் வாழ்க்கையில் எப்படி வருகிறது என்பதை கவனிப்போம். உயர்திருவாளர் நமது ஆப்த நண்பர் மிஸ்டர் திரவியம் மிகவும் நல்லவர் தான். அவருக்கு சமய சந்தர்ப்பங்கள் தெரிவதில்லை. "சார்! கொஞ்சம் பண நெருக்கடி! அதற்காக அதிகாலையிலே உங்களை..... ....." என்று அவர் சொல்லும் போதே 'இதில் கொஞ் சம் என்ன வந்தது, சுத்தக் காலிப்பயல், காலங்காத்தாலே வந்துவிட்டான்' என்று கொஞ்சுகிறோமல்லவா!

பணநெருக்கடி ரொம்ப ஜீவாதாரமான விஷயம் தான். எல்லோரும் ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா? இதை ஞாபகத்தில் கொண்டு தான் கலியாண நெருக்கடி யில் கண் கண்டதைச் சுருட்டும் கனவான்கள் சில சமயங் களில் எக்கச்சக்கமான நெருக்கடியில் மாட்டிக் கொள் வதைக் காண்கிறோம்.

எனது ஜூனியர் மாப்பிள்ளை ஒருவர் வருஷா வருஷம் ஒரு பெண் குழந்தைக்கு தந்தையாவது என்று சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறார். இதனால் அவர் வீட்டில் ஏற் படும் நெருக்கடியைச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இந்த விஷயத்தில் எனது சீனியர் மாப்பிள்ளையை பின்பற்றினால் நல்லது என்று சிபார்சு செய்கிறேன். இந்த சீனியர் நெருக்கடியை சமாளிப்பதில் மகா நிபுணர்.

தீபாவளி நெருக்கடியில் மாப்பிள்ளைகள் மாமனார் களுக்குக் கொடுக்கும் நெருக்கடி பிரமாதமாக இருக்கும். (இந்த மாப்பிள்ளைகள் மாமனார்களின் கண்களுக்கு எந் தெந்தப் பிரயாணிகளில் காட்சி தருவார்கள் என்பதை இங்கு மரியாதையாகச் சொல்லாது விட்டிருக்கிறேன்.)

மாப்பிள்ளைகளுக்கு மட்டும் தங்கள் இளம் மனைவிகள் மயில்களாகவும், குயில்களாகவும், மற்றவர்கள் விலங்கினங்களாகவும் காட்சி தருவார்கள். இது ஒரு மாப்பிள்ளை தன் புது மனைவிக்கு எழுதிய கடிதம். அனுமதியில்லாமல் இங்கு தருகிறேன்.

என்னுடைய இன்பக் கிளிக்கு !

தீபாவளிக்கு கண்டிப்பாக வரும்படி எழுதியிருக்கிறாய். இதை நீ சொல்லவா வேண்டும். நான் தான் எப்போ, எப்போ என்று காத்துக் கொண்டிருக்கிறேனே! உன் பக்கலிலே இருக்கும்போது எனக்கு மதுரமாக இருக்கிறது. உன் அப்பா வீடோ ஒரே மந்தை. உன்னோடு தனியாக இருக்க முடியாத அளவுக்கு நெருக்கடியை உண்டு பண்ணி விடாதே! (சென்ற தடவை நடந்தது போல) உன்னுடைய அருமையான தம்பியையும், தங்கையையும் இப்போது கொஞ்சம் சரி செய்து வைக்கவும். அந்தக் குரங்குகள் நல்ல சமயத்தில் விஷமத்தனம் பண்ணப் போகிறது! ஆமாம், சொல்லி விட்டேன் இதில் கொஞ்சம் பிசகினாலும் என் இதயத்தில் முள்ளுக் குத்துவது போல இருக்கும். இனி என்ன எழுத

உனது இன்ப ரவி.

"எங்கள் மாப்பிள்ளைக்கு காலையில் 'பெட் காபி' சாப்பிட்டு வழக்கமாம். ஒரு அரை வீசை அல்கா கடனைக் கொடுங்கள்" என்று கேட்கிறார் ஒரு மாமனார். சார்! நம்ம மாப்பிள்ளைக்கு முதல் தரமான அரவிந்த் மில் வேஷ்டி போதுமாம். முடிந்தால் அவர் அப்பாவுக்கும் ஒரு ஜோடி எடுத்து வைக்கும்படி கண்டிப்பாக எழுதியிருக்கிறார். இந்த ரேஷன் நெருக்கடியில் இது எப்படி முடியும்" என்று பிலாக்கணம் பாடுகிறார் இன்னொருவர். எங்கள் சின்ன மாமனாருக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம், அவர் தம் அருமை அண்ணாவை கொஞ்சும் மொழிகளால் நிந்தார்ச்சனை செய்வார்.

குடும்ப நெருக்கடிகள் சர்வ சாதாரணமாக நிகழ்வதுவிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் சௌகரியங்கள் குறையும் போது தானாக நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது. ஒரு சுமாரான வருவாயுள்ள குடும்பம். வீட்டின் பிரதான புருஷன் ராமுவுக்கு தினம் இரண்டு தடவை 'ஸ்டிராங்' காப்பியும், அரையணாப் பொடி மட்டையும் இல்லாவிட்டால் தலைவலி வந்து விடும். அப்பாவுக்கு வெற்றிலை பாக்குப் புகையிலை இல்லாவிட்டால் இரவில் தூக்கம் வராது. அம்மாவுக்கும் பாட்டிக்கும் வாரம் இரு முறை சினிமாவுக்குப் போகா விட்டால் அவர்கள் மோக்ஷத்துக்கு போகும் போது சுவர்க்க வாசல் திறக்காதாம். தம்பி பாலுவுக்கு நண்பர்களோடு சேர்ந்து குஷியாக சிகரட் பிடிக்கையில் கொஞ்சம் 'கேஷ்' வேண்டும். ராமுவின் மனைவிக்கு முகப் பவுடரும், ஸ்நோவும், ஹேராயிலும், மைசூர் சந்தணச் சோப்பும் இல்லாவிட்டால் தற்கொலை செய்து கொண்டு விடுவாளாம்; பெரிய இடத்துப் பெண்.

ராமு மனைவிக்கு பயந்து கொண்டு இவற்றை யெல்லாம் வாங்கித் தந்தாலும் வெளிக்கு அவர் பயமுறுத்துவதாகச் சொல்லிக் கொள்கிறான். தங்கை கலாவதிக்கு புதுப்புது ரிப்பன்களும் கண்ணாடி வளைகளும் இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்று 'ஸ்டிரைக்' செய்கிறாள்.

இம் மாதிரி ரகங்கள் இருந்தால் குடும்பத்தில் எப்படி நெருக்கடி ஏற்படாமல் இருக்கும்.

நம்ம நண்பர் மிஸ்டர் சுப்பராயன் இருக்கிறாரே அவருக்கு அடிக்கடி இந்த நெருக்கடி வந்து கழுத்தை நெரிக்குமாம். அது தான் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்ட வேண்டிய நெருக்கடி. ஒரு நூறு ரூபாய் சம்பளத்தை வைத்துக் கொண்டு எத்தனை தடவை பட்ஜட் தயாரித்தாலும் கணக்கு ஒத்து வருவதே இல்லை. நாள் பூராவும் போகும் போதும் வரும் போதும் பிறரோடு பேசும் போதும் கணக்குப் போட்டுக் கொண்டே தானிருப்பார். நிரந்தரக் கடன், இன்ஷ்யூரன்ஸ், தம்பிக்குப் படிப்பு அம்மா, அப்பா தம்பிகள் போஷணை, சஹதர்மிணிக்கு ஸ்பெஷல் அலவன்ஸ், அவரது செலவுகள், குடும்பம் இத்தியாதி, அம்மா அப்பா இரண்டு பேரையும் அல்லது சஹதர்மிணியை மட்டும் கல்தாக் கொடுத்து வெளியேற்றினால்த் தான் பட்ஜட் ஒத்து வருகிறது. இதில் எது சாத்தியம்! சொல்லுங்கள்! அடுத்தபடி இது தங்கைக்கு ஸ்பெஷல்! தீபாவளி அவர் வாய் ஓயாமல் இதைச் சொல்லும் போதெல்லாம் அழுவதா, சிரிப்பதா என்ற நெருக்கடி நமக்கு ஏற்படுகிறது.

"கணக்குப் போட்டது போதும் இதோ காப்பி சாப்பிடுங்கள்" என்று கையில் காப்பியோடு அவர் சஹதர்மிணியைப் பார்க்கும் போது அவர் மூன்று முறுவல் செய்து தன் நெருக்கடியை மறந்து விடுவார்.

நெருக்கடி எங்கே, எப்படி, சமாளிக்கப்படுகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் இதைப் படிக்கும் படியான ஒரு நெருக்கடியை உங்களுக்கு உண்டாக்கியதற்காக எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த ஒரே நெருக்கடியை ஒழிக்க முன் வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கட்டுரையின் மூலம் ஆசிரியரால் எனக்கு ஏற்பட்டிருந்த ஒரு பெரிய நெருக்கடியிலிருந்து விடுதலை பெற்று விட்டேன் என்பதையும் மனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

POWER
FOR
INDUSTRIAL PLANNING



GENERATION

STEAM
&
DIESEL

WE OFFER COMPLETE ENGINEERING SERVICE



TRANSMISSION

OVERHEAD
UNDER
GROUND
H. V. & L. V.

DISTRIBUTION

OUT DOOR
INDOOR
H. V. & L. V.

EASUN ENGINEERING CO.,
POST BOX NO 95, ~~~ MADRAS.

NANCO RUBBER WORKS

COIMBATORE

SOME OF THE MANY ITEMS MANUFACTURED



MANUFACTURERS IN;

1. All sundries in Rubber ond Ebon'te including Battery lids, Engine Mountings, All Rubber Hoses, etc.
2. Balloons of all types with or without photos of National Leaders and with or without whistles including Tricolour Balloons, Rubber Flags, Baby Soothers, Nipples and all types of Rubber Toys, Play Balls, etc.
3. Plastic Ware: Soap Cases Blotters Memo Pads, Bowls, Dishes, Plates, Insulating Materials, Bobbins and Electrical accessories.
4. Undertake all types of Electric Welding, Gas-Welding, Metal Spraying Works.
5. Undertake all types of Rough Castings, Mauufac ture of all types of Machinery like Bundle Press-Rotaries, Sugar Cane Crushers, Hand Presses with or without electric heating or steam heating arrangements.
6. Undertake all types of Manufacture of steel dyes for various purposes.

நான்கோ ரப்பர் ஒர்க்ஸ், கோயமுத்தூர்.



நித்திரைதான் வருமோ ?

[கவிஞர் கே. வேங்கடரத்தினம்]

தோழி:—மாலை மசக்கலிலே—அடி
மங்கையே ஒண்டியாய் வந்ததிங் கென்னடி ?
மாலை மசக்கலிலே

தலைவி:—சாலைத்திருப்பத்திலே-யங்கு நித்தமும்
சந்திப்பதுண்டவனே—அடிக்கடி
சந்திப்ப துண்டவனே

தோழி:—ஆற்றங்கரை யருகே—அடி
அதிசய மென்ன கண்டாயடி நீயங்கு
ஆற்றங்கரை யருகே

தலைவி:—ஆற்றங்கரை யோரம் உள்ள அச்சோலையில்
அன்பனைக் காண்பதுண்டு—அடிக்கடி
அன்பனைக் காண்பதுண்டு

தோழி:—திங்கள் இளம் பிறையில்—அடி
தேன் வழிகின்றதோ பார்க்கிற தென்னடி ?
திங்கள் இளம் பிறையில்

தலைவி:—திங்கள் இளம்பிறை சென்றதின் பின்னந்தச்
செல்வன் வருவனடி—எந்தன்
செல்வன் வருவனடி

தோழி:—நேரமதிகமாச்சு—அடி
நிலாவும் மறைந்தது விடுசெல்தேடுவர்
நேர மதிகமாச்சு

தலைவி:—நேரமானு லென்ன—அன்பனைக் காணுமல்
நித்திரைதான் வருமோ?—அடி
நித்திரை தான்வருமோ ?

வாழ்க்கைப் படம்

[எஸ். வி. பத்மனுபன்]

வாழ்க்கையில் எவ்வளவோ பேர்களைச் சந்திக்கிறோம். ஒவ்வொருவர் சந்திப்பும் நம் உள்ளத்தில் ஒவ்வொரு விதமாறுதலை ஏற்படுத்துகிறது. சிலரைச் சந்தித்த சில நிமிஷங்களுக்குள் மறக்கிறோம். இன்னும் சிலரைப் பற்றி எப்பொழுதாவது ஒரு தரமாவது சிந்திக்கிறோம். வேறு சிலரைப் பற்றியோ எப்பொழுதும் அவர்களுடனேயே இருக்கக்கூடாதா என்றும் ஆசைப் படுகிறோம்.

தாமோதரனும், நரஸிம்மனும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் படிக்க வந்தவர்கள். அவர்கள் முதல் முதல் சந்தித்த பொழுது தங்கள் சந்திப்பு எப்படியெல்லாம் மாறலாம் என்று ஹேஷ்யம் செய்யவில்லை. நாளாக ஆக அவர்களுடைய நட்பு வளர் பிறையைப் போல் வளர்ந்து வந்தது. ஒருவர் மற்றொருவரை விட்டுப் பிரிந்திருப்பது கடினமாயிருந்தது. இருவரும் என்றுமே ஒன்றாய் இருக்கக் கூடாதா? என்று ஆசைப்பட்டனர். ஆனல் நினைத்த தெல்லாம் நிறைவேறி விட்டால், வாழ்க்கை 'சப்புக்' கொட்டி விடுமல்லவா?

பள்ளிப் படிப்பு முடிந்து விட்டது. இருவரும் பிரிய நேர்ந்தது. அவர்கள் உடல் பிரிந்தது. ஆனல் உள்ளம் பிரியவில்லை. அவர்கள் அடிக்கடி சந்திக்க முடியவில்லை: ஆனல் கடிதப் போக்குவரவு மட்டும் குறையவில்லை.

ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் இறங்கினர். தாமோதரன் ஒரு ஆரம்ப ஆசிரியரானன். நரஸிம் ஒரு டைரக்டரானன். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அவர்கள் வாழ்வில். தாமோதரன் வருமானம் ஒரே மாதிரி யிருந்தது; பிரமோஷனும் இல்லை. ஆனல் நரஸிம்மனின் வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்தது: அத்துடன் புகழும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயிற்று.

டைரக்டர் நரஸிம் ஒரு சமூகப் படம் சம்பந்தமாக சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. அதுவும் தன் நண்பன் தாமோதரன் வசிக்கும் கிராமத்திற்குப் பக்கங்களில்! நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த தன் நண்பனைச் சந்திக்க வேண்டும் என்று ஒரே துடிப்பு நரஸிம்மனுக்கு. தாமோதரனைக் கண்டதும் எல்லையற்ற சந்தோஷ மடைந்தான். தமாஷாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள் அப்பொழுது தாமோதரனின் மனைவி காப்பி கொண்டு வந்து வைத்தாள். அவளைக் காண்பித்து 'இவள்தான் என் வாழ்க்கைத் துணைவி, கமலம்' என்றான்.

நரஸிம் கமலத்தைப் பார்த்துப் பெருமித மடைந்தான். "ஓ, என் நண்பனுக்கு இவ்வளவு அழகிய மனைவி வாய்த்து விட்டாளே!" என்று. அதே சமயத்தில் அவன் உள்ளத்தில் வேறு எண்ணங்களும் வட்டமிட்டன. ஆம்! அவளைத் தான் தயாரித்துக் கொண்டிருக்கும் படத்திலே நடிக்கச் செய்தால்.....! சே! அவள் குடும்பப் பெண். அதுவும் தன் ஆருயிர் நண்பனின் மனைவி..... நடிக்கச் சம்மதிப்பாளா? ..... நாம் ஏதற்கும்..... என்று.

"தாமு! நான் இப்பொழுது ஒரு சமூகப் படம் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அது சம்பந்தமாகத்தான் இங்கு வந்தேன். அப்படியே உன்னையும் சந்தித்து விட்டுப் போகலாம் என்று. அது கிடக்கட்டும். உனக்கு நல்ல யோகம் பிறந்திருக்கிறது" என்றான் நரஸிம்.

"ஆமாம்! இந்த எழுவெடுத்த (வாத்தியார்) டா...னு உத்தியோகத்தில் யோகம் வேறு?" என்றான் தாமோதரன்.

ந:—சீ! அப்படி யெல்லாம் மனசை விட்டு விடாதே! 'நானிருக்க பயமேன்?' அதுவும் இந்தக் காலத்திலே சினிமாவைப் போல வேறு எந்த வியாபாரமும் இவ்வளவு லாபம் தருவதில்லை.

தா:—ஆமாம்! அதுக்கும் எனக்கு வருகிற யோகத்திற்கும் என்ன சம்பந்தம்?

ந:—சம்பந்தமுண்டு. இப்பொழுது சினிமாவில் குடும்பப் பெண்கள் நடிக்கிறார்களே, தெரியுமோ?

தா:—நல்லாத் தெரியும். ஏதோ ஒன்றிரண்டு. அது

வும் கெட்டுப் போனதுகள், குடும்பப் பெண் என்ற போர்வையிலே.

ந:—சே! அந்த மாதிரி எல்லாம் சொல்லாதே. எங்கும் கண்ணியத்திற்கும் கற்புக்கும் இடமுண்டு.

தா:—எனக்கென்னமோ நம்பிக்கையில்லே நீ சொல்வதில்.

ந:—என்மீதும் உனக்கு நம்பிக்கை யில்லையா? ஏண்டா சினேகிதன் ஏமாற்றுவானு?

தா:—உன்னை நம்புகிறேன். அதில் சந்தேகமென்ன?

ந:—நீயோ ஆரம்ப ஆசிரியன். என்ன காரணம் போட்டாலும் 'அரை வயிறு' தான். சுகமாயிருக்க வழியிருக்குது. உன் மனைவிக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது, சினிமாவில் சேர்ந்தால்.....! மாதம் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கலாம். பட்டணத்தில் பங்களாவில் இருக்கலாம். மோட்டாரில் எங்கே வேண்டுமானாலும் சுற்றலாம் தமாஷாக.

தா:—அதெல்லாம் சரியப்பா. குடும்பப் பெண் கௌரவம் என்ன ஆவது? என்னுடைய கௌரவம் என்னவாகும்? ஊரார் என்னப் பேசுவார்கள். "அந்த வாத்தியார் பெண்டாட்டி சினிமாவில் சேர்ந்து விட்டாள், குடி கெட்டுப் போச்சு" என்று சொல்லுவார்களே!

ந:—இந்த உலகமே அப்படித்தான். நல்லது, பொல்லாதது எதுவாயிருந்தாலும் எப்பவும் ஏதாவது சொல்லிக்கொண்டே யிருக்கும்! அதற்கெல்லாம் கவலைப் படாதே. தவிர குடும்பப் பெண் சினிமாவில் நடிப்பதினால் 'கற்பு' இழந்து விடுவாள் என்று நினைத்து விடாதே. மேலும், 'நானிருக்க பயமேன்?' நாம் நமது நாட்டிற்கு "குடும்பப் பெண்கள் கௌரவமாக சினிமாவில் நடிக்கலாம்" என்று புத்தி புகட்ட வேண்டும்.

தா:—"சரி! உன் இஷ்டம்போல் செய். எதற்கும் கமலத்தையும் ஒரு வார்த்தை கேட்கிறேன்" என்று அவளையும் கேட்டான். அவளும் இதற்கு முதலில் சங்கோஜப் பட்டாள். பிறகு ஒருவாறு தைரியமாய் தன் கற்புக்குப் பங்கம் ஏற்படாமல் நடிப்பதாக உறுதி கூறினாள்.

உடனடியாக கான்டிராக்ட் பாரத்தில் ஒரு கையெழுத்து வாங்கிக் கொண்டு அட்வான்ஸாக இரண்டு நூறு ரூபாய் நோட்டையும் நீட்டினான். எங்கே ஒரு ஆரம்ப ஆசிரியன் ஒரேயடியாக நூறு ரூபாய் நோட்டுகளைப் பார்த்திருக்கிறான்? தாமோதரனுக்குப் பரம திருப்தி. இதேபோல் நரசிம்மிற்கும் திருப்திதான். கமலாவுக்குக் கூட தான் சினிமாவில் நடிக்கப் போகிறோம் என்ற சந்தோஷம் தான். நரசிம் தன் நண்பனிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

சில நாட்கள் சென்றன. கமலத்திற்கு சென்னை வரும்படி நரசிம்மிடமிருந்து கடிதம் வந்தது. தாமோதரனும் அவளை ரொம்பவும் சந்தோஷத்துடனேயே அனுப்பினான். ஆனாலும் அவன் மனம் என்னவோ சங்கடப் படத்தான் செய்தது. கமலம் தன் கற்புக்கு பங்கம் ஏற்படாமல் ஒரு படத்தில் நடித்துவிட்டு வந்து விடுவதாக பிரமாணம் செய்துவிட்டுப் புறப்பட்டாள்.

நரசிம் கமலத்தை வரவேற்றுத் தனி வீடு ஏற்படுத்திக் கொடுத்து சகல சௌகரியங்களும் செய்து கொடுத்தான். ஏழ்மை நிலையில் வாழ்ந்து வந்தாலும் இதெல்லாம் அவளுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் ஒரே லக்ஷியத்திற்காக எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டாள்.

நாட்களும் ஓடின. நரசிம்மனும் நல்லபடியாகவே நடிக்க வேண்டிய பாகங்களைச் சொல்லிக் கொடுத்தார். கதையில் காதல் பகுதி வந்தது. அதையும் சொல்லித்தானே தரவேண்டும்! சொல்வியும் தந்தான். அந்தக் கட்டம் கமலத்திற்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் தன் ஒரே லக்ஷியத்திற்காக அதையும் நன்றாக நிறம்பட நடித்தாள். இது நரசிம்மனுக்கு ஒரு மாதிரி சந்தோஷத்தை அடையச் செய்தது. அவனுக்கு இந்தக் கட்டம் பிடித்திருந்ததால் திரும்பத் திரும்ப நடிக்கச் செய்தான். அவளையறியாமல் அவள காம இச்சை அவளை .....! தூண்டிற்று. எவ்வளவோ சமாளித்துப் பார்த்தும் அவளால் முடியவில்லை. தன் நண்பனுக்குக் கொடுத்த வாக்கு.....? எல்லாம் மறந்தாள். கமலா இதை உடனே கவனித்தாள். சற்று திடுக்கிட்டாள். இருந்தாலும் தன் லக்ஷியம் நிறைவேற வேண்டாமா? கணவனுக்குக் கொடுத்த வாக்கு? கணவனுக்கு இது தெரிந்தால் ஏற்படும் விபரீதம்? எல்லாம் அவள் கண் முன்பு தோன்றித் தோன்றி மறைந்தன. பார்த்தாள். ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை!

மறுநாள் நரசிம் ரொம்பவும் குதூகலமாகவும் ஆடம்பரமாகவும் வந்து "எங்கே! இன்று அந்தக் கட்டம் ரொம்பவும் நன்றாக நடிக்க வேண்டும்! பார்க்கலாம்! எப்படி புலிக்குப் பயந்து கொண்டு வந்து காதலனைக் கட்டிக் கொள்வாய். என்னைக் காதலன் என்று நினைத்துக் கொண்டு கட்டிக்கொள்". பார்க்கலாம்" என்றான். அவன் முகத்தில் காம வேட்கை பிரதிபலித்தது. பார்த்தாள். ஏதோ நிலை மாறிவிட்டது என்று தோன்றி 'சற்று இருங்கள். இதோ வந்து விட்டேன்' என்று சொல்லி இரு கோப்பையில் காப்பி கொண்டு வந்து அவனுக்கு ஒன்று கொடுத்து தானும் ஒன்றை குடித்தாள்.

சில வினாடிகளில் இருவரும் மயக்கத்தினால் கீழே விழுந்து விட்டனர். விழுந்தவர்கள் எழுந்திருக்கவேயில்லை. நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள்!

* * *

The Travancore Forward Bank, Limited.

(INCORPORATED IN TRAVANCORE - 1929 - LIABILITY OF MEMBERS LIMITED)

A SCHEDULED BANK

தி திருவாங்கூர் பார்வாடு பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : கோட்டயம்.

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 50,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிஸர்வ்களும் ரூ. 17,26,000

நிரந்தர டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
3 வருஷ காஷ் சர்டிபிகேட்களும் வழங்கப்படும்.

பிராஞ்சுகள் : ஆடூர், அலப்பி, ஆல்வே, கள்ளிக்கோட்டை, கொச்சி, சாலை, சங்கனாச்சேரி, செங்கனூர், சிராயிங்கள், கோயமுத்தூர், எர்ணாகுளம், கையம்குளம், கொத்தமங்கலம், கோட்டயம், கே. கே. ரோடு, கோசஞ்சேரி, கொட்டாரக்கா, மதுரை, மார்த்தாண்டம், மாவிள்ளிக்கரை, மதுரை, மன்னூர், முண்டைக்கயம், மூவட்டுபுசா, நாகர் கோயில், உதகமண்டலம், பாளூர், பெரும்பாவூர், புனலூர், பொன்குண்ணப், பாலக்காடு, கொல்லம், சத்தாலே, செங்கோட்டை, திருவல்லா, திருப்பூர் தோடுபுழா, திருவனந்தபுரம், திருச்சூர், பாலை, வைகம்.

கோயமுத்தூர் பிராஞ்சு
14|248, ஒப்பணக்கார வீதி,
சி. எம். செரியன் எம். ஏ.
செக்ரடரி.

A. V. GEORGE & Co Ltd,. KOTTAYAM.

(INCORPORATED IN TRAVANCORE)

ஏ. வி. ஜார்ஜ் & கோ லிமிடெட், கோட்டயம்.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் :

1. தி தமரபள்ளி ரப்பர் கம்பெனி லிமிடெட்
2. தி உதயகிரி ரப்பர் கம்பெனி லிமிடெட்
3. தி நென்மேனி ரப்பர் & ப்ரொட்யூஸ் கம்பெனி லிமிடெட்
4. தி ஆனந்தம் ரப்பர் கம்பெனி லிமிடெட்
5. தி நீலகிரி டி எஸ்டேட்ஸ் லிமிடெட்
6. தி கைலாஸ் ரப்பர் கம்பெனி லிமிடெட்
7. தி ஜியோ பிரிண்டர்ஸ் லிமிடெட்

படிப்பின் பயன்

கோமதி சுப்ரமண்யம்

'சாவித்திரி, சாவித்திரி'

'யாரது?'

'சாவித்திரி, இங்கே ஓடிவா'

'ஏ அப்பா இவ்வளவு அவசரமாகக் கூப்பிடுகிறீர்களே, என்னமோ வைத்திருக்காப் போலத்தான்'

'வைத்திருப்பதினால்தான் அப்படிக் கூப்பிட்டேன். இந்தா பிடி' என்று ஒரு கவரை நீட்டினான் சண்முகம்.



கவருக்குள் இருந்த போட்டோவை வெளியே எடுத்துப் பார்த்தபடியே 'இது யார் படம் அண்ணு' என்று கேட்டாள்.

'இதுவா, இதுதான் அடுத்தவாரம் உனது கரம் பிடித்து, அம்மி மிதித்து அருந்ததி பார்க்கப்போகும் ஸ்ரீமான் கனகராஜ் அவர்கள்'

வரப்போகிற கணவனின் உருவப் படத்தை ஆசை மிகுதியால் பார்த்தாள். மகிழ்ச்சி சொல்லி முடியாது.

'எப்படி அண்ணு படம் கிடைத்தது?'

'உன் கலாசாலைத் தோழிகளிடம் காட்டலாம் என்பதற்காக நானே தூக்கி வந்தேன்.'

அவன் சொல்லில் குறும்பும் பரிகாசமும் ஒலித்தன.

'போங்க அண்ணு உங்களுக்கு எப்பொழுதும் பரிகாசம்தான்.'

'இதில் பரிகாசம் என்ன இருக்கிறது அம்மா நாளை நீ செய்யப் போவதை இன்று நான் சொன்னேன். அது உனக்கே வெட்கமாக இருக்கிறதா?''

'உனக்கே' என்றால் அதன் அர்த்தமென்ன? படித்த பெண் என்றால் அவர்களுக்கு கூச்சமிராதா? அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பெண்களுக்குரிய குணங்கள் அவர்களுக்குக் கிடையாதா? எப்பொழுதும் குதர்க்கம் பேசும் அண்ணுவிற்கு படித்த பெண்கள் எந்தவகையிலும் தாழ்ந்தவர்களல்ல என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். அதற்கு இந்தப் போட்டோவிலிருப்பவர்—வரப்போகிற அவள் கணவன்—ஒத்துழைப்பாரா?'

'அண்ணு இவர் பீ. ஏ. படித்திருக்கிறாரா?'

'இல்லே. எஸ். எஸ். எல். சி. தான். ஆனால் சம்பாத்தியத்திற்கும் கலாசாலைப் பட்டத்திற்கும் சம்பந்தம் இல்லையே'.

'அப்படியானால் அவ்வளவு ரூபாய் சம்பளமா?'

கனகராஜ் இருநூறு ரூபாய் சம்பளம் வாங்கிய தால், ரொம்பப் படித்திருக்கலாம் என்று நினைத் தாள். அந்த வருஷம் தானும் எஸ். எஸ். எல். சி. எழுதியிருந்ததால் வரப்போகும் மகத்தான வெற்றி யை நினைத்தபடியே அந்தப் படத்தைப் பார்த்தாள்.

'சாவகாசமாக அடுக்களைக்கு எடுத்துச்சென்று இவர் அழகைப்பார். அல்லது மாடிக்குப் போய் தனிமையில் இந்தப் படத்தின் லாவண்யத்தை அனுபவி' என்று வேடிக்கையாகப் பேசிக்கொண்டு, படத்தை நீட்டினான்.

ஆனந்தத்தோடு அதை எடுத்துக்கொண்டு அங் கிருந்து போனாள் சாவித்திரி.

2

வாசலில் பாண்டு வாத்தியக்காரர்கள் அதிகாலை யிலிருந்தே மங்கள கீதத்தை முழக்கிக் கொண்டிருந் தார்கள்.

மணவறைக்கருகில் நாதஸ்வரக் காரர்கள் குழ லின் மூலம் இன்னிசையை எழுப்பித் தனது திற மையை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். பெண்கள் வருகிற விருந்தினரை உபசரிப்பதிலும் மணப் பெண்ணைச் சிங்காரிப்பதிலும் முழு முயற்சி எடுத் துக் கொண்டிருந்தார்கள். கணவனின் முதற் சந் திப்பில் மனதை லயிக்க விட்டு கற்பனை பண்ணிக் கொண்டிருந்த சாவித்திரியின் கவனத்தை சுற்றுப் புறக் கவர்ச்சிகள் ஒன்றும் கவரவில்லை. ஆயிற்று. பெண்ணை அழைத்துப்போக தோழிகள் வந்து விட்டனர்.

ஊஞ்சல் முடிந்து மாலை மாற்றிப் போடும் போது ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தாள். போட்டோ வில் பார்த்த அதே முகம்.

கம்பீரத் தோற்றத்தோடு, எதிரே நின்ற அழகு தெய்வத்தை மணமகன் என்ற கனியும் சேர்த்து பிணைத்து மன்மத ரூபத்தில் அவளது மனத்திரையில் பதித்தது. மகிழ்ச்சி பொங்கும் இதயத்துடன் நாணித் தலை குனிந்து கணவனது கரம் பிடித்தாள்.

சாப்பாட்டிற்குப் பின் நலுங்கு ஏற்பாடு செய் தார்கள். நலுங்கிற்கு உட்காரும் பொழுது ஜாடை யாக மாப்பிள்ளையின் பக்கம் பார்வையை செலுத் தினாள்.

அவள் அதிசயிக்கும்படியாக அங்கிருந்த விநோ தம் என்ன?

மாப்பிள்ளை அணிந்து கொண்டிருந்த ஆடை ஆபரணங்கள்தான் அவளை அப்படி மெய் மறக்கச் செய்தது. அழகான பட்டுக்கரை வேஷ்டி, ஸில்க். சட்டை. ஜரிகை அங்கவஸ்திரம் இதுவே அவர் அணிந்திருந்த உடை. மூன்று லவரக் கற்களாலான சிறு மூக்கட்டு ஒன்று அவரது காதுகளை அலங்கரித் தது. இவைகளெல்லாம் அவருடைய அழகுக்கு அழகு செய்வது போலவே இருந்தது. சாவித்திரி எதிர்பார்த்திருந்தது வேறு. மாப்பிள்ளை எப்பொழு தும் ஸூட்டும் கோட்டுமே அணிந்து கொண்டிருப் பார். மிக நாகரீகமாக இருப்பார். தன்னை, தன் அலங்காரத்தை நாகரீகமாக இல்லை என்று பரி காசம் செய்வாரோ என்றெல்லாம் நினைத்திருந் தாள். இப்படி இருக்க வேண்டும். அப்படி பேச வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டிருந்தாள்.

மாப்பிள்ளையின் படிப்புக்கும், ஆனால் அவ ருடைய நடையுடை பாவனைக்கும் சற்று நேரம் பழகிய வகையில் வெகு தூரம்போல் தெரிந்தது. ஒரு வேளை இவரும் அண்ணு கட்சியில் இருந்தால்? அவளுடைய லட்சிய வாழ்வு என்னவது? அந்த நினைவு வந்தபோது சாவித்திரியின் நிலை தடுமாறியது. சிந்தனைக் கதிர்களுடே எதிரில் வந்த தேங்காயை உருட்டி விட்டாள். கல கலக்கும் சப்தத்துடன் நலுங்குத் தேங்காய் பாதையினின்றும் விலகி எங்கோ போய் நின்றது. ஒரு வேளை தன்னுடைய வாழ்க்கையும் இப்படித்தான் அவரைவிட்டு விலகி வேறு பாதையில் சென்றுவிடுமோ என்ற ஆச்சரியம் மனத்திரையிட்டது.

கலியாண கேளிக்கைகள் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் ஊருக்குப் புறப்பட்டனர். மாப்பிள்ளை ஊருக்குப் போகுமுன் பெண்ணிடம் ஒரு வார்த்தை தனித்துப் பேசவேண்டும் என்று சொல்லியதாக சேதி வந்தது. அந்த ஒரு வார்த்தையை துணிந்து கேட்கும் தைரியம் அவளிடம் இல்லை. அவன் அறைக்கு வந்து நின்ற பின்னரும் அதைக் கேட்கும் தைரியம் அவளிடம் இல்லை. அந்த ஒரு வார்த்தை என்னவாயிருக்கலாம்.

ஒரு வேளை.....அவன் மனம் என்னவெல் லாமோ கற்பனை செய்து கொண்டிருந்ததே தவிர "சாவித்திரி" என்று அவன் கூப்பிட்டது அவளுக் குக் கேட்கவில்லை.

"சாவித்திரி, உன்னுடைய படிப்பை இத்துடன் நிறுத்திக் கொள்ளப் போகிறாயா? அல்லது தொடர்ந்து படிக்கப் போகிறாயா?"

"இது என்ன கேள்வி"

"இதுதான் என்னுடைய முதற் கேள்வி"

என்ன சொல்வது என்று தயங்கினாள். புத்திசாலித் தனமாகப் பதில் சொல்ல வேண்டும். ஆனால் கனகராஜ் மனதிற்குள் என்ன இருக்கிறது என்று அவள் அறிய முடியவில்லை.



"சௌகரியம்போல்" என்றாள்.

"யாருடைய சௌகரியம் போல்?" என்று கேட்டான் கனகராஜ்.

"இந்த வருஷம் குறையும் படித்துவிடுகிறேன். பணம் வீணுகத்தானே போகும்."

"பேஷாகச் செய்!" என்று உத்தரவிட்டான். எங்குதன்னை படிக்கச்கூடாது என்று சொல்லி விடுவானோ என்றிருந்த சாவித்திரிக்கு மிகவும் ஆனந்தம்.

கலியாணத்திற்குப்பின் அவள் பள்ளிக்கூடம் போய் வந்தாள்.

3

சாவித்திரி காலேஜில் சேரும் பொழுது புருஷன் வீட்டிற்குப் போகும் வரை படிக்கிறது, குடித்தனம் செய்யப் போனதும் நிறுத்திவிட வேண்டும் என்று தான் நினைத்திருந்தாள். ஆனால் எஸ். எஸ். எல். ஸியின் முதலாவதாக தேறிய கெட்டிக்கார மாணவியை அவ்வளவு லகுவில் விட்டு விடுவார்களா? அதன் ஆசிரியர்கள் அத்தனை ஏமாந்தவர்களா?

எப்படியோ சாமர்த்திய வார்த்தைகளால் சாவித்திரியை தொடர்ந்து படிக்கும் நிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள். ஆனால் அது தான் சாவித்திரியின் வாழ்வுக்கு வினை என்பதை அவர்கள் கண்டார்களா? இல்லை. சாவித்திரிதான் அறிந்தாளா? தன்னுடைய சாமர்த்தியத்தினாலும் அன்பினாலும் கணவனை சமாதானப் படுத்தி விடலாம் என்ற குருட்டு நம்பிக்கையில் மோசம் போனாள்.

கனகராஜ் தன் சாமர்த்தியத்தால் உத்தியோகத்தில் மேலான பதவியை வகித்து வந்தான். படித்துப் பட்டம் பெற்றதால் புத்திசாலித்தனம் அதிகமாகிவிடும், பட்டம் பெறுததால் புத்தி மட்டமாகும் என்ற நம்பிக்கை அவனுக்குக் கிடையாது. அவனுக்கு கீழாக வேலை பார்த்து வந்த குமாஸ்தா ஒரு பி. ஏ. அடிக்கடி தான் ஒரு பி. ஏ. என்பதை சொல்லுவார்.

அன்று நடந்த அபிப்பிராயபேதத்தில் கொஞ்சம் வாக்குத் தடிக்கவே, "போயும் போயும் உன்னிடம் வேலை பார்க்க வந்தேன் பார். காலேஜ் எட்டிப் பாராதவனிடம் கை கட்ட நேர்ந்ததே என் தலை விதி. நீ என்னத்தைப் படித்து விட்டாய்?" என்று பட படப்பாகப் பேசினார் குமாஸ்தா பி. ஏ.

பெருந்தன்மையோடு குமாஸ்தாவை மன்னித்து விட்டாலும் அவன் மனசிலே தன்னை தன் படிப்பை குத்திக் காட்டிய ரணம் கிடந்தது. அந்த நினைப்போடு அன்று வந்த சாவித்திரியின் கடிதத்தை

பிரித்தான். அவள் கலாசாலையின் ஒய்யாரத்தையும் தமாஷையும் தான் விசேஷ பாடமாக எடுத்திருந்த பௌத்த ரஸாயனத்தையும் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருந்தாள். ஒரு சில வரிகள் தவிர மற்றவை எதுவும் அவன் மனதிற்குப் புலனுகவில்லே. இருந்த புண்ணேத்தான் கிளறிவிட்டன.

ஒரே வரியில்; "அன்புள்ள சாவித்திரிக்கு, காலேஜ் படிப்பை நிறுத்து, போதும், மற்றவை பின்னுல், உனதன்புள்ள, கனகராஜ்" என்று எழுதி விட்டான்.

சாவித்திரி அந்தக் கடிதத்தை அவ்வளவு காரமாக நினேக்காமல் வருப்பில் படித்த மற்றப் பாடங்களில் தான் காட்டும் கை வரிசையையும் படிப்பில் தனக்குள்ள ஆர்வத்தையும் கொட்டி எழுதியிருந்தாள்.

சாவித்திரி - இண்டர் - அவர்களுக்கு,

அனந்தகோடி நமஸ்காரம். உன்னுடைய காலேஜ் படிப்பை தொடர்ந்து படித்துக் கொண்டேயிரு. அதனுல் அடையும் படிப்பினேயும் அறிந்து படித்துக்கொண்டிரு. இனி உனக்கும் எனக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் கிடையாது. ஒரு வேளே சம்பந்தத்தை நீலே நாட்ட இந்தப் பக்கம் வந்தால் பெருத்த அவமானம் நேரிடும் என்பதை முன்னரே தெரிவித்து விடுகிறேன்.

இங்ஙனம்,
கனகராஜு எஸ். எஸ். எல். எல்.

இந்த பயமுறுத்தல் கடிதத்திற்கும் பின் நேரில் சென்று சமாதானம் படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையில் பரீட்சை எழுதி முடித்தாள். வாழ்வே பரீட்சையாகிவிட்டது. வாழ்க்கைப் புதிருக்கு விடை காண முடியாதவள் ஆனுல். எவ்வளவோ பேர் சொல்லியும் கனகராஜ் மணந்த அப்பேதைப் பெண் சாவித்திரியை வீட்டிற்கு அழைக்க மறுத்து விட்டான்.

4

பம்பாய் பெண்கள் ஆஸ்பத்திரி தலேவி, அன்றைய அதிக வேலேயினுல் சற்று களேத்திருந்தாள். சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காக அவள் அறைக்கு வந்து அங்கிருந்த நாற்காலி ஒன்றில் சாய்ந்தாள். எதிரே ஒரு "விசிடிங் கார்டு" அவளுடைய வரவுக்காக காத்திருப்பது தெரிந்தது. எடுத்துப் பார்த்தாள்.

"ராவ்பகதூர் ராமசாமிப் பிள்ளே' என்றிருந்தது. அது யாராக இருக்கலாம்?"

நாலேந்து மாதங்களுக்கு முன் ஆஸ்பத்திரிக்கு பதினுயிரம் ரூபாய் நன்கொடையளித்த ஒருவரின் ஞாபகம் வந்தது. ஆம் அதே நபர்தான்.

ராவ்பகதூர் பிள்ளே அவர்கள் இந்த வேலேயில் நன்கொடை அளிப்பதற்காக வரவில்லே. பேர் காலத்திற்கிருந்த அவருடைய மகள் ருக்மணியை ஆஸ்பத்திரியில் விட்டு வைப்பதற்காகவே வந்திருந்தார்.

"நான் பார்த்துக் கொள்ளுகிறேன். தாங்கள் எவ்வித கவலேயும் இன்றி போகலாம்." என்று பிள்ளே அவர்களிடம் தைரியமாகச் சொல்லி விட்டாள் தலேவி சாரி. ஆனுல் அது தவறு என்பதை நினேத்து வருந்த வேண்டிய நிலேமையும் ஏற்பட்டு விட்டது.

பிரசவ சமயத்தில் ருக்மணி பிழைப்பதே கடினமாக இருக்குமோ என்று பயந்தாள். அவ்வளவு அவஸ்தைப்பட்டாள். யாரைப் பிடித்த நல்ல காலமோ தங்க விக்கிரகம் மாதிரி அழகான ஆண் குழந்தையும் அவளுமாய் சௌக்கியமாகி விட்டனர். ஏற்கனவே பலஹீனமாயிருந்த ருக்மணியின் உடல் நிலே கஷ்ட பிரசவத்தினுல் இன்னும் தூர்பலமாகி விட்டது. ஜாக்கிரதையாக கவனித்து உடம்பு தேறி ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போக ஒரு மாதமாவது ஆகும்.

அந்த ஒரு மாத காலமாக சாரி அவளிடம் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். தலேவியின் மாறு தலேப்பற்றி ஆஸ்பத்திரியிலுள்ளவர்கள் ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். ருக்மணியிடம் அவள் காட்டிய அலாதி பிரேமைதான் அடிப்படை.

அதன் காரணம் அவருக்கே தெரியாதே. ருக்மணியின் குழந்தையைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு ஏதோ ஒரு ஞாபகம் வந்து கொண்டேயிருந்தது. எந்த உருவத்தை அவள் மனத்திரையினின்று அகற்றி விட இத்தனே வருஷங்களாக முயற்சி செய்து வந்தாளோ அதன் நிழல் போலிருந்தது. ஒரு வேளே தனக்கு குழந்தை பிறந்திருந்தால் இதன் சாயலில் தானிருக்குமோ..... இப்படியெல்லாம் தலேவி சாரியின் உள்ளத்தில் உணர்ச்சிக் கொப்புளங்கள் வெடித்தன. ஏ, இதென்ன வீண் பிரேமை. ருக்மணியிடம் கொண்டுள்ள அன்புக்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும். இதுவரை மறைத்து மறைத்து உள்ளத்திடையே அமுக்கி வைத்திருந்த வாழ்க்கை வரலாறுகளேயே அவளிடம் ஒப்புவித்து விட்டாள். அது போதாதா?

தலைவி சொல்வதையே மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ருக்மணி "நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.



"இது என்ன புதுமையான கேள்வி. ராவ்பகதூர் ராமசாமிப் பிள்ளையின் மகள் என்பது எப்பொழுதோதெரிந்த விஷயம்."

"அதைக் கேட்கவில்லை. என்னுடைய கணவர் யாரென்று தெரியுமா?"

"உன்னை அழைத்துப் போக வருவாரல்லவா? அப்பொழுது தெரிந்து கொண்டால் போகிறது."

ருக்மணி கட்டிலை விட்டிறங்கி பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஒரு கவரை எடுத்து "இதுவரை நீங்கள் சொல்லி வந்த விஷயத்திற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா என்று பாருங்கள்" என்று கூறி சாரியிடம் கொடுத்தாள்.

கவருக்குள் ஒரு போட்டோ இருந்தது. அதை எடுத்துப் பார்த்த சாரி திடுக்கிட்டாள். நாலைந்து வருஷங்களுக்கு முன் - அதாவது சாரியின் விவாகத்திற்கு ஒரு வாரம் இருக்கும் பொழுது - அவள் அண்ணா கொண்டு வந்து கொடுத்த அதே மாதிரி போட்டோ.

"இது யாருடைய படம் ருக்மணி?"

"அதுவா, அதிலிருப்பவர்தான் நம் இருவருடைய கணவர்" படத்திலிருக்கும் உருவம் ஒன்று தான். ஆனால் அன்று அண்ணாவிடம் போட்டோவை வாங்கிப் பார்த்த பொழுது உண்டான மகிழ்ச்சி சாவித்திரிக்கு இப்பொழுது இல்லை. அதற்கு பதில் ஏன்பார்த்தோம் என்ற துக்கமே மேலோங்கியது.

"என்னை அழைத்துப் போக அவர் வரும் பொழுது உங்களையும் அழைத்துப் போவார். இனியும் இந்த தனிமை வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியதில்லை. சென்று போனதை மறந்து விடுங்கள். அக்கா" என்று அன்புகனியத் தேற்றினாள்.

நீண்ட நேர மௌனத்திற்குப் பின் "நேரமாகிவிட்டது வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தாள் சாரி. அவள் மனம் குழம்பிக் கிடந்தது. இந்த விஷயங்களெல்லாம் முன்பே தெரியும் என்றாலே ருக்மணி. அவளுக்கு எப்படித் தெரிந்திருக்கும். மேலும் என்னை எப்படி அடையாளம் கண்டு பிடித்து உறவுகொண்டாடினாள். இன்னார் என்று தெரிந்தும் இத்தனை அன்புடன் நடந்து கொண்ட ருக்மணியின் பெருந்தன்மையை பாராட்டாமலிருக்க முடியவில்லை.

இந்த விபரங்களெல்லாம் அவள் கணவரே ருக்மணியிடம் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார். வீட்டிலிருக்கும் சாவித்திரியின் போட்டோவையும் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறாள் இதையெல்லாம் சாவித்திரி கண்டாளா?

மறுநாள் வழக்கம் போல் ருக்மணியின் அறைக்கு சாரி வரவில்லை. ஒன்றும் புரியாமல் பக்கத்திலுள்ளவர்களிடம் விசாரித்தாள்.

ஆஸ்பத்திரியின் தலைவி நான்கு மாத லீவில் சுற்றுப் பிரயாணத்திற்குப் புறப்பட்டு விட்டாள் என்கிற விபரம் தான் அறிய முடிந்தது.

பட்டுப் பாவாடை

ஸ்ரீமதி கு.ஸ்ரீமதி

"அம்மா அம்மா" வென்று அழைத்துக் கொண்டே வாசலிலிருந்து உள்ளே ஓடி வந்தாள் ஸுஜாதா. "அம்மா அடுத்தகத்து அம்புசிக்கு, அவப்பா தீபாவளிக்கு ஒரு அழகான பட்டு பாவாடை வாங்கி தந்திருக்காரம்மா, நீ பாத்தாயா.....எனக்கும் அது போல வாங்கிக் கொடும்மா" என்று திணறத் திணற சொல்லி முடித்தாள். "அடுத்த வீட்டு அம்புசியும் எதிர் வீட்டு எச்சிமியும் கிடக்கிறு போ! இப்ப வந்து என்னே தொந்திரவு பண்ணுதே" என்று எரிந்து விழுந்த தன் தாயிடம் "அம்மா, அப்பாகிட்ட சொல்லி எனக்கும் ஒண்ணு வாங்கித்தாம்மா" என்றுள் கெஞ்சும் குரலில் கொஞ்சலாக.

எழுதிக்கொண்டிருந்த பார்வதி "அப்பா! என்னத்திற்குத்தான் இந்த பாழும் 'சனி ஞாயிறு' வந்து தொலைகின்றதோ" என்று அலுத்துக் கொண்ட வளாய் "போய் ஒரு வரிசை கூட்டல் கணக்கு போடு போ, இங்கே நின்னுண்டு இருக்காதே" என்றுள் கடுமையாக. "ஹும் இவப்பா இருக்கிற அழகிற்கு சொன்னவுடன் பெண்ணுக்கு வாங்கிதந்து விடமாட்டாரா" என்று தனக்குள் முணுமுணுத்து கொண்ட பார்வதியை, தயங்கி நின்று கொண்டிருந்த ஸுஜாதா "அம்மா முப்பத்தஞ்சு ரூபா தானும்.....ஒண்ணே ஒண்ணும்மா....." என்று நச்சரிக்கலானுள். பார்வதி, தன் வேலைக்கு தடையாக தொணப்பிக் கொண்டிருந்த மகளை நோக்கி கோபத்துடன் விழித்து "அடி ஸுஜி! வாயால் நாறு தரம் 'போ போ'ன்னு சொன்னுல் போகமாட்டாய், நாலு பிரப்பம் பழம் வாங்கிக் கொண்டு தான் போவாய் போலிருக்கு" என்று மிரட்டினுள். ஸுஜாதாவின் முகம் தாயின் கடுஞ் சொற்களினுல் சுண்டிப் போய் விட்டது. கண்ணீர் முத்துக்களோ விழிகளினின்றும் உருண்டு விழட்டுமா என்றன. பரிதாபமான அவள் பார்வை பார்வதியின் உள்ளத்தை நெகிழ்வித்தது. அன்னையின் முகத்தில் கனிவின் சாயல் தென்பட்டதைக்கண்டு கொண்ட ஸுஜாதா தைரியம் அடைந்தவளாய் "அம்மா எனக்கு தீபாவளிக்கு பட்டுப் பாவாடை எப்பம்மா வாங்க போறே" என்றுள். மகளை மிரட்டி வழிக்குக் கொண்டு வருவது தன்னுல் இயலாத செயல் என்பதை உணர்ந்த பார்வதி, அவளை அருகிலிழுத்து "என் கண்ணுல்லியோ! இப்பவந்து அப்பாவை தொந்திரவு பண்ணலாமா? போய் சமத்தா தூங்கு பார்க்கலாமி" என்றுள், அவன் கன்னங்களை வருடியவாறே. தாய் காட்டிய பரிவில் மெய் மறந்த ஸுஜாதா "நிஜம்மா....." என்று



வினவிக் கொண்டே 'பண்டிகை பரி'சினை எண்ணி கனவி லாழ்ந்து விட்டாள். 'நிஜமா, பொய்யா' என்று பதிலளிக் கத் தயாராக இல்லாத பார்வதி தன் வேலையில் மீண்டும் ஈடுபட்டாள்.

"அழகான — அம்புசியினுடையதைவிட — அழகான பட்டுப் பாவாடை நாலேக்கு கிடைத்துவிடும். ஸுஜாதை யின் உள்ளம் குதூகலத்தில் துளைக் குதித்தது. ஆனந் தக்கடலில் திளைத்துக்கொண்டிருந்த அவள் ஆவல் மிகுதியினால் தாயின் கரத்தை பற்றி "அம்மா, எனக்கு ஜோரான தாக ....." ஸுஜாதா வாக்கியத்தை முடிக்கவில்லை; மும்மு ரமாக எழுதிக் கொண்டிருந்த பார்வதி, அப்புறம் நகரு மாறு தள்ளினாள் ஸுஜாதையை. இதை எதிர்பாராத ஸுஜாதா தன்னை சமாளித்துக் கொள்ள முடியாது கீழே விழுந்தாள்; கையை ஊன்றிக் கொண்டாள்; போதாத காலம்தான் — தரையிலிருந்த மசிப்புட்டி ஸுஜாதையின் கரம் பட்டுக் கவிழ்ந்தது. நிரம்பியிருந்த மசி கீழே கொட் டியது மல்லாது பார்வதியின் புடவை தலைப்பையும் கறை யாக்கி விட்டது. புத்தம் புதிய புடவை! இந்தக் கஷ்ட காலத்தில் மூப்பது ரூபாய் கொட்டி வாங்கிய புடவை!! பார்வதியால் ஸுஜாதையின் இம்சை பொறுக்க முடிய வில்லை. ஒரு கணத்தில் சினத்தின் சிகரத்திலேறிவிட்ட அவள் ஸுஜாதையின் கன்னத்தை நிமிண்டிக்கொண்டே "நாலறை வாங்கிக் கொள்ளாமல் போக மனசாகாதே" என்றாள் கடுமையாக பற்களைக் கடித்துக் கொண்டு. பார் வதி போட்ட மிரட்டலில் தான் செய்த குற்றம் யாது என்பதையும் உணரவில்லை ஸுஜாதா. பிரமித்து நின்று விட்டாள். "கல்லுப் பிள்ளையார் மாதிரி நின்னுண்டிருக் கூடாது நிக்குறத்தி, உன் மூகரக்கட்டைக்கு பட்டுப் பாவா டைதான் இல்லாம குறைச்சலாயிருக்கு" என்ற சொல் அடங்கா ஆத்திரத்துடன். கதிகலங்கிப் போன ஸுஜா தை "பட்டுப் பாவாடைக்கு ஏதோ பங்கம்" என்பதைமட் டும் அறிந்தவளாய், அழத் தொடங்கினாள். "இங்கைப் புடவையில் கொட்டியது போறுதுன்னு அழுகை வேறு? வாயை மூடு. உங்கப்பா அடுத்த ரூமில் தூங்கிக்கொண் டிருக்கார். எழுந்தாரான்னு உயிரை வாங்கிவிடச் சொல் றேன்; மரியாதையா போகிறுயா இல்லாவிட்டால்" என்று அருகிலிருந்த 'ஸ்கேலை' கையிலெடுத்துக் கொண்டாள். ஒரேயடியாக பயந்துவிட்ட ஸுஜாதா தேம்பிக் கொண் டே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

பார்வதிக்கு மேலே வேலை ஓடவில்லை. கற்பனை வறண்டது. தலையை சொறிந்து கொண்டாள். ஹும் ஹும் ஒன்றும் நடக்கவில்லை. மனம் குமும்பிக் கிடந்தது. ஜீவனற்ற சொற்களை பேனா வரைந்தது. உடனே அவற் றை கோடிட்டு அழித்தாள். அருகில் மசி வறண்டு கறை யாக தரைமீது படிந்திருந்தது. அவள் உள்ளத்திலும் தெளிவான கருத்துக்களின் மீது கறை ஏதோ இருந்தது. அவை வெளிப்போந்து நிகழ இயலாது அழுத்திக் கிடந் தன. 'நோட்'டையும் பேனாவையும் விட்டெறிந்து விட்டு, தலையை தன்னிரு கரங்களாலும் தாங்கியவாறே யோச னையி லாழ்ந்தாள்.

"ஐந்து வயதுகூட நிரம்பா ஸுஜிக்கு என்ன தெரி யும்? குழந்தைக்களுக்குரிய பல ஆசைகள் பூர்த்தி செய்து கொள்ளவிருக்கும்; அவளுடைய இஷ்டத்தை நிறைவேற்ற முடியாத ஐவேஜியுடைய எனக்கு—என் கண்களுக்கு— அவள் அறியாது செய்த குற்றம்தான் முதலில் தென்பட் டது" என்று வருந்தின பார்வதிக்கு அடுத்ததாக அவள் கணவன் சங்கரன் மீதுதான் எண்ணங்கள் பாய்ந்தோ டின. "பிழைப்பிற்கே இங்கு திண்டாட்டமாயிருக்கிறது என்பதை சற்றேனும் சிந்தியாமல் வரும் அறுபது ரூபாய் சம்பளத்தையும் ஒழுங்கில்லாது செலவிட்டு விடுகிறூரே, மாதம் இருபத்தைந்து ரூபாய் வீட்டு செலவிற்கு கொடுப் பதே அதிகம் என்றிருக்கிறது. இந்தப் பாழும் சிட்டாட் டமும், ஹோட்டலும் என்றுதான் தொலையப் போகின்ற தோ அன்றுதான் எனக்கு விடிவு" என்று மனம் வெதும் பினாள்.

பார்வதியின் கணவன் சங்கரன் இன்டர்மீடியட் வரை படித்துவிட்டு ஏதோ ஒரு இன்ஷியூரன்ஸ் கம்பெனி யில் குமாஸ்தாவாக இருந்தான். சிறு வயதிலிருந்தே ஹாஸ்டல் வாழ்க்கையிருந்து விட்ட அவனுக்குக் குடும்பக் கஷ்டங்கள் இன்னதென்று உணராதிருந்ததில் ஆச்சரி யம் ஒன்றுமில்லை. ஓர் முரட்டுத்தனமும் மூடத்தனமும் நிரம்பியிருந்த அவனுக்கு மகிளியின் நல்ல வார்த்தைகள் ஏறப்போகின்றதா? கையிலுள்ள பணத்தை பத்து தேதிக் குள் அனுவசியமாக செலவுகள் செய்துவிட்டு பஸ்ஸிற் குக்கூட கையில் சில்லறை யில்லாமல் தினமும் நான்கு மைல்கள் ஆபீஸிற்கு நடந்து சென்றுவிட்டு வரும் ஒரு மனிதனைக் கண்டு அழுவதா, அன்றி சிரிப்பதா, அல்லது கோபிப்பதா என்று பார்வதிக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னுதரவில் இருக்கும் இளம் மகிளியை வருந்தச் செய்து வீட்டிலும் அமைதியைக் குலைத்து வரும் சங்கர னுக்கு "வீடு" என்று எண்ணுவதற்கு பற்று ஒரே ஒரு பொருள்—அதுதான் ஸுஜாதா—ஸுஜாதா மட்டும் இல் லாவிட்டால் என்றோ ஒரு நாடகக் கம்பெனியிலோ அல் லது சினிமா ஸ்டுடியோவிலோ நடிகனாக சேர்ந்திருப் பான். சங்கரனது அறியாத்தனத்தை உணர்ந்த பார்வதி அவன் திருந்துவதும் இந்தப் பிறவியில் கிடையாது என்று நினைத்தவளாய் குடும்ப வருமானத்தை அதிகரிக்க முயன் றாள். அவள் எழுத்துத் திறன் உற்ற காலத்தில் உறு துணை புரிந்தது; அதன்மூலம் பொருள் பெற்று வந்ததை யும் தன் கணவனிடம் கூற விரும்பவில்லை. பிறகு அவன் கொடுத்து வரும் சொல்பத் தொகைக்கும் வழியில்லாது போய்விடும் என்பதும் அவள் அறிந்ததே.

குடும்ப நிலையெல்லாம் ஒரு கணம் கவனத்திற்குக் கொண்டுவந்த பார்வதி "நம் வருத்தத்தில் குழந்தையைப் போட்டு அடித்தால் அதற்கென்ன தெரியும்?" அங்கலாய் த்துக் கொண்டு, "இம்முறை 'லேகா'விலிருந்து வரும் தொகை அவளுக்குத்தான்" என்று தீர்மானித்தாள்.

உள்புறத்து அறையை அடைந்த பார்வதி, கட்டிலில் தன் தந்தையின் பக்கத்தில் படுத்திருந்த ஸுஜாதாவை உற்று நோக்கினாள். மகளை சமாதானப் படுத்தும் போக் கில் ஒரு கையினால் அணைத்துக் கண் மூடிக் கொண்டிருந் தான் சங்கரன். கண்களினின்றும் வழிந்த நீர் கன்னங் களில் பட்டு, கறை படுத்தி உலர்ந்திருந்தது. அதைத் துடைத்து விட்டு, குனிந்து ஸுஜாதையின் நெற்றியில் முத்தமிட்டாள். கண் விழித்த ஸுஜாதை வாத்ஸல்யத்

தடன் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அன்னை தன் அருள் நிறைந்தே அழும் குழவிதானே ஸுஜாதை!

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் அதிக நாட்கள் இல்லை என்று பட்டாசின் 'டப்டப்', 'டுப்டுப்' சப்தங்கள் அறிவித்தன. "அம்மாவுக்கு நாற்பது ரூபா மணியார்டரு ங்க" என்று ஆபீஸிற்கு இளம்பிக் கொண்டிருந்த சங்கரனிடம் கூறிவிட்டு அங்கு வந்த பார்வதியிடம் 'பாரத்'தை நீட்டினான் தபால்காரன், கரம் நடுங்க கையெழுத்திட்ட பார்வதி அவள் கணவன் ஒன்றையும் கவனியாதது போல் போய்விட்டதைக் கண்டு சற்று மன நிம்மதியடைந்தாள். கூபனில் "தங்கள் 'குழந்தை வளர்ப்பு' என்ற கட்டுரைக்கு பரிசாக....." என்று ஆரம்பித்திருந்ததைப் படித்த பார்வதி புளகாங்கித மடைந்தாள்.

அன்று சனிக்கிழமையாதலால் சங்கரனுக்கு அரை நாள்தான் ஆபீஸ். சீக்கிரமே வீட்டிற்கு வந்துவிட்ட அவன் இன்று என்ன 'ப்ரைட் ஹோமில்', "நான் ஒருவனே" என்ற படமா? இன்று பாரத் விலாஸில் 'ஸ்பெஷல்ஸ்' வெங்காய வடை. அட வழுக்கைத்தலை சீனுவிடம் சிட்டாட வர பிராமிஸ் பண்ணிவிட்டு வந்தோமே; சரி தான் இன்னித்த செலவு பத்து ரூபாயாவது ஆகிவிடும் போலிருக்கே" என்று எண்ணியவாறே, ஏதோ அவசர காரியம், கொள்ள போகிறுப்போல் பார்வதியிடம் விரைந்தான்.

"எனக்கு இப்போ அவசரமாக இருபது ரூபாய் வேணும், போன வாரம் கொடுத்தேன்பாரு.....சற்று கொடு" என்றான் அதிகாரமாக.

" நீங்கள் கொடுத்த பிரமாத ரூபாயை பெட்டியில் வைத்து பூட்டி வைத்திருக்கிறேன் என்று நினைத்துவிட வேண்டாம். ஸ்டோர்காரனே அல்லது பால்காரனே உங்கள் மாமனுரல்ல" என்று அலட்சியமாக மொழிந்து விட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள். மனைவியின் மாறுதல் சங்கரனுக்கு திகைப்பை அளித்தது. என்றுமே எதிர்த்துப் பேசியறியாத பார்வதியா இப்படி பேசுகிறாள்? அவனுக்கேற் பட்ட கோபம் ஒருகணத்தில் வியப்பாக மாறியது. பார்வதி தொடர்ந்தாள் "இன்றும் சீனின் வீட்டில் சிட்டாட்டம் போலிருக்கிறது. இங்கு கொட்டிக் குவித்திருக்கிறீர்களே ரூபாயை. ஆடித் தொலைத்துவிட்டு வாருங்கள்" என்று படபடப்பாகக் கூறி குத்திக்காட்டினாள். இச்சுடு சொற்கள் சங்கரனுக்கு சினத் தைக் கிளறி விட்டன.

"நீ கொடுக்கப் போகிறாயா இல்லையா?" என்றான் முகத்தில் கோபக் கனல் வீச.

"என்னிடம் இல்லவும் இல்லை; கொடுக்கவும் முடியாது" என்றாள் அழுத்தமாக. "காலையில் வந்த மணியார்டர் என்னவாயிற்று?" என்று கேட்டான் சங்கரன். பார்வதிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "என் பணம்! நீங்கள் 'தாம்தூம்' என்று செலவு செய்ய எதற்காகக்கொடுக்க வேண்டும்?" என்று கூவினாள்.

"ஆமாம். ரொம்ப சம்பாதித்துக் கிழித்துவிட்டாய், அடாடா பிரமாதம்" என்று இகழ்ச்சியாய் சிரித்தான் சங்கரன். நொந்த புண்ணில் வேல் பாய்வது போலிருந்தது அந்த ஏளனம். "அந்த ரூபாயும் உங்கள் கண்ணை



உறுத்துகிறதா?" என்று கத்திக்கொண்டே உள்ளே சென்று வந்து "எங்கேயாவது போட்டு விட்டு இதை எடுத்துச் செல்லுங்கள்" என்று கோட்டுகளை விட்டெறிந்தாள். சங்கரன் இவை ஒன்றையும் லட்சியம் செய்ததாக தெரியவில்லை. அவனுக்கு வேண்டியது என்ன? பணம் தானே! கீழே இறைந்து கிடந்த நோட்டுகளைப் பொறுக்கி கொண்டு வாசலுக்குப் போய் விட்டான். பெற்றோர்களிடையில் நிகழ்ந்த போராட்டத்தைக் கண்டு கலங்கிப் போய் மூலையில் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டிருந்த ஸுஜாதா விம்மிக் கொண்டே தன் தாயிடம் ஓடி வந்தாள். கண்களினின்றும் நீர் சொரிய, தன் தாயிடம் ஓடி வந்தாள். கண்களினின்றும் நீர் சொரிய தன் மகளை அணைத்துக் கொண்டாள் பார்வதி. 'அம்மா பட்டுப் பாவாடை?" என்றாள் ஸுஜாதை, விசும்பலிடையே. "உனக்கு பட்டுப் பாவாடை வாங்க வைத்திருந்த ரூபாயைத் தான் உங்கப்பா பிடுங்கிக் கொண்டு—இல்லை, கொள்ளையடித்துக்கொண்டு—போகிறார்" என்று கூவினாள். கூடத்தைக் கடந்து சென்ற சங்கரன், செவிகளில் எதிரொலித்தன அவளது சொற்கள்.

பாரதி விலாஸ் கபே கிளப் வாசலில் ஒரு பையன் 'லேகா' 'பிரகாசம்' என்று பத்திரிகைகளின் பெயர்களை கூவி விற்பனை செய்து கொண்டிருந்தான். 'லேகா'வின் அட்டையில் மின்னிய ஒரு சினிமா நட்சத்திரத்தின் புகைப் படம் சங்கரனை கவர்ந்தது. ஒரு பிரதியை வாங்கி பிரித்தவாறே ஹோட்டலுக்குள் நுழைந்தான். ஒரு கட்டுரையின் மத்தியில் பெரிய அச்சில் காணப்பட்டன சில வாக்கியங்கள்; "எந்த ஒரு மனிதன் மனிவியையும் மக்களையும் சந்தோஷமாக வைத்திருக்கிறானே அவனே உண்மை மனிதனாவான். ஏனையோர் மனிதரல்ல..... கந்த குடும்பத்தில் ஒரு ஸ்திரீ கண்ணீர் சொரிந்து வருந்துகிறாளோ—அந்நிலையே அக்குலத்தின் நாசகாலத்திற்கு அறிகுறியாகும்' என்பன பெரியோர்பொன்மொழிகள்—" மேலே சங்கரனால் படிக்க முடியவில்லை. உள்ளத்தை ஊடுருவி சென்று அம்பென தாக்கின அவ்வாக்கியங்கள். கண்களை இறுக மூடிக்கொண்டான் சங்கரன். "கொள்ளைக்காரன் நீ" என்று முறையிட்டது அவன் மனசாட்சி.

"நான் கொள்ளைக்காரனா?" என்று வினவியது மனம். "வருந்தி உழைத்துப்பெற்ற ஊதியத்தை பறித்து வீண் செலவு செய்து அழிக்கும் நீ கொள்ளைக்காரனல்லாது பின் யார்? உன்னை மணந்த உன் மனைவி பெற்ற சுகம் தான் என்ன? காதல் மனைவியையும அன்பு மகளையும் துக்கத்தில் அமிழச் செய்யும் நீயும் ஒரு மனிதனா? தாயின் உள்ளம் சேயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய துடித்தது; உன் மகளின் ஆனந்தத்தை சிதறடித்து குலைக்கும் நீ, தந்தை இதயம் படைத்தவன் தானா?" என்று குத்தியது மனச்சாட்சி. "இல்லை இல்லை....." என்று தனக்குள் சொல்லிக்கொண்டு வெளியேறினான் சங்கரன். "ஐயா"வின் போக்கு புரியாது விழித்தான் ஹோட்டல் சிப்பந்தி.

மாலை வீடு திரும்பிய சங்கரன் "ஸுஜி, ஸுஜாதா" என்று வாஞ்சை ததும்பும் குரலில் அழைத்தான். ஸுஜாதா பயந்து கொண்டே தந்தையை அணுகினாள். சங்கரன் அவளைத் தூக்கிக் கொண்டான். சிறிதளவு அச்சம் நீங்கின ஸுஜாதா அவன் தோளை பிடித்துக் கொண்டாள். "இதோ பாரு உனக்கு பண்டிகைப் பரிசு பட்டுப் பாவாடை—" என்று அன்பொழுகக் கூறி ஒரு பொட்டலத்தை அளித்து இறக்கி விட்டான். ஆனந்தத்தால் கண்கள் மின்ன ஆவலாக அதை பெற்றுக் கொண்டு உள்ளே ஓடினாள். "அம்மாம்மா, பட்டுப் பாவாடைம்மா" என்று கூவினாள் குதூகல மிகுதியினால். அவள் பின் சென்ற சங்கரன் தயங்கிய வண்ணம் சில ரூபாய் நோட்டுகளைப் பார்வதியின் பக்கத்தில் வைத்தான். அவள் முக பாவம் மாறுபட்டது. "பட்டுப் பாவாடைக்கு ரூபாய் ஏது?' என்று கேட்டாள் சாவதானமாக.

"சிமாவிடம் நாற்பது ரூபாய் கடனாக வாங்கினேன். அந்தப் பணம் ஸுஜியின் ஆசையை பூர்த்தி செய்ய உதவியது.....மாதா மாதமாக கடனை அடைத்து விட்டால் போகிறது" என்றான் மெல்லிய குரலில். உணர்ச்சி வசப்பட்ட பார்வதி 'நன்றாக இருக்கிறது. முதலில் கடனை ஒழித்து விட்டு வாருங்கள்" என்று ரூபாய் நோட்டுகளை அவன் புறம் நகர்த்தினாள்.

ஸுஜாதையோ? 'அடுத்தகத்து அம்புசி'யிடம் பட்டுப் பாவாடையைக் காட்டி பெருமை அடித்துக் கொண்டிருக்கிறாள்!

என்னை ஆண்டாள்

ப. கனுஷ்கோடி

"உங்களுக்குக் குழந்தைகள் என்றாலே பிடிக்காது போலிருக்கிறது. ஒருத்தொருத்தர் சின்னக் குழந்தைகளிடம் எவ்வளவு ஆசையா, அன்பா இருக்கிறார்கள்!" என்று சாந்தா கூறினாள்.

அது அவனுக்கு சுருக்கென்று தைத்தது. பயங்கர சொப்பனத்திலிருந்து திடுக்கிட்டு விழித்தவன் போல, "ஊஹூம்! அப்படி ஒன்றுமில்லை! அன்பும் பாசமும் யாராயிருந்தாலும் இயல்பாக ஏற்பட வேண்டும். அதுதான் உண்மையானதாக இருக்க முடியும்!" என்றான்.

பெண்ணை இதற்கு விட்டுக் கொடுப்பவள்? "இல்லவேயில்லை! நீங்கள் எந்தக் குழந்தையிடத்திலும் நன்றாகவே பழக மாட்டீர்கள்! பற்றுதல் வைக்க மாட்டீர்கள்!" என்றாள் மறுபடியும்.

சாந்தா "எந்தக் குழந்தையிடத்திலும்" என்று கூறியது அவனுக்கு என்னமோ போலிருந்தது. அதனால் "ஏன்? உங்கள் ஆண்டாளிடத்தில் நான் நன்றாகப் பழகவில்லையே என்ற வருத்தமா? அப்படி நினைத்தால் அது தவறு. நான் அவளை வெறுக்கவில்லையே! குழந்தைகளிடம் விரும்பி நெருங்காவிட்டாலும், துவேஷமோ, அருவருப்போ கொள்ளாமலிருக்கிறேன் என்பதை உன்னால் மறுக்க முடியுமா?" என்றான்.

சாந்தாவுக்கு இப்போது சங்கடமாக இருந்தது. குழந்தை ஆண்டாளை நினைத்துதான் இந்தத் தர்க்கத்தையே துவக்கினாள். என்றாலும் பிரச்னை இப்போது விரிவாகவும் சிக்கலாகவும் போய் விட்டது. இதை அவள் எதிர்பார்க்கவே இல்லை. அதனால் விவாதிக்க சக்தியற்று நிலைக்குப் போய் விட்டாள். அவன் வாதத்திற்கு என்ன பதில் சொல்வது?

"இல்லை! ஆண்டாளுக்காகச் சொல்லவில்லை. சும்மா பொதுவாகத் தான் கேட்டேன்!" என்று சொல்லி விட்டு கைவேலையைக் கவனிக்கச் செல்பவள் போல் அப்பால் நகர்ந்து விட்டாள். கடைசிப் பேச்சாக எதையாவது பேசினால் தானே சிலருக்கு ஆறுதல் தோன்றுகிறது?

அவன் ஈஸி சேரிலே சாய்ந்தபடி இருந்தான். எதிரே தரையிலே 'ஆண்டாள் ஏதோ பள்ளிக் கூடப் புத்தகம் ஒன்றை உரக்கப் படித்துக் கொண்டிருந்தாள்.' தலைக்கு மேல் எரிந்த விளக்கொளியில் அவள் முகம் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. என்றுமில்லாதபடி அவன் அவளையே உற்று கவனித்தான். நல்ல பேய்க் கறுப்பு என்பார்களே அப்படியிருந்தது அவள் முகம்! அழகழகான தாமரை வதனங்களைப் படித்தும், பார்த்தும், கற்பனை செய்தும் இருக்கிற அவனுக்கு, அப்பச்சிளம் முகத்தில் ஒருவித கவர்ச்சியையும் காண முடியவில்லை. கறுப்பாயிருந்தாலும் அழகாக இருப்பாள் என்கிறார்களே அந்த விசேஷமும் கூட அக்குழந்தையின் முகத்தில் காணோமே ஏன்? பால்யத்தின் குறுகுறுப்பாவது முகத்தில் ஓடியாட வேண்டாமா? இப்படி எல்லாம் அவன் சிந்தனை ஓடிற்று.

பிறகு, "ஆண்டாளா! இங்கே வாம்மா!" என்று கூப்பிட்டான். ஒருநாளுமில்லாத திருநாளாய் அவன் கூப்பிட்டதைக் கேட்டு மிரண்ட அவள், "மாட்டேன்!" என்று தலையசைத்து விட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தாள். அவனுக்கு இது அவமானமாக இருந்தது. உண்மையான வாஞ்சையுடன் தன் குரல் ஒலிக்க வில்லையோ என ஐயமுற்றான். பின் குழந்தையை எப்படிக் கூப்பிடுவது? குழந்தை அன்பு என்பது தான் என்ன?

ஆண்டான் கறுப்பு என்பதற்காக அலட்சியப் படுத்துகிறான் என்பது சாந்தாவின் எண்ணம். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு!" என்று சொல்லிக் கொள்ளும் உரிமை இருப்பதை அவன் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக அவள்-அன்பைப் பெறுவதற்காக, இயல்பாக ஏற்படாத ஒரு போலி அன்பை குழந்தையிடம் காட்டி அதை வஞ்சிக்க அவன் விரும்பவில்லை. ஆனாலும் அவன் தன் நேர் மையை இன்று நிரூபிக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது.

அதனால் மீண்டும் மீண்டும் குழந்தையைத் தன் னிடம் வரும்படி அழைத்தான், உள்ளே அடுப்பங் கரையிலிருந்து "கூட்பிட்டா போயேண்டி!" என்று சாந்தா கத்திய பிறகு தான் சிறுமி அவனிடம் வந்து "ஏன்?" என்று கேட்டாள்! அவன் அவளை இழுத்து அணைத்து கொஞ்சியபடி, "நன்னாகப் படிக்கிறாயா? எத்தனாவது படிக்கிறாய்? உங்கள் டீச்சர் எப்படி?..." என்றெல்லாம் எது எதையோ கேட்டு உளறி பழக் கம் செய்து கொள்ள முயன்றான். குரங்குப் பிடி யில் சிக்கிய தவளை போல் திணறிக் கொண்டு அவ னும் ஏதேதோ பதிலவித்து வந்தாள். அதில் ஸ்வாரஸ்யமோ, ப்ற்றுதலோ லவலேசமும் காணும்! எனினும் கடைசியாக, "நீ கறுப்பா இருக்கிறான்னு தான் நான் உங்கிட்டே பேசறது இல்லையாம்! நிஜமா?" என்றான். பத்து வயது சிறுமி இதற்கு என்னத்தை சொல்வாள்? "எங்க பள்ளிக்கூடத்திலே அதனாலே தான் புள்ளைங்கள் லாம் கூட எங்கிட்டே சரியாப் பேசறதில்லே!" என்றது குழந்தை. அத்துடன் அதை நினைத்து- இயற்கையான துரதிருஷ்டத்தை எண்ணி குபுகுபு என அழ ஆரம்பித்து விட்டது. பிறவியில் ஏற்பட்ட கோளாறை சுட்டிக் காட்டிப் பேசுவது எவ்வளவு வேதனை தரும் என்பதைப் பார்க்கையில் அவனுக் கும் கஷ்டமாக இருந்தது. பரிதாபகரமான அதன் தோற்றம் அவனை அப்படியே உலுக்கி விட்டது. விசித்திரப் பிரகிருதியான அவனால் அதற்குமேல் அக்காட்சியைக்காண சகிக்கவில்லை. "நான் போய் விட்டு நாளை வருகிறேன்!" என்று புறப்பட்டு விட் டான். சாந்தா குழந்தையை வாரி அணைத்தபடி சாந்தப் படுத்த முயன்றாள்.

2

அவன் பெயர் பசுபதி. "நாய்க்குப் பெயர் முத்துமாலை!" என்பார்களே, அப்படிப் பட்டதல்ல அவன் பெயர். உண்மையாகவே சாந்தமான-அடக் கமான-சுபாவம் படைத்தவன். பிறந்து ஆறு மாதம் வரை அழக்கூட தெரியாமலிருந்தானாம்! அதைக் கொண்டு பசுபதி என்ற பெயரை வைத்து விட்டார் களாம்! இருபத்திரெண்டு வயதாகியும், இன்னும் தனக்கென்று ஒரு மேல் துண்டைப் போட்டுக்கொள் ளக்கூட தெரியவில்லை அவனுக்கு! இந்த லட்சணத் தில் எப்படியோ படித்து பாஸ் செய்து பத்திரிகால யத்திலே உதவியாசிரியர் வேலையிலும் அமர்ந்து விட்டான். தந்திகளை மொழி பெயர்ப்பதோ, புரூப் திருத்துவதோ, அவனுக எதையும் செய்யமாட்டான். ஆசிரியர் அன்றாடும் என்னென்ன அலுவல்களைக் கூறுகிறாரோ, அதைச் சுறுசுறுப்பாக - கச்சிதமாகச் செய்து நல்ல பெயர் வாங்கிக் கொள்வான். சுயமாகக் கற்பனைசக்தி இல்லாவிட்டாலும், சொன்னதைச் சரியாகச் செய்யும் ஆற்றல் இருந்ததால் ஆபீஸி லேயே இவனுக்கு அலாதியான மதிப்பு! படாடோப முடன் வாயரட்டை அடிக்கும் மற்ற உதவியாசிரியர் களோ, டைப்ரைட்டர்களோ, அவன் செய்யும் அளவு உழைக்க முடியாது. இது அவர்களுக்கே தெரியும். "தேவாங்கு! தேவாங்கு!" என்று கேலி செய்தபடியே அவனிடம் தம் வேலையைக்கூட செய்து வாங்கித் திருப்தியடைவார்கள். அவர்களுக்கு ஒத் தாசை செய்து கொடுத்து, அந்தரங்கபூர்வமான நல் லெண்ணத்தைக் கவர்ந்து கொள்வதிலேயே தான் அவனுக்கும் திருப்தி!

பசுபதிக்கு நெருங்கிய உறவினர்கள் கிடையாது. ஏன், தூரபந்துக்கள் கூட இன்னார் என்று தெரி யாது. சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்து, சர்க்கார் 'ஸ்காலர்ஷிப்' பிலேயும், தெருவாசிகளின் உதவியிலேயும் படித்து முன்னுக்கு வந்தவன். பால் யத்திலிருந்தே சுய தேவையை சுயமாகவே தேடிக் கொள்ளும் சங்கடம் இருந்ததால்.அவன் கஷ்ட நஷ் டங்களில் தேறி விரக்தியடைந்த நிலையில் இருந் தான். வாழ்வில் பாசமோ, பற்றுதலோ துளியும் இல்லை. அவன் இதயம் ஈரமற்று வறண்டு போயி ருந்தது. எரியும் அடுப்பிலுள்ள, வெறும் வாணலி யில் விழும் தண்ணீர்த்துளிகள் போல, ஏப்போதா வது மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகள்-நிகழ்ச்சிகள் மனதிலே விழுந்து உலர்ந்து விடும்! பசுமை-இனிமை- என்பதையே உணரமுடியாது அப்பாவிப் பிரகிருதி பசுபதி! எதற்காகவோ, எவருக்காகவோ, என்ற விவஸ்தையின்றி அவன் ஜீவன் ஓடியாடி வளர்ந்து கொண்டே போயிற்று! பார்க்கப் போனால், காலா காலத்தில் கடமையைச் செய்யும் சரீர அவயவங் களைக் கட்டுப்படுத்தத்தான் அவனுக் கென்ன அக்கரை?

ஆனால் அவனை அவ்வளவு அலட்சியமாக விட்டு விட ஓட்டல்கார அம்மாளுக்கு இஷ்டமில்லை. பத்திரிகாலயத்தில் வேலை ஏற்றுக் கொண்டதிலி ருந்து மூன்று வருடமாக வேலம்மாள் ஓட்டலில் தான் அவன் சாப்பிட்டு வருகிறான், அதனால் அவன் குணம்-சுபாவம் அவ்வம் மாளுக்கு தெரியும். அவ்வம்மாளுக்கு நன்கு தெரியும். தெரிந்ததுடன் மட்டுமல்ல; மனதிற்கும் பிடித்து இருந்தது. அவ

னின் அலாதித்தன்மையினாலும், அனுதைத் தன்மை யினாலும், அளவுகடந்த அனுதாப ஆதரவு காட்டி வந்தாள் அவள். சைவ வேளாளர் குலத்தில் உதித்த வேலம்மாள் விதவைப் பெண். தவிர ஒரு இளம் பெண்ணும் இருந்தது. வாழ்க்கைக்கு போஷிப்பளிப்பவர் யாருமில்லாததால், பத்துப்பதினைந்து ஆபீஸ் பிரம்மச்சாரிகளுக்கு சமைத்துப் போட்டு, தங்களிருவர் காலட்சேபத்தையும் நடத்தி வந்தாள், தவிர வேலம்மாளுக்கு உள்ளூர ஒரு ஆசை. இந்தக் காலத்தில் தான் ஜாதி, மத சம்பிரதாயங்கள் எல் லாம் அடிபட்டு வருகிறதே! மகள் செல்லாவை எப் படியாவது பசுபதிக்கு மணமுடித்து வைத்துவிட வேண்டும் என்ற ஆவல்! இது அசாத்தியமான கனவு என்று அவளுக்குப்படவில்லை. அதனால் மற்றவர்களை விட அதிக கவனிப்பும், உபசாரமும் அவனுக்கு அங்கு கிடைத்தது.

பசுபதி நேரம் தவறாமல் சாப்பிட வந்துவிடு வான். மௌனமாக அமர்ந்து போட்டதைச் சாப் பிடுவான். போதும் போதாது என்று கூட அவன் கூறுவதில்லை. எல்லோருக்கும் முதலில் வந்துவிடு வதால், வேலம்மாளுக்கு அடுப்பு வேலை இரண் டொன்று பாக்கியிருக்கும். அதனால் அனேகமாக செல்லம் தான் அவனுக்குப் பரிமாற வருவாள். அதில் அவனுக்கு விசேஷம் ஒன்றும் கிடையாது. ஆனால் அவளுக்கு அதில் தனி மகிழ்ச்சி இருந்தது. மக்கு மாடு போல அவன் சாப்பிட்டுச் செல்வதை அவள் விரும்ப வில்லை. நிமிர்ந்துகூட அவள் முகத் தை அவன் பார்ப்பதில்லை, அதை மாற்றுவதற்காக செல்லம் பலவித உபாயங்களைக் கையாண்டாள். குழம்பு போடும் போது கருவேப்பிலையும் மிளகாயு மாக அள்ளிப் போடுவாள். கொதிக்கும் ரஸத்தை அவன் சாதம் பிசையும் போது கையில் பட்டும் படா ததுமாக ஊற்றுவாள். சாதத்திற்கு மேல் அதிக மாக இலை முழுவதும் பரவி ஓடும்படியாக மோரை விடுவாள். வேண்டுமென்றே காய்களை அள்ளிப் போடுவாள். அவனை இத்தனை சேஷ்டைகளையும் தலைவிதியே என்று பொறுத்துக் கொள்ளுவான். அவனையோ, அவள் அம்மாவிடமோ ஒரு 'கம்ப்ளை யிண்டும்' சொல்லி கோபித்துக் கொள்ளமாட்டான். ஒரொரு சமயங்களில் ஞாபகமறதியால் விட்டுப் போனதைப் போல ரஸம் போடாமல் மோர் போடு வாள். அதைக்கூட அவன் லட்சியம் செய்யமாட் டான். 'ஒரு நாளைக்கு ரஸத்தில் சாப்பிடாவிட் டால் என்ன கெட்டுப் போய்விடும்?' என்று எண் ணிக் கொள்வான். தவறை சுட்டிக்காட்டி திருத்த வேண்டியது நியாயம் தான். அவளும் அதைத்தான் விரும்பி எதிர் பார்த்தாள். அனால் தார்மீக முறை யில் தானே உணர்ந்து தவறிழைக்காத மனோபாவம் வளருவதைத்தான் அவன் விரும்பினான். சொல்லித் திருந்துவதை விட, தான்பட்டாலும் சொல்லாமல் மாற்றமடைவதில் எவ்வளவோ ஸ்வாரஸ்யம் உண்டு.

3

சாந்தா அதே தெருவில் கடைசி வீட்டில் வசித் துக்கொண்டிருந்தாள். வயதான கிழத் தகப்பனும், குழந்தை ஆண்டாளும் தான் அவள் குடும்பம். சாந்தாவுக்கு சின்னம்மாளின் பெண் ஆண்டாள் அவள் பிறந்ததுமே தாயார் இறந்து விட்டாள். ஆகவே கிழவர் வையாபுரியின் பாதுகாப்பில் அவ ளும் சேர்ந்து கொள்ள வேண்டியதாயிற்று. வையா புரி வாலிபத்தில் சர்க்கார் வேலை பார்த்ததற்கடை யாளமாக, இப்போது மாதம் 20 ரூபாய் 'பின்சின்' சம்பளம் வாங்கி வருகிறார். இதைத்தவிர மூவரின் வாழ்க்கைக்கு வேறு பொருளாதார பலம் இல்லை. சாந்தாவுக்கு இருபதாவது வயது எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது. என்னதான் நாகரீகமான கால மாயிருந்தாலும் இதற்குமேல் கல்யாணம் செய்யாம லிருப்பது பிசகு என்று பட்டது. ஆனால் காரியம் கைகூடும் வழிதான் புலப்படவில்லை.

இம்மாதிரி சமயத்தில் தான் ஒரு நாள் பசுபதி அவ்வீட்டு ஓரமாகப் போய்க் கொண்டிருந்தான். அப்போது ரேஸ் குதிரை வேகத்தில் தலைதெறிக்க ஒரு ஜட்கா வண்டி வந்து கொண்டிருந்தது. தெரு விலே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் இரைச்சலைக் கேட்டு ஆளுக்கொரு புறமாக ஓடினர். அப்படி வந்ததில் பாவாடை தடுக்கி பாதை யிலே குப்புற விழுந்து விட்டாள் ஆண்டாள். ஒரே ஒரு நிமிஷம்! பசுபதி பாய்ந்து குழந்தையை இழுத் திருக்கா விட்டால் குதிரை வண்டி அவள் மேலே ஏறியிருக்கும்! கலவரத்துடன் வாசற்படியில் துடித் துக்கொண்டிருந்த சாந்தா குழந்தையை வாங்கிக் கொண்டு நன்றி தெரிவித்தாள். பிறகு ஆண்டாளின் முதுகில் நாலு அடி வைத்து, "வீதிக்குப் போகாதே! போகாதேன்னு எத்தனே தட்வை சொல்றது? கேட் டால் தானே?" என்று அதட்டினாள்.

பசுபதிக்கு பரிதாபமாக இருந்தது. பயந்து அழும் சிறுமிக்கு இந்த தண்டனை வேறு? இப்போது தானு தன் கோபத்தையும் அதிகாரத்தையும் காட்ட வேண்டும்? கொஞ்சம்கூட குழந்தையை வளர்க் கவே தெரிய வில்லையே? அவன் மனம் இப்படி எண்ணி சிறுமியின் மீது அனுதாபப் பட்டது. அழையா வீட்டு விருந்தினன் போல் சாந்தாவைத் தொடர்ந்து அவள் வீட்டினுள் சென்றான். பின்னு லேயே அவன் வந்ததைக் கண்டதும் அவளுக்கு வெட்கமாகவும், அச்சமாகவும் போய் விட்டது. அங்கிருந்த பெஞ்சியில் அவனை "உட்காருங்கள்!" என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

"குழந்தையை அதட்டுவதற்கு இது சமயமல்ல! ஏதாவது ஆகாரம் கொடுத்து முதலில் ஆசுவாசப் படுத்தம்மா! அதுதான் நல்லது!" என்றான்.

"அட! இதெல்லாம் சொல்ல இவரு யாரு?" என்று எண்ணிக் கொண்டாள் சாந்தா. ஆயினும் வெளிப்படையாக, "அதற்கில்லே பாருங்கோ! ஒரு நிமிஷம் நீங்க கவனியாமல் இருந்தா இந்தப் பொணத்தின் கதி என்னவாகியிருக்கும்?" என்றாள்.

"இப்போ பிணமல்ல; ஏமாந்திருந்தால்தான் பிணமாயிருக்கும்! அனுவசியமா வசவு மொழிகளே தயவு செய்து உபயோகிக்க வேண்டாம்மா!" என்றான்.

"பிணம்" என்ற வார்த்தையை உபயோகிக்க நேர்ந்ததும், அதை முன்பின் அறியாத ஒருவர் சுட்டிக்காட்ட நேர்ந்ததும் சாந்தாவுக்குப் பெரும் அவமானமாக இருந்தது. "எங்க ஆண்டாளே நான் பிணம் என்றால் இவருக்கென்ன?" என்பதை நினைக்கையில் அவர்மீது ஆத்திரமாகக்கூட இருந்தது. ஆனால் அதைக்காட்ட முடியுமா? நல்லதைத்தானே அவர் சொல்கிறார்!

இரண்டு டம்ளர்களில் காப்பி போட்டுக் கொண்டு வந்து குழந்தைக்கும் அவருக்குமாகக் கொடுத்தாள் அதைச் சாப்பிடும்போதுதான் வெளியே போயிருந்த அவள் தந்தை வந்தார். விஷயத்தை விசாரித்துவிட்டு பசுபதிக்கு விசேஷ நன்றி செலுத்தினார். அதோடு அவருக்கு அவன்மீது தனி வாத்ஸல்யமும் உதித்தது. அவன் வாழ்க்கை வரலாறு முழுவதையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இப்படி ஏற்பட்ட நேசம் அவர்களிடையே வெகு வேகமாக வளர்ந்தோங்கி வந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்கள் வீட்டில் விருந்துண்டு ஆனந்தமாகப் பேசி பொழுதைக் கழிப்பான். ஆனால் எந்தச் சிறுமியின் காரணமாக இப்புதிய நட்பு ஏற்பட்டதோ அவளை அவன் கவனிப்பதில்லை. சிரித்துப் பேசுவதில்லை. இது அவனின் இயல்பான குறைபாடு. தொட்டிற் பழக்கமாயிருந்தாலும் கெட்டதை விட்டுவிட வேண்டும் என்று எவ்வளவோ முயன்றான். ஆனாலும் எல்லாக் குழந்தைகளிடத்திலும் சமமான அன்பைச் செலுத்த முடியவில்லை. ஏதோ அபூர்வமாக சில குழந்தைகளிடம் மட்டுமே அவன் மனம் லயித்தது. அதாவது எந்தக் குழந்தை அவனைக் கண்டு சிரித்து நெருங்கி வருகிறதோ, அவைகள்தான் அவன் அன்பைப் பெற முடிந்தன. வயதுக்கு வந்த அவனுக்கே வாத்ஸல்யம் ஏற்படாத போது இப்படித் தானாக எத்தனை குழந்தைகள் அவனிடம் நேசம் பாராட்டப் போகின்றன? ஆனாலும் அவனுக்கு இதில் நஷ்டமொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.



விநோதமான பிறவியாக இருக்கும் பசுபதியினிடத்தில், வையாபுரிக்கும், சாந்தாவுக்கும் ஒரே மாதிரியான பற்றுதல் ஏற்பட்டது. "பாவம்! அவர் ரொம்ப நல்லவர்!" என்று அப்பா அனுதாபத்துடன் கூறினால், அதே மாதிரி மகளும் அதே சமயம் கூறுவாள். "பாவம்! அவரை நாம்தான் கவனிக்க வேண்டும்!" என்று சாந்தா நினைத்தால், அதே மாதிரி வையாபுரியின் மனதிலும் எண்ணம் தோன்றும். ஆனால் ஒருமனப்பட்ட அவர்கள் அன்பு அவனிடம் வெளிப்படையாக வரும்போது பெருத்த வித்தியாசம் தோன்றும். பெரியவனின் பேச்சும், செய்கையும்

சாந்தமான அன்பில் வெளிப்படும். சாந்தாவின் பிரியமோ வாலிபத்தின் குறும்புத்தனமுடன் கிண்டலாக வெளிவரும். சிலசமயம் வேதனை தரும் குத்தலாகக்கூட அது பரிணமித்துவிடும்! பொதுவாக சேஷ்டை செய்து வேடிக்கை பார்க்கும் சுபாவம் அவளிடம் இருப்பினும், பசுபதியை அன்போடு கடிந்து கொள்ளும் உரிமையைக் கொண்டாடினாள். ஆண் பிள்ளையாகப் பிறந்து கொஞ்சம் கூட ரோஷமில்லாமல் எதற்காக அசடாக இருக்க வேண்டும்? இது அவளுக்குப் புரியவேயில்லை. அவனை எப்படியாவது கோபமூட்டி வீரத்தனமுள்ளவனாக்கி விடவேண்டும் என ஆசைப்பட்டாள். அதற்காக அவள் கையாண்ட முறைகளே தனி! நாய்க்குட்டிகளுக்கு ரோஷப் வருகிறதா என்பதைப் பரீட்சிக்க, அதன் காதைப் பிடித்துத் தூக்கிப் பார்ப்பார்கள். கால் நகத்தைக் கிள்ளி விடுவார்கள். குட்டி வருங்காலத்தில் தைரியமாக இருக்கவேண்டும் என்பதற்காக, காதைக் கத்தியால்கூட அறுத்து விடுவார்கள். சாந்தாவும் பசுபதியிடம் இப்படித்தான் நடந்துகொண்டாள். அன்பாக அளித்த பிறந்தநாள் பரிசைக்கூட அவள் முகத்திலறைந்தாற்போல் திருப்பிக் கொடுத்ததை அவள் வேறு எப்படிக் கருதமுடியும்? அன்பில்லை என்றா? பெண்மைக்கே புறம்பான இத்தகைய செய்கைகளைக்கூட அவன் சாந்தாவின் தூய அன்பின் பொருட்டு மன்னிக்கத் தயாராக இருந்தான். ஆனால் பெரியவரின் அன்போ வேறொன்றைக் குறிக்கோளாக அமைந்திருந்தது. வாழ்க்கையிலிருந்தே ஒதுங்கி நிற்கும் பசுபதிக்கு வாழ்க்கையின் ஒளியைக் காட்டி, அவனை உன்னத ஸ்தானத்தில் அமர்த்தவேண்டும் என விரும்பினார். அதற்கு சாந்தா ஏற்றவள் என்றும் கருதினார். வெளிப்படையாக விவகாரம் செய்து கொண்டாலும், புத்திரியின் உள்ளத்தில் பசுபதியின் சாயை படர்ந்திருக்கிறது என்பதையும் உணர்ந்திருந்தார். ஆகவே காலமும், வேளையும் கூடிவரட்டும், பிரஸ்தாபிக்கலாம் என்று நாட்களைக் கழித்து வந்தார்.

4

இலாப நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் வருடங்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. பசுபதியின் வாழ்க்கையை மலரச் செய்யவோ, அழிக்கவோ ஒருவராலும் முடியவில்லை. ஓட்டல்கார அம்மாளின் கர்நாடகமான அன்பு ஒருபுறம்; சாந்தாவின் நவீன மோஸ்தர் நாடகம் ஒருபுறம்; அவனுக்கு எதை அங்கீகரித்தால் அமைதி கிடைக்கும் என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. அவனுக்குத் துணை செய்ய அங்கே செல்லம் விரும்புகிறாள்; இங்கேயோ சாந்தாவின் தந்தை விரும்புகிறார்! எது நல்லது? எதில் சுகம் உண்டு? எப்படியிருப்பினும் ஒன்றை ஏற்று, மற்றொன்றை உதறுவது துன்பத்தையே அளிக்கும் என்று பட்டது. இரண்டையும் கொள்வது என்பதை அவனால் கனவிலும் கருத முடியாது. சாந்தா பெயருக்கேற்ப கொஞ்சம் சாந்தமாக நடந்துகொண்டால் அதை சிலாக்கியம் என்று முடிவு செய்யலாம். செல்லம் கொஞ்சம் எழுத்தறிவுடன் சாந்தாவைப் போல நாகரிகமாக இருந்தால் அது நல்லது என்று தீர்மானிக்கலாம். இந்த இக்கட்டான பிரச்சினையைத் தீர்த்து விவாகம் செய்து கொள்வதற்குள், பிரம்மச்சர்யத்துடனேயே அவன் ஆயுள் முடிந்து விடும் போலிருந்தது. மற்றவர்களுக்கு இது சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் உள்ளத்தில் ஊறிய அன்பை சமமாகப் பகிர்ந்து இருவரிடமும் அளித்து விட்ட பசுபதிக்கு இது சுலபமே யல்ல!

ஆண் எப்படி வேண்டுமாயினும் இருந்து விடலாம்; பெண்ணை அப்படி வைத்திருக்க முடியுமா? நாட்கள் செல்லச் செல்ல பசுபதி பைத்தியக்காரன் போல் திரிவதை யாரும் விரும்பவில்லை. அனுதாபமும், ஆதரவும் குறையா விட்டாலும், அவனை உபயோகப் படுத்திக் கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டனர். அபூர்வமாய் யாரோ வந்து பெண் கேட்டவர்களுக்கு, முடிவு செய்யப்பட்டு செல்லம் போய் விட்டாள். பால்யத்திலிருந்தே படிப்பு சொல்லிக் கொடுத்து சாந்தாவை மேன்மைக்குக் கொண்டு வந்த ட்யூஷன் உபாத்தியாயர் உலகநாதன் சாந்தாவை இரண்டாந்தாரமாக ஏற்றுக் கொண்டார். அவருக்குப் பால்யத்திலிருந்தே அவள் மீது காதலாம்! முதல் மணத்தின்போதே முயற்சித்தாராம். அப்போது குருவையா சிஷ்யை மணப்பது? என்று சாந்தா மறுத்து விட்டாளாம். இப்போது இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்ட பின்பும், சாந்தா கன்னி கழியாமல் இருப்பதைக் கண்டு மனம் தாளாமல் தன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொண்டாராம். தவிர, வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள, "ஹிஸ்டீரியா" நோய் கண்ட அவரது முதல் மனைவியால் சாத்தியப்படவில்லையாம். "ஏனம்மா! இப்படியே இருந்து என்ன பிரயோஜனம்? அவர் குணத்தை நீதானே நன்கு அறிவாய். குரு காணிக்கையாகத் தான் அவருக்கு உன்னை அர்ப்பணம் செய்து உதவி செய்யேன்!" என்று பெற்ற தந்தையே மனமொடிந்து அடிக்கடி வற்புறுத்த ஆரம்பித்த பின், எத்தனை காலம் அவள் வாழா வெட்டியாக இருக்க முடியும்? வேண்டாத வாழ்க்

கையாயினும் பிறருக்காக தியாகம் செய்ய வேண்டிய அவசியம் வந்து தொலைக்கிறதே!

5

நிழலருமை வெய்யலிலே! என்பார்கள். அது உண்மை தான் என்று பசுபதிக்கு இப்போது தான் தெரிந்தது. தந்தை உயிரோடு இருக்கும் போது சதா எதிர்த்துப் பேசி தறுதலைத் தனமாகத் திரியும் எத்தனையோ பிள்ளைகள், பிதாவின் மரணத்திற்குப் பிறகு வருந்துவதில்லையா? அப்படித் தான் சாந்தாவும், செல்வமும் கைவிட்டுப் போன பிறகு அவர்களின் அருமை பெருமைகளை நினைத்து உருகினான் பசுபதி. தர்க்க எண்ணத்தைக் குதர்க்க மாக்கிக் கொள்ளாமல் யாரேனும் ஒருவரை தைரியமாகக் கைபிடித்திருந்தால் அவன் வாழ்வு கலைமயமாக மாறியிருக்கும்! ஆனல் இனி கரந்த பால் சுரக்குமா? எப்படி முடியும்?

ஒட்டல்கார வேலம்மாள் இன்னும் அன்போடு சமைத்துப் போட்டுக் கொண்டு தானிருந்தாள். வையாபுரியும் ஆண்டாளும் அதே விட்டில் தான் தனிமையில் இருந்தனர். என்றுவது ஒழிந்த நேரத்தில் போய் அவர்களை பசுபதி பார்ப்பான். என்றுலும் ஒடிந்து விழுந்த கிளையிலுள்ள இலைகளைப் போல அவன் வதனம் களையிழந்து வாடி வதங்கிக் கொண்டே வந்தது.

குழந்தை ஆண்டாள் குமாரியாக மாறினுள். இப்போது அவள் முகம் பருவத்தின் சோபையுடன் எழில் ததும்பப் பிரகாசித்தது. பேச்சிலும் நடையிலும் பெண்மையின் மென்மையான ஒய்யாரம் லலிதகலையாக உருவெடுத்தது. வளர்ச்சியின் வேகம் கவர்ச்சி மிக்க பூம்பொழிலாக பரிணமித்து நின்றது. அதைப் பார்த்த பெரியவன் மனதில் மறுபடியும் நப்பாசை உதித்தது. பூரிப்புடன் குலுங்கும் ஆண்டாளின் இளமை உருவம் பசுபதிக்குப் பொருத்தம்தானு என அவர் மனம் ஆராய்ந்தது. ஆனல் பசுபதியின் உள்ளத்தைப் போலவே, உடலும் வற்றி ஒடுங்கி பச்சையாகிக் கொண்டே இருந்தது. காரணமில்லாமல் அவன் தன்னையே வெறுத்து வந்தான். அவன் முகம் எப்போதும் சோகை பிடித்ததாயிருந்தது. வேலையில் கூட பிடிப்பு விட்டுப் போய் விட்டது. நாடி தளர்ந்து கிழவனைப் போன்ற பலஹீனத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தான். இனி மேல் அவனுக்கு வாழ்க்கையில் என்னவேண்டும்? உடல் நிலை அவ்வளவு தூரம் கெட்டுப் போயிருந்ததை அவனே உணர்ந்தான். வெறும் சோறு சமைத்துப் போடுவதற்காக எந்தப் பெண் அவனை மணப்பாள்? கல்யாணம் செய்து கொண்டதும் கூடி மருவி சுகிக்கலாம் என்ற ஆசையோடு தானே எந்தப் பெண்ணும் எண்ணி வருவாள்? அப்படிப் பட்டவளை ஏமாற்றுவதா? ஆசாபங்கமடையச் செய்வதா? அதை விட அவன் இப்படியே இருந்து விடுவது மேலல்லவா?

மணம் செய்து கொண்டு போனபின்னர் செல்லம் இரண்டொரு முறை வந்திருக்கிருள். சாந்தா வரவேயில்லை. எப்போதாவது அவள் தகப்பனுருக்குக் கடிதம் எழுதுவாள். அதிலிருந்து அவள் வாழ்க்கை அவ்வளவாகச் சுகப்படவில்லை என்று தெரிந்தது. கண்ணிருந்தும் குருடராய், பிள்ளை குட்டி உள்ளவருக்கு இரண்டாம் தாரமாக்கி விட்டோமே என்று பெரியவரும் வருந்துவார். கடைசியில் அவர் கவலையைக் கலைப்பவள் போல் கணவனைப் பறி கொடுத்து விட்டுக் கைம்பெண்ணை வந்து சேர்ந்தாள். அவளோடு மூத்தாளும், அவள் பிள்ளைகளும் போக்கிடமின்றி வந்து சேர்ந்தன. சாந்தா எப்படி நடந்து கொண்டாளோ, அவளுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. இரண்டாந்தாரம் செய்து கொண்ட பிறகு, மூன்றுவது குழந்தைக்குத் தாயாகியிருந்தாள், மூத்தவள்.

வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டவர்கள் வாழ்நாளை வீணக்காமல் இருக்க வேண்டுமானல், மனதை பொதுஜன சேவையில் திருப்புவது ஒன்று தான் வழி. பசுபதி தன்னைக் கெடுத்துக் கொண்டதோடு மட்டுமின்றி, தன்னைச் சேர்ந்தவர்களையும் துரதிருஷ்டத்திற் குள்ளாக்கி விட்டான். சாந்தாவையும், அவள் வீட்டிலுள்ள குழந்தைகளையும் நினைக்கும் தோறும் துயர அலைகள் வந்து மோதும். ஆண்டாளை வாழ்வின் துணையாக ஏற்றுக்கொண்டாலும் அவளையும் இந்தக் கஷ்டம் தானே பீடிக்கும்? எனவே அவன் தீர ஆலோசித்த பின் குழந்தைகளுக்கும், அனுதைப் பெண்களுக்குமாக வித்யாலயம் ஒன்றை நிறுவ முடிவு செய்தான். பத்திரிகை யுலகில் அவனுக்கிருந்த சொல்ப செல்வாக்கை உபயோகப் படுத்தி நிதி சேர்க்க ஆரம்பித்தான். துயரமே வடிவாய் விட்டிலமர்ந்து அழுது வடியும் பெண்களுக்கு ஆசிரம வாசம் எவ்வளவோ அமைதியைத் தரும். பிடிப்பில்லாமல் வீண் கதைகளைப் பேசிப் பேசி மனம் கலங்கி வாடுவதைவிட, அப்படிப்பட்டவர்கள் சமூக சேவையிலும், தேச முன்னேற்றத்திலும் பங்கு கொண்டால் ஜன்மமும் சாபல்யமடையும்.

அவன் ஆசை விரைவிலேயே நிறைவேறியது. "ஆண்டாள் நிலையம்" என்று அதற்கும் பெயரிட்டான். ஆரம்பத்திலேயே குழந்தைகளும், பெண்களுமாக ஐம்பது பேர் சேர்ந்தனர். வெறும் நிதியுதவியைக் கொண்டே நிலையம் நடக்கக் கூடாதென்று கருதி, பின்னல், தையல், பூவேலை, தைத்தறி முதலிய வருவாய் உள்ள கைத் தொழில்களையும் அதில் நிர்மாணம் செய்தான்.

குறித்த நாளில் ஆரம்பவிழா கனம் மந்திரி ஒருவரின் தலைமையில் நடைபெற்றது. அவன் முயற்சியின் சிறப்பைப் பலரும் பாராட்டிப் பேசினர். பசுபதிக்கு மனம் பூரித்தது. விஸ்தாரமான நிலப்பரப்பும், வாழ்வை நம்பிக்கையுடன் கடைத்தேற்றிக் கொள்ளக் காத்திருக்கும் குழந்தைகளின் தோற்றமும் அவனை புளகாங்கித மடையச் செய்தன: பிறப்பினுலாய பயனொன்றைச் செய்து விட்டோம் என்ற திருப்தி தோன்றியது.

மேடை மீது ஏறினன். கலகலப்பாக எல்லோருக்கும் நன்றி தெரிவித்தான். வருங்காலத்தில், அந்த ஆஸ்ரமத்தினுல் சமூகம் பெறப்போகும் நன்மைகளை அடுக்கடுக்காக விவரித்தான். அருமையான எதிர்கால திட்டங்களையும், அதைத் தலைமை வகித்து ஆற்றலுடன் நிறைவேற்றப் போகும் சாந்தாவின் அதிர்ஷ்டத்தையும் உற்சாகத்துடன் அறிவித்தான். சபையில் கரகோஷம் வானை முட்ட எழுந்தது!

அவ்வளவு தான்! எந்த லட்சியத்திற்காக கடைசிக் காலத்தில் உடலைத் தாங்கி அலைந்தானோ, அந்த இலட்சியம் சித்தி பெற்றது என்ற திருப்தியில், தடாலென்று மேலே விழுந்தான்! பசுபதியின் ஆவேசம் அவனையே கொல்ல வந்து விட்டது! நெஞ்சடைக்க மூச்சுவிட முடியாமல் சில நிமிஷம் தடுமாறினன்.

அவசர அவசரமாக ஆண்டாள் அவன் வாயில் கொஞ்சம் சோடாவை ஊற்றினுள். அதைக் கண்டு அவன் கண்கள் திருப்தியைத் தெரிவித்தன. "என்னை ஆண்டாள்!" என்று ஒலித்தன அவன் உதடுகள்!





வெடித்த பட்டாசு

—எம். எஸ். கமலா—

அன்றிரவு இரவாயில்லை. இரவும் பகலைப் போல் பிரகாசமாய்த் தான் இருந்தது. பம்பாய் நகர கடை வீதிகளிலெல்லாம் பட்டப் பகல் போல் மின்சார விளக்குகள் தொங்கிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வானத்திலிருந்த அத்தனை சுடர் நக்ஷத்திரங்களும் வையகத்தில் கடைவீதிகளில் தொங்கிக் கொண்டு, வருவோர் போவோரை நையாண்டி செய்து நகைப்பதைப் போலிருந்தது அக்காட்சி. சிறிய சந்துகளில் ஏழைச் சிறுவர்கள் சீன வெடிகளைச் சுட்டுக் கொண்டிருந்தனர். பெரிய பெரிய மாளிகைகளில் புதிய மணமக்கள் சேர்ந்து மகிழ்வுடன் சுடும் பட்டாசுகளும் தங்கள் மகிழ்ச்சியை மலர் நகைப்புடன் தோற்றுகின்றனவோ என்னும்படி 'பளீ'ரென்று ஒளி விட்டு 'படா'ரென்று வெடித்துக் கொண்டிருந்தன.



சௌபாத்திக் கடற்கரைக் கருகிலுள்ள 'சாதனை' என்னும் பெரிய கட்டிடத்தின் மேன் மாடியின் ஹாலில் மூப்பது வயதிற்கு மேற்பட்ட ஆடவன் ஒருவன் முடிவிலா யோசனையிலாழ்ந்திருந்தான். எங்காகிலும் பட்டாசு வெடித்தால் அவன் அதிர்ந்து கொள்வான். அவன் யோசனைகளும் சிதறித் தெறிக்கும். இருளைப் போக்க வெளிச்சமிருக்கிறது. நோயை ஒழிக்க மருந்திருக்கிறது. உயிரை மாய்க்க மரணமிருக்கிறது. ஆனால் கவலைகளைத் தவிர்த்திருக்க.....என்ன இருக்கிறது? உள்ளத்தையும் உடலையும் புத்தியையும் சக்தியையும் சாமர்த்தியத்தையும் நசுக்கி நாசம் செய்திடினும் கவலைகள் ஒழிவதில்லையன்றே?

சுவற்றில் மாட்டியிருந்த கடியாரம் 'டாண்' 'டாண்' என்று ஒன்பது முறை அடித்து ஓய்ந்து விட்டது. இருளுக்கும்

வலிவு வந்து விட்டது என்று சொல்வது போலிருந்தது அவ்வோசை. சியாம் பிரசாத் அப்படியே கண்களை மூடி சாய்ந்திருந்தான். அவன் கண் முன் ஓர் நினைவுத் திரை. அத்திரையின் மேல் எட்டாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று நின்று நகைத்தது. அவன் மார்பு விம்மித்தாழ்ந்தது எண்ணம் அவனை எங்கோ கொண்டு சென்றது. பெருமூச் சொன்று பாரமாய் விட்டான.

ஃ ஃ ஃ

மறுநாள் தீபாவளி. எங்கு கண்டாலும் பட்டாசுகள் வெடித்துக் கொண்டிருந்தன. தெருவில் வண்டி வந்து நின்று விட்டது. ஜட்காகாரன் வண்டிச் சக்கரத்தின் அருகில் அமர்ந்து குதிரைக் குளம்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். "சியாம்! நான் சொல்வதை சொல்லி விட்டேன். நீ நிதானமாய் யோசனை செய். இதில் பிறர் யோசனை ஒன்றும் உதவாது. உன் அன்னை உனக்குத் தீங்கை நினைக்க மாட்டாள். அவ்வளவு தான் தற்சமயம் சொல்லக்கூடும். போனதும் கடிதம் போடு. உன் சித்தப்பா உன்னைப் பார்க்க வந்தாலும் வருவார். உன் முடிவான அபிப்பிராயத்தை அவரிடம் சொல்லிவிடு" என்றுள் சாந்த சுந்தரி. "பாஸிங் ஷோ" சிகரெட்டிலிருந்து கிளம்பும் சுருள் சுருளான புகையைப் பார்த்துக் கொண்டே தாய் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான் சியாம் பிரசாத். அவனுக்கு பதில் பேச வாயெழவில்லை. மறுபடியும் சாந்த சுந்தரி வெகு நிதானமாய் அன்பை முழுவதையும் சொற்களில் பூட்டி "சியாம்! எவ்வளவு நாளடா ஒண்டிப் பிழைப்புப் பிழைப்பது? 'இதோ' என்றுலும் நீவர வருடம் மூன்றுகு மேடா? அதுவரை ஒரு நல்லது பொல்லது இல்லாமல் எப்படி யப்பா இருப்பது? அதற்காகத் தான் சொல்கிறேன் உன்னை பலவந்தப் படுத்தவில்லை. உனக்கிஷ்ட மானால்.....என் திருப்திக் காக வேண்டாம்." என்னும் போதே,

"பாபு, சாமான்களை யெல்லாம் ஏற்றியாய் விட்டது" என்று வந்து நின்றுன் ஏழுமலை.

"சரியம்மா, எல்லாவற்றிற்கும் யோசனை செய்து பதில் போடுகிறேன். எதற்கும் கப்பலேறுவதற்கு முன் உங்களை ஒரு முறை பார்க்காமலா போகப் போகிறேன். உங்களுக்கு எவ்விதமான கவலையும் வேண்டாம். உங்கள் மைந்தன் என்றும் உங்கள் சொல்லை மீறமாட்டான். இது நிச்சயம். தைரியமாயிருங்கள்." என்று தாயின் காலில் பணிந்து எழுந்தான்.

"என் செல்வமே, இதைவிட எனக்கு வேண்டியது என்ன விருக்கிறது. அந்த நாராயண மூர்த்தி தான் உனக்கு துணை யிருக்கவேண்டும், போய்வா." என்று முதுகை வருடி விட்டாள்.

தாயின் அன்புக் கண்ணீரும் கனிந்த சொல்லும் அவனைக் கலகலக்கச் செய்தது. கண்கள் சட்டென்று கலங்கின. ஜோபிலிருந்த கைக்குட்டையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு திரும்பினான். கலகல வென்று கை கொட்டி நகைத்தாள் அவள். அவன் திடுக்கிட்டு அவளை உற்று நோக்கினான். அவளும் விந்தையாய், ஆச்சர்யம் உதட்டில் கூத்தாட அவனைப் பார்த்தாள். அவன் தாயைத் திரும்பிப் பாத்தான். அப் பார்வையில் 'இப் பெண் யாரம்மா? என்ற குறி தோன்றியது.

"சியாம்! இவள் தான் மோஹினி. அடுத்த வீட்டில் இருக்கிறாள். அவளும் பூஜா விடுமுறைக்காக அவள் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தாள். நாளை பள்ளிக்கூடம் திறக்கிற தோன்னே, இன்று காலை வந்திருக்கிறாள்....." என்றாள். அதற்குள் அவள், "யார், மாமி, ஊருக்குப் போறு? வண்டி நிக்கறதே? நான் தான் கிராமத்துக்குப் போய் அழுத்து வந்தேன். நீங்களும் ஊருக்குப் போறேளோ என்ன வோன்னு பயமாய் விட்டது. ஓடி வந்தேன்." என்றுள் அவள், பிரமை பிடித்த குரலில்.

"அசடே, நான் எங்கேடி போவது? எங்கும் போக மாட்டேன் உன்னிடம் சொல்லிக் கொண்டிருந்தேனே, சியாம் பிரசாத் என் பிள்ளை வரும் போறுன்னு. இவன் தான். இன்று ஊருக்குப் போறுன். நீயாவது இரண்டு நாட்களுக்கு முன் வந்தயா? அவன் புறப்படறெச்சே வந்தே', என்னும் போதே, "மோஹினி! வண்டியிலிந்து இறங்கிய சாமான்களை சரியாய் எடுத்து வைத்தாயா? டிபன் செட்டை உள்ளே கொண்டு வா! இரவுக்கு வேண்டியது அதிலே தான் இருக்கிறது. பின் புறம் விளக்கைப் போடு. மூடியிருக்கும் அறைக்குள் பார்த்துக் காலிடு. கண்ணை மூடிண்டு ஓடாதே!" என்று அடுத்த வீட்டில் கத்தும் மாதின் குரல் சியாம் பிரசாதின் காதில் விழுந்தது. அவன் திகைப்புடன் அப் பெண்ணின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, "மாமி! இப்பத்தான் வண்டியிலிருந்து இறங்கினேன், அம்மா கூப்பிடறு! அப்புறம் வர்றேன்." எனறு சொல்லிய வாறே சிட்டாய்ப் பறந்தாள்.

அவன் விக்கியபடி "அம்மா! எல்லாவற்றிற்கும் ஊர் போய்ச் சேர்ந்து கடிதம் எழுதுகிறேன் வரட்டுமா?" என்று வாயற்படியை விட்டிறங்கினான். இறங்கும் போது அவனையுமறியாது அவன் கண்கள் அடுத்த வீட்டைப் பார்த்தன. அங்கு ஒன்றும் தென்படவில்லை. வண்டி கனவேகமாய்ப்

பறந்தது. அவன் மனம் அதைவிட வேகமாய் அவன் தாய் சொன்ன சொற்களின் மேல் நடக்க ஆரம்பித்தது. அதில் இன்பத்தைக் கண்டானோ, உணர்ச்சியின் பால் வசப்பட்டானோ, ஒன்றும் தெரியவில்லை.

❀ ❀ ❀

சியாம் பிரசாத் இரிக்கேட் பந்தயத்திற்குச் சென்று விட்டு அன்று தான் ஜயித்ததால் வெகு ஆனந்தத்துடன் ஓய்யாரமாய் நண்பர்களுடன் தன் விடுதிக்கு வந்தான். அறையில் மேஜை மேல் அவன் தாய் எழுதியிருந்த கடிதம் கிடந்தது. அதை அவசரமாய் எடுத்துப் பிரித்தான்:

"சியாம்! உன் சித்தப்பா உன்னைப் பார்க்க இருமுறை வந்திருந்தாராம்; இருமுறையும் நீ இல்லையாம், அவர் சொல்லுகிறார்: 'உன்னால் தான் உன் பிள்ளைக்கு இத்தனை துணிவு ஏற்பட்டது. அவனை நீயே கெடுத்து விட்டாய்.மக்களுக்கு சத்துரு மாதாபிதா என்பது உண்மையாய் விட்டது?" என்று என்மேல் எரிந்து விழுந்து சொன்னாரப்பா! உன்னை ஒரு வயது குழந்தையில் உன் தந்தை விட்டுச்சென்றார். அதிலிருந்து நானும் ஏதோ என் புத்தியைக் கொண்டு உன்னை ஒரு ஆள் ஆக்கிவிட எத்தனையோ கஷ்டப்பட்டேனடா! என் கஷ்டத்திற்கு கடவுள் கண்ணைத் திறந்தார். என் சித்தி சந்தான மில்லாமல் இறந்ததால் என் பாட்டியின் ஸ்ரீதன சொத்து முழுவதும் என்னைச் சேர்ந்ததும், அதன் பிறகு நாம் உன் சித்தப்பாவை விட்டு வந்ததும் நீ அறிவாயே! இவ்வளவு நாட்களில்லாமல் இப்பொழுது மாத்திரம் ஏனப்பா கெட்டவர்களாக வேண்டும். உன் விருப்பம் என்னவென்பதை அவரிடம் விவரித்து விடு. எனக் கொன்றும் சொல்ல வேண்டாம். நீ மணமுடித்துக்கொண்டால் அந்தப் பெண்ணுடன் நீ மேல் நாடு சென்று வரும் வரையில் நான் சிறிது என்னை மறந்து நாட்களைக் கடத்துவேன். இல்லையேல் இருக்கவே இருக்கு. சியாம்! என் வேதனையால் ஏதோ எழுதி விட்டேன். நீ சங்கடப்படாதே! நீ சந்தோஷமாய் இருந்தால் அதுவே எனக்குப் பரம சந்தோஷம். எல்லாவற்றிற்கும் நிதானமாய் யோசனை செய். பதறி விடாதே.

உன் தாய், சாந்த சுந்தரி.

குறிப்பு: நீ எப்பொழுது வருகிறாய்? அதை எழுது. அச்சமயத்திற்குச் சரியாய் உன் சித்தப்பாவையும் வரச் சொல்லி எழுதுகிறேன்,"

என்ற கடிதத்தைப் படித்ததும் சியாமின் மனம் சுருக்கென்று முள் கொண்டு தைத்ததைப் போல் தோன்றியது. அதிலிருந்து சொட்டும் உதிரத்திலிருந்து அவனுக்கு எண்ணப் பருவதங்கள் முன்வந்து நின்றன. அவனுக்கு விவரம் வந்தது முதல் சிற்றப்பனின் நான்கு பிள்ளைகளுடனும் மூன்று பெண்களுடனும் அடித்துக் கொண்டும், பிடித்துக் கொண்டும் வளர்ந்தான். நல்ல உடைகள் கிடையாது. சர்வ சாதாரணக் குடும்பம். சாந்த சுந்தரியின் தாய்க்கு பிறந்த வீட்டு ஸ்ரீதனம் உண்டு ஆனால் அந்த ஸ்ரீதனத்தை அவள் தாய் அனுபவிக்காமல் இறந்தாள். ஆனால் சாந்த சுந்தரிக்கு அப்பணம் வரவில்லை. அவள் பாட்டிக்கு சாந்த சுந்தரியின் தாயும், சிறிய தாயும் இரண்டு பெண்கள். வீடும் வயலும் கொஞ்சம் ரொக்கமும் உண்டு. சாந்த சுந்தரியின் அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ அறியோம். அவள் பாட்டி யிருக்கும் போதே அவள் அன்னை இறந்ததால், அவளுக்கு வரவேண்டிய சொத்து வரவில்லை. அவள் பாட்டி அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவள் பாட்டிக்குப் பின் அவள் சிற்றன்னை அதை அனுபவித்தாள். அவளுக்கும் குழந்தைகளில்லாததால், அவள் மறித்ததும் சாந்த சுந்தரிக்கு அவள் பாட்டியின் சொத்து கிடைத்தது. இருபது வயதில் ஒரு குழந்தையுடன் கைம்பெண்ணாக சாந்த சுந்தரி தன் புக்ககத்திலேயே நின்று விட்டாள். அவள் சிற்றப்பன் (சிற்றன்னையின் கணவன்) ஒரு மாதிரி பேர்வழி. தந்தையின் உறவினர்கள் ஏழைகள். அவளையும் அவள் மைந்தனையும் காலம் முழுதும் வைத்து ரக்ஷிக்க சக்தியற்றவர்கள். ஆதலால் அவள் தன் கணவனின் சகோதரன் நிழலில் தங்க வேண்டியதாகி விட்டது. சியாம் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தான். அவனைக் கலாசாலையில் சேர்க்க சாந்த சுந்தரிக்கு ஆசை. ஆனால் அதை வெளியிட விரும்பவில்லை. அவள் மைத்துனன் எத்தனை பேர்களைப் படிக்க வைக்க முடியும்? தன் குடும்ப நிலையை உத்தேசித்து, தன் பிள்ளைகளையே எஸ். எஸ். எல். ஸியுடன் நிறுத்தி வேலையில் சேர்த்து விட்டான்.

சியாம் தாயின் ஆசையையும், ஆர்வத்தையும் நிறைவேற்றுவதற்காக எத்தனையோ பெரிய மனிதர்களைப் போய்ப் பார்த்தான். பள்ளி அதிகாரிகளிடம் சிபாரிசுப் பத்திரங்களைப் பெற்றான். கலாசாலை திறக்க நான்கு நாட்களிருந்தன. எதிர்பாராமல் சாந்த சுந்தரியின் சிற்றன்னை காலமான விஷயம் தெரிந்தது. உபகாரச் சம்பளமும் கிடைத்தது. தாயின் சொத்தும், உபகாரச் சம்பளமும் கிடைக்கவே சியாம் தாயுடன் நகரம் வந்து சேர்ந்தான். கலாசாலையில் சேர்ந்தான். அவன் மனம் ஊசலாடியது.

சியாம் பிரசாத் ஸ்டேஷனில் இறங்கும்போதே அவன் சிற்றப்பா அவனுக்காகக் காத்திருந்தார். அவருடன் ஒரு கனவான்: தங்கக் கட்டுப் போட்ட மூக்குக் கண்ணடி; கையில் தங்க கைக் கெடியாரம்; இடுப்பில் பத்து முழ வேஷ்டி; முழங்காலைத் தொட்டுக் கொண்டு முறுவலிக்கும் மீளமான கோட்டு; இத்தனையும் அணிந்திருந்தவர் நின்றிருந்தார். சியாம் ரெயிலை விட்டு இறங்குப் போதே "அடே! சியாம்! உடம்பு நல்லா யில்லேடா? ஏண்டா இப்படி இளைத்துப் போனே! என்ன ஆனலும் வீட்டுச் சாப்பாடு இல்லாமற் போனல் சிக்கிரம் ஆரோக்கியத்தை இழந்து கிழவனுகிவிட வேண்டு மடா. அசடே! இவர்தான் கேசவ சந்திரர். இவர் பெண் அமிர்த கௌரியை உனக்குக் கொடுக் கிறாம்" என்று சொல்லிக் கொண்டே போனர்.

சியாம் சிரித்துக் கொண்டே, மௌனமாய் அவர்களுடன் வீட்டிற்குச் சென்றுன். அவன் முன் ஒரு மாநிறப் பெண் ஓடி மறைந்தாள். கலியாணம் பேசி முடித்து விட்டார் சித்தப்பா. சியாம் தாய்க்காகவும், சித்தப்பாவிற்கு கௌரவம் கொடுப்பதற்காகவும் அதற்கு ஒத்துக் கொண்டான். வந்தவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

"அம்மா, அடுத்த வீட்டு மோஹினி எங்கே?" என்றுன். "அப்பா! மோஹினியின் பெற்ருேர்கள் விஷ நோய் கண்டு இறந்து விட்டனர். மோஹினியை அவள் மாமன் அழைத்துச் சென்று விட்டார். அவள் எங்கிருக்கிருளோ, தெரியாது" என்றுள். அவனுக்கு என்னவோ போல் தென்றியது. மனதில் சொல்லறியா வேதனை ஏனே?

அமிர்த கௌரியுடன் எட்டாண்டுகள் வாழ்க்கை வழியில் நடந்தும் அதில் இன்பத்தைக் காணவில்லை. துன்பமுண்டோ என்று கேட்பீர்களோ? அதுவுமில்லை. ஏதோ ஆணும் பெண்ணுமாய் எத்தனை குடும்பங்கள் கால தேவனின் கூற்றிலீடுபட்டு வாழ்வின் கோணங்களை எட்டிப் பார்த்து ஓடவில்லை? அம்மாதிரி இவன் வாழ்வின் வழியும் சென்று கொண்டிருந்தது. இவன் மறந்தாலும், மறக்கவிடாமல் இவனை அல்லல் படுத்த வருவது போல் அந்த தீபாவளி வருடந்தோறும் வந்து வதைத்தது.

ஆண்டுகள் நகர்ந்து அறிவை வளர்த்தது. அனுபவத்தை ஊட்டியது. சகிப்புத் தன்மையைப் போர்த்தியது. சியாம் பிரசாத் பெரிய ரத்தினக் கடை ஒன்றை வைத்து, அத்துடன் பட்டுத் துணிக் கடை ஒன்றையும் நடத்தி வந்தான். அதில் அளவற்ற லாபம் வந்ததால், பள்ளிக்கூடம் ஒன்று மாணவ மாணவிகளுக்கு வைத்தார். அன்று தான் தம் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு ஊருக்கு வந்தார். எங்கு கண்டாலும் 'தியாகச் சுழல்' என்ற நாடகம் தேசோத்தார நாடக சபாக்காரர்களால் நடக்கப் போகிறது' என்ற சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருந்தன. அதைப் பார்த்துக் கொண்டே வந்த சியாம் பிரசாத், அன்று அதற்குப் போவதாய்த் தீர்மானித்து விட்டார். கொட்டகை நிறைந்து விட்டது. ஜனங்களின் கலகல வென்ற பேச்சு, குழந்தைகளின் அழுகைக் குரல், வெற்றிலை பாக்கு பீடா சிகரெட் கார்களின் குட்டை ராகம், சோடா கலர் கூவல் இத்தனையும் ஒருங்கே சிறிய ஜலப் பிரளயத்திற் கொப்பாக இருந்தன. அத்தனை அமளியையும் அடக்க 'ணங ணங' என்ற சிறிய சத்தம் போதுமானதா யிருந்தது. எப்படி மறைந்ததோ அறியோம். அழுத குழந்தைகளெல்லாம் அன்னையின் அரவணைப் பிலிருந்தன. விற்பனைக்காரச் சிறுவர்கள் அங்கங்கே ஒதுங்கி நின்றனர். திரைச்சீலை தூக்கப் பட்டது. 'தியாகச் சுழலு'க்கு காரண கர்த்தாவான 'கனகதாரா' வெகு ஒய்யாரமாய் சோபாவில் சாய்ந்திருந்தாள். அவன் இந்திர ஜாலக் கண்கள் சபையோர்களை ஒரு பார்வை பார்த்தன. அங்கு முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த கனவான் ..... அவன் யார்..... அவனைப் பார்த்ததும் அவள் கண்கள் மாயா ஜாலத்தை மறைத்துக் கொண்டன. முன்புற சீட்டில் அமர்ந்திருந்த சியாம் ஹிருதயம் 'தடதட' வென்று அடித்துக் கொண்டது. ஏதோ காணக் கிடைக்காத பொருள், வெகு நாட்களுக்கு முன் போக்கடித்துக் கொண்ட பொருள், ... தான் மறந்திருந்த ..... மறைந்திருந்த அவளைப் போன்ற அந்த அழகி அவள் தானே? அவள் கவர்ச்சியான கண்கள் நாடகத்தைப் பார்க்கத் தொடங்கின, நாடகம் நடந்து கொண்டிருந்தது. பெரிய பணக்காரர்கள் குடும்பத்தில் பிறந்த கனகதாரா, ஏழை இந்திய நாட்டில் ஜனங்கள் படும் அவஸ்தையைப் பார்த்துப் பொறுக்காமல் தன் பெற்ருேர்களின் பணத்தை வாரியிரைத்து, எளியவர்களின் முன்னேற்றத்திற் காகப் பாடு படுகிருள். சில முதலாளிகள் அவளை அடித்து துன்புறுத்தி சிறையில் அடைக்கின்றனர். விடுதலையானதும் கடும் பசியால் வெறி கொண்ட பெண் புலிபோல் முதலாளித்துவத்தை அடக்கி நாசம் செய்ய எங்கு கண்டாலும் கூட்டம் கூடி பொது மேடையில் பேசத் தொடங்கினுள். அவள் கொதிக்கும் சொற்சுடர்களுக்கு முன் முதலாளிகளின் பணம் தூசிக்கு உதவாமல் போய் விட்டது. ஆதலால் சில அற்பர்கள் சதி செய்து அவளைக்

குத்திக் கொலை செய்து விட்டனர். இதுதான் 'தியாகச் சுழல்'. அதி அற்புதமாய் நடித்தாள் கனகதாரா. அவள் நடிப்பு உச்ச நிலையிலிருந்தது. ஜனங்கள் கனகதாராவின், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நடிப்பில் தங்களை மறந்து ஆழ்ந்தனர். அந்த ஆட்டத்திற்குச் சென்று வந்தது முதல் சியாம் பிரசாத், மனம் சரியாகவே இல்லை. ஏதோ அல்ல லுற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கனகதாரையை எங்கோ பார்த்தது போல் தோன்றியது. பன்னிரண்டு மணிக்குமேல் வந்து படுத்தும் இரவு வளர்ந்து கொண்டே போயிற்று. விடியுமா? என்ற வேதனை தோன்றி விட்டது. எப்படியோ விடிந்தது. எழுந்ததும் கை கால்களைக் கழுவிக்கொண்டு, போனை' எடுத்து தேசோத்தார நாடக சபாவிற்கு போன் செய்தான். பதில் கிடைத்ததும் பரபரவென்று காரில் ஏறினான். ஐந்து நிமிஷத்தில் நாடக சபை வாயிலில் போய் நின்றான். சியாம் பிரசாத். ப்ரொப்ரைட்டர் புன்முறுவலுடன் வரவேற்றார். கனகதாரா தன் அறையில் ஞான வாசிஷ்டத்தைப் படித்துக கொண்டிருந்தாள். ஸ்நானம் செய்த கூந்தல் விரிந்து தரையை தொட்டுக் கொண்டிருந்தது. நெற்றியில் குங்குமம் நகைத்துக் கொண்டிருந்தது.



"தாரா" என்றழைத்தான் சியாம். முகத்தை சிடுத்துக்கொண்டபடியே தலையை மேலுக்கெடுத்தாள். நெளிந்த புருவம் நேராய் நிமிர்ந்தது. கண்களில் ஆச்சர்யம் மின்னப் பார்த்தாள்.

"யார்? ... பாபு ... நீங்கள்? இந்த இடத்திற்கேன் வந்தீர்கள்?" என்றாள்.

ப்ரொப்ரைட்டர் "நான் வருகிறேன். அங்கு வேலையிருக்கிறதென்று நகர்ந்தான். சியாம் "மோஹினி! ஞானவாசிஷ்டம் கூடவா?" என்று கேட்டான்.

"ஏன், பாபு? எனக்கு ஞானம் வேண்டாமா?"

"உண்மையாகவா பேசுகிறாய்?"

"ஞானத்தைப் பற்றிப் பேசும்போது கூடவா பொய்?" என்று கண்களை அகல விரித்தாள்.

அவன் கண்கள் கசிந்தன. "மோஹினி! இது உனக்கேற்றதா?"

"என்ன செய்வது பாபா! இரண்டாம் கல்யாணக்காரனுக்கோ. ஏழை கூலிக்காரனுக்கோ வாழ்க்கைப்பட்டு, சங்கடப்படுவதைவிட ... ...

"அதற்காக வீட்டை விட்டு ... ..."

"வீட்டில் பந்தோபஸ்து குறைந்து விட்ட பின் ... ...?"

"இம்மாதிரி யிடத்தில் ... ...?"

"இங்கு விரும்பினால் கெடலாம். இல்லையேல் ... ..."

"ஆனால் இங்கு கெடாமலிருக்கிறாயா?"

"நான் ... ... என் சுய உணர்வுடன் கெட்டதில்லை"

"அப்படியென்றால் உணர்வற்ற நிலை ஒன்று உண்டா?"

"என் கஷ்டத்தை மறக்க ... ... என் கஷ்டங்

னை மறக்க ... ... என்னுசை மறக்க ... ... கொஞ்சம் ... ..."

"என்ன செய்தாய், மோஹினி?"

"என்ன செய்தேன் ... ...?"

"சொல்லு ... ..."

"சொல்ல வேண்டுமா? ... ..."

"சொல்லி விடேன். எத்தனை ஆண்டுகளாய் உன்னை நினைத்து ... ..." என்று அவன் உணர்ச்சியைக் கட்டுப் படுத்தக்கூடாமல் அவளருகில் போய் நின்றான்.

"அவ்வளவு ஆண்டுகளாய் நானும் என் மனதைக் கட்டுப் படுத்த எத்தனை கஷ்டப்பட்டிருப்பேன்? இரவு கழிவது கடினமாய் விட்டது. இரவு பகலாக வேண்டும்போல் தோன்றியது. பகல் வேஷம் போட்டேன். என் பிரார்த்தனை பலித்தது. கடவுள் கண்ணைத் திறந்தார். இனிக் கவலை யில்லாமல் கண் மூடுவேன்."

"மோஹினி! இத்தனை நாள் உனக்காகக் காத்திருந்த என் கதி ... ..." என்றான்.

"நானெக்கு அவமானமல்லவா?"

"அவமானமில்லை. சீர்திருத்தக்காரன் என்ற பெயரில் தலை நிமிர்ந்து நடப்பேன் ... ..." என்றான் கம்பீரமாய்.

அச்சமயம் நாடகக் கொட்டகையில் தீபாவளியைக் கொண்டாட அங்கிருப்பவர்கள் சுட்ட பட்டாசு வெடித்தது.

C. S. HOTEL

5/7 IMPERIAL BANK ROAD,
COIMBATORE

Phone No. 90.

Telegrams: CEEYES'

24 Rooms for 34 Persons

The most up to date Vegetarian Residential Hotel.
Centrally situated, very near Railway Station,
Government Offices and Courts.
Well furnished Rooms with
All Modern conveniences.

Our Branch with 40 Rooms furnished near Government College.

Provides Lodging only for 40 Persons

C. S. G. IYER,
Proprietor.

பலி

[கம்லதாசன்]

கலைக்காகவே வாழும் கலைஞன் அவன். இயற்கையின் இன்பப் படமும், எழில் அலைகளும் அவனது இதயத்தைத் தீண்டி காதல்த் தீயை மூட்டும்போது, ஓவிய வாணியின் உல்லாச நெஞ்சைத் தொடும் இன்பப் பேறையும் அவன் பெறுகிறான். இரவுடைய இதயமும் மோகன ராகத்திலே பண் இசைக்கும் சோகச் சித்திரத்தின் முடிவு என்ன?....

ஆற்றோரத்திலுள்ள ஒரு பாறையின் மீது அவன் அமர்ந்தான். தன்னைச் சுற்றியிருக்கும் மனோகரமான இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க விரும்பினான். ஆனால்...? அவன் விருப்பத்திற்கு எதிராக அவன் மனம் துன்ப நினைவுகளில் ஆழ்ந்து விட்டது! துன்பத்தின் வேகத்தைத் தாளாமல் இதயம் புழுங்க, இரண்டு சொட்டுக் கண்ணீரை ஆற்று வெள்ளத்தில் விட்டு விட்டு அவன் தன் குடிசைக்குச் சென்றான். எதிரில் சுவற்றில் மாட்டப் பட்டிருந்த அவள் படத்தைப் பார்த்தான். 'அந்த நாட்களின்' நினைவு அவன் மனத்திரையில் சலனப் படம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் ஓடும் ஆறு. அதற்கு அடுத்துள்ள நந்தவனத்தில் புன்முறுவல் பூத்து விளங்கும் புது மலர்களின் நறுமணம்; தென்றல். இங்கிதமான பொற்கதிர்களைக் கொண்டு அகல வாய்திறந்து சிரிப்பதுபோல் இருந்தது கதிரவனின் காட்சி. கலைஞனுக்கேற்ற கலை தத்தும்பும் காட்சி! அவன் ஒரு கலைஞன். இயற்கையின் சௌந்தர்யக் காட்சியில் அவன் மனம் சொக்கிவிட்டது. தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்பதுதான் கலைஞனின் ஆசை. ஆற்றோரத்திலுள்ள ஆலமரத்தடியில், அமர்ந்து கொண்டு ஓவியம் எழுத ஆரம்பித்தான். அடிமேல் அடிவைத்து யாரோ வருவதாக அவன் செவிக்குப்பட்டது. திரும்பிப் பார்த்தான், பக்கத்தில் சைத்ரீகவல்லி நின்று கொண்டிருந்தாள்.

"வல்லி! ஏன் பூனை நடப்பது போல்"... என்றான் கலைஞன்.

"நீங்கள் என்ன எழுதுகிறீர் என்று பார்க்கத்தான். இல்லா விட்டால், நீங்கள் என்னைக் கண்டதும் கலைத் திறன் நிறைந்த இந்தச் சித்திரத்தை காட்டமாட்டீர்கள் என்றுதான்" என்றாள் வல்லி.

"சைத்ரீகவல்லி! உனக்காகத்தானே இது" என்று சைத்ரீகவல்லியின் படத்தைக் காட்டினான். "போதும் உங்கள் கேலி: இதைப்பாருங்கள்" என்று அவள் எழுதிய படத்தைக் காட்டினாள்.

அமரானந்தம் திகைத்து விட்டான். அவளுடைய எழில் விளங்கும் அப்படத்தைப் பார்த்து திகைக்காமல் என்ன செய்வது? இயற்கையும் பின் நிற்கவேண்டும். பிரமன் சிருஷ்டியிலும் மிகவும் சிறப்பு வாய்ந்த, அந்த ஓவியத்திற்கு உயிர் ஒன்றிருந்தால், அமரானந்தத்துடன் சண்டைக்கு வந்து விடும்.

"வல்லி! இதை யார் வரைந்தது"? என்றான்.

"ஏன்? படத்திற்கென்ன?" என்றாள்.

"அவர்களுக்கு நான் எக்காலத்திலும் அடிமை. இந்தப்படம் என் மாதிரியே இருக்கின்றது"

"நான் தான் வரைந்தேன். ஆனால், நீங்கள் எனக்கு அடிமையாக வேண்டாம். நான் உங்களுக்கு அடிமை. என்னை ஏற்றுக்கொள்வீரோ?" என்று ஒரு பக்கத்தில் முகத்தைச் சுளித்துக்கொண்டு சொன்னாள்.

"வல்லி! என் எண்ணம் பலித்தது. உன்னைப்போல் கலையில் ஆர்வமுள்ளவளைத்தான், என் இல்லத் துணைவியாக ஏற்கவேண்டும் என நினைத்தேன். அதே போல் என் எண்ணம் சிதைந்து விடாது காத்தனை. ஆனால், உன் தகப்பன் சம்மதம்" என்று நிறுத்தினான் அமரானந்தம். "அவர் என் எண்ணத்திற்கு எதிர் சொல்ல மாட்டார். நேரமாகிறது, நான் போய் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டாள். அமரானந்தமும் பின் சென்றான்.

அன்று சித்திரக் கண்காட்சி சாலையில் ஒரே கூட்டம். சித்திரப் போட்டிக்கு சித்திரம் எழுதியவர் கூட்டந்தான். அன்று பரிசு வழங்கும் தினம். பெரிய ஓவியர் ஒருவர் சித்திரங்களைப் பார்வையிட்டார். அதில் அமரானந்தத்தின் சித்திரமும், சைத்ரீகவல்லியின் சித்திரமும்தான், அவர் கண்ணுக்கு பிடித்திருந்தது. முதற்பரிசு அமரானந்தத்திற்கும், இரண்டாவது பரிசு சைத்ரீகவல்லிக்கும் கிடைத்தது. மற்றவர்கள் முக வாட்டத்துடன் வீடேகினர். அமரானந்தத்தின் காதல் கலையில் மலர்ந்து சிதரு வண்ணம் அவளே மணப்பாளா வல்லி? கலை வாழ்க்கையுடன் இல் வாழ்க்கை நடத்துவார்களா?

"அப்பா! இன்று சித்திரப் போட்டியில் பரிசு கிடைத்ததப்பா" என்றாள் வல்லி.

"எனக்குத் தெரிந்த கலை நுணுக்கத்தை உனக்குச் சொல்லிக் கொடுத்து நீ கலையில் வல்லவளாகி விட்டாய். எனக்கு உன் கலியாணக் கவலைதான் ரொம்பவும் வாட்டுகிறது. நானே கிழவன். காடுவா, வா என்கிறது; வீடு போ, போ என்கிறது" என்று இருமிக்கொண்டே தன் மனதில் புதைந்து கிடந்த விஷயங்களை வெளியிட்டான்.

"அப்பா? நான் என்னைப் போல் கலை வாழ்க்கை நடத்துபவரைத்தான் கலியாணம் செய்து கொள்வேன்' எனச் சிரித்துக் கொண்டு வெட்கத்துடன் பதில் சொன்னாள்.

"அம்மா! அந்த மாதிரி யாரு அகப்படருங்க. நான் எப்பொழுது உன் கலியாணத்தைப் பார்ப்பது?" என்றான் கிழவன்.

"அமரானந்தம் இருக்கிறார். அவர் போட்டியில் முதற் பரிசு பெற்றிருக்கிறார். அவரைக் கலியாணம் செய்து கொண்டால்.....!' என்று சொல்லி வீட்டினுள் மறைந்து விட்டாள். "சரி, உன் இஷ்டம். ஆனால் அவன் சம்மதிப்பானா?' என்றார். "அவர் என்னைத்தான் கலியாணம் பண்ணிக்குவேனென்று சொன்னார்." என்று அறையினுள் இருந்து பதில் வந்தது. அப்போதே கிழவர் அமரானந்தத்தின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

"வாருங்கள் அம்பலவாண மாமா,' என்று அன்புடன் எதிர்கொண்டழைத்தான்." அப்பா! அமரானந்தம் நீயோ ஓவியக் கலையில் தேர்ச்சியடைந்துவிட்டாய். என் மகளும் ஓவியக் கலையில் தேர்ச்சியடைந்துள்ளாள் அவளை நீ மணந்து கொண்டால்தான் நானும், உன் தகப்பனும் இருந்த நட்பின் சின்னமாயிருக்கும். உன் தகப்பனார் இறக்கும் தருவாயில் என்னிடம், "என் மகனுக்கு, உன் மகளை கலியாணம் செய்து கொடுத்தால்தான் ஆத்மா சாந்தி அடையும்' என்று சொன்னது இப்போது சொன்னமாதிரி இருக்கிறது. உன் சம்மதம் என்ன?"

"மாமா! எனக்குச் சம்மதம்தான். ஆனால், சைத்ரீகவல்லிக்கு.....!" என ஒன்றும் தெரியாத மாதிரி பேசினான். 'அவள் உன்னைத்தான் கலியாணம் பண்ணிக்குவேன் என்று சொல்கிறாள்' என்று கிழவர் பேசி விடை பெற்றுக் கொண்டார். நல்ல சுப முகூர்த்தத்தில் அமரானந்தம்—சைத்ரீகவல்லி விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

காலச் சக்கரம் சுழன்றது. அவர்கள் வாழ்க்கைக் கடலில் அன்பெனும் படகில் மிதந்தனர்.

"வல்லி! நமதூர் ஜமீன்தாரின் பிம்பம் வரைய வேண்டும். நீ வரைகிறாயா?" என்றான் அமரானந்தம். "இல்லை நீங்களே வரையுங்கள். நான் வரையவில்லை' என்றாள் வல்லி. நாட்கள் பல சென்றன. சைத்ரீகவல்லி அப்போது கர்ப்பிணி.

அமரானந்தம் ஓவியக் கலையில் நல்ல பேரும், புகழும் சம்பாதித்துக் கொண்டான். கலை! கலை!! என்று நீங்கள் சதா கலையை கொண்டாடுகிறீரே, அந்தக் கலையைக் கட்டிக் கொண்டிருந்தால் என்ன ஆகும். என்னை ஏன் கட்டிக்கொண்டீர்கள்? உங்களை கட்டிக் கொண்டதில் என்ன இன்பம் கண்டேன்? சதா வறுமை! வெளியில் புகழ்" என சினத்துடன் பேசினாள்.

"போதும் நிறுத்து. முன்பு உங்களுடன் நான் கலை வாழ்க்கை நடத்துகிறேன்' என்று சொன்னாயே. நன்றாக யோசித்துப்பார் என்றான். "உங்களை நொந்து கொள்வதில் என்ன பயன்? எல்லாம் என் புத்தியைத்தான் கேட்கவேண்டும்" என்றாள் வல்லி.

'வல்லி! வீணே பிதற்றாதே! என்னுடன் வாழ்ந்தால் சதா வறுமைதான் நம் குடும்பத்தைச் சூழும். நீ என்னுடன் வாழப் பிரியமிருந்தால் இரு, இல்லையெனில் உன் தந்தையை நாடிப் போ" இதைக் கேட்ட வல்லி, "என் பிறந்த வீட்டின் நிலையை கேலி செய்கின்றீரா? நான் உங்களுடன் வாழப் போவதில்லை" கதிரவன் ஆட்சி மங்க, மங்க இருளின் ஆட்சி கொடூரமாய் இருந்தது.

பொழுது புலர்ந்தது. அமரானந்தம் படுக்கையினின்று எழுந்தான். தன் மனைவியைக் காணவில்லை. "நேற்றைக்குச் சொன்ன சொல்லில் மனம் உடைந்த பேதைப் பெண். அவள் எங்கு சென்றாளோ?

ஆற்றுச் சரிவு வரைக்கும் போய்ப் பார்ப்போம்" என்ற எண்ணத்துடன் வீட்டை விட்டு வெளிவந்தான். துக்கம் நிரம்பிய இதயத்துடன் ஆற்றுச் சரிவிலேயே நடந்தான். சிறிது தூரத்தில், கரையில் ஒதுக்கப் பட்டிருந்த தன் மனைவியைக் கண்டான்.

"சைத்ரீகவல்லி! கலைக்காக உன் காதலைப் பலி வைத்து விட்டேனே! நான் மூட்டாள்" என்று கண்ணீர் விட்டான் ஆற்றுப் புதுவெள்ளம் நுரையுடன் பெரும் கர்வத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் புது வெள்ளத்தில் அவனுடைய சோகக் கண்ணீர் விழுந்து சிதறி வெகு விரைவாக எங்கேயோ சென்று மறைந்தது.

தங்கக் கொடி

[கே. வி. துரைசாமி ராஜா]

அந்த மாந்தோப்பு மொடக்குக்கு வந்ததும் வீரப்பனுக்கு அபாரமாகப் பாட்டு வந்து விடும். அவன் அடிக்கடி அந்த வழியிலே புறப்பட்டுப் போவதற்கு ஒரு ரகசியம் இருக்கத்தான் செய்கிறது.

வீராயி தோப்புக்குள்ளே இருக்கும் வரையிலும் வீரப்பன், தேனே உறிஞ்சி குடிப்பதற்கு மலர்ப் பதம் பார்த்துக் கொண்டிருக்கும் வண்டு போல, சுற்றிச் சுற்றித் துடித்துக்கொண்டுதான் இருப்பான். பக்கத்திலே உள்ள பொருந்தல் ஆற்று நீல மடுவும் அவளுடைய விழிகளும் ஒரே நட்சத்திரத்தில் தான் பிறந்திருக்கின்றன என்று சொல்லவேண்டும். வீராயி என்னமோ பூரணமாக மலர்ந்து விட்ட மலராய் இருந்தாலும் அவளுடைய ஹிதய மலர் வீரப்பனுக்காக இன்னும் மலரவில்லை. அதை மலர வைப்பதற்குத்தான் அப்படி அவன் வண்டாய்த் தவம் செய்து கொண்டு, சுற்றிச் சுற்றிப் பாடிக் கொண்டே இருந்தான்.

அன்று சல்லிக்கட்டு நாள். ஊருக்குள்ளே ஒரே பறை முழக்கம். இன்னும் கொஞ்ச நேரம் ஆனதும், காளைகளை ஊர்வலமாகக் கொண்டுவரத் தொடங்கி விடுவார்கள். அதற்குள்ளே குளித்துவிட்டுச் சோக்காய்த் தொழுவத்துக்கு முன்னே போய் நிற்கக் கடமைப்பட்டவன் வீரப்பன்.

பொருந்தல் ஆற்றுக்குள்ளே வீராயி காவல் இருக்கிற தோப்புத்துறையிலே குளித்தால்தான் அவனுக்கு மனதுக்கு ரம்மியமாய் இருக்கும். அவளிடத்தில் இருக்கிற யௌவனத்தின் ஆகர்ஷண சக்தியை தண்ணீருக்குள் கரைத்து விட்டிருந்தாளோ என்னமோ வீரப்பன் நித்தநித்தம் அதே துறையில்தான் குளித்துக் கொண்டே இரண்டு தெம்மாங்கு பாடாமல் இருக்கமாட்டான். அந்த ஜல்லிக்கட்டு நாளிலே அவனுக் கென்னமோ களிப்பின் வெறி அளவுக்கு மிஞ்சி மனதைக் கௌவிக் கொண்டிருந்தது. ஆற்றுத் தண்ணீருக்குள் காலே விட்டு அலசிக் கொண்டே ஹிதயத்தைத் திறந்து பாட ஆரம்பித்து விட்டான்,

" பாக்கு விற்கும் பாலக்காடு
பவளம் விற்கும் ராமசரம்
ஏலம் விற்கும் தெக்குச்சீமை
இரங்குகிலியோ உன் மனசு.
படுத்தா உரக்கமில்லே
பாய் போட்டாத் தூக்கமில்லே
நெனச்சுப் படுத்தாலும்
நித்திரையும் வாரதில்லே
நெஞ்ச மிரங்காதோ—உனக்கு
நேத்திரந் திரக்காதோ."

பாட்டு முடிந்ததோ இல்லியோ "சொத்"தென்று மாம்பழம் ஒன்று அவன் தலையிலே குறிவைத்து எறிந்தது போல் வந்து தாக்கிற்று. வீரப்பன் விருக்கென்று துள்ளிப் பாட்டின் பரவச நிலையில் இருந்து பழைய நிலைக்கு வந்து விட்டான். சுற்று முற்றும் பார்த்தான். அடுக்கு மேகங்களுக்குள்ளே ஒளிந்தும் ஒளியாமலும் தோற்றம் அளிக்கின்ற உதய சந்திரனைப்போல, மாந் தோப்பின் வேலிப் புதருக்குள் வீராயின் சுந்தர வதனம் அவனுக்குத் தட்டுப்பட்டது, அவ்வளவுதான், உள்ளத் தட்டிலே உயிரை வைத்து, முதல் காணிக்கையாக வைத்துவிட்டான் அவளுக்கு முன்.

வீராளின் மாம்பழவாய் "வா" என்று ஒரு தடவை அழைக்காதா என்று அவனுடைய மனது துடியாய்த் துடித்தது. இத்தனை நாளும் மொட்டாய் இருந்த அவளுடைய ஹிதயம் இன்றுதானே மலர்ந்திருக்கிறது. இல்லையென்றால் அந்த இரண்டு நீலக்குறு விழிகளும், தேக்கம் போட்டுத் ததும்பிக் கொண்டிருக்கும், அந்த அன்பிற்குத்தான் என்ன அர்த்தம் அல்லது அவளுடைய செக்கச் சிவந்த இதழ்ச் சிவப்பில் படர்ந்து தவழ்ந்து கொண்டிருந்த அதே மிஞ்சுச் சிரிப்புக்குத்தான் என்ன அர்த்தம்.

அடுத்த வினாடி, இரண்டே தாவிலே மடுவை நீந்தி, முள் வேலியைக் கிழித்துக் கொண்டு வீராயிக்கு ஒரத்திலே வந்து நின்றான்.

அவளுக்கு அவன் பக்கத்திலே வந்து நிற்பது சந்தோஷம்தான் என்றாலும், பெண்ணுக்குரிய பிதுர்ராஜித குணத்தை விட்டுவிட அவளுக்கு மனம் வரவில்லை. பிரமாதமாக பயந்து கொண்டவள் போன்ற பாவனையில்.

"ஐயோ, உனக்கட்டையிலே வைக்க, யாராச்சியும் பார்த்துக்கிட்டா என்ன நினைப்பாங்க, நீ இப்பப் போரையா இல்லையா", என்றாள்.

வீரப்பன் கையுக்குக் கிடைத்த வஸ்துவை மறுபடியும் இழந்துவிட்டவன் போன்ற பாவனையில் "இங்கே ஆரு வீரி, இத்தனை நாளும் ஊசிமேலே ஒத்தக் காலே ஊணிக்கிட்டுத் தவம் இருந்ததெல்லாம் உனக்கோசரந் தானே. இன்னுங்கூட உன் மவசு கல்லா. அப்போ மாம்பழத்திலே போட்டே, இப்போ வேணும்னு இந்தக் கல்லுலேயே போட்டுத்தான் என் மண்டையை ஒடச்சுப் பாரேன்" என்று சொல்லிக் கொண்டே பெருங் கருங்கல், ஒன்றை இரண்டு கையாலும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டுவந்து அவளுக்கு முன்னால் போட்டான்.

அவன் செய்த செய்கை வீராளுக்குச் சிரிப்பைக் கிளறி விட்டது. அவளுடைய கூர்மையான விழியை மறுபடியும் ஒரு தீட்டுத் தீட்டி, கோணக் கடையிலே சடக்கென்று வீசி எடுத்து, உடலேகத்துக்கு ஒரு துவட்டு துவட்டி "நாங் கல்லுலே போட்டு நீ செத்து கித்துத் தொலஞ்சுட்டையின்னு, உங் கோத்தாளுக்கு மகனுக் கெங்கே போறதுன்னுதான், கல்லுலே எறியாமே மாம் பழத்திலே எறிஞ்சேன். உன்னைக் கொல்லோனும்னு ஆசையிருந்தா, வெகு நாளுக்கு முன்னேயே கொன்னிருக்க மாட்டேனா; பாவம் ஒருத்திக்கு ஒரு மகன் பொழச்சுப்போ" என்றாள். என்னமோ பிரமாதமாக உயிர்ப் பிச்சை கொடுத்து விட்டவனைப்போல.

"உன்னைப் பாத்த நாளே, என் உசுரு என்னுட தல்லாமப் போச்சு. இத்தன நாளா, நான் செத்துக் கிட்டேதானே வந்திருக்கேன். மிச்சம் இருக்கற உசுரைக் கூட இன்னிக்கு உங் கண்ணு முழிக்குள்ளே பாதியும், உம் வாய் ஒதட்டிலே புடுச்சுக்கிடக்கிற செவப்புலே பாதியுமா காணிக்கை போட்டாப்படிப் போட்டேனே. இன்னொரு தவாச் சாகரதுக்கு எங்கிட்டே எந்த உசுரு இருக்குது. மனுசனுக்கு ஒரு உசுரைத் தானே வச்சுப் படைச்சுப் போட்டான் பகவான்" என்றாள். அப்பொழுது அவளுடைய குரல் பஞ்சைப் பரதேசியின் குரலைப்போல் தாழ்ந்த ஸ்வரத்தில் விழுந்து கிடந்தது.

பாவம் ஆளை வட்டவாசு செய்யக்கூடாது என்பதுதான் வீராளின் சித்தம். என்றாலும் எதையோ ஒன்றைச் சாதித்துக் கொள்ளும் நோக்கமில்லாமல், வெறுமனே உம் என்று சம்மதித்து விடுவதென்றால் பெண்ணுக்கு இயற்கையிலேயே முடியாத காரியம். பிரமதேவன் அவளைப் படைக்கும்போதே அதிலே ஒரு சங்கை உரசி ஊற்றித்தான் விட்டிருக்கிறான்.

விழிகளை அகல விழித்துக்கொண்டு அகால இடி தலை மேல் வந்து விழுந்துவிட்டது போன்ற பாவனையில் முகத்தை வைத்துக்கொண்டு 'ஐயோ, கான் நம்பவே மாட்டேன்; இந்த ஆம்படையானுகளெல்லாம் ஆயிரம் மனசு படச்சவங்க. காரியம் ஆகவரைக்குந்தான் கெஞ்சிக்கிட்டு காலடியிலே விழுந்து கிடப்பாங்க; அதுக்கப்புறம் அந்த ரத்திலே விட்டுட்டுப் போயிடுவாங்க;" என்று முகத்தைப் பிசு பண்ணித் திருப்பிக்கொண்டே நிலத்தோடு நிலமாய்ப் படிந்து கிடந்த மாங்கொம்பின் மீது உட்கார்ந்தாள் வீரி. வீரப்பனும் பிரமாதமான சொந்தக்காரன் போலே அதே கிளையிலே அவளுக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டான்.

உச்சி வாதிலே குந்திக் கிடந்த இரண்டு காதுக் குயில்கள் வெட்கம் பொறுக்கமாட்டாமல் பறந்துவிட்டன.

வீரன் அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "எங் கண்ணுச்சே சொல்ற வார்த்தை. எனக்கு இருக்கிறதே, ஒரே மனசுதான் 'அதையும் உனக்கே தானே குடுத்துட்டேன் வீரி, உன்னை வீரன் மோசம் பண்ணிட்டும் போயிடுவானுன்னு தானே நினைக்கிறே. அதுதான் கெடையாது. நான் செத்தாலும் செத்து மடிவனேயல்லாமே மோசம் மாத்திரம் செய்ய மாட்டேன். வீரி நெறஞ்ச மேகத்தை தலைமேலே போட்டுச் சொல்றேன், என்னை நம்ப மாட்டியா"

"உன்னை நம்பரதுக்கு உங்கிட்டே என்ன இருக்கு. காணியா காப்பணமா, வெறும் ஆளு."

வீரப்பனுக்கு ரோசம் முகத்தைப் பிய்த்துக் கொண்டு வந்து விட்டது. "வீரி, என்னையா வெறும் பயல்னு சொல்றே, உனக்கு என்ன வேணுங்கேளு, பொழுது விழுகிறதுக்குள்ளே கொண்டாந்துடறனா இல்லியான்னு பாரு" என்று கட்டியங் கூறிக்கொண்டு எழுந்து நின்றான்.

அவன் நின்ற அந்தக் கம்பீரமான தோற்றத்தைப் பார்த்ததும், அவனை அப்படியே தழுவிக்கத்தான் தோன்றிற்று வீரிக்கு. ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. அவளும் ஒரு பெண்தானே.

"இன்னைக்குச் சல்லிக்கட்டு தானே".

"ஆமாம்"

"பண்ணிமலைத்தேவங் காலையுங்கூட வருதாமல்லோ"

"அது இல்லாட்டி சல்லிக்கட்டு என்ன ருசிக்கப் போகுது."

"ஆமா"

"இந்த வருஷம் அதோட கொம்புலே தங்கத்திலேயே கொடிப் பண்ணி சுத்திவிடப் போகராங்களாமே"

"அப்படியா சமாச்சாரம்"

"ஆமா, அந்தக் கொடியைக் கொண்ணாந்து எங் கழுத்திலே போட்டையின்னா, அதுக்கப்புறம், நீ என்ன சொன்னாலும் கேட்டுக்குவேன்" என்று வீரி சொல்லி

முடித்ததும் கொஞ்ச நேரம் அவளுடைய முகத்தையே திரு திரு என்று பார்த்துக் கொண்டே நின்ருன் வீரன். அவளும் அவனுடைய முகத்தையே இமை கொட்டாமல் பார்த்தாள். எதையோ ஒன்றைக் கண்கள் வழியாக இருவரும் பறிமாரிக் கொண்டார்கள்.

கலவரப் கலந்த குரலில் "வீரி, என்னே விருதாவிலே சாகவா சொல்லறே, அந்த யமன் மேலே கைபோட்டவன் ஒருவனுங்கூட மிஞ்சுனது இல்லியே. வேறெதாச்சியுங் கேளேன்." என்ருன்.

"அதுதான் உன்னே நம்பக்கூடாதுன்னு சொல்றது. மறச்சாதி உசுருக்கெல்லாம் பயந்துக்கிறதா. அந்தக் காளே மேலே கைபோட்டுச் சயிச்சுக்கிட்டு வந்தையானுத் தான், எம்மேலியுங் கைபோட ஒத்துக்குவேன். இல்லாட்டி வேறெண்ணும் வீரிகிட்டே நடக்காது சாமி' என்று சொல்லிக்கொண்டே கொம்பை விட்டெழுந்து போகத் தலிப்பட்டாள்.

"அப்படியே ஆகட்டும், வீரி. இன்னிக்குப் பொழு தோடவே அந்தக் கொடியைக் கொண்ணுந்து உங்கழுத் துலே போடல்லேன்னு, உம் மூஞ்சிலியே முழிக்காமப் போயிடறேன். அதுக்கப்புறங்கூட கிராக்கி பண்ணீட் டையுன்னு, நான் என்ன செய்யட்டும்?"

"வீரியை அப்படியா நிணக்கிறே. கொடியைக் கழுத்துலே போட்டையுன்னு அப்பவே உன்னே "மச் சான்" என்னு கூப்புடுவேன். அதுக்கு முந்தி எங்கிட்ட ஒண்ணுமே நடக்காது நிசம்மா"

"நிசமாத்தான், இந்த உச்சிக்கால் பொழுதுக்குப் பொதுவாத்தான் சொல்றேன்."

"நானும் அதே பொழுது மேலே தான் ஆணே வச்சுச் சொல்றேன். எம் பேச்சை நம்பரையா இல்லே யா"

"நல்லா நம்பரேன்."

"ஆனு.....இத்தன நாளாத்தவிதவின்னு தவிச்சுக் கிட்டுருந்தனே. இன்னிக்குக் கையுக்கும் எட்டி, வாயுக் கும் எட்டப்போற பக்குவத்திலே லபக்கின்னு தட்டிவிட் டுக் கூத்துப் பாக்கரையே வீரி", என்று மீண்டும் அவள் கையை எட்டிப்பிடித்தான். ஆனல் இந்தத் தடவை அவனே அவள் தொட விடவில்லே. தூர எட்டி நின்று கொண்டு,

"தங்கக் கொடியைக் கொண்ணுந்து எங்கழுத்துலே போட்டுட்டு என்ன வேணுமுன்னலும் கேக்கறேன்னு சொல்லியாச்சே, மறுபடி மறுபடி கை போடத்தானே வாரே," என்று அவள் அதிகமாக பிகு பண்ணிக் கொண் டதும் வீரன் அவள் பக்கம் போகாமல் "சரி, ஒருகை பார்த்துட்டு வந்திடறேன், எப்பிருந்தாலும் சாகத்தானே போறேன்," என்று சன்னத்து வீரனேப்போல் கைவீசி நடந்துபோய் ஆற்று மடுவுக்குள் சங்கென்று குதித்து மேடேறினுன். வீரி வேலியோரத்தில் வந்து நின்று கொண்டு வீரப்பனேயே பார்த்துக் கொண்டு நின்ருள். அவள் முகத்தைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு எச்சம் சொச்சம் இருந்த பயமெல்லாம் பறந்துபோய் நல்ல வீரம் கொதித்துக் கொண்டிருந்தது. போகப் போகப் பாடிக் கொண்டே போனுன்.

"கூடலூருப் பண்ணிமலே
அங்கத்தேவன் மயிலக்காளே
தொழுவு நிறக்கு முன்னே—என்
அத்தம் மகளே ஆருயி
முத்தம் மகளே மூக்காயி
தொலைக்குதாம் லட்சம் பேர்த்தை

இந்தப் பாட்டு வீரியினுடைய காதுகளுக்கு வந்து விழுந் ததும் அவளுக்குப் பொறுக்க முடியவில்லே. தொலஞ்சு போகிற லச்சம் பேர்த்திலே வீரனும் ஒருத்தனு இருந்துட்டா என்ன செய்வதென்ற கவலேதான் அவள் மனதை அரி அரி என்று அரித்துக் கொண்டிருந்தது.

2

தாமரைக் குளத்து மாட்டு மந்தையிலே ஒரே கூட்டம். தொழுவம் அலங்காரமாக்கப் பட்டிருந்தது. இரண்டு பக்கமும் சரஞ் சரமாக பரண்கள் கட்டப்பட்டு இருந்தன. பரணுக்கு மேலும், பரணுக்கு அடியிலும் ஜனக்கூட்டம் எங்கும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிக்கொள்ள முடியாது. கதனேகள் பிரமாதமாக வெடித்ததும் ஊர்ப் பெரியதனக் காரர்களெல்லாம் வந்து சௌகரியமாய் பரணிலே வீற்றிருந்த பிறகு, தொழுவத் துக்குள்ளே இருந்து காளேகள் ஒவ்வொன்ருக விரட்டி விடப்பட்டன.

தொழுவத்துக்கு முன்னுல், வாழை மரத்தோடு வாழை மரமாய்ச் சமைந்து போயிருந்தான் வீரன். இதற்குமுன் சல்லிக்கட்டுகளில் எல்லாம் வத்தலோ சொத்தலோ, நூற்றுக் கணக்கான உருப்படிகளேயும் பிடித்துப் பிடித்து வட்டவாசு செய்து விடுவதிலே வீர னுக்கு இணே ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

இந்தச் சல்லிக்கட்டிலே அப்படியல்ல. அவன் மனசு ஒன்றின்மீதும் பாயாமல் மௌனமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தான். தீவிரமான யோசனே அவ னேப் பிய்த்துக் கொண்டிருந்தது. அவனுக்கு நேராகப் பரண்மேலே பெண்கள் கூட்டத்துக்குள்ளே வீரியும் உட்கார்ந்திருந்தாள்.

அத்தனே ஆயிரம் ஜனக் கூட்டத்திலே வீரியின் இரு கண்களும் அவனேயே கண்காணித்துக் கொண்டிருந்தன.

வீரப்பனுக்கு யோசனே வேறு ஒன்றும் இல்லே. ஒரு சமயம் காளேக் கொம்பிலே செத்து விட்டால், வீரியி னுடைய குளுமை பொருந்திய முகத்தைத் தன் முகத்துடன் வைத்து ஒத்திக் கொள்ள முடியுமா அல்லது அவளுடைய விம்மிப் பருத்த மார்பைத் தன் மார்புடன் தான் அணேத்து அமரசுகம் பெறமுடியுமா என்பதுதான்.

ஆன வரைக்கும் கெஞ்சிக் கௌறிப் பார்த்தும், அவள் ஒரே பிடிவாதமாய் இசையமாட்டேன் என்று விட்டாளே, என்பதை அவன் நினைக்கும் போதெல்லாம் வெட்கம் பொங்கிக்கொண்டு வடிய, பரண்மீது இருக்கிற விரியின் முகத்தைப் பார்க்கக்கூட அவனுல் முடியாமல் போய்விடும்.

வெகு நேரம் ஆயிற்று. முக்கால் வாசிக் காளை களும் தீர்ந்துவிட்டன. ஒருவன் 'தடும்' அடித்துக் கொண்டு வந்தான். கூட்டம் பூராவும் பண்ணிமலைக் காளை வரப்போகிறது என்ற ஒரே ஆரவாரத்தில் இருந்தது.

"பண்ணிமலைக் காளையை விடப்போராங்கோ. அதோட கொம்புலே சுத்தி விடப்போகிற தங்கக்கொடி, அந்தக் காளையை யாரு புடிச்சாங்களோ அவங்களே வச்சுக்கலாமுங்க," என்று உரத்த குரலில் ஜன சாகரத் தின் ஒரு கோடியிலே கத்திவிட்டு நிறுத்திக்கொண்டான் "தடும்" காரன். மறுபடியும் பறை முழக்கம் வானத்தை யெல்லாம் கதிகலக்குகிறது.

முதல் முதலில் தடங்காட்டுவதற்காகத் தொழுவத் துக்குள்ளே இருந்து காளை பிடித்துக் கொண்டுவரப் பட்டது. பாரா சூரமான அதையும் 'அதன்' கொம்பு களையும் பார்த்தாளோ இல்லையோ. விரிக்கு மயக்கம் வந்துவிடும்போல் இருந்தது. அதைப் பிடிக்கவேண்டாம் என்று வீரனுக்கு ஜாடை செய்ய அவள் பட்டபாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆனல் வீரப்பன் காளையைத்தான் பார்த்துக் கொண்டே நின்ருனேயல் லாமல் அவளை ஏறெடுத்துங்கூடப் பார்க்கவில்லை.

காளை திருப்பிக் கொண்டு வரப்பட்டுத் தொழுவத் துக்குள் கட்டப்பட்டது, காளை வருதற்குமுன் எச்ச ரிக்கையாய்க் கதவை ஒன்று வெடித்ததோ இல்லையோ தொழுவத்துக்கு முன்னல் இருந்த அத்தனை பேரும் காலி. வீரப்பன் ஒருவன் மட்டும் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு நின்ருன், எல்லாருக்கும் ஒரே ஆச்சர்யம். "இந்த வருஷம் பண்ணிமலைக் காளைக்கு வீரப்பன் பலி யாகப் போகிருன்" என்று எல்லாரும் பேசிக்கொண் டார்கள். விரியிருந்த பரண்மேலும் அதேதான் பேச்சு. விரிக்கு உடல்கால் எல்லாம் நடுக்கல் எடுத்தது. வீரன் ஒரு தடவையாகிலும் அவளைப் பார்க்கமாட்டானு என்று, திறந்து வைத்த கண்களை மூடாமல் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

"ஆனல், அந்தப்பயல் என்ன நினைத்தானே, அவளை ஏறெடுத்துங்கூடப் பார்க்கவில்லை. தங்கக் கொடியைக் கையிலே வைத்துக் கொண்டுதான் அவளைக் கண்ணெடுத் துப்பார்க்க வேண்டும் என்ற வைராக்கியம் அவனுடைய நெஞ்சிலே சேகெறிப்போய் இருந்தது.

பறை முழங்கி அடங்கிற்று. தொழு வாசலிலே கயறு வறுவி விடப்பட்டது. பண்ணிமலைக்காளை, அந்தக் கொம்பன் மகா வில்லாதி வில்லன், தொழுவத்துக்குள் இருந்து நேரே ஓடாமல், வாசலில் வந்து நின்று, இடது சாரி, வலது சாரியாய்ப் பக்கவெட்டுப் பார்வையை போட்டுக்கொண்டு நின்றது.

வீரப்பன் தவிர, மேலே நின்று கொண்டிருந்த நாலைந்து பேர், காளை பார்த்ததோ இல்லையோ ஒரே லாகாய் லாகிப் பரண்மேலே ஏறிக்கொண்டார்கள். வலது சாரிப்பக்கம் அதன் கொம்பிலே பாய்ந்து பிடிக்கப் பதக்கம் போட்டான் வீரப்பன். "சித்"தென்று அனல் மூச்சைப் போட்டுக்கொண்டு அந்த எமன் அவன்மேல் பாய்வதற்கும், வீரப்பன் அதின்மேல் பாய்ந்து இரண்டு கையாலும் இரண்டு கொம்புகளைப் பிடிப்பதற்கும், பார்ப்பதற்கு ரொம்பவும் அற்புதமாய் இருந்தது.

வீரனுடைய கைகள் கொம்புகளைப் பற்றியதோ இல்லையோ, காளை "ஜிவ்"வென்று தலையை வீசிப் பின் வீசு வீசிற்று. வெகு தூரத்திலே ரப்பர் பந்தைப் போலப் போய் விழுந்தான். அதே கொடியில் முரட்டு வேகத்தில், காளை வீரப்பன் விழுந்த இடத்தில் நின்று, அவனைக் குத்திச் சின்னப்பின்னப் படுத்த அதன் வாசிக் கொம்புகளைக் கவிழ்த்து, பூமியோடு, பூமியாய்க் குழி வைத்தது. இந்தத் தடவை அதன் இரண்டு கொம்பு களையும் பிடித்து ஒரே அந்தரில் நிமிர்மீது விழுந்து, சுழிமுனை பார்த்துக் கையால் அடக்கிப் பிடித்துக் கொண்டு, காளை துள்ள, அதோடு ஒட்டினுற் போலக் கூடவே துள்ளிக்கொண்டு பதினைந்து நிமிஷத்திற்குமேல் போராடினன். காளைக்குச் சீக்கிரம் சலுப்புத் தட்டிற்று. தலையாட்டம் கொஞ்சத்திற்குக் கொஞ்சம் அடங்கிற்றே இல்லையோ "சரேல்" என்று காளையின் கொம்பு நடுவே தலையைப் போட்டுக்கொண்டு பாக்கி உடல் பூராவையும் அதன் உடல்மேலே சவாரி போட்டுக்கொண்டு, இரண்டு கைகளும் கொம்புகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள, பல்லாலேயே தங்கக் கொடியைக் கடித்தான். காளை புயல் வேகத்திலே பறக்க ஆரம்பித்தது அவனைத் தூக்கிக் கொண்டு.

அற்றுப்போன கொடியை ஒரு கையாலே பற்றிக் கொண்டு, காளைமேல் இருந்து தப்பித்து இறங்கும்போது தான்வீரன் ஒரு பெரிய தப்பிதத்தைச் செய்துவிட்டான். தங்கக் கொடி கையிலே அகப்பட்டதோ இலலையோ. விரியே அவன் கையில் கிடைத்துக் கொண்டதைப்போல நினைத்துக்கொண்டு நிதானத்தை இழந்துவிட்டான். கொடியைக் கையிலே ஏந்திக்கொண்டு காளையை விட்டு விட்டுத் தொழுவாசலை நோக்கி நடந்தானே இல்லையோ, கொஞ்ச தூரம் போன காளை, திரும்பி வந்து அவன்மீது பாய்ந்து, வயிற்றிலே குத்தித் தூக்கி ஒரு குலுக்குக் குலுக்கி எறிந்தது.

குடல் வேறு உடல் வேறு கரத்தக்கறியிலே துவண்டான் வீரப்பன். காலை மறுபடியும் ஆவேசத்துடன் கொம்புக்குறி இட்டுக்கொண்டு, காலால் மண்ணை வாரி விட்டுக் கொண்டு, செறுக்கடித்தது. வீரப்பனுக்கு உதவி செய்வதற்கு யாருமே முன்வரவில்லை. எப்படி வருவார்கள் எமன் பக்கத்திலேயே நின்று கொண்டிருக்கிறதே.

பரண்மேல் இருந்த வீரி, ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து இறங்கி ஓடிவந்தாள். அவனுடைய அருமை அவளுக்குத் தானே தெரியும். அவள் பக்கத்திலே வந்ததும் காளை என்ன நினைத்ததோ ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டது. வெளியே வெள்ளரளி மாலை போலச் சுருண்டு கிடந்த, குடலை வயிற்றுக்குள் தள்ளித் தன் முந்தானையைக் கிழித்துக் கட்டுப்போட்டாள். உதிரம் அதிகமாகப் பிரவாகம் எடுத்து விட்டதாலே மயக்கம் வரும் நிலையிலே கிடந்தான் வீரப்பன். அவனுடைய விழிகள் வீரியின் முகத்தைப்பார்த்த வண்ணமாய் உள்ளே சொருகிக்கொண்டன. அதற்குள் எல்லோரும் ஓடிவந்து வீரப்பனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். அவன் கையிலே பிடியோடு பிடியாய் இருந்த வீரக்கொடியைப் பார்த்தது, வீரிக்கு மாலை மாலையாய்க் கண்ணீர் வடிந்தது.

3

வீரிக்கு அத்தை மக்கள் இரண்டு பேர். அதில் வீரப்பன் அவளுக்குச் சின்ன அத்தை மகன். பெரிய அத்தைக்குக் கொஞ்சம் பூஸ்திதி உண்டு. வீரியின் தகப்பனுக்கு அவளை வீரப்பனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க மனசே இல்லை. ஏனென்றால் அவன் வெறும் ஆள்.

இப்பொழுது வீரப்பன் ஆஸ்பத்திரிக்குப் போய் இரண்டு மாதத்திற்கு மேல் ஆகி விட்டது. அவனுக்கும் வீரிக்கும் உள்ள ஸ்நேகிதம் ஊராருக்கெல்லாம் தெரியாமல் இல்லை. அதுவும் காளை குத்திப் போட்ட இடத்தில், வீரி நடந்து கொண்டமாதிரி, அந்த ஸ்நேகிதத்தைத் துலாம் பரப்படுத்தி விட்டது. சமயத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு வீரியின் தகப்பன் அவளை வலுக்கட்டாயத்திலே அவளுடைய பெரிய அத்தை மகனுக்குப் பிடித்துக் கட்டிக்கொடுத்துவிட்டான்.

சமாச்சாரத்தை மனசிலே போட்டுக் கொண்டு, பழிக்குப் பழிவாங்கக் காலம் பார்த்துக் கொண்டிருப்பதிலே பெண்ணுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுத்து மரியாதை செய்யவேண்டும். வீரி அவளுடைய பெரிய அத்தை மகனுக்குத் தன்னைக் கட்டிக் கொடுக்க வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள். ஆனால் என்ன வந்தாலும் சரியென்ற வீராப்பிலே கயிறைத்திரித்து அவளுடைய கழுத்திலே கட்டிவிட்டான்.

வீரியும் வீராப்புக்காட்ட ஆரம்பித்து விட்டாள். ஒரு நாளுங்கூடப் புருஷனுக்கு ஒத்து நடந்திருக்கவே மாட்டாள். அவன் பேருக்குத்தான் புருஷனை இருந்தானே யல்லாமல் தாம்பத்ய சுகம் என்பதை ஒரு கிமிஷ நேரங்கூட அனுபவிக்க மாட்டான். வீரிக்குப் பூரா உயிரும் ஆஸ்பத்திரியிலே இருக்கும் வீரப்பன் மேலேதான். அவன் எப்பொழுது வருவானே என்று நாட்களை எண்ணிக்கொண்டே இருந்தாள். அதற்குமேல் மாதம் ஒன்று கழிந்து மூன்று மாதத்திற்குப் பிறகு புனர் ஜென்மம் எடுத்துக்கொண்டு வந்து வீடு சேர்ந்தான் வீரன்.

வீரிக்குக் கல்யாணம் ஆய்விட்ட சமாச்சாரம் அவனுக்கு ஆஸ்பத்திரியில் இருக்கும் பொழுதே தெரியும். எல்லாவற்றையும் விதியின் மேல் தூக்கிப்போட்டு வீரியை மறந்து விடுவதிலே ரொம்ப தீவிரமான முயற்சி செய்து கொண்டிருந்தான்.

வீரப்பன் வீடு வந்து சேர்ந்தது தான் கோடு, வீரி இன்னும் அதிகமாகப் புரட்சி செய்ய ஆரம்பித்து விட்டாள். அவளுடைய புருஷன் அவளை என்ன சின்ன பின்னம் செய்து பார்த்தும், அவன் அபிலாஷை ஒரு நாளுங் கூடப்பூர்த்தியே யாகவில்லை.

இந்தச் சமாச்சாரங்கள் எல்லாம் வீரனுக்குத் தெரியாமல் இல்லை. என்ன செய்வதென்றே அவனுக்குத் தோன்றவில்லை. எப்படியாகிலும் வீரியினுடைய மனதை மாத்தி, அவளுடைய புருஷனுடன் அமைதியாய் வாழும்படி செய்து வைக்கவேண்டும் என்று நினைத்தான். அதற்காக ஒரு சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

எத்தனை நாளுக்குத்தான் அக்கப் போரைக் கட்டிக் கொண்டு மாறடிப்பது. வீரியை அப்பன் வீட்டுக்கே விரட்டி விட்டான் அவளுடைய புருஷன். அவளும் கவலை என்பது சிறிதும் இல்லாமல், பழையபடி தகப்பனுடைய மாந்தோப்புக் காவலுக்கு வந்து குந்திக் கொண்டாள். வீரன் எவ்வளவோ மாறுதல் அடைந்திருந்தான் என்றாலும் பொருந்தல் ஆற்றில் குளிப்பதில் மட்டும் மாறுதல் அடையவே இல்லை. பழைய தோப்புத் துறையை விட்டு விட்டு வேறு எங்கு குளித்தாலும் அவளுக்கு ருசிக்காது.

அன்று வழக்கம்போல் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது அவன்மீது "சொத்" என்று ஒரு மாம்பழம் வந்து விழுந்தது. வீரன் தலையைத் தூக்கித் தோப்புக்குள் இருக்கும் வீரியைப் பார்த்துவிட்டு, ஏனோ முகத்தைக் கீழே போட்டுக்கொண்டான். கொஞ்ச நேரம் கழித்து வீரியாகவே அவன் பக்கத்திலே வந்து நின்றுகொண்டு,

"மச்சான்" என்றாள் ஆதரசம் கனிந்த குரலில். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. "அடி பாவி மகளே என் மானத்தைக் கெடுத்து மண்ணையிலே வைக்கவா எங்கிட்டே வந்து நிக்கிறே" என்றான் கடுகடுப்புடன்.

"ஓ மச்சான், நீ யாருன்னு கொஞ்சுக்கிட்டுப் பேசறே மறச்சாதிலே பொறந்த பொட்டச்சிருக்கி, குடுத்த வார்த்தையைக் காப்பாத்தாமல் போகமாட்டான்னு உனக்குத் தெரியாது. ஏது ஒண்ணும் தெரியாதவளுட்டப் பேசரையே" என்றாள் வீரி.

"ஏ வீரி, என்னை மச்சான் கிச்சான்னு வரிசை வச்சுக் கூப்படாதே. நீ இன்னொருத்தன் சொத்தாயிட்டாயா

இல்லேயா. நான் இப்போ உங்கிட்டே நின்னுக்கிட்டுப் பேசரதே பாவம். போய் மரியாதையா அவன்கூடச் சந்தோஷமாக் காலம் போடு. அவனுரு நானுரு. எங்க பெரியம்மா மகன் தானே. என்னேவிட அவன் பண்க்கார னுங்கூட. அறிவு கெட்ட கழுதை; உலகமல்லாஞ் சிரிக்குது. இனி என்னேயுஞ் சிரிக்கோணுமா?"

"நான் உன்னேட சொத்துத்தான். உங்க பெரியம்மா மகனுக்கும் சொல்லித்தான் இருக்கேன். என்னே வந்து கட்டிக்கிட்டையுன்னு, நானும் நீயும் எலியும் பூனேயுந்தானுன்னு, கேப்பார் பேச்சைக் கேட்டுட்டு வந்து வலுக்கட்டாயத்திலே தாலியைக் கட்டிட்டாப்படி, அவன் எனக்குப் புருஷன் ஆயிடறதுன்னு அர்த்தமா? நானும் அவனுக்கு ஆள் ஆயிடறதுன்னு அர்த்தமா? மச்சான், அன்னிக்கே நான் உனக்குப் பொஞ்சாதி ஆயாச்சு. உங்க பெரியம்மா மகனுக்கு என் உடம்பைக்கூடத் தொட விட்டதில்லே. வா, தோப்புக்குள்ளே போகலாம்" என்று அவன் கையைப் பிடித்தாள்.

வீரனுக்கு மீற முடியவில்லே. அவள் முகத்தைப் பார்க்கவும் சகிக்கவில்லே. ஒருபுறம் அன்பு அழைக்கிறது இன்னொரு புறம் உலகம் உருத்துப் பார்க்கிறது. எப்படியோ அவளிடம் இருந்து கையை விடுவித்துக் கொண்டான். "வீரி, நான் சொல்வதைக் கேளு. நானும் இந்த ஊரோட ஊரா இருக்கணும்னு, உம் புருஷனுேடே சந்தோஷமாக் காலம் போடு. இல்லேயானுச் சொல்லு, கண் காணுத சீமைக்குப் போயிடறேன்" என்றான்.

"சரி புறப்படு. நானும் உங்கூடத்தான் வருவேன். இன்னொருக்கா என் புருஷன் வீட்டுக்குப் போகச் சொல்றதைவிட இந்த மடுவுக்குள்ளே விழுகச் சொன்னாலும் விழுந்து விடுவேன். ஐயோ மச்சான் மனதை மாத்திக்கிற துன்னு என்னுலே முடியாது போலிருக்கே!"

"அதெல்லாம் முடியும் போ. அவனுக்கு மோசஞ் செய்யாமே அன்பாயிருந்தையுன்னு, அவனும் உன்னே உசுருக்குசுரா வச்சுக்குவான்."

"எனக்கு மோசஞ் செய்தவங்களுக்கு எப்படி மோசம் செய்யாமே இருக்கட்டும். என்னேட பொழப்புலுஞ் சந்தோஷத்துலேயும் மண்ணள்ளிப் போட்டவங்க பொழப்புலேயும் மண்ணள்ளிப் போட்டுத்தான் வேற வேலே பார்க்கப் போறேன். சமையங்கெடச்சா தலேயிலே மொளகாய்கூடத்தான் அரைச்சுப்போட்டு வந்திடுவேன்" என்று நாக பாம்புக் குட்டி சீறுவதைப் போல் சீறிக் கொண்டு பேசினுள் வீரி. வீரனுக்கு பதில் என்ன சொல்வதென்றே புலப்படவில்லே. "நீ என்னதான் செய்தே, உன் புருஷன் இருக்கிற வரைக்கும் உன்னே ஏறெடுத்தாப் பார்க்கப் போறேன். நீதான் புத்தியை வித்துத் தின்னு போட்டையுன்னு, நானுமா வித்துப்போட்டுடும்? என்னுடைய பேச்சைக் கேக்கறயா இல்லேயா? மரியாதையாப் போயி உன புருஷங்கிட்டே இரு" என்று புத்தி சொன்னுன்.

ஏதோ அதிசயத்தைக் கண்டு கொண்டவனேப் போன்ற பாவனேயில் முகத்தை மாற்றிக் கொண்டு "எம் புருஷன் இல்லாட்டி என்னே ஏறெடுத்துப் பாப்பையல்ல. நிஜமாகச் சொல்லுமச்சான். இந்த அனுதிக்கு நீயாச்சியும் சந்தோஷப்படறுப்படி ஒரு வார்த்தையைச் சொல்லு இந்த உலகமெல்லாம் ஒட்டாச் சேந்துட்டு என் ஆசையியெல்லாம் இடிச்சுக் குட்டிச்செவரு செய்திருச்சு. நீயாச்சியும் மனசுவச்சு உங்கைப்பட ரேண்டு கூடை மண்ணுந் தண்ணியும் போட்டு இடிஞ்சதை யெல்லாங் கட்டிக்கொடேன்" என்று சொல்லிக் கொண்டே கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர் வடித்தாள் வீரி.

வீரப்பன் திரும்பிப் பார்க்காமல் நடந்தான். வீரி வெறுத்துப் போன குரலில், "அதையும் பார்க்கத்தான போறேன் மச்சான். இன்னும் ரெண்டே வாரத்துக்குள்ளே பாரு; எப்படியெல்லாம் கதை நடக்குதுன்னு. நீ இப்பச் சொன்ன வார்த்தையை மட்டும் காப்பாத்தாமப் போ, அப்பறமல்ல நான் பேசிக்கப் போறேன். ஒரு பொட்டச்சிருக்கி என்ன பண்ணிப் போடுவான்னு, லேசாச்சத்தானே நீயும் நெனச்சுக்கிட்டிருக்கே இரு இரு" என்று சொல்லிக் கொண்டது அவன் காதுகளுக்குக் கேட்காமல் இல்லே. அவன் என்ன செய்வான்? நடையைக் கொஞ்சம் முருக்காக ஓட்டிச் சிக்கிரம் மறைந்து விட்டான்.

4

ஒரு மாதம் வள்ளுசாக முடியவில்லே. வீரி தன் புருஷனேத் தின்றுவிட்டு விதவையாகி விட்டாள். ஊரார் பேசிக் கொள்ளும் பதியைக் காது கொடுத்துக் கேட்க முடியாதுபோல் இருந்தது. "புருஷனுேடே சிராடிக் கொண்டுபோன முண்டை, அப்படியே அப்பன் வீட்டிலேயே இருந்திருந்தால் என்ன? மறுபடியும் பழிகாரி, கொண்டவன் வீட்டுக்கே வந்து ஒரு மாதத்துக்குள்ளே மருந்தை வைத்துப் புருஷனேத் தீர்த்து விட்டாள்" என்று மூலே முடுக்கெல்லாம் ஏசிக்கொண்டிருந்தது.

வீரி அதையெல்லாம் லட்சியமே செய்யவில்லே. எது எப்படிப் போனுலும் சரி. வீரப்பனுடைய நெஞ்சை ஒரு தரம் தழுவிவிட வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அவளுக்குள் இருந்தது. அதற்காக அவள் எந்த அநியாயத்தை வேண்டுமானுலும் செய்யத் தயாராகி விட்டவளுடன் என்ன செய்வது?

அதே பொருந்தல் ஆற்றுக்குள்ளே தான் வீரப்பனேக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டாள். வீரப்பனுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. "அடி பாவி மகளே, உம் புருஷனே மருந்து வச்சே தீர்த்துட்டையே உனக்கு நரகந்தான் கிடைக்கும்" என்றான்.

"மச்சான், நரகமே கிடைச்சாலுஞ் சரி, அல்ல அதுங் கூடக் கிடைக்காட்டியுஞ் சரி, நீ எனக்குக் கெடச்சாப் போதும். இது நீத்துக் கட்டிக்கிற சாதிதானே. என்ன சொல்லே: அன்னிக்கு நீ சொல்லிப்பிட்டுப் போன வார்த்தையைக் காப்பாத்தரையா, இல்லே இந்த மடுவுக்குள்ளே விழுந்து சாகட்டுமா?" என்றாள் வெறுப்புடன்.

வீரப்பன் அவளுடைய முகத்தைப் பார்த்தான். அன்புக் கண்ணீர் அவனை மீறிப் பேச்செடுக்காமல் செய்துவிட்டது. "வீரி பெரிய பழியைக் கட்டிக்கிட்டையே. என்னோட இருந்து பொழச்சாப்படி பழியெல்லாம் போயிட வா போகுது? உன் இஷ்டம்போல நான் நடந்துக்கத் தயார். என்னை என்ன செய்யச் சொல்றே?' என்றான்.

"நிசமா மச்சான்? நான் சொன்னபடி கேட்டுக்குவையா?"

"கண்ணைக் கேட்டுக்கறேன், என் மனசும் உன்னையல்லாமே வேறவ மேலயும் பாயமாட்டனுங்குது, வீரி. இனி ஏன் அழுகறே? நடந்ததெல்லாம் நடந்துபோச்சு" என்று அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு சொட்டுச் சொட்டென்று கண்ணீர் வடித்தான்.

கொஞ்ச நேரம் அழுத கண்ணுடன் வீரப்பனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். கண்டறியாத புதுமைகளை எல்லாம் அவன் முகத்தில் கண்டாள். லேசான நாணம் அவளுடைய முகத்தில் பாய்ந்து பிகுவை வரவழைத்துக் கொண்டது. முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டது வீரப்பனுக்கு சகிக்கவில்லை.

"வீரி, நான்தான் உன்னுடைய சொத்துன்னு சொல்லிட்டனே. இன்னும் நம்பமாட்டேங்கறையே" என்று சொல்லிக்கொண்டே அவளுடைய தோளின் மீது கையைப் போட்டு அணைத்துக்கொண்டே மாந்தோப்புக்குள் கூட்டிக் கொண்டே போனான்.

மாங்கொம்பின் மீது அவளை உட்கார வைத்துவிட்டு அவனும் உட்கார்ந்து கொண்டான். "வீரி என் முகத்தைப் பாரு. ரொம்ப நாளத்த தாகம் இன்னிக்காச்சி தீருமா?" என்று அவளை நெஞ்சோடு அணைத்தான்.

ஆனால் அவள் சடக்கென்று மடியிலே இருந்து விடுவித்துக் கொண்டு, "ஆமா, அன்னைக்கு ஒரு நாள் எங் கழுத்துலே தங்கக் கொடியைப் போடறேன்னு சொன்னியே, அதைப் போட்டாத்தான், இப்ப நீ சொல்றப்படி கேப்பேன்" என்றாள்.

"அடடே, மறந்தே போயிட்டேன். ஆஸ்பத்திரிலே இருந்து வந்த மக்கா நாளே உனக்குச் சொந்தமான அந்தத் தங்கக் கொடியை உன்னோட மாமரத்துக்கே குடுத்துட்டேன். பாரு எடுக்கறேன்" என்று ஓடிப்போய் மாமரப் பொந்துக்குள் வைத்திருந்த தங்கக் கொடியை எடுத்துக் கொண்டு வந்து கழுத்தில் போட்டான்.

வீரி அவனுடைய நெஞ்சிலே பாய்ந்து தழுவிக்கொண்டாள். "ஆண்டவன்தான் எப்படி எப்படியெல்லாம் ஆட்டங் காட்டிக் கூத்துப் பார்த்திட்டான். நம்ம தலையெழுத்துக்கு ஆண்டவனைச் சொல்லி என்ன பண்றது" என்று அங்கலாய்த்துக் கொண்டாள். மறு விநாடி அவனைச் சென்தூக்காய்த் தூக்கிக்கொண்டு நாணல் புதருக்குள் போனான். அத்தனை நாளும் அடங்காமல் கிடந்த இருவருடைய தாகமும் நாணல் புதருக்குள்தான் அடங்கிற்று.

மறுபடியும் இருவரும் மரக்கிளையின் மீது உட்கார்ந்து கொண்டார்கள். வீரியின் முகத்தில் திருப்திக்கு பதிலாக யோசனையும் வெறுப்பும் குடிகொண்டிருந்தது. வீரன் அவளுடைய முகத்தைத் தனக்கு நேராகத் திருப்பிக் கொண்டு "என்ன வீரி யோசனை செய்யறே"என்றான்.

"யோசனை ஒண்ணும் இல்லே மச்சான், இன்னொருக்கா உங்கோட விளையாடலாமான்னுதான் யோசனை செய்யறேன்" என்று அவள் சொன்னதும் "கல்லா விளையாடே" என்றான்.

"இப்போ ஒரு தமாசு," என்று சொல்லிக்கொண்டே அவனுடைய மேல் துண்டை எடுத்துக் கட்டினாள். விளையாட்டென்றே நினைத்துக்கொண்டு, வீரன் சிரித்துக் கொண்டே இருந்தான்.

பின்பு சடக்கென்று போய் வேலியோரத்தில் ஆற்று மேட்டின்மேல் நின்று கொண்டு "மச்சான் நான் இங்கே வந்து எதுக்கோசரம் நிக்கிறேன் தெரியுமா?" என்றாள்.

"தெரியலியே".

"உலகத்துக்கிட்டிருந்து கல்ல பேர் சம்பாதிச்சுக்க"

"நீ என்ன தான் செய்தே நீ பழிகாரி பழிகாரி தான். இந்த உலகம் இன்னொருக்கா நல்ல பிள்ளைன்னு சொல்லப் போகுது"

"செத்துப்போனு"

"ஐயோ, படு பாவி! செத்தா போகப்போறே? வேண்டாம் வீரி. இதுக்கா என்னைப் பின்கட்டாக் கட்டுனே"

"மச்சான், நான் இருந்து என்ன பண்ணப் போறேன். என்னைப் பழியெடுத்தவங்களையெல்லாம் பழிக்குப் பழி எடுத்துப் போட்டேன் தங்கக் கொடியைக் கூட உங்கைபடவே கழுத்திலே வாங்கிப்போட்டேன். உன்னையும்....."என்று நாணத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"வீரி, வீரி இங்கே வா. நாம் ரெண்டு பேருமா இந்த உலகத்திலே பொழைக்கலாம். புத்தி இல்லாத உலகம் என்னமோ சொல்லிட்டுப் போகுது. வந்து என் கட்டை அவித்து விடறையா இல்லையா?"

விழிகளை எடுத்து ஒருதரம் வீரனையே உத்துப் பார்த்தாள். கம்மிப்போன குரலில் "மச்சான், உலகும் நான் பழியைச் சம்பாரிச்சுத்தர எனக்கு மனம் இல்லே. ஏன் மச்சான் சித்த நேரத்துக்கு முன்னாலே இந்த நாணப் புதருக்குள்ளே அனுபவிச்சோமே, அப்படித்தானே இருக்கும் இந்த ஜென்மம் பூராவும். வீரனுக்கு இந்த இரண்டு நாழி சுகமே போதும். நீ சொகமா இரு மச்சான்"என்று சொல்லிக் கொண்டே பொருந்தல் மடுவில் எட்டிக் குதித்தாள் வீரி. அதற்குள்ளே வீரப்பன் கைக்கட்டை அவிழ்த்துக் கொண்டு பின்னாலேயே குதித்து மூக்களித்தான். ஆனால் வீரியின் பிரேதத்தைத் தான் அவனால் கொண்டுவர முடிந்தது.

LOTUS MILLS LTD.

SUNDARAPURAM

PODANUR, S. I. Rly.

Telegrams: "LOTUS"
(PODANUR & COIMBATORE)

Telephone :
124

Managing Agents &
Secretaries

LOTUS AGENCY LTD

Authorised Capital		Rs. 7,00,000
Subscribed & Paid up Capital		Rs. 2,88,200
Spindleage:	Spinning	13,240 spindles
	Doubling	648 ,,
	Total	13,888 Spindles

Counts of Yarn manufactured **20s to 40s and 2/20s**

Registered Office

SUNDARAPURAM P. O.

PODANUR S. I. RLY.

கக்கூ.....ஊ.....ஊ

சுகி

'கக்கூ...ஊ'

'கக்கூ.....ஊ'

'கக்கூ.....ஊ'

'கக்கூ.....ஊ'

மா மரக்கிளையிலிருந்த குயில் கூவினால் இன்னொரு கிளையிலிருந்து எதிரொலி வரும் என்பது நாம் கண்ட நித்திய உண்மை. கக்கூவின் பெயரை பல தடவை கூவியும், மலர் வதனத்தோடு அவள் எட்டிப் பாராது இருக்கவே, புனுகுப் பூனை போல உள்ளே நுழைந்தான் கூப்பிட்ட இளைஞன்.

தீபாவளிப் புடவையும் தீபாவளிக்கு என எடுத்த இருநூறு ரூபாய் விலையுள்ள ஜாக்கெட்டும்—நேயர்கள் புடவையின் விலையை யூகித்துக் கொள்க—அணிந்து ஜகஜ்ஜோதியாக டால் அடிக்கும் சர்வாலங்கார பூஷிதையாய், சோபாவில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

'கக்கூ' என்றுவ் உள்ளே வந்த தாமோதிரம். 'கக்கூ' தலையைத் திருப்பிக் கொண்டாள்.

'உன் காதில் கிடப்பவை உண்மையான வைரமாக இருந்தால் நீ என் வார்த்தைகளைச் செவி மடுத்திருப்பாய்'

போலி வைரம் எனச் சுட்டிக் காட்டியதும் கோபம் பால் போல பொங்கிக் கொண்டு வந்து, 'என்ன சொன்னீர்கள். இதோ இருங்கள்' என்றவள் மின்னல் போலப் பாய்ந்து, மானுக மருண்டு ஓடியவள், அன்னமாக அசைந்து வந்தாள். அவள் கையில் வைரம் வாங்கிய கடையின் 'பில்' இருந்தது.

'கக்கூ, என் உடல், பொருள், ஆவி—இதற்கு மேலாக எதுவும் இல்லாததால்—இம் மூன்றையும் உன் பாத கமலங்களில் காணிக்கையாக வைப்பேன். என் காதலை ஏற்றுக்கொள்'

'உயிரை விட்டு விடுவேன் என்றால், நான் என்ன பலி பீடமா? பலி பீடம் ஒரு நாளும் பிறர் உயிரைக் காப்பாற்றியதாக நான் கேட்டதில்லை. தாங்களும் அப்படியே விட்டு விடுங்கள். தீபாவளி அன்றுதான் பகாசுரனும் ஒழிந்தான்.'

'கக்கூ. உன் தீஞ் சொற் பவளவாய், பகாசுரன் பெயரை உச்சரிக்கலாமா? பகாசுரன் அல்ல, தீபாவளி அன்று ஒழிந்தது. அவன் பெயர் வேறு''.

'அவன் பெயர் என்ன, சொல்லுங்கள்' என்று கல்லுங் கனிய கற்கண்டி தழாள் சொல்லவே, தாமோதரன் இளகி விட்டான்.

'அவன் பெயர் நரகாசுரன்—அந்தப் படுபாவி...?'

'ஐயோ, தீபாவளி நல்ல நாளும் கிழமையுமாக ஏன் அசுர குலத்தைப் பற்றிப் பேச வேண்டும். வேறு ஏதாவது பேசுங்கள்'

'நம் காதல் என்னாகிறது?'

'தங்களை நான் மணக்க முடியாது

தங்களை நான் மணக்க முடியாது

தங்களை நான் மணக்க முடியாது'

'மூன்று தரம் சொல்ல வேண்டுமா? கக்கூ!'

'இந்த விஷயத்தை எத்தனை தரம் வேண்டுமானாலும் நான் சொல்லுகிறேன். தங்களை நான் மணக்க முடியாது.'

'நிறுத்து கக்கூ. நீ முடியாது என்று சொல்வதால் நான் உயிரை மாய்க்க நேரிடும். சாவு என்பதை நீ கட்டும் விலையுயர்ந்த பட்டுப் புடவை போல அவ்வளவு அற்பமாக நினைக்காதே. இந்த உடலிலிருந்து களையப்படும் உயிர் மீண்டும் உடலோடு பட்டுப் புடவை போல சுற்றிக் கொள்ளாது. நான் இறந்து விட்டால், இந்த உடல் பயனற்று விடும். என் இளங் கற்பனைகள், சிந்தனை வட்டங்கள் எல்லாம் மடிந்து விடும். சாவு பயங்கரமானது. மனித வாழ்வின் இறுதித் திரை.....'

இப்படி இளைஞன் தாமோதிரம் பேசிய போது, வெளியே தொங்கிக் கொண்டிருந்த திரையிலே வேலைக்கார முனிசாமியின் மீசை மட்டும் தெரிந்தது.

'மிஸ்டர் தா...மோதிரம்'

கக்கூவின் குரலில், 'தா'விற்கு அப்பால் ஒரு கால் புள்ளி நிறுத்தல் விழுந்து பின்பு மோதிரம் எனத்



தொடரவே, ஸ்ரீமான் தமது மோதிரத்தைக் கழற்றி அவள் கையில் கொடுத்தார். சும்மா கொடுக்கவில்லை.

'கக்கூ. இதோ இந்த மோதிரம் நம் இரு உயிர்களை ஓர் உயிராகவும், இரு உடல்களை ஓர் உடல்களாகவும் வைக்கும் ஓர் அற்புதச் சங்கிலி' என்றபடியே கொடுத்தான்.

'தங்கள் பெயர் தாமோதிரந்தானே. நான் தங்கள் மோதிரத்தைக் கேட்கவில்லை, மிஸ்டர் தாமோதிரம்'

'பிசாசுகளிடம் உனக்கு நம்பிக்கை இருந்தால்'

'செத்த பிசாசா? சாகாத பிசாசா?'

'வேடிக்கையாகப் பேச இது நேரமில்லை கக்கூ. என் உயிரை இந்த விட்டிலேயே விட்டு விட்டால், பிசாசாக நின்று பயமுறுத்த நேரிடும்'

'உயிரோடு வந்து தாங்கள் வதைப்பதை நான் அனுபவித்த பின்பு, உங்கள் பிசாசைக் கண்டு பயப்பட எனக்குப் பைத்தியமா என்ன?'

'உன் நெஞ்சம் கருங்கல்லா? சாவைவிடப் பயங்கரமானது மனித ஆயுளில், மானிட வாழ்க்கையில் வேறு என்ன?.....'

குறுக்கிட்டுக் கக்கூ 'கலியாணம்' என்றாள்.

'சாவின் முன் வாசற்படியில் வலதுகாலை வைத்து விட்டேன்'

'மிஸ்டர் தாமோதரம், சாவு என்பது ஆன்மாவிற்கும் உடலுக்கும் ஏற்படும் ஓர் பிரிவு. மரணம் என்பது அறிவல்ல. சாகின்ற உயிர் வேறு உருவம் பெறுகிறது என்பதும், ஸ்தூல சரீரத்தை விட சூட்சம சரீரமே நன்மை பயக்கும் என்பது.....'

வெடிக்கும் என நம்பிய வாணம் புஸ் வாணம் ஆகி விட்டதைக் கண்ட குழந்தைகள் அதிருப்தி இலங்கும் முகத்தோடு 'காதலை விரும்பித் தவிக்கும் இந்த வண்டுக்குத் தத்துவ விளக்கம் பேசுகிறாயே. புழுப் போலத் துடிக்கும் என் இதயச் சோகம் உன் மன வானிலே மின்னவில்லையா?'

'தங்கமே வண்டு புழு என்று சொல்லிக் கொண்டால், வேலைக்கார முனுசாமி 'போர்ட்டோ மிக்ஸர்' கொண்டு வருவான்'

'மிக்சர் உடம்புக்கு நல்லதுதானே'

'சுண்ணாம்புத் தண்ணீரில் அமோனியம் சல்பேட் கலந்து உருவாவது போர்ட்டோ மிக்சர்'

'ஐயோ, காதல் அருவி, அமிர்த தாரையாக விழும் என விரும்பி வந்தவன் தலையில், பூஞ்சக்காள நோய்க்குரிய மருந்தை ஊற்றவா? அடா தெய்வமே.....

சோகம் தாங்காது தடால் என தாமோதிரம் விழுந்தான் சோபாவில்.

அந்த வேளையில் ஸ்ரீமான் அய்யாக்குடம் அவர்கள் வேலைக்கார முனிசாமி முன் தொடர அந்த அறைக்குள் வந்தார்.

'பாத்தீங்களா எசமான். நாஞ் சொன்னது போலவே இங்கே உசிரை விட்டுட்டாரு'

'எப்படி அப்பா இந்த விவரம் தெரிந்தது?'

'நான் எனது அறையில் உட்கார்ந்து ஜீர்ணமாத்திரை சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில், உன தறையில் யாரோ வந்து கக்கக்.....என்றதாகவும்'

அவர் கக்கக் என்றது இரையெடுத்த வான் கோழியின் இருமல் போல இருந்தது. இது முனிசாமிக்குப் பிடிக்கவில்லை.

'அப்படியில்லீங்க க.....க்க.....கூ...கஹ...'

'என்னடா முனுசாமி இப்படி குயில் போல கூவுகிறாய்?'

'இதோ மூர்ச்சையாக கிடக்கிறவன் கூவியதை நீங்க கேட்ட தில்லை. அட்டா...என்னமா கூவினாரு தெரியுமா?'



'ஏனம்மா, இங்கு உயிரை விட இது என்ன தர்ம ஆஸ்பத்திரியா. அநாதைபோல இங்கு வந்து இந்தப் பயல் அடே சூட்டும் கோட்டும் பாரேன். உயிரை விடணுமா? இது தரும ஆஸ்பத்திரியா?'

'இது தங்கள் பங்களா அப்பா'

'என்ன நடந்தது? ஏன் இவன் மூர்ச்சையடைந்தான்?'

'காதல் பலி' தந்தைக்குச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தாள் மகள்.

'நீ என்ன சொன்னாய்? கலியாணம் செய்து கொள்வேன் என்று சொன்னாயா?'

இல்லையப்பா. மாட்டேன் என்றேன்'

'மறதியாக ஏதாவது உளறுதே. 'மணப்பேன்' என்று சொல்லியிருப்பாய்'.

'என்னை கக்கூ கக்கூ என்று பிரியமாக கூப்பிட்டார்'

கக்கூ-இதற்கு மேல் ஸ்ரீமான் அய்யா குடத்தின் மூளை வேலை செய்ய மறுத்தது. அப்படி யென்றால் என்ன? என்ற கேள்வி எழுவே யோசனையில் ஆழ்ந்தார். ஐந்து நிமிஷம் சென்றது.

குயில் .....குயில்.....குயில்..... என்று கத்தினார். மூர்ச்சையாக விழுந்த தாமோதரன் அசையாது படுத்திருந்தான். அவனைக் கவனிப்பாரே இல்லை.

"என்னம்மா, இந்தப் பயலுக்குத் தமிழ்த் தெரியாதா? உன்னை இவன் அருமையான தமிழ் வார்த்தையாகிய குயிலே என்று அழைக்காமல் கக்கூ என்று ஏன் கூப்பிடுகிறான்?"

"அட அப்பாவே, கக்கூ என்றால் குயில் என்பது ஒரு அர்த்தம். நன்னூலில் திரிபு மயக்கம் என்பதாக ஒரு சூத்திரம் உண்டு. கனகாம்பரம் என்பதின் திரிபு கக்கூ. இது தெரியவில்லையா, அட அப்பாவே"







ஸ்ரீமதி கனகாம்பரம் தன் தகப்பனாரின் அறியாமையை நினைத்துச் சிரிக்கச் சிரிக்க, வேலைக்கார முனுசாமியின் மூளையில் கக்கூவின் இலக்கணம் வேறு விதமாகப் பட்டது.

"அவரு மோதரத்தை கக்கச் சொன்னாராக்கும் என்று நினைச்சேன். ஏனுங்க சின்னம்மா?"

"ஏண்டா முனுசாமி. நானு என்ன திக்கோமியா. அவரோட மோதிரத்தை விழுங்க?" முனுசாமி மிரளி மிரள விழித்தான்.

'மோதிரம் எங்கே வந்தது? கக்கூ?"

'அவர் தா மோதிரம்'

'தா மோதிரம் என்றால் தந்த மோதிரம் என்று இலக்கணம் வகுப்பாயோ, நன்னூல் சூத்திரப்படி?'

'அட அப்பாவே! அவர் பெயர் தாமோதிரம். பெயரைக் கேட்ட முனுசாமி தங்களிடம் வந்து அவர் கொடுத்த மோதிரத்தை நான் விழுங்கி விட்டதாகவும், மூர்ச்சையடைந்த இவர் கக்கச் சொன்னதாகவும் தங்களிடம் சொல்லியிருப்பான்.

'அப்படியேதான் விஷயம், இவன் என் விட்டில் வந்து இப்படி உயிரை விடலாமா?

'அவரை அல்லவா கேட்க வேண்டும்'

'உன்னால் தானே மூர்ச்சையடைந்தான்'

'அப்பா, ஓர் மனிதர் நம் விட்டில் வந்து மயக்கம் அடைந்திருக்கும் போது நாம் அவரைக் கவனியாது என்னென்னமோ பேசிக்கொண்டிருப்பதை நினைக்கிற போது'

முனுசாமி, 'அப்பவே டாக்டர் அவுட் ஆகி விட்டதாக சொல்லிப்பிட்டாரு' என்றான்.

'டாக்டர் அவுட் ஆகி விட்டாரா?' கனகாம்பரத்தின் முகத்தில் கவலைக் குறிகள். முனுசாமி சொன்னதோ டாக்டர் தம் விட்டை விட்டுப் புறப்பட்டு விட்டதாகச் சொன்னான்.

தம் மகளுக்கு, தாம் டெலிபோனில் டாக்டரைக் கூப்பிட்டு விஷயத்தைத் தெரிவித்ததாகவும், டாக்டர் உடனே வந்து விடுவார் என்று, சொல்லி வாய் மூடுமுன் டாக்டர் கார் வாசலில் வந்து நின்றது.



தீபாவளி பலகாரத்தின் சேஷ்டை தாங்காமல் கனகாம்பரமோ ஸ்ரீமான் அய்யா குடமோ, மூர்ச்சை யாகி இருக்கலாமென எதிர் பார்க்கவே, இரண்டு பேரும் மூர்ச்சையாகாது தம் எதிரில் இருக்கவே டாக்டர் சந்தோஷ மடைந்தார்.

'தீபாவளி எப்படி? பலே ஜோர்தானே'

'ஆமாம் டாக்டர்' என்ருர் ஸ்ரீமான் அய்யாக் குடம்.

'யாரோ மயக்கம் போட்டு விட்டதாக போனில் சொன்னீர்களே? அது யார்?

கனகாம்பரம், 'அதோ சோபாவின் பின் பக்கம் பாருங்கள்' என்ருள்.

தாமோதரம் குப்புறப்படுத்துக்கிடந்தான். டாக்டர் அந்த நபர்யாரென புரிந்து கொள்ளாமல், 'இவன் யார்? இங்கே வந்து மூர்ச்சையாக கிடக்கிருனே. வீட்டிலே சோடா காபி இருக்கிறதா? ஆமாம் இவன் ஏன் மூர்ச்சையடைந்தான்?' என்று கேட்டார்.

'நம்ம கக்கூ.....'

'அதென்ன சார் கக்கூ, மிஸ்டர் அய்யாக்குடம்?'

"கக்கூ, டாக்டர்! கக்கூ என்ருல் கனகாம்பரம் என்பதின் திரிபு..... அட டாக்டரே இது தெரியாதா? கக்கூ தெரியாது கக்கூ"

"கனகாம்பரத்தின் மீது காதல் கொண்டு வந்தவனு?"

"அப்படித்தான் இருக்க வேண்டும், டாக்டர். ஏனம்மா கக்கூ, நீ இவன் மூர்ச்சையடையும்படி என்ன சொன்னுய்?"

"அவரை மணக்க முடியாது என்றேன்."

"முடியாது என்ருல் மூர்ச்சையடைவானேன்? மணந்தே தீருவேன் என்றிருப்பாய், நீயோ படுத்திச் சொல்" என்று விளையாட்டாகப் பேசினர், டாக்டர். தீபாவளியும் கிழமையுமாக அங்கு நிற்க பிரியப்படா மல் மூர்ச்சை யடைந்தவனை தெளிவித்து விட்டுத் தன் விட்டிற்கு ஓட நினைத்தார்.

கக்கூ காப்பி கொண்டுவர சமையலறைப் பக்கம் போக, ஸ்ரீமான் அய்யாக்குடம், ரெபிரிஜரேட்டரி லிருந்து சோடா எடுக்கப்போக, டாக்டர் நோயாளி யின் அருகே சென்ருர். கும்புறக் கிடந்த வாலிப தாமோதரத்தை புரட்டினரோ இல்லையோ, அப்படியே மூர்ச்சையாகி தடால் என விழுந்தார் டாக்டர். இதைக்கண்ட முனுசாமி கிரீச் குரலில், "எசமான்! சின்னம்மா!!... டாக்டரு மயக்கமாக விழுந்திட்டாரே. ஓடியாங்க, இரண்டு சோடா, இரண்டு காப்பி கொண் டாங்க" என்று கத்தினுன். அவன் குரலின் நெரிச லைக் கேட்டவர்கள் அவனுக்கே ஒரு சோடாவும் காப் பியும் கொண்டு வருவார்கள். டாக்டர் அடைந்த மயக்கத்தைப் பார்க்கச் சலிக்காமல் பசிய இலைகளைப் பார்த்தாவது தான் மயக்கமடையாமல் தேற்றிக் கொள்ள தோட்டத்திற்குள் ஓடினுன்.

குப்புறக் கிடந்த தாமோதரம் தன்னருகில் மயக்க மடைந்து விழுந்த டாக்டரைப் பார்த்து, "அப்பா... ...அப்பா" என்று கனிவாக கூப்பிட்டான்.

டாக்டரும் மெதுவாக, "அடேயப்பா, பயலே, நீ என் மானத்தை வாங்க இங்கே வரவேண்டுமா? நான் மானஸ்தன். நீ மயங்கி கிடக்கிறவனைப் போலக் கிட. நான் உன்னை அன்னியனைப் போல நம் காரில் தூக்கிக் கொண்டு போடுகிறேன். நம் ஆஸ்பத் திரிக்கு எடுத்துச் செல்வதாகப் புளுகி விடுகிறேன். நீ யாரென்று ஸ்ரீமான் அய்யாக்குடம் அறியமாட் டார்.....!' என்றவரை இடை மறித்தான்.

"நான் நிஜமாக மயக்கம் அடையவில்லை, அப்பா பொய் மயக்கம் அடைந்தேன். என் மயக்கத்தைப் போக்க கக்கூ தக்க சிகித்சை செய்வாள் என எதிர் பார்த்தேன்"

"அய்யாக்குடத்திற்கு நீ என் பிள்ளை என்று தெரிந்துவிட்டால், பிறகு நம் வாயில் மண்விழும்"

"அப்பா உங்களுக்கு குடம் குடமாக பணம் சம் பாதிக்க ஆசையிருக்கிறதா?"

"அதற்காகத்தான் வந்தேன். மூர்ச்சையடைந்த வன் நீ எனத் தெரிந்திருந்தால் வந்தே இருக்க மாட்டேன்"

"வந்ததே வந்தீர்கள். சற்று நேரம் தாங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு படுத்திருங்கள்"

தாமோதரம் சொன்ன விஷயமும், அவன் பேசிய தோரணையும், அதட்டிப் பேசிய விதமும் டாக்டருக்குப் பிடிக்கவில்லை.

இவர்கள் முன்னிலையில் தங்களுக்கு நான் மூர்ச்சை தெளிவித்து நல்ல பெயர் வாங்கி, கக்கூவை தங்கள் மருமகளாக ஆக்க முடியும்."

தகப்பனும் தந்தையும் தரையில் படுத்தபடியே மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருக்க, சோடாவை எடுத்துக் கொண்டு அய்யாக் குடமும், காப்பியை ஏந்திக் கொண்டு கனகாம்பரமும் வருகிற காலடி ஓசை கேட்கிறது.

தாமோதரம், தந்தையின் தலையை தரையோடு அழுத்தி "உம் மூர்ச்சையடையுங்கள். பலன் உண்டு" என்று சொன்னன்.

"டேய் பயலே" என்ரூர், மூக்கு தரையில் உராசியதால்.....

"அப்பா! என்று உரத்துக் கத்திவிடுவேன். உம்.....ரூ.....உம் சிக்கிரம் மூர்ச்சை போடுங்கள். தந்தை மகற் காற்றும் உதவி, முந்தி மூர்ச்சையுறல் அப்பா"

"அடா இதுவும் விதியா?" என்ற டாக்டர் மூர்ச்சையுற்ரூர். அந்த அறைக்குள் தந்தையும் மகனும் வந்தவர்கள், டாக்டர் மூர்ச்சையுற்றுக் கிடப்பதையும், வாலிபன் அவர் நாடியைப் பரிசோதிப்பதையும் பார்க்கவே ஆச்சர்ய மேலீட்டால் காபியை கனகாம்பரம் போட, அய்யாக்குடம் சோடா பாட்டிலைப் போட்டார். "டபார்" என்ற வெடியோசை எழுந்தது, சோடா புட்டி விழுந்ததால்.

"நான்சென்ஸ்" என்று சோடா புட்டி வெடிக்கும் ஓசைக்கு மேலாக கத்தினன் தாமோதரம்.

"கக்கூ தாமோதரத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள். அய்யாக்குடம். "டாக்டருக்கு எப்படி இருக்கிறது சார்?" என்று கவலையுடன் கேட்டார்.

நாடிப் பரிசோதனையில் ஆழ்ந்திருந்த தாமோதரம், 'சார் அய்யாக்குடம், இன்னொரு சோடா கொண்டு வாருங்கள். தீபாவளி பட்சணத்தை நிறையச் சாப்பிட்டிருக்கிரூர் இந்த டாக்டர். அதனல் தான் இப்படி அஜீர்ண மயக்கம் ஏற்பட்டிருக்கிறது' என்ரூன் சாதுர்யமாக.

"உங்களுக்கு வைத்யம் தெரிந்ததே எங்கள் பாக்யம். இவர் எங்கள் குடும்ப வைத்தியர். அவர் பிழைத்தால் நாங்கள் பிழைத்த மாதிரி" என்ற அய்யாக்குடம் சோடா எடுக்க ஓடினர்.

"டாக்டருக்கு எப்படி இருக்கிறது தாமோதரம்"

"ஷட்-அப். இரைந்து பேசாதே கக்கூ. நோயாளிக்கு உன் குரலைக் கேட்டு ஷாக் அடிக்கலாம்"

"எங்கள் விட்டில் வந்து என்னை அதிகாரம் செய்கிறதா?"

"கக்கூ நம் காதல் என்னகிறது?"



"ஐயோ, டாக்டர் உயிருக்கு மன்ரூடும்போது நம் காதலைப் பற்றியா பேசுவது. தாமோதரம் டாக்டருக்கு எப்படி இருக்கிறது?"

"டாக்டரோ மண்ணாங்கட்டியோ? நான் போகிறேன்" என்று எழுந்தவனை, மன்ரூடி வேண்டிக் கொண்டாள் கக்கூ.

தம் நிலைமையை சமாளிக்கவும், தம் பையனின் செய்கையும் சபித்துக்கொண்டே படுத்திருந்த டாக்டர் மெதுவாக கண் விழிப்பதாக பாவனை செய்தார்.

சோடாவும் வந்தது. "நான் எங்கே இருக்கிறேன்?" என்று டாக்டர் கேட்டார். தாமோதரம் எதிரே ஆவலே உருவாக நிற்கிறவர்களைக் காட்டி, 'டாக்டர் சார், அதிகமாக நீங்கள் பேசக்கூடாது. தங்கள் உடம்பு பலஹீனமாக இருக்கிறது. இது மிஸ்டர் அய்யாக்குடம். இது அவர் குமாரி மிஸ் அய்யாக்குடம் கனகாம்பரம். இவள் திரிபுப் பெயர் கக்கூ. இவளுடைய மலர் வதனத்தையும் மை இருட் கண்களையும், ஊசலாடும் லோலக்கையும், பௌடரின் பகட்டையும் பாருங்கள்....." என்று மேலே சொல்லுமுன் கக்கூ குறுக்கிட்டாள்.

"மிஸ்டர் தாமோதரம். ஷட்-அப். என் அழகை வர்ணிக்கவேண்டிய நேரம் இதுவா? பாவம் டாக்டர் மயக்கமடைந்து தெளிந்திருக்கிரூர். டாக்டர் சார் உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது."

"டாக்டர். தங்கள் மயக்கம் எப்படி இருக்கிறது. ஏதாவது பானம் கொண்டு வரட்டுமா. அப்படியே சோபாவில் அமருங்கள் டாக்டர்" என்று அய்யாக்குடம் பரிவும் வாத்சல்யமும் தொங்கத் தொங்கச் சொன்னர்.

"ஏன் டாக்டர் மயக்கம் அடைந்தீர்கள்?

கக்கூவின் இந்தக் கேள்வி, தாமோதரத்திற்குப் பிடிக்கவில்லை. தன் தகப்பனுர் ஏதாவது உளறி விடக்கூடாதே என்று கவலை.

"இந்தப் பயலே இங்கிருந்து அடித்து விரட்டுங்கள். மிஸ்டர் அய்யாக்குடும். இவன் ஒரு அயோக்கியன். போக்கிரி" அய்யாக் குடத்திற்கு தாமோதரத்தின்மேல் அளவு கடந்த விசுவாசம் அப்போது தான் பிறந்தது. டாக்டரை மூர்ச்சை தெளிவித்தவன் அவனே என்பது அவருடைய தீர்க்கமான அபிப்பிராயம். தாமோதரம் தெளிவித்திருக்கா விட்டால், டாக்டர் அவுட் ஆகிவிடுவார் என்பது அய்யாக்குடத்தின் எண்ணம். டாக்டர் சொன்னர்.

"மயக்கமாக விழுந்தவன் யாரோ என்று நான் நினைத்து வர, இங்கு வந்து பயலைப் புரட்டிப் பார்த்தால் என் குமாரன் என்று தெரிந்ததும்....."

டாக்டர் "என் குமாரன்" என்றதுமே அய்யாக்குடம் தலை ஒரு சுழல் சுழன்றது. "இவர் உங்கள் பையனு?" என்னும்போதே தலை ஆடியது.

"ஆமாம், இந்தத் தறுதலை என் பையனே" என்று தலையாட்டிய டாக்டர் எதிரே தடால் என்ற ஓசையைக் கேட்டார். எதிரே நின்றுகொண்டிருந்த அய்யாக்குடத்தை பார்த்தார். நிற்கவில்லை. அவர் விழுந்து கிடந்தார் தரையில். ஆச்சர்ய மிகுதியால் அதிசயம் தாங்காமல் மூர்ச்சையுற்றார் அய்யாக்குடம்.

டாக்டர், "டேய் பயலே உன்னால் இந்த கோமஸ்வரர் மூர்ச்சை அடைந்தார். என் மூஞ்சியில் விழிக்காதே" என்று கத்த, குயிலினும் இனிய குரலில் "அப்பா அப்பா" என்று கனகாம்பரம் தகப்பன் முகத்தைத் தடவினாள் ஏக்கத்தோடு.

"அப்பா, என் நன்றி, கொன்றருக்கும் உய்வுண்டாய் செய்நன்றி கொன்றருக்கு உய்வில்லை என்பதாக வள்ளுவர்....."

"வள்ளுவர் யாரடா? மேலும் எனக்கு நீ செய்த நன்றி என்ன?"

"அதோ நிற்கிறாள் கக்கூ. அவளே அறிவாள் தங்கள் மூர்ச்சையை நான் தெளிய வைத்திருக்காவிட்டால் தங்கள் உயிர் பரலோகப்பிராப்தி ஆகியிருக்கும்"

"அதற்காக?"

"அதற்காக சற்று நேரம் சும்மா இருங்கள்"

கக்கூ, "ஐயோ, என் தந்தை மூர்ச்சையாக கிடக்கிற பொழுது நீங்கள் இருவரும் இப்படித் தர்க்கம் செய்கிறீர்களே. தகப்பனாரைக் கவனியுங்கள்" என்று கெஞ்சினாள் கொஞ்சும் குரலில்.

தாமோதரம், "கக்கூ, அவர் மயக்கமாக இருக்கிறார், நீ கத்தக்கூடாது. காபி கொண்டு வரலாம்" என்றான். டாக்டர் தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தார். மூர்ச்சையாகி கிடந்த அய்யாக்குடம், "நான் எங்கே இருக்கிறேன். யார் இது டாக்டரா? டாக்டர் தங்கள் அருகே இருப்பவர் யார்?" என்றார் மெதுவாக.

தாமோதரத்தைச் சொன்னால் மீண்டும் மூர்ச்சையடைவாரோ என்று நினைத்த டாக்டர், "இது இது... தங்கள் குமாரி கனகாம்பரம்" என்றார். கக்கூ காபி கொண்டு வந்தவள், காப்பியைக் கொடுத்தாள்.

"டாக்டர் இந்த வேளையில் தாங்கள் இல்லாது இருந்தால் என் மயக்கத்தின் முடிவு என்னாகி இருக்கும்?"

"மயக்கத்தின் முடிவு சாவு" என்றான் தாமோதரம்.

டாக்டர் நிலைமையைச் சமாளித்து அவ்விடமிருந்து போய்விட நினைத்தார். "மிஸ்டர் அய்யாக்குடம் நான் போய் வருகிறேன். இந்தப் பயல் செய்த தப்பிதத்தை மன்னியுங்கள்" என்று கெஞ்சினார்

"டாக்டர், அவர்தான் தங்களை மூர்ச்சையிலிருந்து காப்பாற்றினார். தாங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். இதற்கு கைமாறுக நான் ஒன்று சொல்லியாகவேண்டும். மிஸ்டர் தாமோதரத்தை என் மருமகனுக்கிக் கொள்ளும் பாக்கியத்தை எனக்கு அளிக்க வேண்டும்."

டாக்டர் எம்பிக் குதித்தார். அவரை விட ஒரு சாண் உயரம் அதிகமாகக் குதித்தான் தாமோதரம். ஆனால் கனகாம்பரம் தன் எண்சாண் உடம்பை ஏழு சாணைக் குறுக்கிக்கொண்டாள்.

'அப்பா', அந்தக் குரலிலே பெண் புலியின் உருமல் தொனித்தது.

'என்ன கக்கூ?'

'கக்குவும் ஆச்சுது மக்குவும் ஆச்சுது. மருமகன் என்றால் அதன் பொருள் என்ன?'

'மகளை மணக்கும் ஆண் பிள்ளையை மாமனாராகப் பட்டவர், மருமகன் என்றும், மாப்பிள்ளை என்றும் அழைப்பது நமது தமிழ்வழக்கு,'

'முடியாது. நான் மணக்க முடியாது'

'முடியாது. ஏன் முடியாது. இது தந்தையின் கட்டளை. பெற்றெடுத்து தாலாட்டிச்சீராட்டி வளர்த்த தகப்பன் ஆக்ஞை. ஆம், மாட்டேன் என்றால் அநாதை போல தெருவிலே அலைய வேண்டும். என்ன சொல்கிறாய்?' அவர் குரலிலே கையிலே கழுத்திலே ஒரே நடுக்கம்.

கனகாம்பரத்தின் முகத்திலே சோகத்தால் சுருக்கங்கள் ஏற்பட்டு, பவுடர் பொல பொலவென உதிர்ந்தது. கண்ணீர்த்துளிகள், கன்னத்தில் எஞ்சியிருந்த பவுடரை அழித்தன. சோபை குன்றிய முகத்திலே

மயக்கத்தின் அந்தகாரம் படர்ந்தது. அடுத்த விநாடி 'மணந்தே ஆக வேண்டுமா' என்ருள்.

'ஆமாம், கண்டிப்பாக மணக்க வேண்டும். மிஸ் டர் தாமோதரம்' ஸ்ரீமான் அய்யாக்குடம் தாமோதரத்தை அன்பு கனியப் பார்த்தார்.

'மாமா' என்ருர் தாமோதரம்.

'மனக்கவே மாட்டேன். இது கண்டிப்பான பதில்' என்று சோக சித்திரமாக நின்ருள். கால் சிலம்பைக் கண்ட கண்ணகிபோல அவ்வாறு கோபம் கக்கூவின் முகத்தில் தெரிந்தது.

இந்த பதிலைக் கேட்ட தாமோதரம் தடால் எனத் தரையில் விழுந்தான். ரத்ன கம்பளம் மெத்தென இருந்ததால் காயம் படவில்லை.

'நீ என் குமாரியல்ல. ஓர் அனுதைப் பிணமாக உன்னை அடையவிடுவேன். என் சொத்து முழுவதும் சாக்ஷாத் தாமோதரத்திற்கு.....'

இந்த வார்த்தைகளைத் தாங்காது கனகாம்பரம் தடால் என தரையில் விழுந்தாள். ரத்ன கம்பளம் மெத்தென இருந்ததால் காயம் படவில்லை.

இந்த சத்தத்தைக் கேட்டு தோட்டத்திலிருந்து ஓடிவந்த முனுசாமி கக்கூவும், தாமோதரமும் மூர்ச்சையாகியிருந்த காட்சியைப் பார்த்து தடால் என விழுந்தான். ரத்ன கம்பளம் மெத்தென இருந்ததால் காயம் படவில்லை.

அய்யாக்குடத்தின் தலை சுழன்றது. அவரும் விழ்ந்தார். ரத்ன கம்பளம் மெத்தென இருந்ததால் காயம் படவில்லை.

'அடராம ராம. எல்லோரும் மூர்ச்சைய...டை.....கி.....ரூர்.....களே. நாம் தெளிவோடு நின்று .....மூர்.....ச்.....சை தெளிவிக்க .....' என்று, மற்ற வர்கள் மூர்ச்சையைத் தெளிவிக்க நினைத்த டாக்டரும் தடால் என விழுந்தார். ரத்னக் கம்பளம் மெத்தென இருந்ததால் காயப் படவில்லை.

தெருவிலே யாரோ கொழுத்திய யானை வெடியின் ஒசை கேட்டு எல்லோரும் எழவே, அசட்டுத் தனமாக விழித்துக் கொண்டனர்.

கக்கூவின் முகத்திலே அதிக அசட்டுத் தனம் இருப்பதைக் காண, தாமோதரம் கண் கொட்டாது பார்க்க, தாமோதரத்தின் முகத்திலே அதிகமாக அசட்டுத் தனம் இலங்கியதைக் கக்கூவும் கண் கொட்டாமல் பார்த்தாள், இந்தப் பார்வை மாற்றத் திலே கண்கள் சந்தித்தன. நாணிக் கவிழ்ந்தன.

சம்பந்தியும், சம்பந்தியும் பிள்ளைகள் அசட்டுத் தனத்தைப் பார்த்து ஒருவருக்கொருவர் சிரித்துக் கொண்டே இருந்தார்கள்.

சுதந்திர இந்தியாவின் முதல் தீபாவளிக்கு
- எங்கள் வாழ்த்துக்கள் -

உங்களுடைய இன்ஷ்யூரன்ஸ் தேவைகளுக்கு
எங்களைக் கலந்து கொள்ளவும்.

தி பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்,.

தலைமை ஆபீஸ் : P. Box 170, கோயமுத்தூர்.

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்விபத்து முதலிய
சகல இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யப்படும்.

திறமை வாய்ந்த ஏஜண்டுகளும் ஆர்கனைசர்களும்
ஒவ்வொரு நகரிலும் தேவை—விபரங்களுக்கு
தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

ஜெய் ஹிந்த்.

தந்தி : சோமசுந்தரம். TEXMARK டெலிபோன் கெ. 69.

TEXMARK 646

சோமசுந்தரம் மில்ஸ் லிமிடெட்

கருதுகள்	நூல், ஜவுளி உற்பத்தி	தறிகள்
23200	செய்யும் தொழிற்சாலை,	390

கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்ட்:

பி. எஸ். சாத்தப்ப செட்டியார்

10 நெ. முதல் 80 நெ. வரை நூல் தினுசுகளும், மல், லாங்கிலாத், வேஷ்டி, துண்டு மடி ரகங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப்படுகிறது.

எங்களுடைய ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ரகங்கள். மான், பக்ஷி, இந்தியன் டி பாட், மூன்று மாங்காய் முதலியன மார்க்கெட்டில் பிரசித்தி பெற்றவைகள்.

இந்தியர் மூலதனம்
இந்தியர் உழைப்பு
இந்தியர் நிர்வாகத்தைக் கொண்டு
இந்த தொழிற்சாலையில்
உற்பத்தியாகும் சரக்குகளை
ஆதரித்து இந்தியத்
தொழிலாளர்களை இன்புறச் செய்யுங்கள்.

காட்டு ராஜா

"ஜீவா"

"வா அம்மா, அஞ்சலி வா!"

"பெருந்தேவி எப்படி யிருக்கிறாள்? உடம்பு இஞ்சித் தாயினும் தேவலையா? ஏதாயினும் சாப்பிடுகிறாளா? மாயி!"

"அதை ஏன் கேட்கிறாய் போ! மருந்து கூட உட்கொள்ளமாட்டேனென்று அடம் பண்ணுகிறாள்; வந்துதான் பாரேன், உன் தோழியின் லட்சணத்தை."

கனகவல்லியம்மாள் அஞ்சலியைப் பெருந்தேவி படுத்திருக்கும் அறைக்கு அழைத்துப் போனாள். இவர்கள் போன சமயத்தில் பெருந்தேவி மார்பின் மீது வலக்கரத்தை வைத்துக் கொண்டு மேல்க் கூரையை வெறித்துப் பார்த்தவாறு படுத்திருந்தாள். அவள் கண்களின் ஆழத்தில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவள் என்ன சிந்தனையில் ஆழ்ந்திருந்தாளோ, இவர்கள் வந்ததைக்கூட அறியாமல் இருந்தாள்.

"இதோபார், அஞ்சலி" என்று கனகவல்லியம்மாள் படுக்கைக்குப் பக்கத்திலிருந்த மாடத்தை சுட்டிக்காட்டினாள்.

"ஐயோ, அம்மா, மருந்தெல்லாம் அப்படியே இருக்கிறதே" என்று அங்கலாய்த்தவாறு, "இதென்ன, பெருந்தேவி, வைத்தியர் கொடுக்கும் மருந்தை உண்டால்தானே நோய் விலகும்? ஏன் சாப்பிடமாட்டேனென்கிறாய்? நீ குழந்தையா, என்ன?" எனக்கேட்ட வண்ணம் பெருந்தேவியை அணுகினாள்.

அஞ்சலியின் குரலைக்கேட்டு திடுக்கிட்ட பெருந்தேவி தலையைத் தூக்கிப்பார்த்து, "வா அஞ்சலி! எங்கே இரண்டு மூன்று நாளாகக் காணோமே?" என்று கேட்டாள். அவள் கண்களில் ததும்பியிருந்த நீரை வழித்தெறிந்துவிட்டு, முகத்தில் புன்னகையை வருவித்துக்கொள்ள முயன்றாள்.

"வீட்டில் ஒழியவில்லை, சரஸ்வதி பூஜையும், தீபாவளியும் வரப்போகிறதோ இல்லையோ! அதிருக்கட்டும். நீ என்ன, இப்படியெல்லாம் பிடிவாதம் பண்ணிக் கொண்டிருப்பது நன்றாயிருக்கிறதா? மருந்து சாப்பிடா விட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? நல்ல நாளும் அதுவுமாக இப்படி இருக்கலாமா?" என்று அஞ்சலி ஆதரத்துடன் கேட்டாள்.

"நீதான் அவளுக்குச் சொல்லு" என்று சொல்லிவிட்டுக் கனகவல்லியம்மாள் தன் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள்.

பெருந்தேவி அஞ்சலியின் முகத்தைச் சில விநாடிகள்வரை பார்த்துக் கொண்டிருந்து பின், "இனிமேல், என் உடம்பு என்னவானால் என்ன? சாகப்போகிறவளுக்கு மருந்து என்ன வேண்டியிருக்கிறது?..." என்று சலிப்போடு கூறினாள்.

"பைத்தியக்காரி மாதிரி பிதற்றாதே!" என்று அன்பாக அதட்டினாள் அஞ்சலி.

பெருந்தேவி சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து அஞ்சலியை இழுத்துத்தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, "உண்மையாகச் சொல், அஞ்சலி, நான் உயிரோடிருந்து யாருக்கு என்ன லாபம்? என் தாய் தகப்பன்மாருக்கு இப்படித் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறேனே! அதுதான் நான் கண்ட பலன்....." என்று பேசிக்கொண்டே போனாள்.

அஞ்சலி இடைமறித்து, "உன் மனவேதனையை நான் அறியாமலில்லை, பெருந்தேவி! ஆனாலும், நீ இப்படி ஒரேயடியாக உள்ளம் உடைந்து உருகுவது சிறிதும் சரியல்ல,—" என்று கூறி அவளைத் தேற்ற முயன்றாள். அவள் கைகள் பெருந்தேவியின் சடை பிடித்திருந்த கூந்தலைச் சிக்குவாங்கி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தது.

பெருந்தேவி மௌனமாக அஞ்சலியின் முகத்தைப்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனலும், அவள் உள்ளம் துயரத்தால் குமுறிக் கொண்டிருந்ததென்பது முகமாறுதலிலிருந்து புலனுயிற்று.

அஞ்சலி மீண்டும் பேசத் தொடங்கினுள். "மாமா எங்கே போய்விட்டான் என்று நீ இப்படி அவனே நினைத்து உருகிக்கொண்டிருக்கிருய், பெருந்தேவி; எங்கு சுற்றினலும் கடைசியில் அவன் உன்னண்டைதான் வந்து விழப்போகிருன். நீ வேண்டுமானல் பாரேன், நான் சொல்கிறபடி நடக்கிறதா இல்லையா என்று,—நீ மட்டும் வீணுக மனசை அலட்டிக்கொள்ளாமல் உடம்பைத் தேற்றிக்கொள்ளு."

பெருந்தேவி அலட்சியமாகப் புன்னகை செய்தாள். "அப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறதா!—அஞ்சலி, நீ இன்னும் சரியாக நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிருய்! இனிமேலாவது, உன் மாமா என்னேத்திரும்பிப் பார்ப்பதாவது? நான் சாகக் கிடக்கிறேன் என்ற விஷயம் தெரிந்தும் என்னே வந்து பார்க்காதவரா, அப்புறம் வரப்போகிருர்! அதெல்லாம் இல்லை. இதுமாதிரி நம்பிக்கையெல்லாம் போய் வெகு நாளாகிறது...." என்று மொழிந்து பெருமூச்சு விட்டாள்.

அஞ்சலிக்கு எல்லா விஷயமும் நன்கு தெரியும். பெருந்தேவிக்கு ஆறுதல் கூறித்தேற்றும் எண்ணத்தோடேயே அவைகளையெல்லாம் உணராதவள் போல் பேசினுள்.

"அப்படியா? சமாசாரம் சொல்லியனுப்பியும் மாமா உன்னே வந்து பார்க்கவில்லையா?—ஒருவேளை அவன் ஊரில் இல்லியோ என்னவோ!"

"ஊரிலில்லாமல் எங்குபோய் விட்டார்? எல்லாம் இங்கேதான் இருக்கிருர்ம்..." என்று பெருந்தேவி அலுப்புடன் சொன்னுள்.



"யார் சொன்னது? அண்ணுவா?"

பெருந்தேவி தலையை ஆட்டினுள்.

அஞ்சலி "அட கடவுளே? இவனுக்கு ஏன் இப்படிப் புத்தி கெட்டுப்போய்விட்டது? தலைச்சுழி சரியாயில்லை போலிருக்கிறது. இல்லாவிட்டால் செக்குக்கும், சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாது, எவளோ முன்பின் தெரியாதவளின் முந்தாணியைப் பிடித்துக் கொண்டு திரிவானு?..." என்று ஆற்ருமையோடு இரைத்தாள்.

பெருந்தேவி, "அவரை ஒன்றும் சொல்லாதே அஞ்சலி! உன் துரதிர்ஷ்டம் இப்படியிருந்தால் அதற்கு அவர் என்ன செய்வார்? எதற்கும் கொடுத்துவைக்க வேண்டுமில்லவா?" என்று கூறினுள்.

அஞ்சலி பெருந்தேவியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

பெருந்தேவி மெள்ளப் பேசத்தொடங்கி, "அஞ்சலி, உனக்கு உரிமையுள்ள பொருளை கவர்ந்து கொள்ளமுயன்றேனே; அந்தப் பாவம் சும்மா விடுமா? அம்மான் மகளைக் கட்டவேண்டிய அத்தை மகள் நீ இருக்க, யாதொரு சம்பந்தமுமில்லாத நான் அவரைக் காதலித்தது நியாயமில்லை தானே! முன்னெல்லாம் அங்கு காட்டுமென்பார்கள். இப்போது தான் எதுவும் உடனுக்குடன் பலித்து விடுகிறதே!" என்று சொன்னாள்.

அஞ்சலி பெருந்தேவியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி, "போடி, பித்தம் பிடித்தவளே! அம்மான் மகனென்றால் அவனை அத்தை மகள் தான் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று எங்காயினும் சட்டம் செய்து வைத்திருக்கிறதா! என்ன?—அதிலும் நாங்கள் இளமையிலிருந்தே அண்ணன் தங்கை போல் பழகி வந்தோமேயொழிய, அம்மான் மகன், அத்தை மகள் என்ற உறவு முறையில் பழகவேயில்லை என்பது உனக்குத் தெரியாதா! சின்னஞ்சிறு வயதில் அம்மா அப்பா விளையாட்டுக்குக் கூட, மாமா, உன்னைத் தானே ஜோடி சேர்த்துக் கொள்வான்? அதையெல்லாம் மறந்து விட்டாயா!" என்று கேட்டாள்.

அஞ்சலி இவ்விதம் பேசியது பெருந்தேவியின் உள்ளத்தில் ஒடுங்கியிருந்த பழைய நினைவைக் கிளறிவிட்டது, பாலப் பருவத்தில், தானும் பத்மநாபனும் கூடி விளையாடிய விளையாடல்களும் பேசிய பேச்சுகளும் இருவருடைய வயதும் வளர்ந்தது போல் தங்களிடையே கிளைத்த அன்பும் முறுகி வளர்வதற்கு ஏற்பட்ட சம்பவங்களும் அவள் உள்ளத் திரையில் மூறையே காட்சியளித்து மறையலாயின.

* * * *

காஞ்சிபுரம் ராஜ வீதியில், அடுத்தடுத்து, பத்மநாபன், பெருந்தேவி, அஞ்சலி ஆகியவர்களுடைய இல்லங்கள் இருந்தன. இவர்களுடைய தந்தையார் பெரிய ஜவுளி வியாபாரிகள். பத்மநாபனும் அஞ்சலியும் மேற்குறித்தபடி நெருங்கிய உறவினர்கள். பெருந்தேவி வேறுக இருந்தாலும் விளையாட்டுப் பழக்கம் அவளுக்கும் பத்மநாபனுக்கும் உறவையுண்டு பண்ணி விட்டது. அவர்கள் அந்நியோந்நியமாகப் பழகியாடுவதைக் காணும் பெண்களும் ஆண்களும் 'பத்மநாபனுக்குப் பெருந்தேவியைத் தான் கலியாணஞ் செய்து வைக்க வேணும். இருவரும் ஒற்றுமையாக வாழ்வார்கள்' என்று கூறுவார்கள். இந்த எண்ணம் இருவருடைய பெற்றோருக்கும்கூட உண்டாயிற்று. பத்மநாபன் தந்தைக்கு மட்டும் முதலில் தன் தங்கையின் மகள் அஞ்சலியை விவாகஞ் செய்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. ஆனால், மனைவியின் வாயிலாக மகனின் எண்ணத்தை அறிந்ததும், தம் தீர்மானத்தை மாற்றிக் கொண்டார். அத்துடன், அஞ்சலியும் அவள் அம்மா கேட்டபோது, தான் பத்மநாபனைக் கலியாணஞ் செய்து கொள்ள முடியாதென்றும் அவனுக்குப் பெருந்தேவியைத் தான் கட்ட வேண்டுமென்றும் கூறி விட்டாள். ஆகவே, எல்லோரும் பத்மநாபனுக்குப் பெருந் தேவியைத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்திருந்தார்கள். பத்மநாபனும் பெருந்தேவியும் கூடத் தாங்கள் கூடிய சீக்கிரம் கணவன் மனைவியராய் இன்ப வாழ்வில் ஈடுபடப் போகிறோம் என்று இன்பக் கனவு கண்டு ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தனர்.

ஜப்பான் இந்தியா மீது படை யெடுக்கப் போகிறது என்ற பெரும் பீதியால், சென்னை மாநகரத்திலிருந்த மக்கள் பெரும்பாலோர் காஞ்சிபுரம்போன்ற ஊர்களில் வந்து குடியேறினார்களல்லவா! அச்சமயத்தில் சென்னையிலிருந்து சுவாமிநாத முதலியார் குடும்பத்தினர் காஞ்சியில் வந்து குடியேறினர். அக்குடும்பத்திலுள்ள ஆணும் பெண்ணும் இருக்கும் ஆடம்பர போக்கையும் தடபுடலையும் கவனிக்கும் போது, சென்னை மா நகரில் செல்வமும் செல்வாக்குமுள்ள குடும்பத்தினராயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் பத்மநாபனுக்கும் சுவாமிநாத முதலியாருக்கும் ஏற்பட்ட சந்திப்பு வெகு விரைவில் அவனுக்கு அக்குடும்பத்துடனேயே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திவிட்டது. முதலியாரின் மகள் மதுரவேணியின் ஒயிலில் அவனுக்கு ஏற்பட்ட மயக்கம் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அவனை அவர்கள் வீடே கதியென இருக்கச் செய்து விட்டது. அக்குடும்பத்தார் மேனாட்டு நவநாகரீகப் போக்கை அநுசரித்து வருபவர்களாதலால் பருவம் வந்த தங்கள் பெண்ணுடன் வாலிபனான பத்மநாபன் சகஜமாகப் பழகி வருவதைத் தடுக்கவில்லை. மதுரவேணி பத்மநாபனின் கம்பீரத்தோற்றத்தில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டாள். ஆகவே, அவன் தன்னுடன் எப்போதும் இருக்கவேண்டுமென்று விரும்பினாள். ஏற்கனவே, பெருந்தேவியின் அன்பினால் பிணைக்கப்பட்டுள்ள பத்மநாபன் மதுரவேணியின் மீது மையல் கொண்டு விட்டான் என்று சொல்வதற்கில்லாவிட்டாலும் அவளுடன் பேசுவதையும் நெருங்கிப் பழகுவதையும் அவள் குடும்பத்துடன் தொடர்பு கொண்டிருப்பதையும் நெருங்கிப் பழகுவதையும் அவள் குடும்பத்துடன் தொடர்பு கொண்டிருப்பதையும் பெருமையாகக்

கருதித் தன்னிலையை மறந்து மயங்கி யிருந்தான் என் பதில் சந்தேகமில்லை.

அன்னியர் வீட்டுக்கு அடிக்கடி போகக்கூடா தென்று அவன் தந்தையார் கடிந்துரைத்தும் பத்ம நாபன் சுவாமிநாத முதலியார் வீட்டுக்குப் போவதை நிறுத்தவில்லை. எந்த வேலை எப்படி யிருந்தாலும், ஒரு வேளையாயினும் பெருந்தேவியைக் காணும வரிக்க மனம் ஒருப்படாதவன் மதுரவேணியின் சினேகத்துக்குப் பின் அவளைப் பார்ப்பதே அரி தாய்ப் போய்விட்டது. இம்மாறுதலைக் கண்டு பெருந்தேவி ஆரம்பத்தில் காரணமறியாது மனம் வருந்தினாள். நாளடைவில் மற்றவர்கள் பத்மநாப னுக்கும் மதுரவேணிக்கும் முடி போட்டுக் கூறிய கதைகளைக் கேட்க அவளுக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. இதே மன வியாதியால் அவள் படுக்கை யாய்ப் படுத்து விட்டாள்.

அவள் பெற்றோர் மகளின் மனநிலையை அறி யாது, மந்திரம், மருந்து என்றெல்லாம் கொடுத்து உண்மையாக உடம்புக்கும் உபாதையைக்கொடுத்து விட்டனர். அஞ்சலை போன்று ஒருவர் இருவருக்குப் பெருந்தேவி கோயில் விழுந்துவிட்டதற்குரிய உண் மைக் காரணம் தெரியும. ஆனாலும், அவர்களால் என்ன செய்ய முடியும்? பத்மநாபனுக்கு இரண் டொருவர் பெருந்தேவியின் நிலைமையைச் சொல்லி அதற்கு அவன் தான் காரணமென்பதையும் மறை முகமாக உணர்த்தினர். அவர்கள் சொல்லும் போது பத்மநாபனுக்குப் பெருந்தேவியைப் பார்த்து ஆறுதல் கூறவேண்டுமென்ற எண்ணமுண்டாகும். ஆனால், பின்னல் அதை அடியோடு மறந்துவிடு வான். அவன் கவனமனைத்தையும் தான் மதுர வேணி கவர்ந்து கொண்டிருக்கிறாளே! அவளுக்காக வேண்டி அவள் குடும்பத்துக்கு வேண்டிய காரியங் களைச் செய்வதற்கே அவனுக்கு அவகாசம் காண வில்லையே! அவன் எப்படி பெருந்தேவியைக் காணப் போக முடியும்?

இவ்விதம் பத்மநாபனின் மனத்திலும் நடத் தையிலும் ஏற்பட்டுள்ள விபரீதமான மாறுதல்களை நினைத்து பெருந்தேவி கண்ணீர் உகுத்தாள். பழைய நினைவுகளில் ஆழ்ந்து இருக்கும் அவள் கவனத்தை எப்படி மாற்றுவது என்று யோசித்தவாறு அவளை யே பார்த்துக் கொண்டிருந்த அஞ்சலைக்கும் பெருந் தேவியின் ஆறாத்துயரத்தைக் கண்டு அழுகை வந்து விட்டது.

"அஞ்சலை அதையெல்லாம் நினைத்துத் தான், நான் ஏமாந்து போனேன். இல்லாவிட்டால், நான் என் நிலைக்கு ஒவ்வாத ஒருவருடன் இவ்வளவு ஆழ்ந்த அன்பு வைத்து அவதியுற மாட்டேன். ஒரு வாலிபன் முறைப்பெண்ணைத் தள்ளி விட்டுத் தன் னிடம் அளவிலா அன்புகாட்டி அளவளாவினால், எந்தப் பெண் தான் அதைப் பெரிதாகக் கருதித் தன் உள்ளத்தை அவனிடம் பறிகொடுக்காமல் போ வாள்? நேற்றுவரைகூட உன்மாமா என்மீது காதல் கொண்டிருக்கிறானென்றே நம்பியிருந்தேன்... ஆனால்..." அதற்குமேல் பெருந்தேவியால் பேச முடியவில்லை. துக்கத்தால் அவள் நாத்தழு தழுத்தது.

அஞ்சலை பொங்கிவரும் அழுகையைச் சிரமப் பட்டு அடக்கிக்கொண்டு "பெருந்தேவி, சிறிது பொறுத்திரேன் சொல்லுகிறேன். மாமா தன் தவற்றைச் சீக்கிரம் உணர்ந்து உன்னிடம் மன்னி ப்புக் கேட்கப் போகிறான், பார்" என்று கூறித் தேற்றினாள்.

பெருந்தேவி சிறிது நேரம் அஞ்சலையையே நோக்கியிருந்து விட்டுப் பின் "அஞ்சலை உன்னை ஒன்றுகேட்கிறேன். மறைக்காமல் சொல்லவேண்டும். அவரைத்தன் வசப்படுத்தி வைத்திருக்கிறாளே, அந்தப் பட்டணத்துப்பெண், அவள் நிரம்ப அழகா யிருப்பாளோ? நீ அவளைப் பார்த்திருக்கிறாய், இல்லையா?....." என்று கேட்டாள்.

அஞ்சலை துயரப் புன்னகைசெய்தாளேயொழிய பதில் சொல்லவில்லை.

"என்ன, நான் கேட்கிறேன், பேசாமலிருக்கி றாயே! அவள் என்னைவிட—இல்லையா,—உன்னை விட அழகாயிருப்பாளா? உம்,—அவர் உள்ளத்தை இவ்வளவு தூரம் கவர்ந்து வைத்திருக்கும் அவள் பேரழகியாய்த்தான் இருக்கவேண்டும். இதில் சந்தேகமில்லை" என்று பெருந்தேவி தனக்குத்தானே பதில் சொல்லிக்கொண்டாள்.

அஞ்சலை, "மாமாவுக்குப் புத்தி தயங்கியிருப் பது போல், உனக்கும் அறிவு மயங்கிவிட்டது போலிருக்கிறது" என்றாள்.

பெருந்தேவி, "அவள் லட்சணமாயிருப்பாளா, இல்லையா? அதைச் சொல்" என்று கேட்டாள்.

அஞ்சலை, "உன் இயற்கையழகின் முன் அவள் செயற்கை யழகெல்லாம் சோபை யிழந்துபோய் விடும். உன் கால் பெருவிரலழகுக்கு அவள் பிச்சை வாங்க வேண்டும்." என்று மொழிந்தாள்.

"அபிமானத்தால் என்னை நீ இப்படி வருணித் திருக்கிறாய். அஞ்சலை! நம் காதல் பூரண அன்பைப் பெற்றுள்ள பாக்கியசாலிப் பெண் எப்படியிருப் பாள் என்பதை நான் அறிந்துகொள்ள ஆசைப் படுகிறேன் சொல், அஞ்சலை"

"அட பைத்தியமே! சொல்லுகிறேன், கேள், அவள் வட்ட முகந்தான், வளைந்த புருவங்கள் அழகு செய்தாலும், நெற்றி அகலமில்லை. செவ்விதழ் கன்னங்களும் இருக்கும் லட்சணத்துக்கு அவ்வளவு எடுப்பில்லை. பற்கள் அரிசிபோல் இருக்கின்றன. பொதுவாக உருவத்தோற்றம் மதுரவேணி என்ற அவள் பெயருக்கேற்ற அவ்வளவு மதுரமாக எனக்கு என்னமோ தோற்றவில்லை. ஆனால் நவநவமான ஜனங்களுக்கும் நாகரீகச் சிங்காரிப்புக்கும் மட்டும் சிறிதும் குறைவில்லை," என்று அஞ்சலை வேண்டா வெறுப்பாக வருணித்தாள்.

பெருந்தேவி "ஊம்; ஊம்" என்று கேட்டுக் கொண்டிருந்தாள், அவள் சிந்தனைமட்டும் எங்கோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது, "அப்புறம்" என்று கேட்டாள்.

"அப்புறம் என்ன? நீ காட்டு ரோஜா! அவள் பட்டணத்துப் பிப்ரவரிப் பூ! அவ்வளவுதான், அதைவிட அதிகமாகச் சொல்ல எனக்குச் சக்தியில்லை" என்றாள் அஞ்சலை.

பெருந்தேவி, "ஊம்," என சூள் கொட்டினாள், அதில்தான் எவ்வளவு சோகபாவம்!

2

"நாங்கள் எங்கள் ஊருக்குப் போகலாமென்று நிர்மானித்திருக்கிறோம், ஐயா!"

"என்ன பட்டணத்துக்கா? ஏன்? என்ன அவசரம்?"

"ஏனா? சொந்த ஊருக்குத் திரும்பக்கூடக் காரணம் உண்டா? ஜப்பான் படையெடுப்புப் பீதிதான் இப்போது ஒருவிதமாக அடங்கியிருக்கிறதே! நகரத்திலிருந்து வந்தவங்களெல்லாம் புறப்பட்டு விட்டார்கள். நாங்களும் புறப்பாட்டுக்கு ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். தசரா, தீபாவளியென்றெல்லாம் வருகிறதல்லவா! நல்ல நாளும் அதுவுமாக, நாங்களெல்லோரும் எங்கள் ஊரில் போய் இருந்து பண்டிகை கொண்டாட வேண்டுமென்று அப்பா சொல்லுகிறார்."

'ஊம்' என்று கூறியவாறு பத்மநாபன் சோபாவில் சாய்ந்து விட்டான். அவன் வந்தும் வராதது மாயிருக்கையிலேயே மதுரவேணி அவனிடம் தங்கள் ஊர்ப் பிரயாணத்தைச் சொல்லவே அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. மதுரவேணியும் அவள் குடும்பத்தாரும் ஊரை விட்டுப் போகப் போகிறார்கள் என்ற செய்தியைக் கேட்க அவனுக்கு எதையோ பறி கொடுத்து விட்டது போன்ற ஏக்க உணர்ச்சி உண்டாயிற்று.

தாங்கள் பட்டணத்துக்கு திரும்பப்போகும் செய்தியைப் பத்மநாபன் எப்படி வரவேற்கிறான் என்று அறிய மதுரவேணி விரும்பினாள். அவள் எதிர்பார்த்தபடியே அவன் அச் செய்தியைக்கேட்டு மனக்கலக்கமுற்றதைக் கண்டு அவள் உள்ளூர மகிழ்ந்தாள். ஆயினும் அவள் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் "என்ன இன்று ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்? உங்களுடைய முக வாட்டத்துக்குக் காரணமென்ன?" என்று கேட்டாள்.

பத்மநாபன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "அப்படி ஒன்றுமில்லையே" என்று கூறிவிட்டு, 'ஆமாம் உங்களுக்கு இந்த ஊர் பிடிக்கவில்லையா? இந்தப் பெரியகாஞ்சிபுரம் கூடப் பட்டிக்காடுபோல் தோன்றுகிறதா?" என்று வினவினான்.

"நீங்கள் அடிக்கடி பெருமையாகச் சொல்விக் கொள்வீர்களே! பல்லவ அரசர்காலத்தில் தலை நகராய் இருந்தது போல் இந்தக் காஞ்சி இன்று இருந்தாலுங்கூட, எங்களுக்கு அயலூர்தானே! சீமையில் சுற்றுப்பிரயாணஞ் செய்தாலும் சொந்த வாசஸ்தலத்துக்குப் போகத்தானே யாரும் விரும்புவார்கள்? நீங்கள் கேட்பது ஒரு கேள்வியா?" என்று கூறி மதுரவேணி அவனை மடக்கினாள்.

பத்மநாபன் சிரித்துக் கொண்டே "என்னைப் பொறுத்தவரை அதெல்லாம் இல்லை, பட்டணத்து பிப்ரவரிப் பூவுக்குக் காட்டு ரோஜாக்களிடையே இருப்பது கௌரவக் குறைவாகத் தோன்றுகிறது இல்லையா? அப்படித்தானே!" என்று கேட்டுத் தமாஷ் பண்ணினான்.

"காஞ்சிப் புலவரின் கவி வருணனையா இது!—நீங்கள் அணியிலக்கணம் சரியாகப் படிக்கவில்லை போலிருக்கிறது: அதுதான் உங்கள் உவமை சரியாயில்லை.—இங்கு இருக்கும் பெண்களெல்லாம் ரோஜாப் புஷ்பங்கள் போலவுமில்லை, நான் பிப்ரவரிப் பூ வாகவுமில்லை,—உங்கள் ஊர்ப் பெண்களெல்லாம் ரோஜா மலர்களாக உங்களுடைய கண்களுக்கு காட்சியளிக்கிறார்களா? அல்லது அப்படி நீங்கள் அவர்களை ஒசத்தியாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று மதுரவேணி சூறும்பாகப் பேசினாள்.

பத்மநாபன், "அடேடே! ராணிக்கு முகம்சிவந்து விட்டதே! இந்தப் பெண்களுக்குத் தான் என்ன தற்பெருமை!—மதுரம், நான் உன்னை—உன் நாகரீகத் தன்மையைப் பாராட்டிப் பேசப்போக, நீ வேறு விபரீதமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு சண்டைக்கு வரப் பார்க்கிறாயே!..." என்றான்.

"பட்டணத்துப் பெண்களெல்லாம் சண்டைக் காரிகள் என்பது உங்கள் எண்ணமா? இந்தப் பக்கத்து நங்கையரின் வாயாடித் தனத்தின் முன் யார் நிற்கமுடியும்?—என்று மதுரவேணி வம்பாக மொழிந்தாள். பின் என்னவோ நினைத்துக்கொண்டு "அதிருக்கட்டும், நீங்களும் எங்களுடன் வருகிறீர் களா? அப்பா கேட்கச் சொன்னார்" என்று சொல்லி அவன் முகத்தைக் கூர்மையாகப் பார்த் தாள்.

"நானா?"

"ஆமாம், நீங்கள் இருந்துதான் என்ன செய்கி றீர்கள்? ஒரு முறை கூடப் பட்டணம் வந்ததில்லை என்று நீங்கள் முன்னொரு நாள் சொன்னீர்க ளில்லையா?"

"ஆமாம்."

"அப்படியிருக்க, நீங்கள் உங்களுடைய பெற் றோரின் அநுமதியைப் பெற்றுக் கொண்டு எங்களு டன் புறப்படுங்களேன். எஸ். எஸ். எல். ஸி., பாஸ் பண்ணிவிட்டு வேலைவெட்டி செய்யாமல் இங்கு வீணாகத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறீர் கள். அங்கு வந்தாலும் ஏதாயினும் வேலை செய்ய லாம். அப்பா உங்களுக்குத் தகுந்த உத்தியோக மாகப் பார்த்து வைப்பார், என்ன சொல்லுகி றீர்கள்?"

மதுரவேணி தன்னையும் உடன் வருமாறு அழைப்பதைக் கேட்டுப் பத்மநாபனுடைய உள்ளம் பூரித்துப் போயிற்று. ஆனாலும், தான் அவர்களு டன் செல்வது என்பது அவ்வளவு உசிதமா? என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்? நீங்கள் மட்டும் சென்னைப் பட்டணத்துக்கு வந்துவிட்டீர்களோ, அப்புறம் உங்கள் ஊரைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டீர்கள். அது நிச்சயம்."

"பட்டணம் என்ன, சொர்க்க பூமியா என்ன? மதுரம், மிகப் பிரமாதப் படுத்துகிறயே!"

"நான் சொல்வானேன்! நீங்கள் வந்து பார்த் தால் பட்டணம் சொர்க்கமா, அல்லது உங்கள் பட்டிக்காடு போலிருக்கிறதா என்று தெரிந்து போகிறது."

மதுரவேணி பட்டண வாசத்தைப் பற்றி வரு ணிக்க வருணிக்க, பத்மநாபனின் உள்ளம் கிளர்ச்சி



கொண்டது. அவள் சொல்லுகிறபடி பட்டண வாசம் சொர்க்கமாயிருக்கிறதோ, இல்லையோ. மதுரவேணியுடன் வாசஞ் செய்வது நிச்சயம் சொர்க்க இன்பத்தைத் தரும் என்று அவன் தீர்மானித்தான். ஆகவே, அவன் வலியக்கிடைக்கும் அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாதென்று கருதி 'மதுரம், நான் உங்களுடன் பட்டணம் வருவதில் யாதொரு ஆட்சேபமுமில்லை. ஆனால் எதற்கும் என் தாய் தந்தையரை ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று கூறினான்.

''அப்படியே செய்யுங்கள்.''

''ஆமாம், நீங்கள் பட்டணத்துக்கு எப்போது புறப்படுவதாக எண்ணி இருக்கிறீர்கள்?''

''நாளை மறுநாள் நவராத்திரி கொலுவை அங்கு போய் வைக்கலாமென்று நாங்கள் எண்ணியிருக்கிறோம்.''

''எங்கள் காமாட்சியம்மன் சந்நிதியிலும் கொலு நிறுத்துவார்கள். கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். தசராசமயத்தில் நீங்கள் இங்கு இருந்தால் பார்த்து மகிழலாம்.''

''எப்போது பார்த்தாலும் உங்களூர் பெருமையைச் சொல்வதில் உங்களுக்கு ஒரு அலாதி பிரியமிருக்கிறது. அப்பா! எனக்கோ கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய்விட்டது.''

''நீ உன் பட்டணப் பெருமையை அளந்தால், நான் சரித்திரப் பிரசித்தி பெற்ற எங்கள் காஞ்சியின் பெருமையைச் சொல்ல மாட்டேனா! பதிலுக்குப் பதில் தானே'' என்று கூறிப் பத்மநாபன் மதுரவேணியை கண்ணால் கொல்வது போல் பார்த்துச் சிரித்தான். அவளும் ''நீங்கள் பொல்லாத மனிதர்'' என்று கூறியவாறு அவன் தோள்களைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டே முல்லை நகை செய்தாள்.

பெருந்தேவியின் வீட்டில் இருந்தாற்போலிருந்து ஒரு விதப் பரபரப்பு உண்டாயிற்று. ஒருவருக்கொருவர் குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். கடைசியாக எல்லோரும் வெளியே ஆவலோடு பார்த்தனர். வீதியிலிருந்து பத்மநாபன் பரபரப்பாக வீட்டினுள் நுழையலானான். வரும்போதே 'தேவி எங்கே? எங்கே படுத்துக் கொண்டிருக்கிறாள்?' என்று கேட்டான்.

முன்னேயே அங்கு வந்திருந்த அஞ்சலை ''இதோ மாமா'' என்று பெருந்தேவி படுத்திருந்த அறையைச் சுட்டிக் காட்டிக் கொண்டே அழைத்துப் போனாள்.

''இந்தப் பக்கம் திருப்புவதற்கு உனக்கு இவ்வளவு நாட்களாயிற்று? அப்பா! இப்போதாயினும் பெருந்தேவியைப் பார்க்க வேண்டுமென்று உனக்குத் தோன்றிற்றே!'' என்று ஆற்றுமையோடு கனகவல்லியம்மாள் கேட்டாள்.

பெருந்தேவியின் தந்தை மட்டும் பத்மநாபனைப் பார்த்துப் பேசாமலிருந்தார். பத்மநாபன் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நேரே, பெருந்தேவி இருந்த அறையை அடைந்தான். இவர்களுக்கு முன் போயிருந்த பெருந்தேவியின் தங்கை அவனை எழுப்ப முயன்று கொண்டிருந்தவள் இவர்களைக் கண்டதும் ஒதுங்கி நின்றாள்.

அஞ்சலை தூங்குவதுபோல் அசைவற்றிருந்த பெருந்தேவியைத் தட்டி, ''பெருந்தேவி யார் வந்திருக்கிறது, பார்'' என்று சொன்னாள்.

பெருந்தேவி மெள்ளக் கண்களை விழித்துப் பார்த்தாள். வியப்பில் மகிழ்ச்சியும் ஒருங்கே வெளிப்பட, அவள் கண்கள் விரிந்தன.

''யார்? அவரா வந்திருக்கிறார்?''

''ஆமாம், நான்தான் வந்திருக்கிறேன்''.

''ஆமாம்; அவர்தான் வந்திருக்கிறார், உன்னைப் பார்க்க''.

பத்மநாபனும் அஞ்சலையும் பெருந்தேவியின் கேள்விக்கு ஏக காலத்தில் பதிலளித்தனர். ஆனால், அஞ்சலை, 'அவர் வந்திருக்கிறார் உன்னைப் பார்க்க' என்று வார்த்தைகளை அமுத்திச் சொல்லியது பத்மநாபன் இதுவரை பராமுகமாயிருந்ததைக் குத்திக் காட்டுவது போலிருந்தது.

பத்மநாபனைக் கண்டதுமே பெருந்தேவிக்குக் கண்ணீர் பொங்கி வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீரா? துன்பக் கண்ணீரா? என்று சொல்ல முடியவில்லை. ஆனாலும், அவள் தன் காதலன் ஏதாயினும் நினைத்துக்கொள்ளப் போகிறானென்ற அச்சத்தால் தன் போர்வையால் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொள்ளலானாள். பின் அலங்கோலமாகக் கிடந்த கூந்தலையும் ஆடைகளையும் சீர்திருத்திக் கொள்வதில் கவனஞ் செலுத்தினாள்.

நார்க் கட்டிலின் மீது நாரும் தோலுமாகக் கிடந்த பெருந்தேவியைக் கண்கொண்டு பார்த்ததும் பத்மநாபன் திகைத்துப் போனான். ''என்ன இது! தேவி, இப்படி ஒரேயடியாக உருக்குலைந்து போயிருக்கிறாயே!'' என்று பதைபதைப்போடு கேட்டான். ''இவ்வளவு மோசமாக இருப்பதாக யாரும் எனக்

சுச் சொல்லவில்லியே!" என்று தன் உள்ளத்தின் உணர்ச்சியை அடக்கமாட்டாமல் தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன் அஞ்சலியை நோக்கி, "எத்தனை நாட்களாக, தேவி இப்படிப் படுத்துக் கிடக்கிறாள்? இவள் உடம்புக்கு என்னவாம்? யார் வைத்தியம் பார்க்கிறார்கள்?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான்.

தன் அம்மான் மகளின் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அஞ்சலி, 'நம்ம டாக்டர் கந்தசாமி பிள்ளை தான் இப்போது மருந்து கொடுத்து வருகிறார். அதற்கு முன் யார் யாரோ பார்த்தார்கள். காற்று சேஷ்டையாய்க் கூட இருக்கும்' என்று சிலர் சொல்லவே மணி மந்திரம் என்றெல்லாம் செய்து சாந்தி கழித்துப் பார்த்தாயிற்று. ஒன்றுமே பிரயோஜனமில்லை. இது உடம்பாலுற்ற நோயாயிருந்தால் தானே மருந்து மாயத்தில் போகும்! மனநோய், மாமா, மனநோய்....." என்று கூறி நிறுத்தி "மனநோய் மணிமந்திர ஔஷதங்களால் போகுமா, நீயே சொல், மாமா!" என்று கேட்டாள்.

பத்மநாபன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

அஞ்சலி அவன் உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பது போல் உற்று நோக்கி, "உண்மையாகவா மாமா, யாரும் உன்னிடம் பெருந்தேவி பாயும் படுக்கையுமாய்க் கிடக்கிறாள் என்று சொல்லவில்லை? இவள் நோயாய்க் கிடப்பது உனக்குத் தெரியவே தெரியாதா?" என்று சர்க்கார் தரப்பு வக்கீல் குற்றவாளியைக் குறுக்கு விசாரணை செய்வது போல் கேட்டாள்.

பத்மநாபன் தயக்கத்துடன், "தேவி நோயில் விழுந்திருக்கிறாள் என்று அம்மா எல்லாம் கூடச் சொன்னார்கள். ஆனால் இவ்வளவு கேவலமாக இவள் படுத்துக் கிடப்பாள் என்று நான் எண்ணவில்லை; எலும்பும் தோலுமாக அல்லவா கிடக்கிறாள்?" என்று கூறினான். "சாதாரண சுரம் கிரமமாயிருக்கும். சாவகாசப் பட்டதும் போய்ப் பார்க்கலாம் என்று கருதியிருந்தேன். இப்போது பார்த்ததில் அல்லவா தெரிகிறது....." என்று உள்ளுக்குள் இழுத்தான்.

அஞ்சலி ஏளன நகை செய்து, "நீ தற்சமயம் இருக்கும் தடபுடலில் உனக்கு எங்கே சாவகாசப் படப் போகிறது மாமா, இப்போதும் கூட எப்படி சாவகாசப் பட்டது என்று தான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. உயிர்த் தோழியைக் கூடப் பார்க்க முடியாதபடி அவ்வளவு நிரம்ப வேலையல்லவா இருக்கிறது!" என்று குத்தலாகக் கூறினாள்.

பத்மநாபனுக்கு அப்போதிருந்த மனநிலையில் அஞ்சலியின் குறும்பு மொழி புரியவில்லை. "அந்தப் பட்டணத்துப் பெண்ணை விட்டு விட்டு எப்படி வந்தாய், மாமா! நீ இங்கு வந்திருப்பது தெரிந்தால் அவள் கோபித்துக் கொண்டாலும் கொள்ளக் கூடும்.....ஆமாம், நான் ஒன்று கேட்கிறேன் மாமா; அல்லும் பகலும் இருந்து கவனித்துக் கொள்வதற்கு அவள் சம்பளமும் படியும் கொடுக்கிறாளா, என்ன....." என்று குறும்பாகவே கேட்டாள்.

படுக்கையில் நிமிர்ந்து உட்கார முயன்று கொண்டிருந்த பெருந்தேவி இதைக்கேட்டு, "என்ன அஞ்சலி, மாமாவை என்னென்னவோ கேலி செய்கிறாயே! பேசாமலிருக்க மாட்டாய்!" என்று மெல்லிய குரலிலேயே அதட்டினாள். "இத்தனை நாள் கழித்து வந்திருக்கிறாரே! க்ஷேமலாபங்களை விசாரிப்போம்; நல்ல வார்த்தைகள் பேசுவோம் என்றில்லாமல் வாய்க்கு வந்தபடி பிதற்றுகிறாயே!" என்று கடிந்து கொண்டாள்.

பத்மநாபன் பெருந்தேவி பக்கந் திரும்பினான். அவன் கைகள் அவளுடைய மெலிந்த தேகத்தை வருடின. அஞ்சலி பெருந்தேவியின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாமல், "நன்றாகத் தடவிப் பார் மாமா! பெருந்தேவியின் உடம்பு எவ்வளவு மோசமாக இருக்கிறதென்று, இவ்விதம் இவள் உருகிப் போயிருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? யார் காரணம் தெரியுமா? எல்லாம் நீ தான். பட்டணத்துப் பெண்ணின் சிநேகிதம் கிடைத்த ஜோரில் என்றிருந்து, பெருந்தேவி இருக்கும் பக்கமே திரும்பிக் கூடப் பார்க்காமல் பராமுகமாயிருக்கத் தொடங்கினாயோ அன்றிருந்தே இவள் நோயில் விழுந்து விட்டாள். இவளை இக்கதிக்கு ஆளாக்கிய புண்ணிய புருஷன் நீ தான் மாமா!" என்று அவன் மீது குற்றப் பத்திரம் வாசிக்கலானாள்.

"நான் சொல்வது உண்மை தான் என்று ஒப்புக் கொள்ளுகிறாயா? மாமா, நீ பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேட்கப்படலாம்; ஆனால், உன் உள்ளம் இதை ஒப்புக் கொண்டால் போதும்," என்று கூறி, அஞ்சலி மேலும் ஆத்திரத்தோடு, "இவ்விதம் உன்னை நம்பியிருக்கும்—உன்னிடம் தன் உயிரையே வைத்திருக்கும் அபலைப் பெண்ணைப் புறக்கணித்து விட்டுச் சென்றது நியாயமா? ஒரு பெண்ணின் வாழ்க்கையை—ஏன்? உயிரையே — கெடுக்கத் துணிந்த உனக்கு கடவுள் மன்னிப்பு அளிப்பாரா? பெருந்தேவியை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு, நீ என்ன சுகபோகத்தில் இருந்து என்ன இன்பம் அனுபவிக்கப் போகிறாய்? எண்ணிப் பார், மாமா!" என்று கேட்டாள்.

பெருந்தேவிக்கு எங்கிருந்து அவ்வளவு உரத்துப் பேச வலிவு வந்ததோ தெரியவில்லை. "அஞ்சலி, நீ பேசாமலிருக்க மாட்டாய்? அவர் என்ன செய்தார்

என்று இபபடிக் கடிந்து கொள்ளுகிறாய்? நான் நோயில் விழுந்தால் அதற்கு அவர் என்ன செய்வார்? அவர் மீது வீண் பழி சுமத்துவது சரியல்ல. அப்படித்தான், நான் என்ன நோயில் இருக்கிறேன்? எனக்கு இப்போது ஒன்றுமில்லையே!—இப்படி என் னைப்பார்; எனக்கு என்ன?.....'' என்று உரைத்தாள்.

அஞ்சலி பெருந்தேவியைச் சினந்து கொள்வது போல் பார்த்தாள். இப்போது உண்மையில் பெருந்தேவியின் முகத்தில் ஜீவகளை ஏற்பட்டுத் தான் இருந்தது. பத்மநாபனைக் கண்ட மகிழ்ச்சியில் அவள் பூரித்துப் போயிருக்கிறாள் என்பதை அஞ்சலி அறிந்து கொண்டாள். ஆகவே அவள் புன்னகை செய்தவாறு, ''இந்த மாதிரி பேதைப் பெண்ணு யிருந்ததனால் தான், பெருந்தேவி, நீ மாமனை இன் னொருத்தி கவர்ந்து கொண்டு செல்லும்படி விட்டு வருந்திக் கொண்டிருக்கிறாய். நீ எப்படித் தான் இந்த வஞ்சக உலகில் வாழ்வாயோ!—'' என்று கூறிக்கொண்டே பத்மநாபனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அவன் தன் தவற்றை யுணர்ந்து பச்சாதாபப் படுபவன் போல் காணப்படவே, இரு வரையும் மனங்கலந்து பேசவிட்டுச் செல்வதற்கு இது தான் சமயமென்று அறிந்து அவள், ''அந்தப் பட்டணத்துப் பெண்ணுடன் மாமா சென்னப்பட் டணம் போகப் போகிறாள் என்று ஊரில் பேசிக் கொள்ளுகிறார்கள். இவ்வளவு நாள் வராதவன் இப்போது வந்திருப்பதைப் பார்த்தால், உன்னை ஏமாற்றி விட்டுப் போகத்தான் வந்திருக்கிறானே என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. நீ கெட் டிக்காரியாயிருந்தால் அவனை விட்டு விடாதே. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி யாச்சு. அப் புறம் நீ யாச்சு; மாமன் ஆச்சு.....''என்று தமா ஷாகச் சொல்லிய வண்ணமே அவர்களைத் தனியே விட்டுச் சென்றாள். பெருந்தேவியின் தங்கையும் அஞ்சலியின் பின்னே போனாள்.

பத்மநாபன் பெருந்தேவியைக் கனிவாக நோக்கி னான். பெருந்தேவி அன்புப் பெருக்கெடுத்து ஓட அவனைப் பார்த்தாள். சில விநாடிகள் வரை இரு வரும் என்ன பேசுவதென்று தெரியாமல் தவித்தனர்.

பத்மநாபன் தான் மௌனத்தைக் கலைத்தான். ''இப்போது உடம்பு எப்படி இருக்கிறது, தேவி?'' என்று பரிவோடு கேட்டான்.

''எனக்கு உடம்பு ஒன்றுமில்லையே! மாமா, இடையே சிறிது பலவீனமாயிருந்தது. அவ்வளவு தான்.'' பெருந்தேவி தன் அசௌகரிய நிலையை அன்பன் அறியவொட்டால் மறைக்க முயன்றாள்.

பத்மநாபன் துயர நகை செய்து, ''என் மறைக் கிறாய், தேவி? நான் என்ன வாயினும் எண்ணிக் கொள்ளப் போகிறேனென்று?'' என்று வினவினான்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உண்மை யில் நான் தெம்பாகவே இருக்கிறேன். வேண்டு மானால், பாருங்களேன்'' என்று கூறியவாறு படுக் கையை விட்டு எழுந்திருக்க முயன்றாள். அவள் தன் காதலன் மனம் வருந்த எதுவும் சொல்லக்கூடா தென்ற உணர்ச்சியில் அவ்விதம் சொல்லி எழுந்து நடக்க முயற்சித்தாலும், தேக பலஹீனம் அதற்கு இடந்தரவில்லை. அவள் சோர்வுற்றுத் தொப் பென்று விழப்போனாள். அதற்குள் பத்மநாபன் அவளைத் தாங்கிக் கொண்டான்.

''என்னை நம்ப வைக்கத்தானே இப்படி எழுந்து நடக்க எத்தனித்தாய்? நான் கவனிக்காமலிருந்தால், கட்டிலிலிருந்து விழுந்திருப்பாயே! இப்படி உடம்பை அலட்டிக் கொள்ளலாமா?'' என்று கூறியவாறு அவளை அவன் தன் மார்பின் மீது வசமாகச் சார்த் திக் கொண்டு ஆஸ்வாசப் படுத்தினான்.

களைப்பினால் எழுந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டே, பெருந்தேவி, ''பட்டணத்துக்கா போகப் போகிறீர்கள்?'' என்று இரக்கம் தோன்ற மெல் லக்கேட்டாள்.

பத்மநாபன் ''இங்கு வரும் வரை பட்டணம் போக வேண்டு மென்ற தீர்மானத்துடன் தான் இருந்தேன். உன்னைப் பார்த்து விட்டு, அப்படியே நான் பட்டணம் போகும் செய்தியையும் சொல்லிக் கொண்டு செல்லலா மென்றே இங்கு வந்தேன். இது விஷயமாக அஞ்சலி கூறியது அவ்வளவும் உண்மை தான். ஆனால்!'' என்று கூறிக்கொண்டே போனான்.

பெருந்தேவி ஆவலை அடக்க மாட்டாமல், ''ஆனால்.....என்ன!'' என்று கேட்டாள்.

பத்மநாபன் தொடர்ந்து ''ஆனால், இப்போது உன்னைப் பார்த்த பிறகு என் மனம் மாறிவிட்டது. பட்டணப் பிரயாணத்தை நிறுத்தி விட்டேன்,...'' என்று கூறினான்.

''நிறுத்தி விட்டீர்களா? உண்மையாகவா?''

"உண்மையாகத் தான். இனி நான் உன்னை விட்டுப் பிரியமாட்டேன்....."

"ஆ! மாமா!" பெருந்தேவி உணர்ச்சி தாங்காமல் அவன் மீது சாய்ந்து விட்டாள். பத்மநாபன் அவளை முகத்தோடு முகம் வைத்துப் பொருமினான். "தேவி! நீ என்மீது வைத்துள்ள உண்மையான அன்பை இதுவரை அறியாமல் போனேன். வெளி மயக்கில் அதனைப் பறிகொடுத்தேன். கர்ட்டு ரோஜாவின் அழகை ரஸிக்கவும் மணத்தை முகரவும் என் கண்களுக்கும் மூக்குக்கும் சக்தியில்லா மல் போய் விட்டது. வாசனையில்லாத பிப்ரவரிப் பூவின் வண்ணவிசித்திரத்தில் தான் என் கண் ணொளி மழுங்கி விட்டது....." என்று உணர்ச்சி யுடன் பேசி வருகையில், பெருந்தேவி இடைமறித்து, "அஞ்சலி சொன்னதைப் போலவே சொல்கிறீர் களே!" என்று ஆச்சரியந் தாங்காமல் கூறினாள்.

"அஞ்சலி அறிவுள்ள பெண். அவள் உன் னுடைய உயர் குணத்தையும் அன்பையும் நன் கறிந்து வைத்திருக்கிறாள். அவளுக்கிருந்த புத்தி சாலித் தனத்தில் எள்ளளத்தனையும் எனக்கில்லாமல் போய் விட்டது." என்று கூறிய பத்மநாபன் முன் சொல்ல நினைத்ததை ஞாபகப் படுத்திக்கொண்டு தொடர்ந்து கூறத்தொடங்கி, 'ரோஜாவின் மலர்ச்சி யையும் மணத்தையும் போல் மாசற்ற உன் அன்பு கல் நெஞ்சனை என்னையும் நெக்குருகவைத்து விட் டது; இடையே என்னைக் கவிந்திருந்த அறியாமை யைப் போக்கி விட்டது.—தேவி, நான் உனக்குப் புரிய விருந்த துரோகத்தை மறந்து என்னை மன் னிக்க வேண்டும்....." என்று உருக்கமாகக் கூறினான்.

"நீங்கள் அப்படி யெல்லாம் சொல்லப்படாது" என்று கூறியவாறு பெருந்தேவி தன் மெல்விரல்க ளால் அவன் வாயைப் பொத்தினாள்.

Telegrams: CONVEYANCE.

For Genuine Ford Spare Parts And Accessories

Write to :-

SALEM SERVICES LIMITED

AUTHURISED FORD SUB DEALERS AND AUTOMOBILE ENGINEERS.

TRICHY ROAD, SALEM.

குழலிசை!

["விசாகன்"]

சீதளத் தென்றலிலே—குழல் இசை
தேங்கி மிதக்கையிலே
போதை வளர்ந்திடுதே—ஆசையும்
பொங்கி மிகுந்திடுதே
ஏனைய சோர்வழிந்தே-இசையின்
இன்ப அலைசூழ
மோன நிலையினிலே—வையகம்
மூழ்கி யமிழ்ந்துவிடும்.

வஞ்சியிடை துவள—வளைக்கரம்
வண்ணக் குடமணைய
நெஞ்சம் வெறியேற—மங்கையர்
நின்ற நிலைதளரும்
கன்னம் அமுதூறும்—எழில்மலர்க்
கண்கள் நிலவூறும்
மின்னலினம் போன்றூர்—காதலில்
மேனி களியேறும்

முத்துநகை காட்டி—மோகன
மோக நிலைகாட்டி
சித்திரம் போன்றவளாய்—ஒருத்தி
செய்கை மறந்திடுவாள்
மானினம் துள்ளிவரும்—அருகில்
மையல் வழிகாட்டும்
வான்தொடு நீள்மரங்கள்—யோக
மௌனத் தயர்ந்துவிடும்
கொஞ்சும் கிளியினங்கள்—இன்பக்
கூட்டம் மறந்துவிடும்

கஞ்சமலர்க் கண்ணன்-கண்களில்
காதல் அலைதேங்கும்.



புதியரக பட்டு ஜவுளிகளுக்கும்
தற்காலப்படி குறைந்த விலைக்கும்
கோவையில் பெயர் பெற்ற் இடம்

பாலகிருஷ்ணை & கோ

பட்டு ஜவுளி வியாபாரிகள்

ராஜவீதி, கோயமுத்தூர்.

Phone : 130. Grams : ENERGY.

A. PERA NAIDU & SONS,

5/329 AVINASHI ROAD, :: COIMBATORE.

A Reliable House for quality Textile Stores.

Agents for

M/S WILLIAM SONS (INDIA) LTD.
BOMBAY.

We always keep in stock the following :

Best Indian make Bobbins English Leather Beltings & Roller skins and sets of all sizes.

Please send us your enquiries :

காமக் கலை

[அ. கிருஷ்ணசாமி நாயுடு]

ஒரு பொருளின் மேல் ஒருவருள்ளம் பதிந்திருக்குமேயானால் அப்பொருளைப் பற்றிய நினைவே எப்பொழுதும் உண்டாகின்றது. நம்மிடம் ஒருவர் 4 மணிக்கு வருவதாகச் சொல்லியிருந்தார். அவர் வருவதைச் சிந்தித்துக் கொண்டே வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். யாரோ ஒருவர் வருவதாகச் சந்தடி கேட்டாலும்கூட அவர்தானென்று எட்டிப் பார்க்கிறோம். ஏன்? சதா அவர் நினைவாக இருக்கிறோம். சாதாரணமாகக் காற்றினால் கதவு அசைந்தாலும் கூட அவர்தானென்று வாயில் படிக்குச் சென்று "ஆர் அது" என்று கேட்கிறோமல்லவா? நமது உள்ளம் அவரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து விட்டது. அத்துடன் அவராகவே ஆய்விட்டது. இந்நிகழ்ச்சி பலவகைப் பாவங்களில் உண்டாகின்றன. இப்பாவங்களைப் பற்றிச் சோகம், பக்தி, பயம், காமம் முதலியனவாக ஆன்றோர் ஆராய்ந்து சொல்லியுள்ளார்.

இங்கு சொல்ல வேண்டியது காம பாவம். ஒரு பெண் மகளுக்கு ஆண் மகன் பேரிலேயோ ஆண் மகனுக்குப் பெண் மகன் பேரிலேயோ மிக்க காமம் உண்டாகுமேல் நோக்குவன எல்லாம் ஆண் மகனுக்குப் பெண் மகள் ஆகவும் பெண் மகளுக்கு ஆண் மகன் ஆகவும் காணப்படும். இவ்வாறு காணப்படுவதற்கு அவரவர் உள்ளங்கள் மிகுதியாக அவரவர் இடத்தில் பதிய வேண்டும். ஒரு முறை ஆண் மகனும் பெண் மகளும் நோக்கினமாத்திரத்திலேயே பார்த்த இடங்களெல்லாம் அவ்விருவர் வடிவங்கள் காணப்படமாட்டா. அவ்வாறு காணப்படுவதற்கு முன் சில படிகள் கடந்து வந்தால்தான் அக்காட்சியைக் காண முடியும். அதைப்பற்றித் தொல்காப்பியனார் சொல்லுவதாவது:—

முதலில் இருபாலாருக்கும் காட்சியுண்டாக வேண்டும். இக்காட்சிகளில் இருவரில், இருவருக்கோ ஒருவருக்கோ மனம் பதிய வேண்டும். இப் பதிவின்பின் அக்காட்சிப் பொருளின்மேல் வேட்கையுண்டாகும். வேட்கையுண்டான பின் தனிமையாக இருந்து இடைவிடாது நினைத்தல். இங்ஙனம் நினைப்பு அதிகமாகுமேல் நினைந்து நினைந்து உடல் மெலிதல், மெலிந்த நிலையில், அந்நினைந்த பொருளைப் பற்றிய சிறப்பியல்புகளைப் பேசுதல். இங்ஙனம் தனக்குள்ளே பேசுவதுடன் நாணம் இல்லாமல் பலர் முன்னிலையிலும் பேசல். இங்ஙனம் பேசும்பொழுது தம்மை மறந்து பேசுவதால், தம் முன்னிலையில் இருக்கும் பொருளையும் இன்னது என்று அறியாமல் தாம் நினைந்து நினைந்து பேசப்பட்ட பொருளின் வடிவமே முன்னிலையில் இருப்பதாக எண்ணிக் கொண்டு நோக்குதல். இங்ஙனம் நோக்கும்பொழுது நோக்கப்படும் பொருள்கள் அனைத்தும் தம் உள்ளத்தில் பதிந்திருக்கும் வேட்கைப் பொருளாகவே நோக்குதல்.

வேட்கை, ஒரு தலை உள்ளுதல், மெலிதல்
ஆக்கம், செப்பல், நாணுவரை யிறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்.

என்பதாம். இப்பொழுதைய மக்களின் மனப் பண்புகள் எப்படி எப்படி இருந்தனவோ அப்படி அப்படியே 2500 ஆண்டுகளுக்கு முன்னரும் இருந்தன. இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் பின்னும் மக்கள் மனப் பண்புகள் ஒரு தன்மையாகவே யிருக்கும்.

அச்சுத்திரத்திற்கு உரையாசிரியர்கள் தம் காலச் செய்யுட்களை உதாரணம் காட்டியுள்ளார். மேலும் கம்ப நாடார் அச்சுத்திரத்தில் உள்ள ஒவ்வொரு தலைப்பையும் ஆய்ந்தாய்ந்து சொல்லி முடிவில் நோக்கப்படும் பொருள்கள் எல்லாம் சீதையின் உருவெளித் தோற்றமாகத் தெரியும்படி இராவணன் மனை நிலையைச் சிருஷ்டித்திருக்கின்றார். இக்கம்பன் அமுதைத் தனிக் கட்டுரைத் தட்டில் வைத்துச் சுவைக்க வேண்டும். அங்ஙனம் சுவைப்பதற்கு முன் இப்பொழுதைய இரண்டு செய்யுட்களைக் கண்டு களிப்போம்.

பசு மாட்டின் கழுத்திற்கு அடியில் ஒரு தோல் தொங்குகிறது. அத்தோலுக்கு "அலை தாடி" என்று பெயர். நல்ல பாலுள்ள பசுமாடு. கன்று போட்டு ஒரு மாதம் இருக்கும். எவ்வளவு பாலிருந்தாலும் எவ்வளவு இளங்கன்று மாடாக இருந்தாலும் கன்று ஊட்டாமல் பால் சுரப்பதில்லை. அப்படிச் சுரப்பதாயினும் கன்றை விட்டுச் சுரப்புண்டாக்கிய பின் கறப்பதுதான் நம்மவர் வழக்கம். அவ்வழக்கப்படி கன்றையூட்டி மடிக்கர்ம்புகளில் பால் சுரந்தபின் கன்றையிழுத்துப் பசு கட்டியிருக்கும் காலிலேயே கட்டி விடுவார்கள். அக்

கன்று தாய்ப் பசுவின் அலே தாடியை மடியென்று நினைத்துக் கொண்டு தாவித் தாவிச் சப் சப்பென்று தோலே இழுத்திழுத்துச் சப்பும். அந்த அலே தாடியி லிருந்து பால் வராது. ஆனல் கன்றே பால் தருவது போலச் சப்பிச் சப்பிக் குடிக்கும். அதைப்போல..... பாட்டைப் படிப்போம்.

ஆவின் அலேதாடி அமிழ்தமடி யென்றெண்ணித்
தாவி இளங்கன்று சப்புதல் போல்—மேவு சுவர்
எட்டியுண் 'போட்டோ' இறுகப் பிடித்தணைத்துக்
கட்டித் தழுவினன் காண். (அ. கி.)

இன்றைய உயர்தரப் பள்ளிகளின் விஞ்ஞான அறைகளில் பரிசோதனேக்காக கண்ணுடித் தொட்டியில் நிறையத் தண்ணீரை ஊற்றி அதற்குள் மீன்களேப் போட்டு வைக்கிறர்கள். அம்மீன்கள் தண்ணீருக்குள் அங்குமிங்கும் ஓடுகின்றன. அவ்வாறு நீந்திக் கொண்டு போகும்பொழுது கண்ணுடித் தொட்டியின் சுவரில் மூட்டிக் கொள்ளுகின்றன. ஏன்? அத்தொட்டியின் கண்ணுடிச் சுவரைத் தண்ணீர் என்றே மீன்கள் நினேத் திருக்கின்றன. தண்ணீரைப் போலவே தொட்டியும் சுவர்களும் தோன்றுவதால் அதிலுள்ள மீன்கள் மயங் கிப் போயின. மீன்கள் மோதிக் கொள்ளும்பொழுது சுவரென்று நினேக்கின்றன. திரும்பும்பொழுது மறந்து விடுகின்றன. மறுபடியும் சுவரைத் தண்ணீர் என்று மகிழ்ச்சியாக மோதிக் கொள்ளுகின்றன. இங்ஙனம் மோதுவதும் மறப்பதும் மோதுவதும் மறப்பதும் ஆகவே அக்கண்ணுடித் தொட்டியில் மீன்கள் உவப்பு டன் ஓடி உலாவிக் கொண்டிருக்கின்றன. இதைப் போல.....

கண்ணுடித் தொட்டியில் மீன் கண்ணுடியைத்
தண்ணியென
நண்ணி மிகமோதி நடுக்குறல் போல்—எண்ணியுனே
காணத் திரிதருங்கால் கற்சிலேயைக் கண்டணேத்து
நாணத் நிகைத்தனன் நான். (அ. கி.)

காதல் கொண்ட ஆண்மகனும் பெண் மகளும் கற்பு என்னும் கலியாணம் செய்துகொண்டபின் "ஓர் இல்லில்" விடப்படுகின்றனர். இதைச் "சாந்தி" என்பர். மிகப் பழங்காலத்திலேயே இவ்வழக்கம் இருந்தது. இதனேத் தொல்காப்பியனர்,

"கரணத்தின் அமைந்து முடிந்த காலே
நெஞ்சுதலே அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்"

எனச் சொல்லுகின்றமை காண்க. கரணம் – சடங்கு களோடு கூடிய திருமணம் நிகழ்ந்ததும் புதல்வரைப் பயந்த நான்கு சுமங்கிலியப் பெண்கள் மணமக்களே ஓரில்லில் விடுவதாகவும், விடும்பொழுது "பேர் இல்லிழத் தி ஆக" என வாழ்த்துவதாகவும் அகநானூறு 86-ம் பாட்டில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு காதல் மணம் செய்து ஓரில்லில் இருக்கும் காதலர் இருவரும் தங்கள் கற்பு என்னும் பலரறியச் செய்யும் சடங்குகளோடு கூடிய கலியாணம் நிகழ்வதற்கு முன்பு தங்கள் உள்ளங்களில் உண்டான நிறைந்த காதலே முன்னிட்டு உடம்புகளில் நிகழ்ந்த காம மிகுதி யைப்பற்றி அந்த ஓரில்லில் உரையாடிக் கொள்ளும் பொழுது எவ்வளவோ பேசிக்கொள்வார்கள். அப்பேச் சுக்களுக்கெல்லேயே யில்லே. பிரிந்தபொழுது ஓர் இரவு ஓர் யுகமாக இருந்த காதலர்க்குப் புணரும் பொழுது ஓர் இரவு ஓர் செகண்டாக இருக்கும். காலம் போவதறி யாமல் நிகழ்த்தும் காதல் களியாடல்களில் இச்செய்புட் களின் உரையாடலும் ஒன்று. இவ்வுரையாடலேக் காதல் நிறைந்த கற்பு மணம் செய்த திருவள்ளுவநம் அவர் மனேவி வள்ளுவியும் பேசிக் கொண்டதாகத் தமிழர் காவியம் என்னும் நூலில் ஓரில்லில் உரையாடல் என் னும் பகுதியில் அமைந்துள்ளது. எத்தகையோரின் மிக்க காமமும் ஓரில்லில் சாந்தியடைகின்றது. அதனல் அதற்குச் சாந்தி எனப் பெயர் வைத்தனர். மக்கள் யாவரும் மடம் இன்றித் தமதில்லில் சாந்தம் பெறுக, பெறுக.

வாழ்வு இன்பக் காதல் நிலேக்களம் அடையுமாக!

தியேட்டர் ராயலில்

(ரயில்வே ஜங்ஷனுக்கு அருகாமையில்)

சிறந்த ஆர். சி. ஏ. சினிமா மெஷின் அமைக்கப் பட்டிருக்கிறது

2-10-47 முதல்

ஜெமினியின் மிஸ் மாலினி

தமிழ்ப் படம் ஈடைபெறுகிறது

பிரதி, சனி ஞாயிறு தோறும் காலை 10- மனிக்கு சிறந்த இங்கிலீஷ் படங்களின் மாட்னி காட்சியும், மாலை, 3–மனிக்கு தமிழ்ப் படங்களின் மாட்னி காட்சியும் உண்டு

❋

எஸ். வெங்கட்டராம செட்டியார்

கந்தன் & கம்பெனி

கோயமுத்தூர்

கைவசமுள்ள படங்கள்:

விஜய லக்ஷிமி, குண்டலகேசி, சகடயோகம், பூம்பாவை, ஆராய்ச்சிமணி, மந்திரவாதி, யயாதி, சந்திரமோகனு, கங்காவதார், விப்ர நாராயணு, பாதுகா பட்டாபிஷேகம், பவளக் கொடி, சோகாமேளர் முதலிய தமிழ்ப் படங்களும்;

சுமதி, சீதா ராம ஜனனம், குப்பி சதாரம், முதலிய தெலுங்குப் படங்களும்;

ஜமீன், ஷிகோமார், பரயதன் முதலிய ஹிந்திப் படங்களும்;

லேட்னிங் டெரர், லோன் ரேஞ்சர் முதலிய ஆங்கிலப் படங்களும்.

விபரங்களுக்கு: கந்தன் & கம்பெனி

பேரியகடை வீதி, :: கோயமுத்தூர்

பிராஞ்சுகள்: எர்ணகுளம், மதுரை, மதராஸ்

தயாராகிக் கொண்டிருக்கிறது: ஜீவகன் (தமிழ்)

MAXIMUM
HOTEL
COMFORTS
AT

R. H. R.

THE ROYAL HINDU RESTAURANT

BOARDING & LODGING

COIMBATORE

TEL: "ROYAL"
PHONE: 272

EXCELLENT
FOOD, ROOMS
AND SERVICE

T. S. RATHAKRISHNA CHETTIAR & SONS

Maligai Merchants & Commission Agents

Distributors:

Imperial Chemical Industries

Sub Agents:

Kanan Devan Hills Produce Dalmia Cement

Branches :—TANJORE, AYYAMPET & PAPANASAM

WHOLESALE AND RETAIL DEALERS IN BEST GHEE, RICE, SUGAR, SALT, COFFEE SEEDS, COTTON SEEDS, GINGELLY OIL, COCO, OILS AND OIL CAKES ETC.

GREEN MANURES AND ALL KINDS OF GROCERY, STATIONERY, DRUGS, TOILETRY, ETC., ETC., ON MODERATE PRICES.

பெரிய மனிதன்

[கே. சி. எஸ். அருணாசலம்]

[இரவு நேரம். பேரூரின் அழகான கோபுரம் அடங்கி நிற்கின்ற பெரிய மனிதனைப் போல அமை தியாக நிற்கிறது. பரந்த வான வெளியிலே நட்சத் திரங்கள் விட்டொளிரப் பிறைச்சந்திரன் சின்னஞ் சிறு முகில் கூட்டங்களிடையே மெல்லத் தவழ் கிறான். கோபுரத்தின் முகட்டிலே ஒளிரும் மின் சார விளக்கு ஆலயத்தின் அழகான முன் அமைப் பையும் சூழ்நிலைகளையும் ஒளியேற்றுகிறது. நாகரீக மான உடையணிந்த ஓர் இளைஞன் அங்கு நின் றுள்ள ஓர் குதிரை வண்டியில் ஏறுகிறான். அதே சமயத்தில் மிக நல்ல அழகும் இளமையும் பொங் கும் ஓர் பெண்ணும் அங்கு வந்தாள்.]

'வண்டி கோயமுத்தூர் போகிறதுதானே?'

வண்டிக்காரன்—ஆமாங்க போலாமா? வர்ரீங் களா?

இளைஞன்—நீங்கள்?

பெண்—நானும் அங்குதான் வருகிறேன், மிக நேரமாகி விட்டது!

இளை—பின் போகலாமே! (வண்டியில் ஏறப் புறப்படுகிறது திரும்பிக் கிளம்பிய வண்டியில் கோபுர விளக்கின் நீலச் சுடரொளி பாய அந்த அழகியின் வடிவு முழுதும் இளைஞனுக்கு நன்கு புலனாகிறது. பின்னி முடித்த நீள் கூந்தலும், மலர்களும் அவள் மார்பின் முன்புறம் புரள, மை தீட்டிய கருங்கண்கள் வேலின் கூர்மையோடு பிறழ அந்த மோகன வடிவத்தை ஒருகணம் அவன் ஆசையோடு பார்க்கிறான். அந்த அழகி அவனுக்கு மிக அருகாமையிலே நெருங்கி உட் கார்ந்திருக்கிறாள். அவனது பருவ மனம் துடி துடிக்கிறது)

பெண்—நீங்கள் டவுனில் எங்கே யிருக்கிறீர் கள்?

இளை— .....

பெண்—ஏன் பேசவில்லை?

இளை—விவசாயக் காலேஜுக்கருகில். நீங்கள்?

பெண்—இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது.

இளை—(வியப்பாக) வேடிக்கை! பின் உங்கள் கேள்விக்கு நான் பதில் கூறி இருக்கவேண்டி யதே! இல்லையே?

பெண்—அது உங்கள் விருப்பம்.

(மௌனம், சிறிது கழித்து)

பெண்—நான் இந்த ஊருக்குப் புதியவள்.

இளை—ஓ! அப்படியா! அதனால்தான் பதில் சொல்லவில்லையா?

பெண்—ஆம்.

இளை—உங்கள் சொந்த ஊர்?

பெண்—திருச்சி.

இளை—இங்கு எங்கே வந்தீர்கள், தனியாக?

பெண்—உங்களைப் போன்ற ஒரு இளைஞரை நம்பிய பலன்.

இளை—என்ன! நீங்கள் என்ன சொல்லுகிறீர் கள்?

பெண்—தெரியவில்லையா? நம் போன்ற இளை ஞர் பேசுகிறார்களே காதல், தெய்வீகம், இன்பம் இதையெல்லாம் நம்பி மயங்கித்தான். தன்னந் தனியாக இந்தப் புதிய ஊரிலே நாணமில்லாமல் நான் இதையெல்லாம் பேச நேர்ந்திருக்கிறது.

இளை—(சற்று இரங்கி) அப்படியானால் உங் கள் அன்பர்.....

பெண்—திருடன்! எங்கோ சிறையில் கிடக்கி றான்! ஒரு நாடகக்காரன். என்னைப் பரிபூர்ண மாக ஏமாற்றி என் விலை உயர்ந்த நகைகளையும்

பொருளையும் சூதாடி என் வாழ்வின் அமைதியைக் கெடுத்து ஓடிவிட்டான். பெற்றோர் முதலாக எல்லோர்க்கும் நான் பகை. என் வாழ்க்கை தனிமை ஆகிவிட்டது.

இளை—அப்படியானால் இப்போது நீங்கள் எங்கே.....

பெண்—எங்கே போவது? நிம்மதியற்ற உலகத்திலே புலன்களுக்கும் உணர்ச்சிக்கும் அடிமையாகி அலையும் வாலிபர்களுக் கிடையிலே நான் எங்கே நிம்மதியாக வாழ முடியும்?

இளை—உங்கள் துணிவான வார்த்தைகளும் வரலாறும் என் நெஞ்சுக்கு மிகப் புதுமையாகவிருக்கிறது. ஆனால் உங்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை தோன்றவில்லையே?

பெண்—ஆம், உண்மை. தோன்றுதுதான். வெடிப்பாகப் பேசுகிற என் வார்த்தைகள், என் தோற்றம், இப்படி உங்களுடன் பழகுகிறேனே இந்த முறை இவையெல்லாம் உங்களுக்கு அவ நம்பிக்கையைத்தான் தரும். ஆனால் இது என் இயல்பு.

இளை—ஆனால் இப்படியே வாழ்ந்துவிட முடியுமென்று நம்பிக்கையிருக்கிறதா? அது சரியானதானு?

பெண்—இல்லை. வாழ முடியாது. எனக்குத் தெரியும். நானும் மனித இனம்தானே! எல்லா விதமான ஆசாபாசங்களும் எனக்கில்லையா? அவற்றிலிருந்து நான் ஏன் ஒதுங்கிவிட வேண்டும்? ஆனால் இதை எல்லாம் யார் கவனிக்கப் போகிறார்கள். நான் கெட்டுப்போனவள்.

இளை—கெட்டுப்போனவள்!

பெண்—ஆம், கெட்டுப்போனவள். வாழ்க்கையைச் சுவைக்க எண்ணி இன்பக்கனவு கண்டேன். ஆனால் இன்று என் பெண்மை சேறு பூசிக்கொண்டது. இதற்காக என் வாழ்வையே கண்ணீரால் நனைத்துக் கொள்ள நான் தயாராயில்லை.

இளை—இப்படியே தனியாகத் திரிந்தால் தவறுக்குப் பரிகாரம் இல்லாமல் போய்விடும். மேலும் அது நாசத்துக்கே வழியாகும்.

பெண்—ஆனால் அது தவிர்க்க முடியாது போனால்?

இளை—இல்லை. அதைத் தடுப்பது நம் கையிலிருக்கிறது. உங்கள் வாழ்க்கையைப் புனரமைப்புச் செய்வது உங்கள் கைப்பட்டது.

பெண்—ஆனால் எதிர் காலத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை.

இளை—இது தோல்வியின் குரல்.

பெண்—இல்லை. கண் கண்ட உண்மை.

இளை—உங்கள் பெயர்?

பெண்—புஷ்பவல்லி.

இளை—ஆகா! எத்தனை அழகான பெயர்!

பெண்—உங்கள் பெயர்?

இளை—கார்த்திகேயன்.

பெண்—ஆகா! இதுகூட அழகான பெயர்தான்.

இளை—ஓ! இது என்ன நாடகத்தில் ரசிப்பது போல் அல்லவா இருக்கிறது நம் பேச்சு.

புஷ்—வாழ்வின் பிரதிபலிப்புத்தானே நாடகம்?

கார்த்தி—ஆம், ஆனால் அதில் பெரும்பாலும் கற்பனை இருக்கும்.

புஷ்—வாழ்வின் போக்கே பெரும்பாலும் கற்பனையின் மீதுதானே.

கார்த்தி—இது உங்கள் அநுபவ உண்மை.

புஷ—அதுசரி, நீங்கள் காலேஜில் உத்தியோகத்தில் இருக்கிறீர்களா?

கார்த்தி— .....

புஷ—ஏன் மௌனம்?

கார்த்தி—அதுதான் வேடிக்கை!

புஷ்—வேடிக்கையா?

கார்த்தி—ஆம், நானும் உங்களைப் போலவே வழி தவறியவன். கெட்டுப்போனவன்!

புஷ்—கெட்டுப்போனவர்! அப்படியானால் நீங்களும் என்னைப் போலவே ஏதாவது காதல்.....

கார்த்தி—இல்லை, இல்லை. எனக்கு அந்த அநுபவமில்லை. ஆனால் நீங்கள் வெறுத்தீர்களே அந்த சூதாட்டம், தீய நட்பு கொஞ்சம் கொஞ்சம் குடி இவைகளால் அழிந்துபோனவன். என் கல்வியையும் குடும்பத்தையும் வீணுக்கி நிலையில்லாமல் திரிகிறேன். காதல், தெய்வீகம் இதில் எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்கும் எதிர்காலம் இருண்டுதான் கிடக்கிறது. என் செல்வ சுகங்கள் அனைத்தும் போய்விட்டன. என் தீய குணங்களுக்காக நான் வருந்துகிறேன். ஆகவே இந்த சமூகத்தில் இன்று ஆண்மையோடு நான் நியிர்ந்து நடக்கிறேன். இதுவரை நான் யாரையும் வஞ்சித்ததில்லை. என்னிடத்திலே யிருப்பது என் மனசாக்கி ஒன்றுதான்.

புஷ்—ஆச்சரியம்! கெட்டுப்போன பின்பும் மன சாக்ஷி மீதியிருக்கிறதா?

கார்த்தி—என் நெஞ்சிலே அதை அழிக்க முடியாது ஆகா!.....நம்மிருவர் வாழ்க்கையும் சீர் குலைந்ததுதானே? நாம் எவ்வளவு மனம்விட்டுப் பேசிவிட்டோம்! நீங்கள் காதலினால் கெட்டீர்கள். நான் சகவாசத்தால் கவனிப்பு இன்மையால் கெட்டவன். காதல், அதற்குத் தெய்வீகத் தன்மை. இவற்றை எல்லாம் நீங்கள் கற்பித்துக் கொண்டீர்கள். அன்பு இன்பம் இது தவிர அதற்கு வேறு எந்தப் பொருளும் எனக்குத் தெரியாது. நம்பிக்கையில்லை. ஆனால் உங்களுடன் பேசும்பொழுது ஏனோ எனக்கு மிக ஆனந்தமாக விருக்கிறது.

புஷ்—எனக்கும் அப்படித்தான். நீங்கள் எத்தனை இனிமையாகப் பேசுகிறீர்கள்!

[கார்த்திகேயன் தன் சட்டைப் பையிலிருந்து ஓர் சிகரட்டை எடுத்துப் பற்றவைத்து அந்த நீக்குச்சியின் ஒளியில் அவள் முகத்தைப் பார்க்கிறான். அந்த மஞ்சள் ஒளியிலே சிறிது கலங்கிய அவளது நீலக் கண்களும், மோகன வடிவும், இளமையும், தனிமையும், இரவும் அலைபோல இன்ப நினைவுகளை பிறப்பிக்க அவன் நெஞ்சம் குளிர்கிறது. அவன் தன்னை மறந்தவனாய்]

இனி—ஆகா! நீர் சூடியுள்ள ரோஜாக் கொத்து எவ்வளவு அழகாகவிருக்கிறது!

புஷ்—ரோஜாக் கொத்து என்ன? நீங்கள் மட்டும்?

(வண்டி குலுங்கிய போது மெதுவாக அவளது மலர்க்கை அவனது கையை ஸ்பரிசிக்கிறது. தாங்க முடியாத ஓர் பேரின்பமும் புத்துணர்வும் கார்த்திகேயனது உள்ளத்திலே பாய அவன் மெய் சிலிர்க்கிறது.

* * *

கோவை காந்திபுரம். ஓர் அலங்காரமான பெரிய வீட்டின் உட்புரம். விலையுயர்ந்த நாற்காலிகள், பஞ்சணைகள், ஓவியங்கள் அழகு செய்யும் அந்த அறையில் கௌரவமான தோற்றமுடைய ஒருவர் கலங்கியவாறு அமர்ந்திருக்கிறார். எதிரில் கார்த்திகேயன்)

அவர்—கார்த்திகேயா! மூன்று வருடங்களுக்கு பிறகு இன்றுதான் உன்னைப் பார்க்கிறேன். ஆனாலும் உன் மனதில் எவ்வித மாறுதலும் இல்லையே! நீ சொல்லும் செய்திகளைக் கேட்கும்போது உன்னிடத்திலுள்ள கொஞ்ச அன்பும் எனக்குப் போய்விடுகிறது. சகோதர வாஞ்சையை பூண்டோடு அழிக்கிறது உன் நடத்தை.

கார்த்தி—சகோதர அன்பா! அது உங்களிடத்தில் என்றுமே இருந்ததில்லையே அண்ணா! கெட்டவன், நாடோடி, சூதாடி என்ற அவமானப் பட்டங்களுக்கு எல்லாம் என்னை உரியவனாகச் செய்தது நீங்கள்தானே?

அண்ணன்—நானா? நானா காரணம்?

கார்த்திகேயன்—ஆம், நீங்கள்தான். என் சின்னஞ்சிறு வயதில் என் நண்பர்களைப் பற்றி, என்தைய சகவாசத்தைப் பற்றி, ஒழுக்கத்தைப் பற்றி ஒருகணமாவது சிந்தித்தது உண்டா? கவனித்தது உண்டா? உங்கள் சவுக்கியம், உங்கள் முன்னேற்றம், பெருமை இதை அல்லாமல் நீங்கள் வேறு எதைக் கவனித்தீர்கள்? ஒரு பெரிய மனிதராக, நாலு பேர் போற்ற வாழ வேண்டும் என்பதையல்லாமல் உங்களுக்கு வேறு என்ன ஆசையிருந்தது? என் போக்கினால் உங்களுக்கு ஏதோ கவுரவக் குறைவு ஏற்படுவதாக நினைத்து என்னை எப்படியும் ஒதுக்கிவிடுவதுதானே உங்கள் ஆசை. இன்று இங்கே நீங்கள் ஒரு பெரிய வக்கீல். லக்ஷ லக்ஷமாக சம்பாதித்துவிட்டீர்கள். நான் உங்களுக்கு உடன் பிறந்தவன் என்று நினைப்பதுகூட உங்களுக்கு உயிர் போவதுபோல இருக்கிறது அல்லவா?

அண்ணன்—ஆம், உன் நடத்தை அப்படி இருக்கிறது. இந்த ஊரில் எனக்கிருக்கும் மதிப்பென்ன! கௌரவம் என்ன! இதை எல்லாம் நினைத்தால் நீ என் தம்பி என்று தெரிந்தால் என் மதிப்பு என்ன ஆகும்! நான் இதுவரை பாடுபட்டதெல்லாம் பெருமைக்காகத்தான்.

கார்த்தி:—இந்தச் சமூகமும் நீங்களும் இப்படித்தானிருப்பீர்கள். ஒருமுறை கெட்டுப்போனால் அவனுக்கு வாழ்க்கையில் பிராயச்சித்தமே இல்லையா?

அண்ணன்;—பிராயச்சித்தமா? உனக்கா? நாடோடியாகச் சூதாடித் திரிந்த உனக்கு ஒரு அனுமதேயக் காதலியும் கிடைத்துவிட்டாளே! இனி என்ன குறை? எதற்குப் பிராயச்சித்தம்?

கார்த்தி:—மிகக் குத்தலாகப் பேசுகிறீர்கள். ஒரு கணம் உங்கள் நெஞ்சிலே கையை வைத்துப் பாருங்கள். கண்ணை மூடி உங்கள் இளமையைச் சிந்தியுங்கள். நான் என்ன மறந்துவிட்டேனா? அக்கம்பக்கம் தான் தெரியாதா? (சற்று பொறுத்து)

நீங்கள் இன்று பெரிய மனிதர், சட்ட நிபுணர், இந்தப் பெருமைக்காக உடன் பிறந்த என்னையும் மறந்துவிட்டு நாய்க்கு எலும்புத் துண்டை எறி

வதுபோல எனக்குப் பிச்சைக் காசுகளே எறிந்து விட்டு ஒதுங்கி விட்டீர்.

அண்ணன்:—என்ன கார்த்திகேயா? இன்று என் மேல் குற்றப்பத்திரிகை வாசிக்கவா இங்கு வந்தாய்? இதனால் உன் அன்பை நான் புதுப்பித்துக்கொள்வேன் என்ற நினைப்பா?

கார்த்தி:—இல்லை ஒரு நாளும் இல்லை. குற்றப் பத்திரிக்கை வாசிப்பது, சட்ட செப்பிடு வித்தைகள் செய்வது உங்கள் தொழில். மனசாக்ஷியை சாம்பலாக்கி விட்டு பெரிய மனித வேஷத்திலே ருத்திராக்ஷப் பூணையாக விருப்பது உங்கள் கூட்டம். உங்களிடத்திலே அழிந்துபோன சகோதர உறவை புதுப்பிப்பது என் நோக்கமல்ல, தேவையுமில்லை. நான் எல்லா வகையிலும் குலைந்து போனேன். என் வாழ்க்கை ஒரு நல்ல லக்ஷிய மின்றி திக்குத் தெரியாமல் போகிறது உண்மை ஆனால் என் நெஞ்சிலே மனசாக்ஷி தழைத்து வளர்ந்திருக்கிறது. அதை நான் என்றும் புறக்கணித்ததில்லை. ஆனால் அது உங்கள் உள்ளத்தில் பல வருடங்களுக்கு முன்பே செத்துப் போய்விட்டது. வஞ்சனை, துரோகம் என்றும் நான் செய்ததறியாதவை. நீங்கள் போலிக் கவுரவத்துக்காக இதைத் தவிர வேறு ஒன்றும் செய்ததில்லை. என் வாழ்க்கையைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அது இனி திருந்தியே ஆக வேணுமென்ற அவசியமில்லை. சரி நான் வருகிறேன்

(தன் முன்னே வைக்கப்பட்டிருந்த கரன்சிக் கட்டை எடுத்து சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வணங்கி வெளியேறுகிறான்.)

* * *

(ஓர் நாள் மாலை நேரம் கோவைக்கு மேல் திசையில் உள்ள குளத்தில் நீர் நிறைந்து அலை புரள்கிறது. மேற்கே நீண்ட மலைத்தொடரின் முகட்டில் அஸ்தமன சூரியன் செங்கோலம் பூசி அணைகிறான். பரந்த வான்வெளி எங்கும் சிதறுண்ட முகில் கூட்டங்கள் மாலைச் சிவப்பேறி மெல்லத் தவழ்கின்றன. விரிந்த குளப்பரப்பு எல்லாம் வானத்தின் மென்சிவப்பைப் பிரதி பலிக்கிறது. ஒரு குறுக்கு அணையிலே கார்த்திகேயனும், புஷ்பாவும் நெளிந்து வளைந்த அலைகளைப் பார்த்தவாறு)

கார்த்தி:— புஷ்பா! உன் பாதங்களில் புரண்டு படியும் மெல்லிய அலைகள் போல எண்ணற்ற நினைவுகள், கற்பனைகள் என் நெஞ்சிலே தவழ்கிறது.

புஷ்ப:- ஏது இயற்கையிலே கலை அழகு தேட ஆரம்பித்திருக்கிறீர்கள்?

கார்த்தி:. கலையிலும் கவிதையிலும் இலக்கியத்திலும் எனக்கு என்றுமே கல்லாரி வாழ்வு முதல் ஆசைதான். ஆனால் அவை ஒன்றும் என் வாழ்வுக்குப் பயனுகவில்லை. சரிந்து சரிந்து விழுந்த என் வாழ்வை அவை எப்படிப் பற்றி நிற்கும்? ஏதோ கனவுகள், வேடிக்கை, பொழுது போக்கு இப்படிக் கழிந்தன பல வருடங்கள்.

புஷ்ப:- இன்றைக்கு ஏன் அந்த நினைவு?

கார்த்தி:- ஆம் நெடுங்காலத்திய ஆசை இந்தச் சிறு பொழுது அமைதியிலே என் மனத்திலே வடிவு காட்டுகிறது. நானும் ஏன் இப்படி எல்லாம் நிம்மதியாக வாழ்ந்திருக்கக் கூடாது? இருண்ட காட்டிலே திசை தப்பித் தவிக்கும் சிறு குழந்தை போல நெஞ்சம் பதறி எங்கெங்கோ அலைந்தேன். என்ன பயன்? என் மனிதத்தன்மை நாணிக்கிடக்கிறது. இந்தப் பரந்த உலகத்திலே பார்க்கும் இடமெங்கும் சூன்யமாகப் போக ஒரு சின்னஞ் சிறு மூலையிலே, நான் ஒதுங்கிக் கிடப்பது போல எனக்குத் தோன்றுகிறது. அப்படி நான் என்ன பாபம் செய்து விட்டேன்?

புஷ்ப:— உங்களைப் பற்றித்தானே சிந்தனை? நான் மட்டும்?

கார்த்தி:- நீயும் அப்படித்தான் புஷ்பா! உனக்கும் ஏக்கமும், ஏமாற்றமும், அவமானமும்தான் வாழ்வின் பரிசு. இந்தப் பெருஞ் சுமைகளைத் தாங்கிக் கொண்டு ஓர் நிலையான ஊன்று கோலில்லாமல் நாம் இருவரும் தள்ளாடுகிறோம். தராசுமையே வடிவானது போல மற்ற மனிதக் கூட்டங்கள் நம்மை மூலைக்கு மூலை ஒளிந்து சிரிக்கின்றன. தங்கள் நெஞ்சிலே வளர்ந்துள்ள எத்தனையோ சூப்பைகளை சிந்தித்து அறியாத, கலைய முடியாத இன்றையச் சமுதாயம் பிறரை ஏளனம் செய்வதிலும் அவரை ஒதுக்கித் தள்ளுவதிலும் பின் வாங்குவதில்லை. நம்மைத் தெரிந்து பழுக்கின்ற மனிதர்களிலே எத்தனை பேர் நேர்மையானவர்கள் புஷ்பா? நீயும் படித்தவள். நானும் படித்தவன். நமது சூழ்நிலைகள் நம்மை திசை கெடச் செய்தன. ஆனால் அதற்காக இன்று வருந்துகிறோம். நம் இருவர் வாழ்கையும் இப்போது மறு பிறப்பெடுத்திருக்கிறது. கடந்த காலத்திலே செய்த பிழை நமது கண்ணீரோடு மறைகிறது. நமது நெஞ்சம் இந்த இருண்ட கால நினைவிலிருந்து விலகி மலர்ச்சி யடைந்து விட்டது. ஆனாலும்.....

புஷ்ப-(இடையிட்டு) இன்னும் நமக்கு ஒரு நிலை கிடைக்கவில்லை. சமுதாய ஆதரவு நமக்கு வெகு தூரத்திலிருக்கிறது. ஆனால் என்றுமே இப்படியே இருந்து விடுவோமா?

[வானத்திலே வெண் சிறகு விரித்து கூட்டம் கூட்டமாக பறக்கின்ற நாரைகளைப் பார்த்தவாறே]

கார்த்தி-இல்லை, இப்படியே வாழமுடியாது. இது எவ்வளவு வசதி உடையதாகவிருந்தாலும் இது என்ன வாழ்க்கை?

[புஷ்பாவின் மெல்லிய பாதங்கள் நீரில் நனைந்து கொண்டிருக்க சிறிது அலையற்று அமைதியாக நிற்கின்ற நீரிலே அவர்கள் இருவரது வடிவங்களும் பிரதிபலிக்கின்றன. புஷ்பவல்லியின் அழகிய தோற்றத்தை தண்ணீரில் பார்த்துக் கொண்டே]

கார்த்தி-புஷ்பா! நம் வாழ்க்கை எத்தனை பெரிய மாறுதல் அடைந்து விட்டது. எங்கெங்கோ திரிந்த நாமிருவரும் எப்படியோ சந்தித்தோம். அன்புற்றோம். கையோடு கைபிணைத்து உறுதியோடு இன்று நாம் நிமிர்ந்து நடக்கிறோம். துன்பத்தின் குறுஞ்சிரிப்பை எதிர்த்து, ஏளனத்தின் கை கொட்டலை அலக்ஷியம் செய்து உலகத்தில் நாம் ஒரு புது வாழ்வை சிருஷ்டித்துக் கொண்டோம். நம் நெஞ்சிலே இருக்கின்ற எண்ணற்ற வேதனைகள், நம் மாசற்ற அன்பின் வியாபகத்திலே அழுந்தி மறைகின்றன. இது போதும் புஷ்பவல்லி!

[தண்ணீரில் தெரிகின்ற தன் அழகிய வடிவத்தை பார்த்துக் கொண்டு தன் மெல்லிய செங்கரங்களினால் தன் கூந்தலில் வனைவாகச் சூடியுள்ள ரோஜா மலர்களை சரி செய்து கொள்ளுகிறாள். மஞ்சள் கரையிட்ட மெல்லிய சரிகை வேட்டியை மேலிழுத்துப் போர்த்திக் கொண்டு எழுந்த கார்த்திகேயன் அவளைப்பார்த்து]

உன் நெஞ்சிலிருந்து நீங்காது பொங்கும் அன்பைப் போல உன் மைக்குழலை நாள் தவறாது அழகு செய்கின்றன இந்த ரோஜா மலர்கள். இல்லை, இல்லை. உன கூந்தலில் தவழ்ந்து அழகு பெறுகின்றன. சரி நேரமாகிறது நாம் போவோமா!

(கன்னங்களில் சிவப்பேற, கண்களிலே கனிவூற, நெஞ்சிலே களி மீற தென்றலில துவளும் பூங்கொடி போல ஒசிந்து எழுந்த புஷ்பவல்லி அவனோடு தன் மலர்க்கை பிணைத்து மெதுவாக நடக்கிறாள்)

புஷ்பா;-எத்தனை எத்தனையோ எண்ணி விட்டோம்! இன்பமும், துன்பமும் பிணைந்து பிணைந்து உள்ளத்திலே துள்ளுகின்றன. பிழைக்கு வருந்தினோம். இன்றைய இன்பத்துக்கு போற்றி செய்தோம். மின்னி இடி குமுறி, புயல் வீசிய வானத்திலே கண்சிமிட்டி எழில் காட்டும் நக்ஷத்திரங்களும் வளர் பிறையும் தண்கலையும் பூத்தன.

(ஏரிக்கரையிலே நடக்கிறார்கள். மாலை மங்கிக் கொண்டிருக்கிறது. எதிரிலேவந்த ஒரு எளிய உடைதரித்த ஒரு மனிதன் புஷ்பவல்லியைப் பார்த்து திகைத்து நிற்கிறான். அவனைக் கண்டதும் புஷ்பவல்லி நடுங்கி ஒவெனக் கதறுகிறாள். அந்த மனிதன் ஆவேசம் கொண்டவன் போல "புஷ்பா! என்ன ஒய்யாரம்!" என்று கத்திக்கொண்டே அவள் கழுத்தைப் பிடிக்கிறான். திடுக்கிட்டு தன்னை மறந்த கார்த்திகேயன் கீழேகிடந்த ஒரு பெருங்கல்லை எடுத்து அந்த வெறியனின் மண்டையிலே தாக்க ஐயோ என அலறி அந்த மனிதன் ஏரியின் சரிவிலுள்ள ஒரு மதகின் இடையிலே விழுகிறான் அவன் தலையிலிருந்து பொங்கி வழிகின்ற ரத்தம் மதகில் இருந்து கசிகிற தண்ணீரோடு கலந்து ஓடுகிறது. ரத்தம் தோய்ந்த அந்தப் பெரிய கல்லை தனது இடது காலால் அந்த மனிதன் உடலருகே உதைத்து எறிந்துவிட்டு, பேய்பிடித்தவன் போல் புஷ்பவல்லியின் கையைப் பற்றி விரைகின்றான் கார்த்திகேயன். சில நிமிஷங்களில் இவை நடக்கின்றன. நல்ல இருள் மூடுகிறது. அந்தச் சிறு தனிப் பாதை சந்தடியற்று முதியவனின் மனம் போல் ஒய்ந்து கிடக்கிறது.

* * *

(காந்திபுரத்தில் கார்த்திகேயன் தமையனார் மாளிகை. மிகக் கவலை தோய்ந்த முகத்தோடு வக்கீல் சோமசுந்தரம் பிள்ளை அமர்ந்திருக்கிறார். அடக்கமாகப் பேசுகிறான் கார்த்திகேயன்)

சோமு:—பிறகு!

கார்த்.—இதெல்லாம் நாங்கள் வந்தபின்பு நடந்தது. அவன் தான் புஷ்பவல்லியை ஏமாற்றியவன். அருகிலிருந்த தோப்புக்குள் ஏதோ சூதாட்டம் நடப்பதாக சந்தேகித்த போலீசார் ரகசியமாக ஏரி வழியே வந்திருக்கிறார்கள். அவர்கள் கையிலிருந்த டார்ச் லைட் சம்பவம் நடந்த மதகில் பாய்ந்தபோது ஒருவன் திடுக்கிட்டு எழுந்தானும். அவனைச் சோதித்த போது ஒரு சிறிய மணிபர்சும் ஒரு சின்ன மோதிரமும் கிடைத்திருக்கிறது. அவன்தான் கொலையாளி என்று கைது செய்யப்பட்டிருக்கிறான். அருகே பிணமும், ரத்தம் தோய்ந்த கல்லும் கிடந்தன. பிணத்தைக் கண்டு அவற்றைக் களவாட முயன்றது உண்மையென்றும் கொலை தனக்குத் தெரியாதென்றும் அவன் வாக்குமூலம் தந்துள்ளான். அதுதான் உண்மை

சோமு—இந்த விவரமெல்லாம் நீ.....

கார்த்தி: விசாரித்து தெரிந்து கொண்டேன்.

சோமு:—சரி. கடைசியாக ஒரு கொலைகாரனுகவும் மாறிவிட்டாய். பாவத்தின் உச்சி எதுவோ எதைக் கண்டு உலகம் நடுங்குகிறதோ அதை வெகு எளிதில் அடைந்து விட்டாய். என் மானம், என் செல்வாக்கு, வயது வந்த என் குழந்தை களின் எதிர்காலம் அத்தனையும் பாழாக வழி செய்து விட்டாய். வக்கீல் சோமசுந்திரம் பிள்ளை யின் தம்பி நாடோடியாய் கொலைகாரனுக, விலங் கும் கையுமாய் நின்று...ஐயோ! எல்லாம் வெளி யாகிவிட்டால்... வேண்டாம், ஒன்றும் போலீசிடம் ஒப்புக்கொள்ளாதே. அந்த அநாதை மடிந்தால் என்ன? உலகம் அழிந்துடுமா? பேசாமலிரு கார்த்திகேயா. நான் சொல்லும்படி கேள். கெட்ட காலத்திலும் ஒரு நல்ல காலம் எப்படியோ என் மானத்தையும் உன் உயிரையும் காப்பாற் றிக் கொள்ளலாம்.

கார்த்தி:—நல்ல காலமா! அண்ணு! எது நல்லகாலம்? கொலை செய்த ஒருவன் பழியின்றித் திரிய பாப மற்ற ஏழை தூக்கிலே தொங்குவதா? இப்படி யும் நடக்கவிட்டு என் உயிரைக் காப்பாற்றி நான் என்ன செய்ய வேண்டும்? என் மரணத்தி னல் இந்த உலகம் என்ன பிணக்காடு ஆகிவிடுமா? இதை ஒருநாளும் நான் அனுமதிக்க மாட்டேன். என் மனசாக்ஷி என் ஆன்மாவை தேய்க்கிறது.

சோமு:—மனசாக்ஷி! அது என்னடா மனசாக்ஷி? உயிரையும், இதுவரை உன்னை ஆதரித்த என் பெருமையையும் காப்பாற்றுவதை விடவா மன சாக்ஷி! மனசாக்ஷிக்குப் பணிந்தால் வாழ்க்கை குலைந்து போகும்!

கார்த்:—உண்மைக்கு சமாதி கட்டியுயிர் வாழ்வதை விட தூக்குமேடையும் சாவும் எத்தனையோ மேலா னவை. நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளப் போகிறேன். என் வாக்கு மூலத்தில் உங்களைப் பற்றி அணுவும் வெளிப்படுத்துவதோ உங்கள் தம்பி நான் என்று கூறி நீங்கள் போற்றி வளர்க் கும் உங்கள் பெரிய மனிதத்தன்மைக்கு இழுக்குச் செய்வதோ ஒன்றுமிருக்காது.

(புறப்பட எத்தனிக்கிறான். சோமு அவன் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சலாக) வேண் டாம் கார்த்திகேயா. உன் செய்கையால் எல்லாம் பாழாகிவிடும். நான் சொன்னபடி தயை செய்து கேள். முன்னே கூறியபடி அந்த பிச்சைக்காரனைக் காப்பாற்றிவிட முயல்வேன். என்னென்ன செய்ய வாமோ எல்லாம் செய்கிறேன் கார்த்திகேயா.

கார்த்தி:—காப்பாற்றுவதா? அது எப்படி அண்ணு? ஒருவேளை அவன் உயிர் பிழைத்தால் போலீசார் என்னை தெரிந்து பிடிக்கும் வரை இதை நான் வெளிப்படுத்துவதில்லை.

சோமு:—நான் சொல்லும்படி செய். எத்தனை செல வானாலும் சரி அவனைக் காப்பாற்ற நான் முன் நிற்கிறேன். ஆனால்..... எல்லாம் சுபமாக முடிந்த பிறகு நீயும் உன் காதலியும் எங்கோ போய்விட வேண்டும். அதற்கும் நான் உதவு கிறேன் சம்மதமா?

கார்த்தி:—அப்படியே எங்கோ கண்ணுக்கெட்டாது கடல் கடந்து வேணுமானாலும் போகிறோம். ஆனால் அந்த ஏழை காப்பாற்றப்படவேண்டும்.

சோமு:—சரிபோ. இந்தா இதை வைத்துக்கொள். உன் காதலியை சர்வ ஜாக்கிரதையாக இருக்கச் சொல். தேவையில்லாத சந்தேகங்களுக்கும் கலக்கங்களுக்கும் இடம் தராமல் கூடியவரை மறைவாகவே யிருங்கள்.

(வழக்கம்போல கரன்சிக் கட்டு ஒன்று எடுத்து அவனுக்குத் தந்து அனுப்புகிறார்.)

* * * *

கொலை வழக்கு நடக்கிறது. குற்றவாளி ஏழை என்றும் நாடோடி என்றும், அவனுக்கும் மடிந்தவ னுக்கும் யாதொரு பகையோ அறிமுகமோ இருந்த தாக ருசுவாகவில்லையென்றும் வழியில் கிடந்த பிரே தத்தை பார்த்ததும், திடுக்கிட்டுப்பயந்ததும், ஏழ்மை யால் அந்தப் பிணத்திலிருந்த மோதிரத்தையும், மணிபர்சையும் களவாடியதுமுண்மையென்றும் மிகப் பலமாக குற்றவாளியின் பக்கம் சோமுவால் வாதா டப்பட்டது. எப்படியிருந்தும் அந்த ஏழைக்குத் தூக்கு தண்டனை தரப்படுகிறது. சோர்வும் கலக்க மும் அடைந்த சோமசுந்தரம் தன் தம்பி என்ன திட்டமிடுகிறானே எனப் பரிதவித்தவராக அன்று இரவு பத்து மணிக்குமேல் தம்பியின் இருப்பிடத் திற்கு வருகிறார். சாதாரண ஜனங்கள் வசிக்கும் அந்தப் பகுதியில் வருவதற்கே அந்தப் பெரிய மனித ருக்கு வெட்கம். காரில் வருவது கவனத்தை இழுக் கும். எப்படியோ ஒதுங்கி, ஒதுங்கி வந்து சேருகி றார். எதிரில் வந்த பீட் கான்ஸ்டேபிள் எப்படியோ அடையாளம் தெரிந்துகொண்டு விரைப்பாக நின்று ஒருசலாம் அடித்துவிட்டுச் செல்லுகிறான். கார்த்தி கேயன் கூறியுள்ள அடையாளப்படி அவன் வீட்டை அடைந்து மெதுவாகக் கதவைத் தட்டுகிறார். தாளி டாமல் இருந்த கதவு நகர உள்ளே மெதுவாக எட் டிப் பார்த்தவண்ணம் செல்லுகிறார். மங்கலான விளக்கு எரிகிறது. ஒரு கட்டிலில் கார்த்திகேயனும்

புஷ்பவல்லியும் அருகருகே படுத்திருக்கிறார்கள். இது என்னடா.....என்று முனகியவாறு திரும்பி மறுபடியும் பார்க்கிறார். சந்தேகம் எதோ உள்ளிருந்து உறுத்த அருகு சென்று உடம்பைத் தொடுகிறார். சில்லிடுகிறது. நெஞ்சம் படபடக்க கை நடுங்குகிறது. முன்னால் ஒரு நீண்ட உறையிலே ஒரு கடிதம் மேலே தெரியும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. கதவைத் தாளிட்டு கைகள் நடுங்க, மெய் வியர்த்துக் கடிதத்தை மங்கிய விளக்கருகே நின்று படிக்கிறார். கொலையின் விவரம், நிகழ்ச்சி, காரணம் யாவற்றையும் தெளிவாக்கி, தானே குற்றவாளி என்றும், அந்த அனுதையை விடுவிக்க வேண்டும் என்றும் அதிலே தெளிவாக எழுதி விண்ணப்பித் திருந்தான் கார்த்திகேயன். தாங்கள் இருவரும் அநாதைகள் என்பதைத் தவிர வேறு குடும்ப விவரங்கள் ஒன்றும் கூறப்படவில்லை. கோர்ட்டில் அவன் விடுதலையாவான் என எதிர்பார்த்ததாகவும், தீர்ப்பு முரண்பட்டுவிட்டதால் ஒரு பாவமும் அறியாத அந்தப் பிச்சைக்காரன்–தான் செய்த தறியாத கொலைக்காக தூக்கேறுவது கண்டு இனித் தன் மனம் வெறுப்படைந்துவிட்ட தென்றும் அதிலே எழுதியிருந்தான். இறுதிப் பகுதியைப் படிக்கும் போது வக்கீலின் கண்களில் நீர் தேங்கி வழிகிறது.]

"நான் விடை பெறுகிறேன். இந்த உலகத்தின் வாழ்வில் இப்போதே என் இளமை சலிப்புக்கொண்டது. நாள்பட்டு, நஞ்சேறிய இந்த சமூகப் பழக்க வழக்கமும், கெட்டவன், தவறிழைத்தவன், விபசாரி யாரும் மீளமுடியாதபடி - என்றும் மீண்டும் மீண்டும் பாழாகவே செய்கின்ற மனோபாவமும் எங்களது மரணத்திற்குக் காரணங்கள். கண்ணீருக்கும் பச்சாதாபத்திற்கும் இங்கே மதிப்பில்லை.

எல்லா வகையிலும் துன்புற்ற வாழ்வுடையானாலும் என் மனைவியும், வெவ்வேறு திசைகளில் சென்று ஏமாற்றமும், ஏக்கமும், ஏளனமும் ஆகிய இவைகளையே வாழ்வில் கண்டவர்கள். கெட்டு மனம் குலைந்தவர்கள். இருந்தாலும், கெட்டுப்போனவர்களானாலும் ஒரு பாவமுமற்ற ஒருவனை எனக்குப்பதில் தூக்கு மேடைக்குப் பலியாக்கி நிம்மதியாக மனசாக்ஷியை காலால் மிதித்தெறிந்து விட்டு வாழ நான் விரும்பவில்லை. எனைப் பிரிந்து புஷ்பாவும் இருக்கமாட்டாள். எனவே விஷமருந்தி இங்கிருந்து–இந்தப் பாவ உலகிலிருந்து–விடை பெறுகிறோம்.

இது சம்பந்தமான எல்லா விவரங்களுக்கு கோவை ஜட்ஜ் அவர்களுக்கும், போலீஸ் சூபிரண்டு அவர்களுக்கும் இதன் பிரதிகள் இன்று தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

—கார்த்திகேயன்

[உள்ளம் நடுங்குகிறது. கண்ணீர் தாரை தாரையாக வழிகிறது. வக்கீல் ஏங்கி நிற்கிறார். இருந்தாலும் கடைசி வினாடியில் தன்னைப் பற்றி ஏதேனும் வெளிப்பட்டுத் தன் பெரிய மனிதத் தன்மைக்குப் பங்கம் விளையாது தப்பித்ததும், இனிப் பழையபடி நிம்மதியாக வாழ முடியும் என்னும் எண்ணமுமே மேலோங்குகின்றன. அந்த இரு உள்ளங்களின் மரணத்தில் ஏற்பட்ட இரக்கத்தை-தன் போலிக் கவுரவம் காப்பாற்றப்பட்ட மகிழ்ச்சி வெல்ல அப்பா என்ற நீண்ட பெருமூச்சுடன் மெதுவாக வெளியேறுகிறார்.]

INDIAN CAPITAL INDIAN LABOUR

Sri Ranga Vilas Ginning, Spinning & Weaving Mills Limited.

(Incorporated in 1922)
COIMBATORE.

Post Box No. 36
Telephone No. 17
Telegrams { "RANGAVILAS" Coimbatore

REGISTERED OFFICE :- PEELAMEDU, COIMBATORE.

AUTHORISED CAPITAL RS. 10,00,000
SUBSCRIBED CAPITAL RS. 7,51,250

BOARD OF DIRECTORS

BUY INDIAN YARN

Sri S. Beemiah Chettiar
,, P. S. G. Venkataswamy Naidu
,, K. Krishnaswamy Naidu
,, T. R. Narayanaswamy Naidu
,, K. A. Shanmuga Mudaliar
,, P. S G. Ganga Naidu
Sri G, R. Govindarajan
,, G. Ramaswamy
,, G. V. Muthuswamy B. Sc.,
,, G. R, Venkatesan
,, G. N. Venkatapathy
,, R. Doraiswamy
G. V. Ramaswamy Naidu

SUPPORT INDIAN INDUSTRY

NUMBER OF SPINDLES:- 30,000
SPINNERS OF SUPERIOR KINDS OF YARNS FROM 2S TO 40S
THE BEST QUALITY OF FINER COUNTS 60S, 80S & 100S
Managing Agents & Bankers
P. S. Govindaswamy Naidu & Sons
Peelamedu, : : Coimbatore.

Indian Interest is Swadeshi

A. V. THOMAS & COMPANY (India) Ltd.

(Incorporated in Br. India) (Liability of Members is Limited)
Registered Office: 2-21, First Line Beach, MADRAS
Telephone: 4518. Telegrams: "AVITHOM"
Branch at Coimbatore.
SALES DEPOT: MADURA, BANGALORE, TINNEVELLY & BOMBAY.
CAPITAL AUTHORISED Rs. 5,00,000 ISSUED & PAID-UP Rs. 5,00,000
BOARD OF DIRECTORS: MESSRS. A. V. THOMAS (Managing Director)
K. VENKATARAGHAVAN.
T. K. DURAISWAMY AIYAR. } DIRECTORS.
RAO SAHIB K. RANGASWAMY NAIDU }
MANAGING AGENTS:
THE SHEVEROY ESTATES LTD., 7-74 Satyamangalam Road, Coimbatore.
THE NEELAMALAI TEA & COFFEE ESTATES LTD., -do-
SECRETARIES: THE NILGIRI WATTLE PLANTATIONS LTD.
CHIEF AGENTS FOR MADRAS PROVINCE :
THE EASTERN FEDERAL UNION INSURANCE COMPANY LTD., CALCUTTA.
SOLE IMPORTERS IN INDIA FOR:
ELECTRONIA RADIOS (British)
AJAX WEIGHING MACHINES (Australian)
FAIRBANKS MORSE WEIGHING MACHINES(U. S. A)
HOWE SCALES (U. S. A.)
HERCULES SAFES (Australian)
IRIS BICYCLES (Czechslovakia)
EXPORTERS, IMPORTERS, SHIPPING & FORWARDING AGENTS.
DEALERS IN:
TEA, TEA EXPORT RIGHTS, RUBBER, PEPPER, CARDAMOMS, CASHEW KERNELS, TIMBER & ALL OTHER MALABAR PRODUCES, ESTATE REQUISITES, CHEMICALS, MACHINERY, PUMPS, MOTORS, ELECTRICAL GOODS, RADIOS, WEIGHING MACHINES, HARDWARE, ETC., ETC.,
ENQUIRIES SOLICITED.

இந்தியன் மெர்கண்டைல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1907)

தலைமை ஆபீஸ்:-பம்பாய் மதராஸ் பிராஞ்சு :-கோயமுத்தூர்

உன்னதமான செல்வ நிலையும், உயர்தரமான நிர்வாக அங்கத்தினர்களும், சிக்கனமான பரிபாலனமும், விரிவான பாலிஸி விதிதங்களும், இணையற்ற பற்பல பாலிஸி திட்டங்களும், உரிமை கொடுப்பதில் பெரு நோக்கமும், கண்ணியமான நடத்தையும் அமைந்துள்ளதுமான மிகப் பழமையான சுத்த சுதேசியக் கம்பெனி.

ஆயுள், தீ, கப்பல், மோட்டார் விபத்து
முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்
நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை.

இக்கம்பெனிக்கு உழைப்பது வெகு லாபத்தையும்,
பேரானந்தத்தையும் தரும்.

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக :

C. சுப்பிரமணியம் B. A.
பிராஞ்சு மானேஜர்,
இந்தியன் மெர்கண்டைல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி நெ. 4.
கோயமுத்தூர்

TELEGRAMS: "DASGOWD TELEPHONE: 100

N. DASAI GOWDER & Co.,

DISPENSING CHEMISTS & DRUGGISTS, PROVISION & GENERAL MERCHANTS,

COIMBATORE.

Agents for :-

Meridian Watches, Tissot World Famous Anti Magnetic Watches & Omega Watches.

Stockists of :

Favre Leuba's Watches, Clocks, & Time-Pieces.

Suppliers to Hospitals, Estates, Sanatoria and Nursing Homes.

Direct Importers, Wholesale & Retail Stockists of :

Drugs and Chemicals, Patent Medicines, Vaccines, Sera and Biologicals

Veterinary Products, Surgical Instruments, Hospital Requisite,

Surgical Dressings Rubber Goods, Infants' & Invalids' Foods

and Practically all requirements

of Medical Profession.

SPECIAL RATES FOR MEDICAL PROFESSION

PROMPT EXECUTION OF MOFUSSIL ORDERS

சுதந்தர இந்தியாவில்
இது தான் முதல் தீபாவளி
எங்கள் அன்பு கலந்த வாழ்த்துக்கள்



தலைமை ஆபிஸ் :- பம்பாய்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 31,25,000

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் முதலிய
எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ்களும்
- செய்யப்படுகின்றன -

விவரங்களுக்கு எழுதவும் :-

சென்னை கிளை நிலையம்:- 118, திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

பிராஞ்சு மானேஜர் :- P. V. K. ஷண்முகம்.

சென்னை ஆபீஸ் :-

308-309 லிங்கசெட்டி தெரு, சென்னை.

NATIONAL SPEEDWAYS

DESABANDU STREET,
COIMBATORE

கோவை  திண்டுக்கல்

தினசரி
முதல் வகுப்பு பஸ் ஸர்வீஸ்.
ஆண்டவன் தரிசனம் செய்ய
துரிதமாகவும், சௌகரியமாகவும்
பிரயாணம் செய்யுங்கள்.

பழனி ஆபீஸ் திண்டுக்கல் ஆபீஸ்

திண்டுக்கல் ரோடில் மதுரை ரோடு

TEL. GOKUL PHONE: 57 P. B. No. 24.

கும்பகோணம்

T. S. R. & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை

கூந்தல் வளர்ச்சிக்கும், சிரசின் குளிர்ச்சிக்கும்

சந்தணாதி & அரைக்கீரை விதைத் தைலங்களையும்

உபயோகியுங்கள்.

மதராஸ் ஸிடி ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதராஸ்.

கோவை, பாலக்காடு, கீலகிரி ஏஜண்டு
B. பால பட்டாபி,
வைஸ்யாள் தெரு,
கோயமுத்தூர்.

SRI NIVAS & CO.

ELECTRICAL ENGINEERS & MERCHANTS,

5/13, OLD POST OFFICE ROAD,

COIMBATORE.

For

Electrical Accessories

Table Fans

Ceiling Fans

Electric Motors

Dynamos

Pumping Sets

Etc. Etc.

ஸ்ரீ நிவாஸ் & கோ

எலக்டிரிகல் என்ஜினீர்கள், வியாபாரிகள்,

5-13, பழய போஸ்டாபீஸ் வீதி,

கோயமுத்தூர்.

எலக்டிரிக் கருவிகள்

டேபிள் விசிறிகள்

சீலிங் விசிறிகள்

எலக்டிரிக் மோட்டார்கள்

டைனமோஸ்

பம்பிங் செட்டுகள்

முதலியன

எங்களிடம் கிடைக்கும்



SAFES ARE GUARDIANS OF YOUR TREASURE



Ajax Safes are strong in structure defying thieves and fire - they are veritable watch guards on men for your valuables.

AJAX PRODUCTS LTD.,

106, ARMENIAN STREET, MADRAS.

Managing Agents:

MURUGAPPA & SONS MADRAS.

Tele Phone : 8265 Tele Grame : "BILDER"

THE MODERN HOUSING CONSTRUCTION & PROPERTIES LTD.

(INCORPORATED IN BRITISH INDIA)



A LEADING CINEMA HOUSE UNDER CONSTRUCTION.

We have Fully qualified Architects, Engineers and Technicians whose services are placed at your disposal for any kind of construction. We have attractive and uptodate designs for cinema theatres, in the construction of which we are now specialising. For any type of construction, please write to us.

THE MODERN HOUSING
CONSTRUCTION & PROPERTIES LTD.,
ROYAPETTAH : MADRAS.

Branches : MADURA, TRICHINOPOLY, TRIVANDRUM, GUNTUR, BOMBAY AND DELHI.

A. NANJAPPA & Co.,

GENERAL & PAPER MERCHANTS,

Raja Street, COIMBATORE.

(Stationery suppliers to Government Offices,
Municipalities, Schools, Banks, & Merchants)

Whole-sale and Retail Merchants in :

All kinds of Papers, Account-Books, Stationery for Office and Personal use, School-books, Exercise-books, Pens, and Pencils etc.

From our H. O. at AVANASHI ROAD :

Patent Medicines, Oil-man Stores, Toilet Requisites, Tinned Provisions, Stationery, — Gift Articles, Hosiery Etc. —

தங்கள் ஆதரவைக் கோருகின்ற :

ஏ. நஞ்சப்பா & கோ.,

ஜெனரல் & பேப்பர் வியாபாரிகள்

கோயமுத்தூர்.

சுத்தமான உடை பரிசுத்தமான எண்ணங்களைத் தூண்டும்.
உங்கள் தேசத்திலே தயாரிக்கப்பட்டதை ஆதரியுங்கள்.



தஞ்சாவூர் சக்தி சோப்புகள்

உங்கள் தேவையை பூர்த்தி செய்யும்

பரீட்சித்துப் பாருங்கள்; திருப்தி அடைவீர்கள்.

புரோப்ரைட்டர்கள் :—

வி. எம். துரைராஜா பிள்ளை & ஸன்ஸ்

சக்தி விலாஸ் சோப்பு வொர்க்ஸ்,

கிழக்குப் பெரிய வீதி, :: தஞ்சாவூர்.



BRANCHES AT ★ CALCUTTA ★ MADRAS ★ CAWNPORE ★ AHMEDABAD ★ MANCHESTER

AND A NEW BRANCH OFFICE

AT 95, JAIL ROAD, :: COIMBATORE.

$CaOCl_2$



ப்ளீச்சிங் பவுடர்

1774-ம் ஆண்டில் குளோரின் வாயு தாவர சத்துக்களான சாயங்களை வெளுக்கும் குணம் உடையது எனக் கண்டு பிடித்தனர் இதைத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்தன. அதே நூற்றாண்டின் இறுதியில் சுண்ணாம்பில் குளோரினை ஊட்டும் முறை அறிவிக்கப்பட்டது குளோரின் கலந்த சுண்ணாம்பு ப்ளீச்சிங் பவுடராகும் ப்ளீச்சிங் பவுடர் என்னும் சுண்ணாம்பு குளோரைட் மிகவும் பிரக்கிய மான சலவைப் பொருளாக இருந்து வருகிறது. தவிரவும் குளோரின் நுண் கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்தது ப்ளீச்சிங் பவுடர் தீயில் பட்டவுடன் அதிலுள்ள குளோரின் வாயு வெளிப் பட்டு அருகிலுள்ள கிருமிகளை நாசம் செய்து விடுகிறது ஆகவே ப்ளீச்சிங் பவுடர் சிறந்த கிருமி நாசினியாக உபயோகிக்கப்படுகிறது. ப்ளீச்சிங் பவுடர் இன்று அனேகமாக எல்லா உற்பத்தி தொழில்களிலும் கையாளப்படுகிறது. பருத்தி உடைகள் வெளுக்க, கம்பெனி மேல் அச்சிட, வெள்ளை பேப்பர் தயாரிப்பு, பெட்ரோலியம் சுத்தம் செய்ய, குளோரபாரம் உற்பத்தி, சுகாதார பாதுகாப்பு வேலைகள் இவைகளில் வெகுவாக பயன்படுகிறது.

28 முதல் 32 சத வீதம் குளோரின் கொண்ட "காவேரி" பிராண்ட் ப்ளீச்சிங் பவுடர் 28, 98, 160 பவுண்டுகள் அளவில் டின்களிலும் இரும்பு பேரல்களிலும் சப்ளை செய்யப்படுகிறது.

CAUVERY BRAND

Mettur Chemicals
VITAL TO INDUSTRY

வெளியிடுவோர் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

ஸேல்ஸ் ஏஜெண்டுகள் : சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினாப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்டுகள் :

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ் - 1

பிராஞ்சுகள் : பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர், ஹைதராபாத், கும்பகோணம், மேட்டூர் அணை, சேலம், திருச்சினாப்பள்ளி, திருவனந்தபுரம்.

Tel { Grams 'LAKSHMI'
Phone 18

The Lakshmi Mills Company Ltd.

PAPPANAICKENPALAYAM,
COIMBATORE.
(Branch at KOILPATTI)

Established 1910

Authorised Capital Rs. 1,00,00,000

Spindles 41,872 Coimbatore.
15,552 Koilpatti.

Spinning from 20s to 100s
Combed.

Managing Agents:
M/s. G. Kuppuswamy Naidu & Co.

INDIAN CAPITAL, INDIAN LABOUR, INDIAN MANAGEMENT.

BEST SWADESHI YARN.

TELEPHONE : 2275. TELEGRAM " KANAKAYYA "

V. KANAKIAH CHETTY & COMPANY

(Established 1890)

General Merchants & Commission Agents

148, Nyneappa Naick Street, Jahwar Nagar (P. T.) MADRAS 3.

Distributors for :

TATA's AGRICO PRODUCTS
Crow Bars
Mysore Tanged Mamooties
Swan Neck Mamooties
West India Powrahs
Bombay Powrahs
Coffee Hoes
Pick Axes
Hammers
Chisels
Showels
Etc.
Tata's Red Oxide.

ASOKA Mild Scented Betel Nut Powders, Chewing Tobocco & Cigars.



DURGA BRAND PAINTS and VARNISHES

Swedish Horse & Bullock Nails
Ship Chains
Hexagonal Wire Netting
Panel Pins Etc.

Direct Importors
of all kinds of
Iron and Hardware goods
and Machinary

Dealers in :

ENGINEERING PRODUCTS
Hand Coffee Grinders (English)
M. S. Polished Shafting
English Flour Mills
Machine Tools
Oil Engines
Pump Sets
Pumps
Motors
Etc.

Agricultural Implements

Agricultural implements.
Sole Importers and
Distributors for
"POOMARC"
Swedish Faggot Steel
in India.

Prompt attention!

Reasonable Prices!!

Attractive Delivery!!

V. Kanakiah Chetty & Co.

TELEPHONE : 2427

Hardware Merchants

2-44 VENKATACHALA MUDALI STREET,
P. T. MADRAS. 3

Manufacturers of :
Best Locks, Hinges,
Hasp & Staples Etc. Etc.

V. K. C.

Importers of
Hinges, Screws, Bolts and
Nuts, Goldsmith Tools,
Abbraxieves, Files, Etc.

T. STANES & CO. LTD.

COIMBATORE.

BRANCHES AT

Alleppey, Cochin, Coonoor, & Kotagiri.

Coffee Curers, Shippers & Estate Suppliers.

MANUFACTURERS OF

Agricultural Fertilisers, Manures

– and Poultry Foods. –

AGENTS FOR

Nilgiri Brand Cement, Goodyear Belting, Hose, Celtotax, Hessian, Spraying materials, Asbestos Cement products, Fruit Squashes (Punjab,)Tea quotas and insurance of all kinds.

Managing Agents for:

THE UNITED COFFEE SUPPLY CO. LTD.

Suppliers of renowned Red Ensign Coffee and Tea, Raw Coffee and Salted Cashewnuts-Pure Coffee Powder.

STANES MOTORS (SOUTH INDIA) LTD.

Branches at Calicut, Trivandrum and Ootacamund.

DEALERS FOR :- Austin, Buick, Chevrolet and Vauxhal Cars. A. J. S. and Francis Barnett Motor Cycles. Automobile Repairers, Sole Patentees for Retreading Tyres under Tyresoles Process for the whole of South India.

THE SPUN P[illegible]

COMPANY

Nanjikkottai Road, TANJORE.

Manufacturers of

Rainforced Concrete Pipes by centrifugal process, Pipes suitable for irrigation, drainage water supply, culverts etc.

When you modernise or remodel your building or construct new buildings consult

Mosaic Flooring Tiles

MANUFACTURED BY

The Mysindia Tiles & Engineering Co.

Use Mysindia Tiles only to ENSURE GOOD HEALTH DURABILITY and BEAUTY. Equipped with Mysindia Tiles you keep cool in summer and prevent dampness during weather.

Buy Mysindia Tiles only because they are MADE IN INDIA with INDIAN CAPITAL. INDIAN LABOUR and suited to INDIAN CONDITIONS Insist on Mysinda Tiles only because they are UNSURPASSED in QUALITY and LASTING manufactured with the Maximum HYDRAULIC PRESSURE.

For estimates and further particulars please consult:

The Mysindia Tiles & Engineering Co.

1 & 2, Poonamalle High Road, P. T. MADRAS.

or

79, Avanimoola Street, MADURA.

Can be had of

A. RAJAMANICKAM, 8-11, Avanashi Road, Coimbatore

M. CHOCKALINGAM, Pudukottah, Chettinad.

THE MYSINDIA TILES & ENGINEERING CO.

MADRAS. MADURA.

...ல இஞ்ஜினீரிங் கம்பெனி
லிமிடெட்.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
டெக்னுக்ரசி (இந்தியா) லிமிடெட்

டெலி: டெக்னுக்ரசி போன்: கெ. 210

தலைமை ஆபீஸ்:
"வார்டன் ஹவுஸ்"
போர்ட், பம்பாய்.

தொழிற்சாலை:
பீளமேடு போஸ்ட்,
கோயமுத்தூர்.

இந்தியக் கைத்தொழில் வளர்ச்சிக்காகவும் விவசாயப் பெருக்கத்திற்காகவும் முழுவதும் இந்தியாவிலேயே டிசைன் செய்து உற்பத்தியாக்கப் பட்டவை.

எங்களால் உற்பத்தி செய்யப்படுபவை:—

ஸ்க்விரல்கேஜ், ஸ்லிப்ரிங், ஏ. சி. மோட்டார்கள், சென்ட்ரிப்யூகல் பம்புகள், எலக்ட்ரிக் சாமான்கள், ஆயில் இஞ்சின்கள், கரும்பு கிரஷர்கள், விவசாயக் கருவிகள், கலப்பைகள், ஹாரோக்கள், சர்க்காக்கள், ரோட்டரி ஆயில் எக்ஸ்பெல்லர்களும், ஸ்பேர் பார்ட்ஸ்களும்.

Telephone: 84128 Telegrams: 'IAMBIC'
Code: Bentlys A. B. C. 7th Edn.

INDO BRITISH CORPORATION

EXPORTERS - IMPORTERS - REPRESENTATIVES

10, MOUNT ROAD, MADRAS.

Chief Agents for Madras Presidency and States

for

MESSRS. KARAMCHAND THAPAR & BROS., LTD.,

CALCUTTA.

Representing:

SRI GOPAL PAPER MILLS, LTD.,

BHARATHS TARCH & CHEMICALS, LTD.

INDIAN MEDICAL SUPPLY LABORATORY, LTD.

COAL MINES & SUGAR FACTORIES.

Messrs. PERIHEL LTD., LONDON—INFRA RED AND ULTRA VIOLET RAY HOME APPLIANCES.

,, TIMS PRODUCTS LTD.--CALCUTTA—BOTTLED AND TINNED PRESERVES AND JUICES.

,, VARITYPER—COMPOSING AND TYPEWRITING MACHINES.

,, 'LION' BRAND DANISH WHITE CEMENT, ETC. ETC.

TRADE ENQUIRIES SOLICITED

டெலிபோன் } பங்களா : 112
ஆபீஸ் : 126

தந்தி : 'கமலா

கோயமுத்தூர்

கமலா மில்ஸ் (லிட்)

(ஸ்தாபிதம் 1935)

R. V. இலட்சுமய்ய நாயுடு & Co.,
மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடேரீஸ்

முதல் தரமான 40 நெ. பாவு நூல் தயாரிப்பவர்கள்

இந்திய மூலதனம்

இந்திய நிர்வாகம்

இந்தியர் உழைப்பு

The Pankaja Mills Ltd.

(INCORPORATED)

Registered Office – COIMBATORE

POST BOX NO. 150

Spinning

10s to 80s Counts Ring Yarn

And

Double Yarn of these Counts

MANAGING AGENTS & SECRETARIES:-
C. S. RATNASABAPATHY MUDALIAR
&
SONS

acturers of

INDIAN BOBBINGS

(of all types & descriptions)

– *Other Specialities* –

Spindles for, Ring, Roving, Slubbing & Doubling frames.

Spining & Weaving Machinery Spare Parts.

PICKERS .... BUFFERS

ROLLER SKINS ....

Try Our Vegetable Tallow

For particulars apply to:

TRADES ESTABLISHMENTS (INDIA) LTD.

104, APPOLLO STREET, FORT, BOMBAY.

சந்திரலேகா

ஆசிரியர் :

ஏ. ஷண்முகம் பி. ஏ.

சிந்தனையைத் தூண்டும் சிருங்காரச் சித்திரம். அகத்தை விளக்கும் அற்புத நவீனம்: வாழ்க்கையை தத்ரூபமாக வர்ணிக்கும் காலக் கண்ணாடி, இலக்கிய உலகிலே ஒரு புத்தம் புதுமை.

விலை ரூபாய் இரண்டு தான்.

புதுமலர் நிலையம்

கோயமுத்தூர்

ஒவ்வொரு விலைப்பட்டையிலும் ஆச்சரியம்



மார்க்கெட் விலையில் 10 சத வீதம் முதல் 20 வரை குறைக்கப்பட்டு, சகல ரகங்களில் கைத்தறி துணிகள் எங்கள் விற்பனை கடைகளில் கிடைக்கும். இதற்குக்காரணம், சரக்குகள் இடை வியாபாரிகள் லாபமில்லாமல், நேராக தறியிலிருந்து உங்களுக்கு கறார் விலைகளில் விற்பதால்தான்.

சரக்குகள் புதியது. ஒவ்வொரு வருடைய ஆசைக்கும் விருப்பத்துக்கும் தகுந்தபடி விதவிதமான பாட்டர்ன், டிசைன்கள். சாயம் வெளுக்காதது, உறுதியாக நெசவு செய்யப்பட்டு கண்ணை பரிக்கும்படி யிருப்பவைகள்.

நீடித்து நிற்கவும் அன்றாட உபயோகத்துக்கும் கைத்தறி வேஷ்டி நிகரற்றது என்பதை ஞாபகபடுத்திக் கொள்ளவும்.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான்
வேஷ்டிகள் • புடவைகள் • சட்டைகள் • டவல்கள் • பிரிடைஸ் சிங்கம்ஸ் • சிடைஸ் • விடு அலங்கரிக்கத் துணிகள் • மேஜை துணிகள் • படுக்கை விரிப்புகள் • கைக்குட்டைகள் • லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் • கொசுவலைகள் • க்வில்ட்ஸ் • தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

சென்னை கைத்தரி நெசவாளர் (மாகாண) கூட்டுறவு சங்கம்.

6-A உட்ஸ்ரோட், மவுண்ட் ரோடு, மதராஸ் 2

பனரஸ், பெங்களூர்

பட்டுப் புடவைகளுக்கும்

சொந்த தறியில் நெய்த

கோயமுத்தூர்

சேலைகளுக்கும் பெயர் பெற்ற

இடம்.



S. R. P.

பொன்னுசாமி

செட்டியார்

நெ. 1 வெங்கலக்கடை தெரு,

மதுரை.

ஹெட் ஆபீஸ்:

சுக்ரவார்பேட்டை

கோயமுத்தூர்

SUNDARAM MOT

LIMITED

MOUNT ROAD, MADRAS 2.

Dealers in Buick, Vauxhall, Cheverolet

CARS AND TRUCKS.

We are running a modern service station.

WE UNDERTAKE

Automobile repairs of every description.

We carry a large stock of spare parts.

SPECIALISED

SHELL - LUBRICATION

A SPECIALIAY

Phone: 86486, 86487 for Sales and Service.

" 86661 for Spare Parts.

Telephone No. 86461

Telegrams : 'WOODLANDS' Madras.

WHEN VISITING MADRAS

STAY AT

WOODLANDS HOTEL

ROYAPETAH,

MADRAS.

Printed by K. M. Rathanachalam at his Pudumalar press and Published by J. S. Kannappar at 5-7 Old post Office Road, Coimbatore. Editor: T. C. Ramaswamy.

வாலுலக குமுதம்

வண்ண மதி



பூவுலக அமுதம்

சுகந்த பாக்குத்தூள்

Printed by K. M. Rathanachalam at his Pudumalar press and Published by J. S. Kannappar at 5-7, Old post Office Road, Coimbatore. Editor: T. C. Ramaswamy.

AL WEAVING ESTABLISHMENT

N N A N D O R E, N. M A L A B A R.



உமையாள் கைத்தரிகள்: பெட்ஷீட், டேபிள் விரிப்பு; விரிப்புரகங்கள், டர்க்கிடவல்கள், துண்டுகள், தற்கால பெண்களுக்கேற்ற பலரகங்களில் உடைகள், உயர்தர ஷர்டிங், கோட்டிங், சூட்டிங் முதலியன.

ஸ்ரீ உமையாள்
வீவிங் எஸ்டாபிள்ஷ்மெள்ட்